
Registered as a News Paper in Sri Lanka
பக்கம் 24 ரூபா 16/50
දිනමුරසු වාරමලර්
மே.09-15, 2004

வாரமலர்

# தினமுரசு

THINAMURASU SRI LANKA'S NATIONAL TAMIL WEEKLY முரசு 561





## மத்தியஸ்த இக்கட்டில் மாட்டியிருக்கும் நோர்வே

புதிய தொடர் கதை....

## துரோகம் துரத்துகிறது

## 12 கோடி ஆட்டோகிராஃப்



வசூல் மழை

## இணையத்தள காதலிகள்

## மே-தின வெளிப்படும் அவரவர் கோணமும்

## மாதவனின் 'எதிரி'

# ஆன்மீகம்

## இன்பம்

மனிதனை மனிதனாக இவ்வுலகில் வாழச் செய்வதற்காகப் பல்வேறுபட்ட இன்பங்களை இறைவன் இங்கே படைத்துள்ளான்.


இன்பத்தைத் தேடியோடாத மனிதர்களை நாம் காணவே முடியாது. எந்த இன்பத்தை மனிதன் எப்படி அநுபவிக்கலாம் என்பதை இந்துமதம் மிக அழகாகச் சுட்டிக்காட்டுகிறது.

பிறருக்குத் துன்பம் எதுவும் எள்ளளவும் ஏற்படாது நீதி நெறியைப் பின்பற்றி அநுபவிக்க வேண்டும். அதுவே நாம் பெறும் முறையான - முழுமையான இன்பம் என்று மிகத் தெளிவாக சைவம் சாற்றுகிறது.

எனவே, பகுத்தறிவு பெற்ற பண்புள்ள மனிதனாக இன்பத்தை இழிநிலைப்படுத்தாது புனிதமாக அடையப் பெற்று அநுபவித்து வாழ்வோமாக!

*சிவஸ்ரீ அ. அரசரெத்தினம், சேனையூர் - 06.*

## காத்திருப்போம்



"ஒரு மனிதன் எருசலேமிலிருந்து எரிகோவுக்குப் போகையில் கள்ளர் கையில் அகப்பட்டான்" - லூக்கா 10:30.

கர்த்தராகிய இயேசுவின் உவமைக் கதைகளில் ஒரு மறைவடக்கமான இரகசியமும் உள்ளே மறைந்திருக்கும். எருசலேம் - இது தேவனுடைய நகரம். எரிகோ - இது யோசுவாவினாலே சபிக்கப்பட்ட நகரம். 'யோசுவா 6:26' தேவ நகரத்திலிருந்து சபிக்கப்பட்ட நகரத்துக்குப் போகாதே என்று கர்த்தர் சொல்லுகிறார். தேவனிடத்தில் இருக்கிறேன் என்று சொல்லிக்கொண்டு சபிக்கப்பட்ட காரியங்களில் ஈடுபடாதே. அப்போது கள்ளன் அதாவது சாத்தான் கையில் அகப்படுவாய் என்று கர்த்தர் கூறுகிறார்.

"ஆகையால் நீங்கள் எருசலேமை விட்டுப் போகாமல் என்னிடத்தில் கேள்விப்பட்ட பிதாவின் வாக்குத்தத்தம் நிறைவேறக் காத்திருங்கள்" என்று கட்டளையிட்டார். 'அப்போஸ்தலர் 1:5.' ஆம்! சகோதரரே, ஞாயிற்றுக்கிழமை கிறிஸ்தவர்களாயிராமல் ஒவ்வொரு நொடியும் கிறிஸ்து இயேசுவில் சார்ந்திருப்போமாக.

"ஆகையால் ஏற்ற காலத்திலே தேவன் உங்களை உயர்த்தும் படிக்கு, அவருடைய பலத்த கைக்குள் அடங்கியிருங்கள்" 'பேதுரு 5:6' அவருடைய வார்த்தைக்கு விரோதமாக நடக்கும்போது நாம் எரிகோவை நோக்கிச் செல்லுகிறோம். "நீங்கள் அமர்ந்திருந்து நானே தேவனென்று அறிந்துகொள்ளுங்கள். (சங். 46:10) ஆம், அவரை நோக்கி நாம் காத்திருக்கும் போது அவருடைய வாக்குத்தத்தத்தை அவர் நிறைவேற்ற உண்மையுள்ளவராயிருக்கிறார். ஆமேன்.

*ஜோசப் அருள்சாமி, இராஜவெல்ல*

## அல்லாஹ்வின் பாதையில் செல்லுங்கள்

வாழ்க்கையில் நெருக்கடிகளை ஏற்படுத்துவதும் வசதி வாய்ப்புக்களைக் கொடுப்பதும் அல்லாஹ்வின் புறத்திலிருந்து செய்யப்படும் காரியம்.

நீங்கள் செலவைச் சுருக்கிக்கொள்வதால் வசதி உண்டாகிவிடப் போவதும் இல்லை. தாராளமாகச் செலவு செய்வதால் நெருக்கடிகள் தோன்றிவிடுவதும் இல்லை.

அல்லாஹ்வின் பாதையில் செலவிடப்படுவதற்குரிய பலன் நாளை மறுமையில் நமக்குக் கிடைப்பது உறுதி. ஆயினும், இவ்வுலகிலும் அதற்குரிய பலன் கிடைத்துவிடுகிறது.

எனது அடியார்களே! எனது திருவருளால் நான் உங்களுக்குப் பொருள் கொடுத்தேன். இனி நானே உங்களிடத்தில் கடன் கேட்கிறேன். எவர் தனது மனத் திருப்தியுடனும் மகிழ்ச்சியுடனும் எனக்குத் தருகிறாரோ அவருக்கு நான் இவ்வுலகிலேயே அதற்குரிய பலனை சீக்கிரமாகத் தருவேன். மறுவுலகிலே அவருக்குரிய சேமிப்பைத் தயார் செய்து வைத்திருப்பேன்.

எவர் மகிழ்ச்சியுடன் கொடுக்கவில்லையோ அவரிலிருந்து நான் கொடுத்தவற்றைப் பலவந்தமாகப் பறித்துக்கொள்வேன். எவர் அதைச் சகித்துக்கொள்வாரோ அவருக்கு எனது ரஹ்மத் எனும் அருளை வாஜிபாக்கி வைப்பேன்.

- ஆதாரம் : அல்குர் ஆன்

*எம். சி. கலீல், கல்முனை - 05*

---

**கவிதைப் போட்டி இல: 558**

**பரிசுக்குரிய கவிதை**

### முகூர்த்தம்

பூட்டிய கதவுகள்
திறக்கும் நேரம்
எப்போ என்று மணிக்கணக்காய்
காத்திருந்தும் விடை
கிடைக்கவில்லை.
ஏன் தெரியுமா?
அடுத்த பொதுத் தேர்தலின்
போதுதான் நல்ல
முகூர்த்தமாம்.

- க. சதோபன், மண்டூர்.



**இடம் உள்ள வரை இடம் பிடித்துள்ள வியக்க வைத்த கவிதைகள்**

### அனுதாபங்கள்

தேர்தல் முடிந்த கையோடு
பூட்டிவிட்டோம் எம்
காரியாலயங்களை
அடுத்த தேர்தல் வரை
இவை திறக்கப்படமாட்டா
போலி வாக்குறுதிகளை
நம்பி ஏமாந்த மக்களுக்கு
எமதாழ்ந்த அனுதாபங்கள்.

அ. சந்தியாகோ, கண்டி.

### நன்றி மறந்தவர்கள்

காத்திருந்தோம்
கதிரை...
கிடைக்கும் என்று
தோற்றுப் போனதால்...
கட்சிக் காரியாலயத்தில்
நாயைத் தவிர
நன்றியுள்ளவர்கள்
எவரும் இல்லை...!


S. ஜெகதீஸ்வரன், நானாட்டான்.

### நம்ம எம்.பி.!

கள்ள வோட்டு
பல போட்டு
இவரை எம்.பியாக்கி
என்ன பயன்?
கட்டுக் கட்டாய்
பணம் தந்தால்தான்
நமக்கெல்லாம்
வேலை எடுத்துத்
தருவாராம்!

கா. ரமேஸ்குமார், ஆரையம்பதி - 02.

**கவிதைப் போட்டி இல: 561**



எண்ணத்தில் தோன்றும் கவிதைகளை வார்த்தைகளின் எண்ணிக்கை அதிகமில்லாமல், தபாலட்டையில் மட்டும் பதிவு செய்து அனுப்பி வையுங்கள். அனுப்பப்பட வேண்டிய கடைசித் திகதி 15.05.2004

கவிதைப் போட்டி இல. 561
தினமுரசு வாரமலர், த.பெ.இல - 1772,
கொழும்பு.

### வோட்டோடு போய்விட்டார்

வெற்றி பெற்றாலும்
வெற்றி எமக்கில்லை
மூக்கணாங் கயிறு
வேறொருவர் கையில்
வீட்டுக்கு வீடு சென்று
வீட்டுக்குப் போடச் சொன்னோம்
வீட்டை விட்டுப் போய் விட்டார்கள்
வெற்றி பெற்றதும் உங்களுக்குத்தான்
முதலில் வேலை என்று சொன்னவர்கள்.
விதியை நொந்து வீதியிலே
குந்திக் கொண்டு குமுறுகின்றோம்.

சீ. தங்கவடிவேல், அரசினர் வைத்தியசாலை, மட்டக்களப்பு.

### காத்திருக்க முடியுமா?

எதுவரைக்கும்
காத்திருக்க
என் செய்வது,
அடுத்த நாடாளுமன்ற
தேர்தல் வரைக்கும்
காத்திருக்கத்தான்
வேண்டும்.
"ஐயா" அப்போதுதான்
வருவார்.

- மு. நிரோஜினி, மண்டூர் - 02.

### "இதுதான் அரசியலா?"

கள்ள வாக்குப் போட்டு
கள்வனை வெல்ல வைத்தோம்
அதுவரைக்கும்...
அனைவரும் உள்ளே...
இருந்தோம்!
தலைவர் வென்று...
தலைநகர் போய்விட்டார்.
நாயோடு சேர்ந்து
காவல் காக்க...
நம்மையும் வைத்துவிட்டார்.

கண்ணகியூரான், இரா. இராஜமோகன், காரைதீவு - 08.

### தெரியாமல் போச்சே!

வாக்குறுதிகளை
வழங்குவதில்தான்
வள்ளல்கள்!
மறப்பதில் - இவர்கள்
வல்லவர்கள் என்று
தெரியாமல் போனதோ!

- ச. இரமேஷ்குமாரி, நு/ டெஸ்போட் த.வி. நானுஓயா.

### நம்பாதே...!

சீறும் பாம்பை நம்பு
சிரிக்கும் பெண்ணை
நம்பு
சிந்தையைக் கெடுக்கும்
மதுவை நம்பு - எம்மை
சீரழிக்கும் யுத்தத்தை
வேண்டுமானாலும்
நம்பு - ஆனால்
வோட்டுக்காகச் கூட்டுச்
சேர்ந்த
கூட்டமைப்புக்
காரர்களை
நம்பிவிடாதே...!

சசிதா நாகேந்திரன், ஆரையம்பதி - 03.

### "சோதனை மேல் சோதனை"

தம்பியின் பணிப்புரைக்கு
வாக்களித்தோம்
நம்பி நாம் காரியாலயம்
தேடிவந்தோம்
கதவடைத்து ஆங்கிலத்தில் ஓர்
வசனம்
உதவ நாம் தயாரில்லை
என்பதுவோ?
தனித்துவமாய் உதவி செய்தால்
தம்பிமாரே
தலைபோகும் நிலையிலுள்ளார்
எம்.பி.மார்கள்.

மஞ்சுகணேஸ், தோணிக்கல், வவுனியா.

### கப்பத்தால் கலக்கம்!

கப்பமும் கபடமும்
கட்சிக்காரர்களை
கண்மூடித்தனமாக
கலங்கச் செய்துவிட்டனவோ?

S.M. காளீஸ், சிவன் கோவில், வல்வெட்டித்துறை.

# உங்கள் பக்கம்

## தாண்டியடி மாணவர்கள் எதிர் நோக்கும் பிரச்சினை

அன்றாட வாழ்க்கையில் போக்குவரத்தும் அதி முக்கிய பங்காற்றுகிறது. இதில் தனியார் போக்குவரத்து வாகனங்களும் அரச போக்குவரத்து வானங்களும் பணியாற்றுகின்றன. ஊழியர்கள், மாணவர்கள் அனேகமானவர்கள் அரச போக்குவரத்து வாகனங்களை நம்பியே மாதாந்தப் பருவச் சீட்டுக்களைப் பெற்றுத் தமது பயணத்தைத் தொடர்கிறார்கள். ஆனால், அரச போக்குவரத்து வாகனங்கள் ஒழுங்கான முறையில் தங்கள் கடமையைச் செய்கின்றனவா என்பதில் ஐயம் நிலவுகிறது. இதில் இலங்கை போக்குவரத்து சபையிடமிருந்து மாதாந்தப் பருவச் சீட்டினைப் பெறும் தாண்டியடி மாணவர்கள், உயர் கல்வி கற்பதற்காக தம்பிலுவில் மத்திய மகா வித்தியாலயத்திற்குச் சென்று கல்வி கற்று வருகின்றார்கள். இ.போ.ச. சேவையானது தற்போது ஒழுங்கீனமாகவுள்ளதால் மாணவர்களின் கல்வி கற்கும் நடவடிக்கைகள் பாதிக்கப்படுகின்றன. காலையில் மு.ப. 7.00 மணிக்கு கோமாரி ஊடாக வருகின்ற பேருந்து சில வேளைகளில் வருவதில்லை. அதே போன்று பாடசாலை முடிவடையும் நேரம் பி.ப. 2.00 மணிக்கு பேருந்தின் சேவையே இல்லை. இதனைப் பற்றிய அனைத்து விடயங்களையும் இ.போ. சபைக்கு பல தடவைகள் அறிவித்தும் அதற்கு அவர்கள் ஒரு நடவடிக்கையும் எடுக்கவில்லை. ஆகவே, இதற்குரிய அதிகாரிகள் எமது மாணவர்களின் கல்வி வளர்ச்சியைக் கருத்தில் கொண்டு எங்களுக்கு நல்லொரு தீர்வைப் பெற்றுத் தருமாறு கேட்டுக்கொள்கிறேன். சம்பந்தப்பட்ட அதிகாரிகள் மேற்படி விடயத்தில் கவனமெடுப்பார்கள் என நம்புகிறேன்.

*இப்படிக்கு*
*பீ. சாருஹாந்,*
*தாண்டியடி.*


மடல்கள் மற்றும்
ஆக்கங்கள் - உட்பட சகல
தொடர்புகளுக்கும்:
தினமுரசு வாரமலர்,
த.பெ.இல: -1772, கொழும்பு.
தொலைபேசி: 4514282
தொலை நகல் (Fax): 4513266
ஈ-மெயில்: (E-mail):
murasu@sltnet.lk


# வாசக[ர்] சாலை

### எனது உயிர் பூங்கா தினமுரசே!

வாரம் ஒரு முறை வந்து
வாடிக் கிடந்த நெஞ்சை
வசப்படுத்திக் கொண்டாயே!

உள்ளம் மகிழ்ச்சியடைய
உள்ளக் குமுறல்களை
அகற்றி உன் பக்கம் தலை
சாய்க்க வைத்தாயே!

அறிவுக்கு விருந்தளிக்க
வந்து அதிகமான விடயங்கள்
தந்து அதிசயிக்க வைத்தாயே!

மொத்தத்தில் படித்துப் பாதுகாக்க வேண்டிய பொக்கிஷம் தான்; குறுக்கெழுத்துப் போட்டி மூளைக்கு வேலை தருகிறது. கொஞ்சம் இலகுவாக்கினால் என் போன்ற வாசக நெஞ்சங்களும், பாடசாலை மாணவர்களும் பங்குபற்றுவார்கள்' என்பது எனது கருத்து. உன் அயராத பணி தொடர என்றும் என் வாழ்த்துக்கள்!

- கலைப்பூங்கா. கே. எல். ஹில்மி, சாய்ந்தமருது - 13.

### அன்பின் தினமுரசு!

உன் வருகை
என் பொழுது
உன் துக்கம்
என் துக்கம்
உன் துயரம் கண்டு
நான் அழுவேன்.

வாராவாரம் வரும் இந்தத் தினமுரசை நான் வாரந் தோறும் ரசிப்பேன். வாரத்தில் என்னை ஒரு தடவை நினைப்பேன். ஆனால் உன்னை ஏழு நாட்களும் நினைப்பேன். இன்னும் இது மென்மேலும் உயர என் மனமார்ந்த வாழ்த்துக்கள்.

இங்ஙனம்
நிஷா.




### வாழ்க முரசே!

அன்புசால் ஆசிரியர் அவர்கட்கு, வண்ணத்தமிழ் வணக்கம் உரித்தாகுக! நலம் நலமே மலர்க! ஐயா எங்களைப் போன்ற இளம் எழுத்தாளர்களின் படைப்புகளுக்கு களமமைத்து எமது ஆற்றலை வெளிக்கொணர்வதில் என்றுமே தாங்கள் பின்வாங்கியதில்லை!!

தமிழ் பேசும் உள்ளங்களுக்கெல்லாம் நல்ல பல்சுவை அம்சங்களை வாரந்தோறும் வழங்கி விருந்து படைக்கின்ற 'தினமுரசுக்கு' நாம் என்றுமே ஆதரவு நல்குவோம்; நன்றியுடையோராயிருப்போம்!! தங்கள் பணி என்றென்றும் தொடர என் இதயம் கனிந்த நல்வாழ்த்துக்கள்!!

நன்றியுடன்
யாழமீர்மர்சூன்

### தளர்வடையா முரசே!

தளர்வடையா முரசே!
உனது புதிய நண்பன்
என்று அறிமுகமாகிய
நான் உன்னை
பாராட்ட
விரும்புகிறேன்.

முரசே! உன் சேவை
இப்புதிய ஆண்டில்
இருந்து
இன்னும் செழிப்பாய்
மெருகேற வேண்டும்
எனவும்
நீ தொடர்ந்தும்
தளர்வடையாது புதிய
புதிய
அம்சங்களைச்
சுமந்து என்னைப் போல்
புதிய
வாசகர்களைக் கவர
வேண்டும் எனவும் கூறி
வையகமெங்கும்
உன்சேவை பரவ
வேண்டும்
என வாழ்த்துகிறேன்.

நன்றி
உனது புதிய
நண்பன்,
கே. மேகசுதன்,
திருக்கோவில் - 02.

# விட்டுக்கொடுப்புகளுடன் பேச்சுவார்த்தையை மீள ஆரம்பிக்க புதிய அரசு தீவிர முயற்சி

"அரசாங்கத்துக்கும் புலிகளுக்குமிடையிலான பேச்சுவார்த்தை இடை நிறுத்தப்பட்டு ஒரு வருடத்துக்கு மேலாகிவிட்டது. மீண்டும் இப்பேச்சுவார்த்தையை ஆரம்பிப்பதற்குப் பல தடைகளும் இடையூறுகளும் இருக்கின்றன. இருந்தும் இரு தரப்பினரும் பரஸ்பரம் நம்பிக்கை வைத்து விட்டுக்கொடுப்புடனும் நெகிழ்ச்சித் தன்மையுடனும் பேச்சுவார்த்தையை ஆரம்பிப்பதற்கான முன்முயற்சிகளை எடுக்க வேண்டும்" என்று கொழும்பு பல்கலைக்கழகத்தின் அரசியல் விஞ்ஞானத்துறைப் பேராசிரியை திருமதி. பெர்னாண்டோ குறிப்பிட்டார். புலிகள், தமிழ் மக்களின் ஏகப் பிரதிநிதிகளாகத் தம்மை ஏற்றுக்கொள்ள வேண்டுமென்றும் அவர்கள் முன்வைத்த இடைக்காலத் தன்னாட்சி அதிகார சபையை ஏற்றுக்கொண்டு பேச வேண்டுமென்றும் கோருகிறார்களே, இது குறித்து உங்கள் அபிப்பிராயமென்ன? என்று கேட்டபோதே அவர் மேற்கண்டவாறு சொன்னார்.

இடைக்காலத் தன்னாட்சி அதிகார சபை யோசனைகளையும், இரண்டாயிரமாம் ஆண்டு பொதுஜன ஐக்கிய முன்னணி அரசாங்கம் முன்வைத்த தீர்வுப் பொதியையும் அடிப்படையாகக் கொண்டு பேச்சுவார்த்தையை ஆரம்பிக்கலாமென்று தேர்தலுக்கு முன்னரேயே ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க கூறிவிட்டார். எனவே, இடைக்காலத் தன்னாட்சி அதிகார சபை யோசனை குறித்தும் இரு தரப்பும் விசுவாசமாகக் கலந்து பேசி முடிவுகளை எடுக்க முடியுமென்றும் அவர் குறிப்பிட்டார். புலிகள் தம்மை ஏகப் பிரதிநிதிகளாக ஏற்றுக்கொண்டு தம்முடன் மட்டுமே பேச்சுவார்த்தை நடத்த வேண்டுமென்றும் கோருகிறார்களே. ஆனால், ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு, இனப் பிரச்சினையோடு சம்பந்தப்பட்ட சகல தரப்பினருடனும், இனக் குழுக்களுடனும் பேச்சுவார்த்தை நடத்தப்படுமென்று தனது தேர்தல் விஞ்ஞாபனத்தில் குறிப்பிட்டுள்ளதே, இந்த முரண்பாடு பேச்சுவார்த்தையை ஆரம்பிப்பதற்கு இடைஞ்சலாக இருக்காதா? என்று கேட்டபோது - இதுவொரு பாரிய பிரச்சினையே அல்ல. யுத்த நிறுத்தத்தை ஏற்படுத்துதல் அல்லது யுத்த நிறுத்த மீறல்களைத் தவிர்த்தல் போன்ற யுத்தம் சம்பந்தப்பட்ட பிரச்சினைகளைப் புலிகளோடு மட்டும்தான் பேசித் தீர்க்க வேண்டும். ஏனெனில், யுத்தம் அரச படைகளுக்கும் புலிகளின் படையணிகளுக்குமிடையே மட்டுமே நடைபெற்றது. நடைபெறவும் கூடும். ஆனால், இனப் பிரச்சினைத் தீர்வு என்ற விடயம் வரும்போது, முஸ்லிம்களுடனும் வடக்கு - கிழக்குக்கு வெளியே வாழும் மலையகத் தமிழ் மக்களுடனும் பேசித்தானாக வேண்டும். ஏனெனில், வடக்கு - கிழக்கில் வாழும் முஸ்லிம்களைப் பொறுத்தவரை நிலத் தொடர்பற்ற தன்னாட்சி அலகையோ அல்லது உள்ளகச் சுயாதிக்க அலகையோ அவர்களுக்கு வழங்குவது பற்றி யோசிக்கலாம். ஆனால், வடக்கு - கிழக்குக்கு வெளியே மலையகத்தில் செறிந்து வாழும் தமிழ் மக்களின் பிரச்சினைக்கு பெல்ஜியத்தில் இருப்பதைப் போன்று பாரம்பரிய பிரதேசங்களுக்கு வெளியே வாழும் சிறுபான்மைக் குழுக்களுக்கும் அதிகாரப் பகிர்வு வழங்குவது பற்றி ஆராய வேண்டும். அப்போதுதான் அண்மையில் கந்தப்பொலவில் நடைபெற்ற இன ரீதியான மோதல் போன்ற சம்பவங்களைத் தவிர்க்க முடியும் என்று குறிப்பிட்டார்.

ஆனால், இன்று ஒரு புதிய சூழ்நிலை எழுந்துள்ளது. நோர்வே உள்ளிட்ட ஸ்கன்டினேவிய நாடுகளோடு இந்தியா போன்ற ஆசிய நாடுகளும் யுத்த நிறுத்தக் கண்காணிப்பு மற்றும் இனப் பிரச்சினைத் தீர்வு விடயத்தில் சம்பந்தப்பட வேண்டுமென்ற கோரிக்கை வலுவாக எழுந்துள்ளது. ராஜிவ் காந்தியின் கொலையையடுத்து இலங்கைப் பிரச்சினை தொடர்பான இந்திய நிலைப்பாட்டில் ஏற்பட்ட மாற்றம், இந்தியா தனது பிராந்திய நலனில் கொண்டுள்ள அக்கறை, ஐக்கிய தேசியக் கட்சியை விட, சுதந்திரக் கட்சி பாரம்பரியமாகவே இந்தியாவுடன் நட்புறவைப் பேணிவந்த தன்மை, உத்தேச இலங்கை - இந்தியக் கூட்டுப் பாதுகாப்பு ஒப்பந்தம் போன்றவை இயற்கையாகவே பிரச்சினைக் குரியவையெனப் புலிகள் கருதுகின்றனர். இந்த நிலையில் புலிகளுக்கு மேலும் நம்பிக்கையூட்டி, அவர்களைப் பேச்சுவார்த்தை மேசைக்குக் கொண்டுவருவதற்குப் புதிய உத்திகளையும் முயற்சிகளையும் மேற்கொண்டுதானாகவேண்டும் என்று குறிப்பிட்டார்.

வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் அண்மையில் இந்தியாவுக்கு மேற்கொண்ட விஜயத்தின்போது, புலிகளை ஏகப் பிரதிநிதிகளெனக் கூறியதாகவும் புலிகள் முன்நிபந்தனைகளை முன் வைக்காமல் பேச்சுவார்த்தைக்கு வரக்கூடிய சூழல் இருப்பதாகவும் கூறியுள்ளாரே என்று கேட்டபோது,

- புலிகளின் ஏகப் பிரதிநிதித்துவக் கொள்கையை முற்றுமுழுதாக முன்னர் நிராகரித்தவர் லக்ஷ்மன் கதிர்காமர். அவர் புலிகளை ஏகப் பிரதிநிதியாக ஏற்றுக்கொண்டு, அவ்வாறானதொரு கருத்தை இந்தியாவில் வைத்துத் தெரிவித்திருப்பாரென்று நான் நம்பவில்லை. பேச்சுவார்த்தையில் புலிகளே பிரதான பங்காளிக் கட்சியென்று அவர் கூறியுள்ளார். அது தவறென்று நான் நினைக்கவில்லை. புலிகளைப் பேச்சுவார்த்தை மேசைக்கு அழைத்துவரச் சில விட்டுக்கொடுப்புகள் அரச தரப்பிலிருந்தும் மேற்கொள்ளப்பட வேண்டுமென்பது எனது கருத்து. இனப் பிரச்சினைத் தீர்வுக்கான பேச்சுவார்த்தையை ஆரம்பிப்பதற்கான முயற்சிகளில் அரசாங்கம் ஈடுபட்டுள்ள அதேவேளை, வடக்கு - கிழக்கின் புனர்வாழ்வு, புனர்நிர்மாணப் பணிகளுக்கு முன்னுரிமை அளிக்கப்படுமென்று தெரிவித்திருப்பதும் இங்கு கவனத்தில் கொள்ளவேண்டிய முக்கிய விடயமாகும். புலிகளின் முற்றுமுழுதான பங்களிப்புடனேயே இந்தப் பணிகள் மேற்கொள்ளப்பட வேண்டுமென்றும் கதிர்காமர் தெரிவித்துள்ளார். அத்துடன் இதற்கான உதவிகளை இந்தியா உட்பட பல சர்வதேச நாடுகளிடம் புதிய அரசு கோரியிருப்பதையும் நாம் கவனத்தில் கொள்ள வேண்டுமென்றும் அவர் சொன்னார்.

## கல்லடியில் கத்தி வெட்டுக்கு இலக்கானவர் குமரப்பாவின் சகோதரி

புலிகள் இயக்கத்துக்குள் எழுந்த கருணா - பிரபா பூசல் இப்போது ஒருவரையொருவர் கொன்றொழிக்கும் மோதலாக மாறிவிட்டதெனப் பொலிஸார் தெரிவித்தனர். வவுணதீவில் ஏழு வன்னிப் புலிகள் அவர்களது தளப் பிரதேசத்தில் வைத்துச் சுட்டுக் கொல்லப்பட்டதையடுத்து மட்டக்களப்பிலும் கொழும்பிலும் பல கொலைச் சம்பவங்கள் இடம்பெற்று வருகின்றன. கடந்த ஏப்ரல் ஒன்பதாம் திகதி வன்னிப் புலிகள் ஊடறுத்து நடத்திய தாக்குதலின்போது கருணாவின் அணியைச் சேர்ந்த 175 பேர் கொல்லப்பட்டனரென்றும் 90 பேர் பிரபா அணிப் புலிகளால் பிடிக்கப்பட்டு வன்னிக்கு விசாரணைக்காகக் கொண்டு செல்லப் பட்டனரென்றும் அப்போது தகவல்கள் வெளிவந்தன. மட்டக்களப்பு, ஐந்தாம் கட்டைச் சந்தைப் பகுதியில் ஆரையம்பதியைச் சேர்ந்த பி. ஜீவரட்ணம் என்பவர் கடந்த இரண்டாம் திகதி கடத்தப்பட்டுச் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார். இவர் சிங்களப் பெண்ணை மணமுடித்தவராவார். இதற்கு முன்னர் கிரானிலும் பல இடங்களிலும் பலர் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளனர். மட்டக்களப்பு, கல்லடியில் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த நீர்ப்பாசனத் திணைக்களத்தில் பணிபுரியும் படவரைஞர் ஒருவரும் அவரது மனைவியும் கடத்திச் செல்லப்பட்டுக் கத்தியால் வெட்டிக் குதறப்பட்ட நிலையில் கண்டுபிடிக்கப்பட்டனர். கத்தி வெட்டுக்கு இலக்கான பெண்மணி முன்னாள் புலி இயக்க முக்கியஸ்தரும் மட்டக்களப்பில் புலி இயக்கத் தளபதியாக ஒரு கட்டத்தில் பணி புரிந்தவருமான குமரப்பாவின் சகோதரியென இனங்காணப்பட்டுள்ளார். லலித் அதுலத் முதலி தேசிய பந்தோபஸ்து அமைச்சராக இருந்தபோது, இலங்கைக் கடற்பரப்பில் கைதுசெய்யப்பட்ட ஒன்பது புலி முக்கியஸ்தர்களில் குமரப்பாவும் ஒருவராவார். இந்த ஒன்பது பேரும் கொழும்பில் தடுத்து வைக்கப்பட்டிருந்தபோது சயனைட் அருந்தி இறந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

## தடை தாண்டும் முயற்சியில் நோர்வே

இலங்கையின் இனப் பிரச்சினைத் தீர்வு தொடர்பாக மீண்டும் பேச்சுவார்த்தையை ஆரம்பிப்பதற்கு முன்னோடியாகப் பல சிக்கலான முடிச்சுகளை அவிழ்க்க வேண்டியுள்ளது. எனவே, பேச்சுவார்த்தையை உடனடியாக ஆரம்பிக்க முடியாது. சொற்ப காலம் செல்லும். ஆனால், ஜுன் மாதப் பிற்பகுதியில் பேச்சுவார்த்தையை ஆரம்பிக்கக் கூடிய சாத்தியம் தென்படுகிறது என்று கொழும்பிலுள்ள நோர்வே தூதரகப் பேச்சாளரொருவர் தெரிவித்தார். கடந்த சனிக்கிழமை நோர்வேயின் பிரதி வெளிவிவகார அமைச்சர் விதார் ஹெல்கிசன் தலைமையில் இலங்கை வந்த நோர்வே குழு ஜனாதிபதி, பிரதமர், எதிர்க்கட்சித் தலைவர், புலிகளின் அரசியல் துறையினர் மற்றும் கடந்த அரசு காலத்தில் பேச்சுவார்த்தைகளில் பங்குபற்றிய முன்னாள் அமைச்சர்கள் ஆகியோருடன் விரிவாக நிலைமைகளை ஆராய்ந்தது. ஜனாதிபதியுடன் நடந்த சந்திப்பின்போது வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமரும் பங்குபற்றினார்.

இலங்கையிலுள்ள 32 இலட்சம் தமிழ் மக்களின் ஏகப் பிரதிநிதிகளாகத் தம்மை ஏற்றுக்கொண்டு சுயாட்சி குறித்த தமது யோசனைகள் பற்றிப் பேச்சுவார்த்தை நடத்த வேண்டுமென்று புலிகள் நோர்வே தூதுக்குழுவிடம் வற்புறுத்தியதாகத் தெரிவிக்கப்படுகிறது. இதேவேளை பேச்சுவார்த்தையின்போது நோர்வேயின் அனுசரணையாளரென்ற பாத்திரம் மட்டுப்படுத்தப்படலாமென்றும் இந்தியாவின் ஆதரவு பெற்றுக்கொள்ளப்படுமென்றும் அரசாங்கப் பேச்சாளரொருவர் கூறினார். எனினும் போர் நிறுத்தச் செயற்பாடுகளும் யுத்த நிறுத்தக் கண்காணிப்பு வேலைகளும் பாதிக்கப்படமாட்டாதென்றும் அவர் கூறினார். பேச்சுகளை ஆரம்பிப்பதற்குக் கூட்டான அணுகுமுறையொன்று கையாளப்படுமென்றும் வெளி நிர்ப்பந்தங்கள் ஏற்கப்படமாட்டாதென்றும் அவர் மேலும் சொன்னார்.

## நாய்க் கேள்வி

முன்னாள் இந்து கலாசார அமைச்சர் தி. மகேஸ்வரன் எதிர்வரும் 18ஆம் திகதி பாராளுமன்றம் கூடும்போது இருநூறு வாய் மூலக் கேள்விகளை எழுப்புவதற்கு முன்னறிவித்தல் கொடுத்துள்ளாரென்று பாராளுமன்ற அலுவலக வட்டாரங்கள் தெரிவித்தன. குறிப்பிட்ட அரசியல்வாதியொருவர் எவ்வளவு நாய்களை வளர்க்கிறாரென்றும் இந்த நாய்களை வளர்ப்பதற்கு எவ்வளவு செலவாகிறதென்றும் இந்த நாய்களைப் பராமரிப்பதற்கான செலவை அரசாங்கமா ஏற்றுக் கொண்டிருக்கிறதென்றும் ஒரு கேள்வி கேட்கப்பட்டிருக்கிறது.

## விரைவில் பாதுகாப்பு ஒப்பந்தப் பேச்சுவார்த்தை

இலங்கைக்கும் - இந்தியாவுக்குமிடையிலான உத்தேச பாதுகாப்பு ஒப்பந்தம், பொருளாதார ஒத்துழைப்பு மற்றும் மின்சக்தி, எரிசக்தி, போக்குவரத்து, கணனி ஆகிய துறைகளில் ஒத்துழைப்பு ஆகியவை குறித்து விரைவில் பேச்சுவார்த்தை நடத்த இரு தரப்புகளும் இணங்கியுள்ளன. வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் இந்திய வெளிவிவகார அமைச்சர் யஸ்வந் சின்ஹாவைப் புதுடில்லியில் சந்தித்துப் பேசியபோது, இந்த இணக்கம் காணப்பட்டது. இலங்கையின் சமாதான முன்னெடுப்புகள் குறித்து கதிர்காமர் இந்தியத் தரப்புக்கு எடுத்து விளக்கினார். விரைவில் சமாதானப் பேச்சுவார்த்தை ஆரம்பிக்கப்பட வேண்டுமென்று விருப்பம் தெரிவித்த இந்தியா, ஐக்கிய இலங்கைக்குள் ஜனநாயகம், பன்முகத்தன்மை, மனித உரிமைகள் ஆகியவற்றுக்கு மதிப்பளித்து உள்நாட்டு அரசியல் வழிமுறையூடாக இனப் பிரச்சினைக்குத் தீர்வு காணப்பட வேண்டுமென்றும் தெரிவித்தது.

## அதிக தற்கொலைத் தாக்குதல்களை நடத்தியது புலிகள் இயக்கமே

*- அமெரிக்கா*

இலங்கையின் சமாதான முன்முயற்சி இறுதியில் பலனளிக்குமா அல்லது புலிகள் இயக்கம் தன்னைச் சீர்திருத்திக்கொள்ளுமா என்பது பற்றி இப்போதைக்கு எதுவும் கூற முடியாதென்று அமெரிக்கா தெரிவித்துள்ளது. பயங்கரவாதம் பற்றிய தனது அறிக்கையிலேயே அமெரிக்கா இவ்வாறு கூறியுள்ளது. புலிகள் இயக்கம் சொல்லிலும் செயலிலும் பயங்கரவாதத்தைத் திட்டவட்டமாகக் கண்டிக்காதவரை அமெரிக்காவின் வெளிநாட்டுப் பயங்கரவாத இயக்கப் பட்டியலில் புலிகளின் பெயர் தொடர்ந்தும் இருக்கும். புலி இயக்கம் தொடர்ந்தும் ஆயுதக் கடத்தலில் ஈடுபடுகிறது. சிறுவர்களைத் தனது படையணிகளில் சேர்ப்பது உட்பட வலுக்கட்டாயமாக ஆட்களைத் தனது போருக்குத் திரட்டுகிறது. எனவே, புலி இயக்கத்தைப் பயங்கரவாதப் பட்டியலிலிருந்து நீக்க முடியாதென அமெரிக்கா தெரிவித்துள்ளது. புலிகள் தமது நீண்டகால நோக்கான தனிநாட்டுக் கோரிக்கையைக் கைவிட்டு, இலங்கையின் சமஷ்டி அமைப்புக்குள் உள்ளக சுயாட்சி அமைக்கும் கருத்தை அண்மையில் ஏற்றுக்கொண்டனர். இருந்தும் புலிகள் இயக்கமே உலகின் மிக மோசமான பயங்கரவாத இயக்கமென்பதை அதன் வரலாறு காட்டுகிறது. தற்கொலை அங்கிகளைப் பயன்படுத்துவதில் அதுவே முன்னோடியாகத் திகழ்ந்தது. எந்தவொரு பயங்கரவாத இயக்கத்திலும் பார்க்க மிகக் கூடுதலான தற்கொலைத் தாக்குதல்களை நடத்தியது புலிகள் இயக்கமேயென்றும் அமெரிக்கா தெரிவித்துள்ளது.

## தமிழக அகதிகளுக்கு விசேட திட்டம்

தமிழகத்திலுள்ள தற்காலிக முகாம்களிலும் நலன்புரி நிலையங்களிலும் தங்கியிருக்கும் இலங்கைத் தமிழ் அகதிகளை விரைவாக இலங்கைக்குக் கூட்டிவர, இலங்கை அரசாங்கம் அகதிகளுக்கான ஐ.நா. உயர்ஸ்தானிகராலயத்துடன் இணைந்து விசேட திட்டமொன்றினை மேற்கொள்ள வேண்டுமென்று அகதிகள் புனர்வாழ்வோடு சம்பந்தப்பீட்ட அதிகாரியொருவர் தெரிவித்தார். தமிழகத்தில் சுமார் அறுபதாயிரம் அகதிகள் தங்கியுள்ளனர். இவர்களில் கணிசமானோர் பத்து வருடங்களுக்கு மேலாகத் தங்கியுள்ளனர். இவர்களை வடக்கு - கிழக்குக்கு அழைத்து வருவதற்கு முன்னதாகப் பல நடவடிக்கைகளை எடுக்க வேண்டியுள்ளது. யுத்த காலத்தில் அவர்கள் கைவிட்டுச் சென்ற வீடுகள் புனரமைக்கப்பட வேண்டும். உரியவர்களுக்கே வீடுகள் கையளிக்கப்பட வேண்டும். வாழ்நிலம், வயல் நிலப் பகுதிகளிலிருந்து கண்ணிவெடிகள் அகற்றப்பட வேண்டும். இவர்கள் வாழ்க்கையைக் கொண்டுநடத்தவும் தொழில் புரியவும் உதவிகள் வழங்கப்பட வேண்டும் என்று அந்த அதிகாரி கூறினார். நாட்டுக்கு வெளியே 1,40,000 அகதிகள் வாழ்வதாகவும் உள்நாட்டில் இடம்பெயர்ந்து நான்கு இலட்சம் மக்கள் வாழ்வதாகவும் அந்த அதிகாரி கூறினார்.

## பிக்குகள் கட்சியில் மாற்றம்

பிக்குகளின் கட்சியென வர்ணிக்கப்படும் ஜாதிக ஹெல உறுமயவின் சட்ட திட்டங்களின்படி பிக்குகள் மட்டுமே பாராளுமன்றத் தேர்தல்களில் போட்டியிட முடியும். இக் கட்சியின் வேட்பாளர்களாகப் பிக்குகள் அல்லாத மக்களும் போட்டியிட ஏதுவாக இக் கட்சியின் யாப்பு விதியைத் திருத்துவது பற்றிக் கட்சித் தலைவரான திலக் கருணாரத்ன ஆராய்ந்து வருகிறார். தற்போதைய பாராளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் ஒன்பது பிக்குகளும் தொடர்ந்தும் பதவி வகிப்பார்களென்றும் இவர்களுக்குப் பதிலாகப் பொதுமக்கள் நியமிக்கப்பட மாட்டார்களென்றும் திலக் கருணாரத்ன குறிப்பிட்டார்.

## கந்தப்பொலவில் சிறு பொறி பெரு நெருப்பாக மாறியது எப்படி?

கந்தப்பொலவில் இரு தமிழ் தோட்டத் தொழிலாளர்கள் பொலிஸாரின் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகிக் கொல்லப்பட்டதைக் கண்டித்தும் இது குறித்து நீதியான விசாரணை கோரியும் மலையகமெங்கும் கடந்த மூன்றாம் திகதி நடைபெற்ற அடையாள வேலை நிறுத்தத்தில் சுமார் ஆறு இலட்சத்துக்கு மேற்பட்ட தோட்டத் தொழிலாளர்கள் பங்குபற்றினர். நுவரெலியா, ஹற்றன், கண்டி, இரத்தினபுரி, பதுளை, கேகாலை உட்பட மலையகமெங்கும் நடத்தப்பட்ட இந்த எதிர்ப்புப் போராட்டத்தில் எவ்வித கட்சி, தொழிற்சங்க வேறுபாடுகளுமின்றி அனைத்து அமைப்புகளும் கலந்துகொண்டன. பல மாவட்டங்களில் வர்த்தக நிலையங்கள் மூடப்பட்டிருந்தன. போக்குவரத்துகள் இடம்பெறவில்லை. அரச அலுவலகங்களும் தனியார் அலுவலகங்களும் வெறிச்சோடிக் காணப்பட்டன. கறுப்புக் கொடிகளும் பறக்க விடப்பட்டிருந்தன. கண்மூடித்தமனமாகத் துப்பாக்கிப் பிரயோகம் செய்த பொலிஸார் மீது நடவடிக்கை எடுக்குமாறு வெகுஜன அமைப்புகள் கோரிக்கை விடுத்திருந்தன. இச் சம்பவம் பற்றிக் கேள்விப்பட்டதும் ஜனாதிபதி, பிரதமரை உடனடியாக கந்தப்பொலவுக்கு அனுப்பி நிவாரண மற்றும் சமாதான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு பணித்திருந்தார். சம்பந்தப்பட்ட பகுதியைச் சேர்ந்த சிரேஷ்ட பொலிஸ் அதிகாரியொருவரும் இடமாற்றம் செய்யப்பட்டிருந்தார். இரு இன சாரதிகளுக்கிடையே ஏற்பட்ட வாக்குவாதமும் கைகலப்பும் பாரிய இனவெறி நெருப்பாக மூண்டதற்குக் காரணமானவர்களைக் கண்டுபிடிக்க இரகசியப் பொலிஸார் அழைக்கப்பட்டுள்ளனர். நீதி விசாரணை நடத்தப்படுமென்று ஜனாதிபதி உறுதியளித்துள்ளார்.

## இராணுவத்தின் ஆயுதங்களையே புலிகள் பயன்படுத்தினராம்

புலிகள் பயன்படுத்திய ஆயுதங்களில் கிட்டத்தட்ட 42 சதவீதமானவை இராணுவத்துக்குச் சொந்தமானவையென்று 'தெற்காசியாவின் சர்வதேசப் பங்குதாரர்' என்ற அமைப்பின் நிர்வாகப் பணிப்பாளரான டாக்டர் ஜேம்ஸ் அற்புதராஜா தெரிவித்தார். 'சிறு ஆயுதங்களும் மென்ரக யுத்தக் கருவிகளும்' என்ற தலைப்பில் சில தினங்களுக்கு முன்னர் கொழும்பில் நடைபெற்ற கருத்தரங்கொன்றில் உரையாற்றுகையிலேயே அவர் இத் தகவலைத் தெரிவித்தார். புலிகள் பயன்படுத்திய ஆயுதங்களில் பெரும்பாலானவை ஒன்றில், இராணுவத்தின் வசமிருந்து கடத்தி வரப்பட்டவை அல்லது ஆயுதப் படையினர் மீது நடத்தப்பட்ட தாக்குதல்களின்போது கைப்பற்றப்பட்டவையென்று அவர் கூறினார். சில வருடங்களுக்கு முன்னர் ஆபிரிக்க நாடொன்றிலிருந்து கப்பல் மூலம் இலங்கை இராணுவத்துக்கெனக் கொண்டுவரப்பட்ட கனரக ஆயுதங்களைப் புலிகள் நடுக்கடலில் வைத்துக் கடத்திச் சென்றதை அவர் ஞாபகமூட்டினார். பாதாள உலகக் கோஷ்டியினராலும் ஏனைய சமூக விரோத சக்திகளாலும் சுமார் பதினையாயிரம் சிறு ஆயுதங்கள் தற்போது இலங்கையில் பயன்படுத்தப்படுவதாக மதிப்பிடப்பட்டுள்ளது. சமூகத்தில் இன்று கொலை, கொள்ளை, வன்செயல்கள் மலிந்திருப்பதற்கு இதுவே காரணம் என்றும் அவர் சொன்னார்.

# முரசம்

## சமாதானம் சாத்தியமாகுமா?

அன்புள்ள உங்களுக்கு,
வணக்கம்.

பேச்சுவார்த்தையை ஆரம்பிக்குமுகமாக இங்கு வந்து சேர்ந்துள்ள நோர்வே தரப்பினரை மிகுந்த எதிர்பார்ப்புடன் நாட்டு மக்கள் அனைவரும் நோக்குகின்றனர். இன்று இலங்கையின் சகல தரப்பு மக்களாலும் வேண்டப்படுகின்ற ஒரு விடயம் நிரந்தர சமாதானமே. சமாதானம் என்பது சகலருக்கும் வேண்டிய ஒரு அவசிய விடயமாக இன்று மாறிவிட்டது. ஆனால், ஒவ்வொரு தரப்பினருக்கும் சமாதானம் என்பதன் அர்த்தம் வேறுபட்டதாகத்தான் இன்னும் இருக்கிறது. சிலருக்கு சண்டையில்லாத நிலைமை ஒன்றே சமாதானம் என்ற மிக எளிமையான அர்த்தமாகவுள்ளது. இன்னும் சிலருக்கு வடக்கிலிருந்து தெற்கிற்கும், தெற்கிலிருந்து வடக்குக்கும் தமிழரும், சிங்களவரும் போய் வரக்கூடிய நிலைமை இருப்பதே சமாதானம். இன்னும் சிலருக்கோ சிங்களவர்களும் தமிழர்களும் முஸ்லிம்களும் நட்பாக இருப்பதே சமாதானம். ஆனால், உண்மையில் இலங்கை என்ற பல்லினம் கொண்ட நாட்டின் சமாதானம் என்பது அந்தந்த இனத்துவ உரிமைகளை நிறைவு செய்து பரஸ்பரம் ஒருவரையொருவர் அங்கீகரிக்கின்ற ஒரு நிலைமையும், இந் நாட்டின் சகல அரசியல் அதிகாரங்களிலும் சகல இனங்களும் உரிய பங்கு வகிக்கக் கூடிய உத்தரவாதமுமே நடைமுறையிலான உண்மையான சமாதானத்துக்கான அடித்தளமாக அமையும். எந்த இனமும் மற்றொரு இனத்தின் மீது மேலாதிக்கம் செலுத்துகின்ற நிலைமையும் இல்லாதொழிக்கப்படுவது இங்கு அடிப்படைத் தேவையாகும். இதேவேளை சமாதானத்தை எய்துவதற்குச் சகல தரப்பினரும் விட்டுக்கொடுக்கும் மனப்பான்மையுடன் முன்வருவது முக்கியமான விடயமாகும். சமாதானம் என்பது பேரம் அல்ல. பேரம் பேசும் மனோபாவத்தைச் சமாதானத்தின்போது கடைப்பிடித்தால் அது வெறுமனே ஆட்சிப் பங்கீட்டு ஒப்பந்தமாக மட்டுமே அமையும். மக்களது மனங்கள் சங்கமிக்கும் ஒரு ஐக்கியமாக மலராது. அத்துடன் பலங்கள், பலவீனங்கள் மாற்றமடையும்போது இந்த ஒப்பந்தங்கள் தவிடுபொடியாகிவிடும். எனவே, இம்முறை மீண்டும் ஏற்பட்டிருக்கின்ற சமாதானப் பேச்சுவார்த்தைக்கான வாய்ப்பை நழுவ விடாது சகலரும் ஏற்றுக்கொள்ளக்கூடிய வகையிலும், சகலரையும் அரவணைக்கும் வகையிலும் பக்குவமாகக் கையாண்டு நிரந்தரமான சமாதானமொன்றுக்கு வழிகோல வேண்டியது மக்கள் மீது அக்கறை கொண்ட தலைமைகளின் கடமையாகும். இந்தச் சமாதானமானது இந் நாட்டில் பரம்பரை பரம்பரையாக வாழ்ந்து கழிக்கப்போகின்ற பரந்துபட்ட மக்களுக்கானதே; தனிப்பட்ட எந்தக் கட்சிக்குமோ, நபர்களுக்குமோ சொந்தமானதல்ல என்ற புரிதலுடன் இதனை அணுக வேண்டும். இன்று முன்னைய பகைமை நிறைந்த காலங்கள் போலன்றி சமாதானத்தின் அவசியத்தைச் சகல தரப்பினருமே உணர்ந்திருக்கும் காலமாகும். ஆளுங்கட்சி மட்டுமன்றி, எதிர்க்கட்சியும் சமாதானத்தை ஆதரிக்கும் நிலை இன்று உள்ளது. தமிழ் மக்கள், சிங்கள மக்கள், முஸ்லிம் மக்கள் என அனைவருமே அதனை வேண்டி நிற்கும் நிலை இன்றுள்ளது. இருந்தும் கூட சமாதானம் வரவில்லையாயின் நாம் எங்கோ ஒரு தவறு செய்திருக்கிறோம் என்பதே அர்த்தம்.

■■

மீண்டும் மறுமடலில்
வந்து கலக்கும்வரை

என்றென்றும் அன்புடன்,
ஆசிரியர்.

# எக்ஸ்ரே ரிப்போர்ட்

நரன்

# மத்தியஸ்த இக்கட்டில் மாட்டியிருக்கும் நோர்வே





நோர்வே மீண்டும் வந்துள்ளது. உண்மையில் வரவழைக்கப்பட்டுள்ளது. இலங்கை இனப் பிரச்சினை தொடர்பாகப் புலிகளுக்கும் அரசாங்கத்துக்கும் இடையிலான பேச்சுவார்த்தையில் மத்தியஸ்தராக - சரியாகச் சொல்லப்போனால் ஏற்பாட்டாளராகப் பணியாற்ற முன்வந்திருந்த நோர்வே நாடு, கடந்த அரசாங்க காலத்தின் இறுதிக் கட்டங்களில் ஜனாதிபதியின் அதிகாரத்துக்கும் பிரதமரின் அதிகாரத்துக்கும் இடையில் ஏற்பட்ட பிணக்கின் காரணமாகத் தனது மத்தியஸ்த அல்லது ஏற்பாட்டாளர் கடமையில் இருந்து தற்காலிகமாக விலகிக்கொள்வதாகத் தெரிவித்திருந்தது. யார் அரசாங்கத் தரப்பில் பொறுப்பு நிற்பது என்பது தொடர்பான தெளிவின்மையாலேயே இவ்வாறு அது ஒதுங்கியிருக்க நேரிட்டுள்ளதாகத் தெரிவித்தும் இருந்தது.

கடந்த அரசாங்கத்தின் இறுதிப் பகுதியில் ஜனாதிபதி பாதுகாப்பு அமைச்சு உட்பட மூன்று முக்கிய அமைச்சுக்களைத் தன்வசம் எடுத்துக்கொண்டது தெரிந்ததே. இவ்வமைச்சுகளை மீளக் கையளிக்க வேண்டுமென அப்போதைய ரணில் அரசாங்கம் அடம்பிடித்து நின்றது. இதேவேளை பேச்சுவார்த்தையை முன்னெடுப்பதற்கு பாதுகாப்புத் தொடர்பான உத்தரவாதங்களைத் தம்மால் வழங்க முடியாதுள்ளது என்பதால், பேச்சுவார்த்தையைத் தம்மால் கொண்டு நடத்த முடியாது எனவும் அது கைவிரித்திருந்தது. புலிகள் தரப்பிலும் யார் பேச்சுவார்த்தையில் உண்மையான உத்தரவாதிகள் என்பது தெளிவுபடுத்த வேண்டுமென வலியுறுத்தப்பட்டது. இந் நிலையில்தான் நோர்வே தனது மத்தியஸ்த அல்லது ஏற்பாட்டாளர் பங்கிலிருந்து தற்காலிகமாகப் பின்வாங்கிக்கொண்டது.

எனினும், கடந்த பொதுத் தேர்தலின் பின் மீண்டும் ஒரு மக்களாணை பெறப்பட்டுள்ளது. இதில் மக்கள் இம்முறை மறுபக்கமாக வாக்களித்துள்ளார்கள். அதாவது

> **எல்லாம் ஏன் என்றால். விடை மிகவும் சுலபமானது. ஆம்! யுத்தம் ஏற்பட்டுவிடக் கூடாது என்பதற்காகவே தான். யுத்தம் ஏற்பட்டுவிடக் கூடாதென்பது சமாதானம் ஏற்பட்டுவிடும் என்பதான அர்த்தமாகிவிட மாட்டாது. சமாதானம் என்பது சமாதானத்தை ஈட்டினால் மட்டுமே ஏற்படும். சமாதானம் என்பது மறுபடி யுத்தம் ஏற்படாது என்ற நிலைமையை எய்தினால் மட்டுமே ஏற்படும். ஆனால், யுத்தம் நின்றிருப்பது என்பது மறுபடி யுத்தம் ஆரம்பிக்க முடியுமென்ற சாத்தியக்கூற்றையும் கொண்டிருக்கும் ஒன்றே.**

இரண்டு ஆண்டுகளுக்கு முன் 2001இல் ஐக்கிய தேசிய முன்னணியை அமோக வெற்றி பெறச் செய்து ஆட்சிபீடத்தில் அமர்த்திய அதே மக்கள், இரண்டு ஆண்டுகளின் பின் இப்போது ஐக்கிய மக்கள், சுதந்திர முன்னணி என்ற கூட்டமைப்புக்குத் தமது பெரும்பான்மை ஆதரவை வழங்கியுள்ளார்கள். தற்போது ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி ஆட்சியமைத்துள்ளது. இந் நிலையில் ஜனாதிபதிக்கும் பாராளுமன்றத்துக்கும் இடையில் இருந்த முரண்பாடு முடிவுக்கு வந்துள்ளது. இரண்டுமே ஒரே கட்சியைப் பிரதிநிதித்துவப்படுத்தும் ஆட்சியாக அமைந்துள்ளதால் ஜனாதிபதியும் பாராளுமன்றமும் ஒருங்கிசைந்து செயற்படக் கூடியதாக உள்ளது.

ஆகவே, அரசாங்கத் தரப்பில் பொறுப்பாளியாக நிற்பது யார் என்பது குறித்த கேள்வி இப்போது இல்லாதொழிந்துவிட்டதால் பேச்சுவார்த்தையிலிருந்து நோர்வே தற்காலிகமாக விலகிக்கொள்வதற்காகக் கூறப்பட்ட காரணமும் இல்லாது போய்விட்டது. அதனால் அது மீண்டும் பேச்சுவார்த்தையில் ஈடுபடுவது இப்போது சாத்தியமாகியுள்ளது.

ஆனால், நோர்வேக்கு இது ஒன்றும் பட்டுக் கம்பள நடைபவனியாக இருக்கப் போவதில்லை. நோர்வேயின் பாத்திரம் மிகவும் இக்கட்டு நிறைந்ததாகத் தோன்றுகிறது. நோர்வே இவற்றைச் சமாளிக்க இணக்ககரமான இறுதி முடிவை எய்த எவ்வாறு வழிசெய்யப் போகிறதென்பதே யாவருக்கும் கேள்விக்குரிய விடயமாகவுள்ளது. நோர்வேயின் செயற்பாட்டைப் பொறுத்தவரை ஏற்கெனவே காரசாரமான பல விமர்சனங்கள் எழுந்திருந்தன. கடந்த அரசாங்க காலத்தில் எதிர்க்கட்சியாக இருந்த பி.ஏ.யும் ஜே.வி.பி.யும் அப்போது நோர்வே ஆற்றிய செயற்பாடுகள் ஏற்பாட்டாளர்கள் என்ற எல்லையை மீறிச் சென்றுகொண்டிருப்பதாகவும் இலங்கையின் இறைமைக்கும் சுயாதிபத்தியத்துக்கும் ஊறு விளைவிக்கும் நடவடிக்கைகளை அனுமதித்து வருதாகவும் குற்றஞ்சாட்டியிருந்தன. குற்றச்சாட்டாக மட்டுமன்றி, ஜே.வி.பி.யினர் நோர்வேயை வெளியேற்ற வேண்டுமென்ற எதிர்ப்புப் போராட்டங்களைக் கூட நிகழ்த்தும் அளவுக்குச் சென்றிருந்தனர்.

புலிகளுக்குப் பாரிய சக்தி மிக்க தொலைத்தொடர்பு சாதனம் ஒன்றை நோர்வே தனது செல்வாக்கைப் பயன்படுத்தி எடுத்துக் கொடுத்தமை பற்றி ஜனாதிபதியே விசனம் அடைந்ததுடன் அது சம்பந்தப்பட்ட நோர்வே தூதரக அதிகாரியை அந்நாடு திருப்பி எடுக்க வேண்டுமெனவும் நிர்ப்பந்தித்திருந்தார். இதே போல் நோர்வேயின் ஏற்பாட்டில் மேற்கொள்ளப்பட்ட புரிந்துணர்வு ஒப்பந்தமும் கூட பல இடங்களில் இலங்கையின் இறைமையை மீறும் வகையில் அமைந்திருக்கின்றன என ஜனாதிபதி உட்பட அன்றைய எதிர்க்கட்சிகள் (இன்றைய ஆளுங்கட்சிகள்) குற்றஞ்சாட்டியிருந்தன. மேலும், புலிகளின் ஆயுதக் கப்பல்கள் தாக்கப்பட்டமை தொடர்பான விடயங்களிலும், சீன மீன்பிடிக் கப்பல் முல்லைத்தீவுக் கடலில் புலிகளால் தாக்கப்பட்டு அதன் மாலுமிகள் கொல்லப்பட்ட விடயத்திலும் கண்காணிப்புக் குழுவால் தெரிவிக்கப்பட்ட தீர்ப்புகள் குறித்தும், இவர்கள் அதிருப்தி தெரிவித்திருந்தார்கள். இதைவிட குறிப்பாக கடந்த ஆண்டின் இறுதிப் பகுதியில் திருகோணமலை மாவட்டத்தில் புலிகளால் அமைக்கப்பட்ட குரங்குபாஞ்சான் முகாம் யுத்த நிறுத்த ஒப்பந்தத்தை மீறியதெனவும், அங்கிருந்து உடனடியாகப் புலிகள் பின்வாங்கிக்கொள்ள நோர்வே ஏற்பாட்டாளர்கள் வழி வகுக்க வேண்டுமெனவும் குரலெழுப்பினார்கள். அத்துடன் திருகோணமலையில் துறைமுகத்தைச் சூழ புலிகள் பல முகாம்கள் அமைத்து திருகோணமலையைத் தமது தாக்குதல் எல்லைக்குள் கொண்டுவந்துவிட்ட பேராபத்துக்கு, கடந்த அரசாங்கத்தின் யுத்த நிறுத்த ஒப்பந்தமே காரணமென இவர்கள் சாடியிருந்தார்கள். அப்போது இதற்குப் பதில் சொல்ல முடியாத நிலையில் அப்போதைய பாதுகாப்பு அமைச்சர் திலக் மாரப்பன இதனை உண்மைதான் என ஏற்று அதுதான் சமாதானத்துக்காகத் தாம் செலுத்த வேண்டிய விலையாக இருந்ததெனத் தெரிவித்திருந்தார்.

உண்மையில் இன்றைய அரசாங்கத்தின் வெற்றிக்கு உரமிட்ட கோஷங்களாக இவையே இருந்தன என்று கூறினால் தவறு காண்பதற்கில்லை. தேசத்தின் பாதுகாப்புப் பற்றிய விழிப்புணர்வை உயர்த்திப் பிடித்தே இன்றைய அரசாங்கமும் தனது தேர்தல் வெற்றிக்கான வியூகத்தை வகுத்துக்கொண்டது. இவ்வாறு கூறிக்கொண்டு பதவிக்கு வந்துள்ள இந்த அரசாங்கம் இனி எவ்வாறு பேச்சுவார்த்தையைக் கையாளப் போகின்றதென்பதும், அதில் நோர்வேயின் ஏற்பாட்டாளர் பாத்திரம் எத்தனை இக்கட்டுக்குள்ளானதாக அமையப்போகிறதென்பதும் இப்போதுள்ள கேள்விகளாகும்.

எனினும், எதிர்பார்த்ததற்கு மாறாக புதிய அரசாங்கம் தனது ஆரம்ப அடிகளை மிக நிதானமாகவே எடுத்து வைத்துச் செயற்படுகின்றது. முன்னர் ஆக்ரோஷமாக எதிர்த்த குரங்குபாஞ்சான் முகாம் பற்றிய கதையையே இப்போதைக்கு அது கைவிட்டுவிட்டது. திருகோணமலைப் பாதுகாப்புப் பற்றியும் அது முன்னர் தெரிவித்த சிரத்தையை இப்போது வெளிப்படையாக வெளிப்படுத்துவதாகயில்லை. வடக்கு -கிழக்கில் புலிகள் மேற்கொண்டுவரும் சகல விதமான சட்ட விரோதமான நடவடிக்கைகள் குறித்தும் - கப்பம், வரி, கெடுபிடிகள், புலிகளின் சட்ட ஒழுங்கு மற்றும் நீதிமன்ற நடவடிக்கைகள் என்பன குறித்து அது எதையுமே பிரஸ்தாபிக்கவில்லை. முன்னர் தேசிய பாதுகாப்புக்கும் இறைமைக்கும் விரோதமானதெனக் கண்டித்துவந்த அதே யுத்த நிறுத்த உடன்படிக்கையைத்தான் இந்த அரசாங்கமும் மௌனமாகத் தொடர்ந்த வண்ணம் உள்ளது. இதில் ஆச்சரியம் என்னவென்றால், பலரும் கடும் எதிர்ப்புத் தெரிவிக்கும் என எதிர்பார்த்த ஜே.வி.பி.கூட இவ்விடயத்தில் மென்போக்கைத் தழுவிய தலையிடாக் கொள்கையைக் கடைப்பிடித்து வருகின்றது.

எல்லாம் ஏன் என்றால. விடை மிகவும் சுலபமானது. ஆம்! யுத்தம் ஏற்பட்டுவிடக் கூடாது என்பதற்காகவேதான். யுத்தம் ஏற்பட்டுவிடக் கூடாதென்பது சமாதானம் ஏற்பட்டு விடும் என்பதான அர்த்தமாகிவிட மாட்டாது. சமாதானம் என்பது சமாதானத்தை ஈட்டினால் மட்டுமே ஏற்படும். சமாதானம் என்பது மறுபடி யுத்தம் ஏற்படாது என்ற நிலைமையை எய்தினால் மட்டுமே ஏற்படும். ஆனால், யுத்தம் நின்றிருப்பது என்பது மறுபடி யுத்தம் ஆரம்பிக்க முடியுமென்ற சாத்தியக்கூற்றையும் கொண்டிருக்கும் ஒன்றே.

இப்போது கேள்வி என்னவென்றால், மீண்டும் வருகை தந்திருக்கும் இந்த நோர்வே தரப்பினர் இன்றைய யுத்தமற்ற நிலையை - மீண்டும் ஒருபோதும் யுத்த நடைபெறாது என்ற நிலைக்குக் கொண்டுபோய்ச் சேர்க்கக் கூடிய வல்லமை பெற்றவர்களா? அவ்வாறு அவர்கள் கொண்டுபோய்ச் சேர்ப்பதற்கான வழிவகைகள் தென்படுகின்றனவா என்பதே?. அதனால், இப்போது மீண்டும் ஆரம்பிக்கும் இப் பேச்சுவார்த்தையின் முயற்சியின் முன்னரங்கத்தில் பல சவால்களே காத்திருக்கின்றன.

தற்போதைய அரசாங்கம் பேச்சுவார்த்தை முயற்சிகளை ஆரம்பிக்கும் முன்னரே பல இக்கட்டான நிபந்தனைகள் புலிகள் தரப்பிலிருந்து எழுந்துள்ளன. அவற்றை புலிகளின் பிரதிநிதிகளான கூட்டமைப்புப் பாராளுமன்ற உறுப்பினர்கள் சவால்களாக எடுத்தியம்பி வருகின்றனர். புலிகள் கடந்த அரசாங்கத்திடம் முன்வைத்திருந்த இடைக்கால அதிகாரசபை யோசனைகளை இவ் அரசாங்கம் ஏற்றுக்கொண்டால் மட்டுமே பேச்சுவார்த்தையை நடத்த முடியுமென்றும், புலிகள்தான் ஏகப் பிரதிநிதிகளென இவ்வரசாங்கம் ஏற்றுக்கொள்ள வேண்டுமெனவும், இந்த அரசாங்கம் எந்த அடிப்படைகளில் பேச்சுவார்த்தையை நடத்தப்போகின்றது என எழுத்துருவில் தமக்கு வெளிப்படுத்த வேண்டுமெனவும் புலிகள் கூறியுள்ளார்கள். புலிகளின் இக் கூற்றைத் தழுவியே நோர்வே பிரதிநிதிகள் கடந்த ஞாயிற்றுக்கிழமை ஜனாதிபதியை நுவரெலியாவில் சந்தித்து உரையாடியுள்ளனர்.

எவ்வாறெனினும் வடக்கு - கிழக்கின் அபிவிருத்திச் செயற்பாடுகளைப் புலிகளின் அனுசரணையுடன் முன்னெடுப்பதற்கு ஜனாதிபதி தனது விருப்பத்தை அங்கு தெரிவித்திருந்தார். ஆனாலும், இது மட்டும் புலிகளைத் திருப்திப்படுத்துமா என்பது கேள்விக்குரியது. புலிகள் கோரும் இடைக்கால அதிகார சபை என்பதை உடனடியாக வழங்கக் கூடிய நிலைமையில் இந்த அரசாங்கம் இல்லை. அதேவேளை இந்த அரசாங்கத்தில் அங்கம் வகிக்கும் அனைத்துக் கட்சிகளும், ஏற்கெனவே புலிகளின் யோசனைகளை அடியோடு நிராகரித்திருந்தன. அத்தோடு அதனை வழங்குவதானால் அரசியல் அமைப்புச் சட்டத்திலும் மாற்றம் செய்ய வேண்டியது அவசியமாகும். ஏனெனில் இவ் அதிகாரங்கள் தற்போதைய அரசியல் அமைப்புச் சட்டத்தை மீறுவனவாகவுள்ளன.

ஆனால், எவ்வாறாயினும் பேச்சுவார்த்தையை நடத்தியாக வேண்டிய அவசியம் இந்த அரசாங்கத்துக்கு உண்டு. பேச்சுவார்த்தை நிகழ்வதைப் பொறுத்தே வெளிநாட்டுக் கடனுதவிகளை ஈட்டிக்கொள்வது தங்கியுள்ளது. ஏற்கெனவே பல வெளிநாட்டு அமைப்புக்கள் தாம் முன்னர் உத்தரவாதம் செய்திருந்த கடனுதவிகளைத் தற்காலிகமாக இடைநிறுத்தி வைத்துள்ளன. இந்நிலையில் நோர்வே அரசாங்கம் எவ்வாறு இப் பாரிய இடைவெளியை ஈடுகட்டப்போகின்றது என்பதுதான் பெருத்த கேள்வி.

இதற்கிடையே நம்பிக்கைக்குரிய விடயமாக இருப்பது என்னவென்றால், அரசாங்கத் தரப்பிலும் யுத்தத்தை மேற்கொள்ள விருப்பமில்லை. புலிகள் தரப்பிலும் தற்பொழுது யுத்தத்தில் இறங்க விருப்பமில்லை. யுத்தத்தை ஆரம்பித்தால் அரசாங்கத்தின் செல்வாக்குச் சரிந்துவிடும் அபாயம் உள்ளது போல், புலிகள் தரப்பிலும் யுத்தத்தை ஆரம்பித்தால் சர்வதேச ஆதரவுகள் எதிராகிவிடும் அபாயங்கள் உள்ளன. எனவே, இரு தரப்பும் யுத்தத்தை விரும்பாத நிலைமை ஒன்றே இங்கே எஞ்சியிருக்கும் ஒரே ஒரு சாதகமான நிலை. இந்த நூலைப் பிடித்துக்கொண்டே நிரந்தர சமாதானம் வரை ஏறிச் செல்ல வேண்டியது எமக்கு இருக்கும் பரீட்சையாகும். ●

# கந்தப்பளையில் நடந்தது என்ன?

மலையக மக்களின் வாழ்க்கை முறையும் சரி, பொருளாதார வளர்ச்சி நிலையும் சரி, எப்பொழுதுமே இருண்ட யுகத்துக்குள் குப்பி விளக்கு வெளிச்சத்தைத் தேடுவதாகவே மலையகத்தின் வரலாறு இன்றும் உள்ளது. இனங்களுக்கிடையிலான மோதல்கள் விரிவடைந்து தமிழர், சிங்களவர் மற்றும் முஸ்லிம்கள் என வேறுபாடுகளைத் தோற்றுவிப்பதற்காகப் பின்னணியிலிருந்து செயற்படுகின்ற தீய சக்திகள் இனங்காணப்படாமையே அவ்வப்போது விரும்பத் தகாத சம்பவங்கள் நடைபெறுவதற்குப் பெரும் காரணமாக அமைகின்றது. அப்பாவி மக்களின் இடம்பெயர் வாழ்வையும், உயிருக்கு உத்தரவாதமற்ற நிரந்தரமற்ற சூழலையும் மனித நாகரிகத்தைப் பாதுகாக்க நினைக்கின்ற எவரும் விரும்பப்போவதில்லை. ஆனாலும், எவற்றுக்கும் முற்றுமுழுதாக மாறுபட்ட கோணத்தில் இனக் குழுமங்களுக்கிடையில் தேவையற்ற சச்சரவுகளைத் தோற்றுவித்து அதில் குளிர் காயும் அல்லது நேரடி அரசியல் இலாபம் தேடும் விசமிகள் இவ்வாறான சச்சரவுகள் தோன்றக் காரணமாக இருக்கின்றனர்.

இப்படி ஒரு இனத் தீ பற்றியெரிந்து சுமார் 20 வருடங்களைக் கடந்து வட - கிழக்கில் இன்னும் நீறு பூத்த நெருப்பாகவே கோர வடுக்களைச் சுமந்துகொண்டிருக்கிறது. வட, கிழக்கின்

**மலையக மக்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் அரசியல் கட்சிகளும் அதன் தலைவர்களும் மேற்படி சம்பவத்துக்குத் தங்கள் கண்டனக் கணைகளை மட்டும் பிரயோகித்தமை சம்பிரதாயபூர்வமானதாகவே கருதப்படுகிறது. எப்பொழுதுமே அரசியல் நோக்கங்களை மனதில் கொண்டு அறிக்கைகளையும் கண்டனங்களையும் வெளியிட்டுவரும் மக்கள் பிரதிநிதிகள், ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை எடுப்பதிலும், அரசியல் பேதங்களை மறந்து அரசின் நேரடித் தலையீட்டைப் பெறுவதிலும் அக்கறை செலுத்துவதில்லையெனலாம்.**

அழிந்து போன தேசத்தை மீளக் கட்டியெழுப்பி பசுமைப்படுத்த வேண்டுமாக இருந்தால் அரச தரப்பிலும், தமிழ்த் தரப்பிலும், இலங்கையில் வாழ்கின்ற அனைத்து மக்களின் சார்பிலும் பாரிய விட்டுக்கொடுப்புகளும் உண்மையான இணக்கப்பாடுகளும் அவசியமாகின்றது. இவ்வகையான மிகத் தொலைவில் இலக்குகளைக் கொண்டிருக்கும் வட கிழக்குப் பகுதிகளிலே தமிழ், முஸ்லிம் உறவுகளுக்கிடையில் முரண்பாடுகளைத் தோற்றுவித்து சுயநல அரசியல் இலாபத்தையும் பிழையான மக்கள் வழிநடத்தலையும் அன்மைக்காலங்களில் கையாண்ட தீய சக்திகள் பாதி இலாபத்தையும், பாதி நட்டத்தையும் ஈட்டிக்கொண்டுள்ளனர். அண்மித்த மிக சொற்ப காலங்களில் தமிழ், முஸ்லிம் உறவுகளுக்கிடையில் விரும்பத் தகாத மோதல்கள் எதுவும்



கட்டவிழ்த்து விடப்படாததால் ஓரளவு நிம்மதிகொள்ள முடிகிறது. நிலைமை இவ்வாறு இருக்க, நுவரெலியா மாவட்டத்தில் கந்தப்பளையில் நடந்த சிறு சம்பவம் தமிழ், சிங்கள இனங்களுக்கிடையிலான பெரும் மோதலாக உருப்பெறுவதற்குப் பிரதான காரணங்களாக சில அரசியல் சக்திகள் உட்பட காவல்துறையினரின் பாரபட்சமான நடவடிக்கையும் இருந்துள்ளது என்பதை எவரும் மறுக்க முடியாது.

முச்சக்கர வண்டியும், தனியார் பஸ் வண்டி ஒன்றும் தற்செயலாக விபத்துக்குள்ளானதைத் தொடர்ந்து ஏற்பட்ட முறுகல் நிலை குழுக்களுக்கிடையிலான மோதல்களாக திசை மாற்றப்பட்டுள்ளது. சிங்கள, தமிழ் இளைஞர்களுக்கிடையே மோதல்கள் பெரிதாகிக் கந்தப்பளை நகரில் பதற்றமான சூழலை உருவாக்கியது. சம்பவ இடத்திற்கு விரைந்த பொலிஸார் மோதல்களைச் சுமுக நிலைக்குக் கொண்டுவருமுகமாக தடியடி, கண்ணீர்ப்புகைப் பிரயோகம் என்பவற்றை நடத்தியும் நிலைமையைக் கட்டுக்குள் கொண்டுவர முடியாததால் துப்பாக்கிப் பிரயோகத்தை மேற்கொண்டுள்ளனர். மேற்படி துப்பாக்கிப் பிரயோகத்தில் கந்தப்பளை நோனா தோட்டத்தைச் சேர்ந்த ஜெயராம் 30 வயது, பாக் தோட்டத்தைச் சேர்ந்த விமலன் எஸ்கடேல் ஆகியோர் கொல்லப்பட்டுள்ளனர். மேலும், மேற்படி தோட்டங்களைச் சேர்ந்த புஷ்பராஜ் வயது 37, மகேந்திரன் வயது 32, அருணாச்சலம் வயது 27, கதிர்காமர் வயது 36 ஆகிய நால்வரும் படுகாயமடைந்தனர். கொல்லப்பட்ட மற்றும் காயமடைந்தவர்களின் விபரங்களின்படி பாதிக்கப்பட்டவர்கள் தமிழ் இளைஞர்கள் என்பது தெளிவாகின்றது. இரு கோஷ்டிகளுக்கிடையில் நடைபெற்ற மோதலை முடிவுக்குக்கொண்டு வருவதற்காகப் பொலிஸார் துப்பாக்கிப் பிரயோகத்தை மேற்கொண்டிருந்தால் தனியே தமிழ் இளைஞர்கள் மட்டும் பாதிக்கப்பட வாய்ப்பில்லை. அப்படியானால், அப் பகுதி மக்கள் முறையிடுவது போல் பொலிஸார் பாரபட்சமாகவே நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளார்கள் என்பதைப் புரிந்துகொள்ள முடிகிறது. அப்படியே நடந்திருக்குமாயின் அதை நாம் வன்மையாகக் கண்டிக்கிறோம். காவல் துறையை பொறுத்தவரையில் எந்த இனங்களுக்கிடையில் பிரச்சினைகள் தோற்றுவிக்கப்படுகின்றபோதும், மிக நிதானமாகவும், நடுநிலையாகவும், சட்ட ஒழுங்குகளை மதிக்கின்றவர்களாகவும் கடமையாற்ற வேண்டிய கட்டாயத்திற்குரியவர்கள். இவற்றை மறந்து சிறுபான்மை இனத்தவரை அச்சுறுத்தி அடி பணிய வைக்கும் தந்திரோபாயமாகப் பக்கச்சார்பில் நின்று பிரச்சினைகளை அணுகுவதானது விருப்பத்திற்குரியதல்ல. ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசைப் பொறுத்த வரையில் இனங்களுக்கிடையே முரண்பாடுகளை வளர்ப்பதை தவிர்த்து இணக்கப்பாடுகளை ஏற்படுத்துவதிலேயே பெரும் அக்கறைகாட்டி வருகின்றது. காவல் துறையின் இவ்வாறான பொறுப்பற்ற நடவடிக்கைகள் அரசுக்கும் அரச இயந்திரத்துக்கும் இழுக்கை ஏற்படுத்துவதாகவே அமையும். இவ்விடயத்தில் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ, ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க ஆகியோர் நீதியானதும் நியாயமானதுமான விசாரணைகளை முடுக்கிவிட்டுள்ளமையானது வரவேற்கத் தக்கது. ஆனாலும், இவ்விவகாரம் பற்றிய விசாரணைகள் எவ்வளவு விரைவில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நியாயங்களைத் தேடித்தர முடியுமோ, அவ்வளவு விரைவில் நடத்தப்பட வேண்டுமென நாம் எதிர்பார்க்கிறோம்.

குழுக்களுக்கிடையே ஏற்பட்ட மோதல்களில் 25 தமிழ் வர்த்தக நிலையங்கள் மற்றும் எரிபொருள் நிலையம் உட்பட பாரிய சொத்துக்கள் எரித்துச் சேதமாக்கப்பட்டுள்ளன. நிலைமை கட்டுக்கடங்காமல் தொடர்ந்ததால் களுத்துறை, நுவரெலியா, வலப்பனை, பூண்டுலோயா, கொழும்பு ஆகிய பகுதிகளைச் சேர்ந்த பொலிஸார் வரவழைக்கப்பட்டு தொடர்ச்சியான ஊரடங்குச் சட்டம் அமுலில் கொண்டுவரப்பட்டது. இதே சம்பவத்தில் 8 பொலிஸார் காயமடைந்தும், ஜீப் மற்றும் ஆட்டோவும் சேதமாக்கப்பட்டுள்ளன. காவல்துறையினர் பாரபட்சமாக நடந்து கொண்டதை எதிர்த்து கந்தப்பளை நகரைச் சூழவுள்ள நோனா தோட்டம், சந்திரகாந்தி,, சமர்பீல், கோட்லொஜ், எதென்ஸ் சைட், அகலவத்தை, பூப்பளை, கொங்கொடியா, புருக் சைட் உட்பட பத்துத் தோட்டங்களில் வேலை நிறுத்தம் செய்யப்பட்டது.

நிலைமை தொடர்ந்து மோசமாகிக் கொண்டிருப்பதைச் சுமுக நிலைக்குக் கொண்டுவருவதற்காகப் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ ஹெலிகொப்டர் மூலம்



கந்தப்பளைக்கு விஜயம் செய்து நிலைமையை நேரில் பார்வையிட்டும் ஊர்ப் பிரமுகர்களைச் சந்தித்து அமைதி நிலை தொடர்வதற்கான ஏது நிலைமைகள் குறித்தும் ஆராய்ந்தார். அப்போது காவல் துறையின் பாரபட்சமான நடவடிக்கை குறித்து முறையிடப்பட்டபோது, அது குறித்து முழுமையான விசாரணையை நடத்தத்தாம் நடவடிக்கை எடுப்பதாக உறுதியளித்த பிரதமர், கொழும்பிலிருந்து பிரதி பொலிஸ்மா அதிபர் விக்ரமரட்ன தலைமையிலான விசாரணைக் குழுவொன்றை அனுப்பிவைக்க ஏற்பாடுகளைச் செய்திருந்தமை வரவேற்கத் தக்கதே. இத்தனை சம்பவங்களுக்குப் பிறகு மலையக மக்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் அரசியல் கட்சிகளும் அதன் தலைவர்களும் மேற்படி சம்பவத்துக்குத் தங்கள் கண்டனக் கணைகளை மட்டும் பிரயோகித்தமை சம்பிரதாயபூர்வமானதாகவே கருதப்படுகிறது. எப்பொழுதுமே அரசியல் நோக்கங்களை மனதில் கொண்டு அறிக்கைகளையும் கண்டனங்களையும் வெளியீட்டுவரும் மக்கள் பிரதிநிதிகள், ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை எடுப்பதிலும், அரசியல் பேதங்களை மறந்து அரசின் நேரடித் தலையீட்டைப் பெறுவதிலும் அக்கறை செலுத்துவதில்லையெனலாம். இது போன்ற பிரச்சினைகள் எதிர்காலத்திலும் தோற்றுவிக்கப்படாமலிருக்க எவ்வளவு தூரம் பிரயோசனமான நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்பது கேள்விக்குறியாகும்.

இதற்கிடையில் நடந்து முடிந்த மேதினக் கூட்டங்களில் கந்தப்பளைச் சம்பவத்தில் உயிரிழந்தவர்களுக்காகவும்

அலசுவது
**- மதியூகி -**

பாதிக்கப்பட்டவர்களுக்காகவும் நீலிக்கண்ணீர் வடிக்கின்ற அரசியல்தனமாக ஒவ்வொரு கட்சியினதும் மேதினக் கூட்டங்களில் முக்கியத்துவம் வாய்ந்திருந்ததை அவதானிக்க முடிந்தது. இது தனியே அரசியல் பிரமுகர்களைக் கண்டிப்பதாக மட்டுமல்லாமல், மலையக மக்களின் சுதந்திர சிந்தனையைத் தூண்டிவிடுவதற்கும், எவரும் எவர் முதுகிலும் சவாரி செய்ய முடியாதென்பதை அழுத்தம் திருத்தமாக வெளிப்படுத்துவதற்கும் வாய்ப்பளிக்கக் கூடியதாக இருக்க வேண்டும். எது எப்படியிருப்பினும், இந்த நாட்டின் எப் பகுதியில் வாழ்கின்ற மக்களையும் அடக்கி அடிபணிய வைத்து தங்கள் நோக்கங்களை நிறைவேற்றிக்கொள்ள முடியுமென எண்ணுகின்றவர்களுக்கு நல்ல படிப்பினையாக மலையக மக்களுக்குக் கிடைக்கப்போகும் நியாயம் அமைவது அவசியம்.

---

## அதிரடி அய்யாத்துரை



கந்தப்பளைக் கலவரத்தை எப்பிடியெப்பிடி தங்கட அரசியலுக்கு அவல் ஆக்கலாம் எண்டு ஆளாளுக்கு ஆலாய்ப் பறக்கினம். யாழ்ப்பாணத்து மே தினத்திலையும் கண்டனமாம். 'ஆடு நனையுது எண்டு ஓநாய் அழுகிற' கதைதான் இங்கை அதிகப்படி. எது எப்பிடியிருந்தாலும் மலையகத் தமிழருக்கு எதுக்கெடுத்தாலும் அடியெண்டது வழமையாப் போட்டுது. சும்மா நடந்த அக்சிடண்டில என்ன மாதிரி பொலிரிக்ஸ் பாவிக்கப்படுகுது எண்டு பாத்தியளோ! எண்டாலும், காக்கிச்சட்டைக்காறர் கடமையைப் பாக்காமல் ஒரு தரப்பை மட்டும் பாத்திருக்கினம். இரு தரப்பு வாழுற இடத்தில ஒரு தரப்புக்கு அதிகாரம் இருந்தா இப்படித்தானாக்கும்.

தினமுரசுக்கு ஒவ்வொரு வருசமும் அரங்கேற்ற விழாவொண்டு நடந்துதான் ஆகுது. இந்த முறை தீவுப்பகுதியில சிலபேர் 'முரசை' முடக்க வேணுமெண்டு முனைப்பாய் இருக்கினம். அவைக்குத் தெரியாது, பந்தை அடிக்க அடிக்கத்தான் உயர எழும்பும் எண்டு. பலாத்காரம் பண்ணி பத்திரிகையை ஒடுக்க முடியாது. மாற்றுக் கருத்துக்கு மதிப்பளிக்கிற மனோபாவம் எண்டைக்குத்தான் மலரப் போகுதோ? இந்த மாதிரி விசயங்கள ஊடகங்களும் நியாயப்படுத்தினா அதை என்னெண்டு சொல்லிறது.?

புதிய ஜனநாயகக் கட்சியின்ர மேதினம் ஒண்டு யாழில நடந்தது. ஏகப் பிரதிநிதிகளின்ர கெடுபிடியளத் தாண்டி நடத்தினது கெட்டித்தனந்தான். அதிலும் கெட்டித்தனம் தலைவர் செந்திலின்ர பேச்சு. அமிர்தலிங்கத்தையே கொல்ல வேண்டுமெண்டு ஒரு காலத்தில சொன்ன இனவாதி ஒருவரை பாராளுமன்றத்தில தெரிவு செய்யிறதுக்கு கூட்டணி அங்கம் வகிக்கிற கூட்டமைப்பே ஒட்டுமொத்தமா வாக்களிச்சது எண்டெல்லோ பேசியிருக்குது மனிசன். அமிரைக் கொண்டவையளோடயே கூட்டுச் சேந்திட்டினமாம்; கொல்ல வேணுமெண்டு சொன்னவருக்கு வாக்களிச்சதில என்ன வியப்பிருக்கு மிஸ்டர் செந்தில்.?

வன்னியில நடந்த சந்திப்பில வடக்கு - கிழக்கில இருந்து மாற்றுக் கட்சிக்காறரை வெளியேத்திற 'ஜொப்'பை புது எம்.பிமாருக்குக் குடுத்திருக்கினமாம். இது நனைச்சுச் சுமக்கிற வேலையெண்டு சில பேருக்கு அதிருப்தி. அதிருப்தி மிஞ்சிப் போய் அக்கம் பக்கத்திலயும் புறுபுறுத்தினமாம். வட்டு டு. நாய் வேசம் போட்டால் "வள் வள்" செய்துதானே ஆகவேணும்.

சம்பந்தனார் சபை நடுவில சினங்கொண்டு பேசினவரெல்லோ, யாழ்ப்பாணத்துப் பிரதிநிதியொருவருக்கு அமைச்சைக் கொடுத்ததற்கு. அதற்குப் பதிலடியா பத்தி எழுத்தாளர் ஒருத்தர் கேட்டிருந்த கேள்விகள் நியாயமாத்தான் படுகுது. யாழ்ப்பாணம் என்ன நிறமெண்டு தெரியாத திருச்செல்வத்தாருக்கு அமைச்சுப் பதவி கொடுக்கேக்க மக்கள் நிராகரிப்பினமோ இல்லையோவெண்டு பாத்தே கொடுத்தவை. டக்ளஸை எப்பிடி மக்கள் நிராகரிச்சவயளெண்டு சொல்லிறது? உந்த நெருக்கடிகளுக்குள்ளயும் ஆள் வாக்குக் கேட்டு எம்.பியாய் வந்திருக்கிறார். மக்களின்ர தெரிவுதானே எண்டு இடிச்சுக்காட்டி எழுதியிருக்கிறார் கோகர்ணத்தார். நியாயமான கேள்விதான்.

பேச்சுவார்த்தைக்கு ஆயத்தங்கள் தொடங்கிவிட்டுது. ஜனாதிபதியைச் சந்திச்ச நோர்வே அமைச்சர் விதார் ஏனோ ரெண்டெழுத்தாரைச் சந்திக்காமல் இந்தோனேசியாவுக்குப் போய்விட்டார். எரிக் சொல்ஹெய்ம்தான் ரெண்டெழுத்தாரைச் சந்திச்சவர். ஒருவேளை ஜனாதிபதி மட்டத்தில சமப்படுத்தக் கூடாதெண்டு மாற்றொழுங்கு செய்திருக்கினம் போல. மறுபக்கத்தில இந்தியாவையும் இன்வோல்ட் பண்ண கதிர்காமர் சந்திக்கிறார். ஏதோ நல்ல விதமாக எல்லாம் ஒப்பேறினாச் சரி. இந்த இடத்தில கண்ணியமா நடந்துகொண்டதுக்கு ஜே.வி.பி.யைப் பாராட்டலாம்.

பிக்குமாருக்கு அவமதிப்பு நடந்திட்டுது எண்டு பீரிஸார் அழுகிறார். அரசியல் வேணாமெண்டு போதி மரத்துக்கு கீழ ஞானம் தேடினவர் புத்த பெருமான். இவையள் என்னடாவெண்டால் போதி மரத்தடியில இருக்காமல் பாராளுமன்றத்துக்குப் புறப்பட்டிருக்கினம். பாராளுமன்றம் போனால் பேச்சும் விழும், ஏச்சும் விழும். தாக்குப் பிடிச்சு தேறி வாறது அவையளின்ர கெட்டித்தனம். இதுக்குப் போய் மற்றவையள் தலையை உடைக்கிறது தேவைதானா?

தமிழர் கைது செய்யப்படுகினம் எண்டு தமிழ் எம்.பிமார் முறைப்படுகினம். மற்றப் பக்கத்தால கருணாவின்ர ஆக்கள் சுடுகினம் எண்டு ரெண்டெழுத்தார் முறைப்படுகினம். இவ்வளவு காலமும் மாற்றுக் கருத்தார் கொல்லப்படேக்கையும் தாக்குப்படேக்கையும் இவை முறையிட்டதோ குறைப்பட்டதோ இல்லை. இப்பதான் ஞானம் பிறந்திருக்குப் போல. பட்டால்தானே புரியுது தொட்டாச் சுடுவது நெருப்பு எண்டு.

நல்ல செய்தியா ஒண்டச் சொல்லி முடிக்கிறன். ஐரோப்பிய யூனியனில மேலும் பத்து நாடுகள் சேர்ந்து இருபத்தைஞ்சு நாடுகள் கொண்ட பலமான அமைப்பா மாறியிருக்கினம். இது ஜனநாயகத்துக்கான பலமாக அமையிறதைப் பொறுத்துத்தான் உலகம் இனி நிம்மதிப் பெருமூச்சு விடக்கூடியதாய் இருக்கும். ஒரு பக்கமாகச் சாய்ந்து போன உலகப் போக்கை சமப்படுத்த உதவுமெண்டு எல்லாரும் எதிர்பார்க்கினம். எதிர்பார்ப்பு நிறைவேற வேணுமெண்டதுதான் எங்கட விருப்பமும்.

# தினமுரசு சந்தா விபரம்

## சந்தாக் கட்டண அதிகரிப்பு விபரம்

இலங்கையில் தபால் கட்டண அதிகரிப்பு காரணமாக சந்தாக் கட்டணமும் உயர்த்தப்பட்டுள்ளது. அது சம்பந்தமான விபரம் பின்வருமாறு:

| நாடுகள் | ஒரு வருடம் | 6 மாதம் | 3 மாதம் |
|---|---|---|---|
| ஐரோப்பிய நாடுகள் | ரூ. 3500 | ரூ.1750 | ரூ.875 |
| அமெரிக்கா, கனடா | ரூ. 4400 | ரூ.2200 | ரூ.1100 |
| மத்திய கிழக்கு நாடுகள் | ரூ. 3100 | ரூ.1550 | ரூ.775 |
| உள்ளூர் | ரூ. 1050 | ரூ.525 | ரூ.265 |

சந்தா செலுத்தி தபாலில் தினமுரசு வாரமலரை பெறவிரும்புவோர் D.D. Enterprises எனும் பெயரில் எழுதப்பட்ட காசோலைகள் அல்லது வங்கிக் கட்டளைகளை முகாமையாளர் தினமுரசு 16A, Nelson Place, Wellawatta, Colombo-06 . Srilanka என்ற முகவரிக்கு அனுப்பி பெற்றுக் கொள்ளலாம். இந்த முகவரிக்கு வந்து நேரில் பணம் செலுத்தவும் முடியும்.

உள்ளூரில் சந்தா பெற விரும்புவோர் சந்தாத் தொகையை காசுக் கட்டளையாக வெள்ளவத்தை தபாற்கந்தோரில் மாற்றும் வண்ணம் &Manager Thinamurasun என்னும் பெயருக்கு கட்டளையிட்டு பதிவுத்தபாலில் Thinamurasu Varamalar 16A, Nelson Place, Wellawatta,Colombo-06 .என்ற முகவரிக்கு அனுப்பிவைத்தல் வேண்டும்.


45 வருட காலமாக நிரூபித்துக் கொண்டிருக்கும் மலையாள மாந்திரீக சக்தி



உங்கள் எண்ணத்தில் அருள் ஞான கவசம்

தெய்வத்தால் ஆகாதது ஒன்றும் இல்லை. தெய்வத்தை நேசிப்பவரை நேசியுங்கள். தெய்வம் உங்களை நேசிக்கும்.

எனது மாந்திரீக அருள் சக்தியால் காரியம் கைகூட, சூனியமும் தேவதை குற்றமும் அகல, கலகம் தீர, கடன் தொல்லை அகல, வறுமை நிவர்த்தி பெற, வாத சேட்டை, மோகினி சேட்டை விலக, மாந்திரீக சித்தி உண்டாக, சர்வ வசியம் பெற, கரும வினைகள் அகல, நோய் தீர, திரிபுர ஈஸ்வரி சித்திபெற, ஓடிப்போனவர் தேடி வர, தடைப்பட்ட திருமணம் நடைபெற, கூந்தல் அழகிகளாகத் திகழ, காதல் கைகூட, சித்தப்பிரமை, மனப்பயம், தூக்கமின்மை அகல, வெளிநாட்டுப் பிரயாணம் சரிவர, குழந்தைப் பேறு கிட்ட, எதிரிகள் ஒழிய, தொழில் விருத்தியடைய...

இன்னும் எத்தனையோ பிரமிப்பூட்டும் நன்மைகளை ஒரே ஒரு அட்சரக் கூட்டை அணிவதன் மூலம் அடையலாம். திட்டவட்டமான மாந்திரீக சக்தி என்பதால் வாங்கும் பணத்திற்கு ரசீதையும், காரியங்கள் நடைபெறும் தினத்தையும் வழங்குவதில் நாம் மட்டுமே முன்னணி வகிக்கின்றோம்.

**எனக்கு துர்க்கை தந்த ஞான சித்தங்கள் என்ன?**

1) மாந்திரீக சக்தியால் முடிந்த வேலையை மட்டும் பாரம் எடுப்பது.

2) முடியுமா, முடியாதா என்று முன்னமே கூறுவது.

3) முடிவெடுக்கும் காரியத்தை - முடிவாகும் திகதியை ஏற்கெனவே கூறுவது.

4) வாங்கும் பணத்துக்கு ரசீது கொடுப்பது.

**இனி என்ன உங்கள் குறை?**
**குறை நிறைகளுக்கு என்னை வந்து கலந்து ஆலோசனை செய்யுங்கள்.**
**கைரேகைக்கு மட்டும் முன்பதிவு அவசியம்!**
**நன்மை [illegible]களின் நற்சாட்சிப் பத்திரங்கள் எத்தனையோ [illegible] என்னிடம் வந்து குவிந்து கிடக்கின்றன.**

ஐயாவிடம் [illegible]யாக தொலைபேசியில் உரையாட வேண்டுமாயின் முன்கூட்டியே [illegible]137 உடன் தொடர்புகொண்டு உங்கள் தொலைபேசி இலக்கத்தைப் பதிவு செய்துகொண்டால் மாத்திரமே அவகாசம் உள்ளபோது அவரே உங்களிடம் உரையாடுவார். ஏனைய தொலைபேசி ஆலோசனைக்கு சிவாவிடம் தொடர்புகொள்ளவும்.

லண்டன் [illegible] சுபிதா
ஓடர் இல. 930/F
ஐயா, உங்கள் கிருபையால் என் மருமகளும் மகனும் ஒற்றுமையாக வாழ்கிறார்கள். நாம் கட்டிய பணத்திற்கு ஒரு பிரயோசனம் தெரிந்தது.

சூரியகுமாரி- கொழும்பு
அற்புதத்தில் அற்பதம்.
20 வருடமாக என் மச்சான் குடித்தார்.
உங்கள் கிருபையால் குடியை நிறுத்திவிட்டார். ஐயா!
உங்களுக்கு என் மனமார்ந்த நன்றி.

தேவைகளுக்கு....

Prof.Dr.P.K.SAMY, J.D.G.A.N.(JP)

Sri Dhurkadevi Manthiriga Uchadana Peedam
No.162, Kotahena Street, Colombo-13.
Tel: 011-2342463, 2344832, 2342464
Fax : 2344831, 2431137, 2470615- E-mail: drpksamy@sltnet.lk
No. 3, Daily Fair Complex, Nuwaraeliya.
Tel : 052-2222508, 052-2235097.




# கொழும்புக் கம்பன் கழகம் நடாத்தும் இலக்கியத் தொடர் விரிவுரை

## இவ்வாண்டு பேராசிரியை ருக்மணியின் 'மகாபாரத'ச் சொற்பொழிவு

கொழும்புக் கம்பன் கழகம் ஆண்டுதோறும் முத்தமிழுக்கும் விழா எடுத்து வருகிறது. கம்ப காவியத்தை இளைய் தலைமுறையினர் மத்தியில் பரப்பவும், நம் தமிழ்ப் பாரம்பரிய இசை, நாட்டிய மரபுகளை நிலைநிறுத்தவும், இளையோர்க்கு அக்கலைகளில் ஆர்வமுண்டாக்கவும், இவ்விழாக்கள் மூலம் கம்பன் கழகம் முயற்சித்து வருகிறது. கம்பன் கழகத்தின் இவ்விழாக்களுக்கு தமிழ் இரசிகர்கள் மத்தியில் பெரும் வரவேற்பு இருந்து வருகிறது.

பல அன்பர்களின் வேண்டுகோளின்படி, கம்பராமாயணம் தவிர்ந்த மற்றைய பழைய இலக்கியங்களை இளைய தலை முறையினருக்கு அறிமுகப்படுத்தும் வகையில், கடந்த மூன்று ஆண்டுகளாகத் தொடர்ந்து இலக்கிய விரிவுரைகளைக் கொழும்புக் கம்பன் கழகம் நடாத்தி வருகிறது.

இன்று மரபிலக்கியப் பயிற்சியுள்ள அறிஞர் தொகை அருகிவிட்ட நிலையில் மாணவர்க்கு மட்டுமன்றி, இளைய தலைமுறையைச் சார்ந்த ஆசிரியர்கட்கும் மரபிலக்கியப் புலமை என்பது, எட்டாக்கனியாகவே இருந்து வருகிறது. மரபிலக்கியங்களைக் கற்கும், கேட்கும் வாய்ப்பிழந்து நிற்கும் இவர்களுக்கு, கொழும்புக் கம்பன் கழகம் நடாத்தும் இலக்கியத் தொடர் விரிவுரைகள் பெரும் நன்மை பயந்து நிற்கின்றன.

இவ்விலக்கியத் தொடர் விரிவுரை வரிசையில் 2001ஆம் ஆண்டு பேராசிரியர் செல்வ கணபதி அவர்கள் 'பெரியபுராணம்' பற்றியும். 2002ஆம் ஆண்டு பேராசிரியர் சுந்தரமூர்த்தி அவர்கள் 'திருக்குறள்' பற்றியும், 2003ஆம் ஆண்டு கவிஞர் கவிக்கோ அப்துல் ரகுமான் அவர்கள் 'சிலப்பதிகாரம்' பற்றியும் விரிவுரைகளை நடாத்தினர். இவ்விரிவுரைகளில் பெருமளவிலான அறிஞர்களும் இளைஞர்களும் கலந்துகொண்டு பயனெய்தினர்.

இவ்வாண்டுக்கான கொழும்புக் கம்பன் கழகத்தின் இலக்கியத் தொடர் விரிவுரை எதிர்வரும் மே மாதம் முதலாந் திகதி சனிக்கிழமை முதல் எட்டாந் திகதி சனிக்கிழமை வரை கொழும்பு இராமகிருஷ்ண மிஷன் கருத்தரங்க மண்டபத்தில் நடைபெற ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது. இவ்வாண்டு 'மகாபாரத' இலக்கியம் பற்றிய தொடர் விரிவுரைகள் நடாத்தப்படவுள்ளன.

தமிழக பேராசிரியை ஸ்ரீமதி இரா. ருக்மணி அவர்கள் இத்தொடர் விரிவுரைகளை நிகழ்த்தவுள்ளார். இவர் கடந்த பல தசாப்தங்களாக மரபிலக்கியத் தொடர் விரிவுரைகளைத் தமிழ்நாட்டிலும் பிற நாடுகளிலும் நிகழ்த்தி வருபவர். மரபிலக்கியங்களில் ஆழ்ந்த பயிற்சியும் சிறந்த பேச்சு வன்மையும் கொண்டவர். தமிழில் ஐந்து எம்.ஏ. பட்டங்களைப் பெற்றவர். இவர் 'நதிக்கரை நாணல்', 'செம்புலப் பெயல் நீர்', 'புள்ளி மாறிய கோலம்', 'வெளிச்சப் பொட்டுக்கள்', 'கவிதை அரங்கேறியது', 'வாழ்க்கைக் கணக்கின் வரவு செலவுகள்', 'தவறான இசைக்குச் சரியான பாடல்', 'புதிய பூபாளம்' எனுந் தலைப்புக்களில் தொடர்ந்து உரையாற்ற உள்ளார்.

இத்தொடர் விரிவுரைகள் தினமும் மாலை 6.00 மணிக்கு ஆரம்பமாகி, 8.00 மணி வரை நிகழ்த்தப்படவுள்ளன. கொழும்புக் கம்பன் கழகப் பெருந்தலைவர் உச்ச நீதிமன்ற நீதியரசர் மாண்புமிகு சி.வி. விக்னேஸ்வரன் அவர்கள் வழமை போல முதல் நாள் உரையினைத் தொடக்கி வைக்கிறார். ஈழத்தின் பிரபல பெண்மணிகள் தினமும் பங்கேற்று மங்கள விளக்கேற்றியும் தலைமையுரையாற்றியும் நிகழ்ச்சியைச் சிறப்பிக்கின்றனர். இலக்கிய இரசிகர்களுக்குப் பெருவிருந்தாகும் இத்தொடர் விரிவுரைகளில் கலந்து அனைவரும் பயன் கொள்வார்களாக.

*- ச. ஆ. பாலேந்திரன்,*
*பொருளாளர்,*
*கொழும்புக் கம்பன் கழகம்.*

# எழுத்தாளர்களின் கவனத்திற்கு

**மலையகச் செய்திகள் எமக்கு அரசியல் சாயம் பூசி அனுப்பப்படுவதால் எமது தெரிவுக்குட்படுவதில்லை. எனவே சுதந்திரமாகவும், நியாயமாகவும் எவரையும் நேரடியாகக் குறிப்பிடாமலும் உண்மைச் செய்திகளை எழுதக் கூடியவர்கள் தாராளமாக எமக்கு எழுதலாம். செய்தியாகவோ / கட்டுரையாகவோ உங்கள் மன எண்ணங்களை எம்மோடு பகிர்ந்துகொள்ளுங்கள்.**

1. மலையகச் செய்திகளுக்கு முக்கியத்துவம் கொடுக்கவும் முறைப்பாடுகளைச் சம்பந்தப்பட்டவர் களின் கவனத்திற்குக் கொண்டுவரவும் நாம் கடமைப்பட்டுள்ளோம். ஏற்கெனவே கவிதை, சிறுகதை என்பவற்றுடன் முரசின் வளர்ச்சியில் ஒன்றித்திருப்பவர்களுக்கு எமது சிரம் தாழ்ந்த நன்றிகளையும் பாராட்டுக்களையும் தெரிவித்துக்கொள்கிறோம்.

**பி.கு.**

துணிந்து உண்மைச் செய்திகளை நேர்மையாக எமக்கு எழுதக் கூடிய பிராந்தியச் செய்தியாளர்களின் பங்களிப்பும் வரவேற்கப்படுகிறது. வடக்குக் கிழக்குச் செய்திகளை விடவும், மலையகச் செய்திகள் தொடர்பிலும் முரசு கூடிய கவனம் செலுத்தவுள்ளதால் ஒத்தாசை புரிந்து செயலாற்றத் துடிப்பான எழுத்தாளர்கள் வரவேற்கப்படுகிறார்கள்.

**நம்மால் முடிந்த சேவையை நம் சமூகத்திற்குச் செய்வோம். நமக்கு என்ன கிடைத்தது என்பதை விடவும் நாம் என்ன கிடைக்கச் செய்தோம் என்ற கேள்வியை நம்மை நோக்கி நீமே கேட்போம்.**

**நன்றி-**
**ஆ - ர்**


ஊடகமே உலகம்
(வானொலி, தொலைக்காட்சி, பத்திரிகை)
ஊடக டிப்ளோமா கற்கை நெறி
DIPLOMA IN MASS MEDIA
DIPLOMA IN BROADCASTING
சான்றிதழை பெற்றுக்கொள்ளுங்கள்
தபால் மூலம்
6 மாத கால பாடநெறி
தொடர்பு: (011) 4512830
MMIC 50, 2nd Floor, "Colombo Plaza" Galle Road, Wellawatta, Colombo - 06.
Mass Media Institute of Ceylon (Pvt) Ltd.,

தெய்வீக மருத்துவம்
சர்வதேச சமூக மாந்திரீக மருத்துவ தெய்வீக சேவை
Goverment Approved Charity Regd No - HA/4/BT/219
டாக்டர் பாலுசோதிடர் S.A.M.P.J.P.(SL)

கிரக தோஷம் காலப்பகையால் பிரிந்த காதலர்கள், கணவன் – மனைவி ஒன்று சேர, வெறுத்த உறவினர்கள், வேண்டியவர்கள் அன்பாக இருக்க, காதல் திருமணம் எல்லோருடைய சம்மதத்துடன் நிறைவேற மற்றும் வேறு தீவினைகளால் வாழ்க்கையில் தீராத மனநோய், தாழ்வு மனப்பான்மை, கல்வி, தொழில், விவாகம், வெளிநாட்டுப் பிரயாணம், வேறு முயற்சித் தடை, குடும்ப வாழ்க்கையில் சந்தோஷமின்மை, வெளியில் சொல்ல வெட்கமான பிரச்சினைகள், தீய பழக்கம், மனிதத் தீமை, மருந்தீடு போன்ற தீமைகளில் இருந்து விடுபட்டு சந்தோஷமாக வாழ, பிரச்சினைகளுக்குரிய காரணத்தை காண்டம் இறைச்சக்தியால் கண்டறிந்து துன்பம் நீங்கி மகிழ்ச்சியாக வாழ புனித புராதன தீங்கற்ற மஹா மாந்திரீக தெய்வீக மருத்துவத்தினால் நிவர்த்தி அளிக்கப்படுகிறது.

நேரில் வரமுடியாதோர், வெளிநாட்டவர்கள் தம் பிரச்சினையை எழுதினால் அல்லது தொலைபேசி, ஃபக்ஸ் மூலம் தொடர்பு கொண்டு உடன் பயன் தரும் தெய்வீக மருத்துவப் பொருட்களை விசேட தபால் மூலம் பெற்று தம் எண்ணங்களை நிறைவேற்றிக்கொள்கிறார்கள். (இரகசியம் பாதுகாக்கப்படும்.)

Theiveegam Srilanka
Head Office
Batticaloa
தெய்வீக ஸ்ரீலங்கா
தலைமையகம்
மட்டக்களப்பு
Tele/Fax : 065-2224825,00940777032844 Balu Sothidar @ hotmail.com.

"வாழ்வினிருளை நீக்கி ஒளியையேற்றுவோம்"
"DISPEL DARKNESS LIFE AND LET LIGHT SHINE"


# வானொலிகளின் வியாக்கியானம்

இலங்கையின் காற்றலையில் சுதந்திரமாக வலம் வரும் அரச வானொலிகளும் தனியார் வானொலிகளும் ஊடகச் சுதந்திரத்தை மறந்து தான்தோன்றித்தனமாக நிகழ்ச்சிகளைத் தயாரித்து வருகின்றன. பெயர்களைக் குறிப்பிட்டு என் முகத்திரைக்கு முக்காடிட்டுக்கொள்ள விரும்பாத காரணத்தினால் விதாண்டாவாதம் நடத்தும் ஒரு சில நிகழ்சிகளைப் பற்றிய தனிப்பட்ட ஆதங்கத்தை மட்டும் வெளிப்படுத்திக்கொள்ள விரும்புகிறேன். தனியார் வானொலிகளில் ஏட்டிக்குப் போட்டியாக விடாக்கண்டன்னாக கொடாக்கண்டன் இயங்கி வரும் இரு தனியார் வானொலிகளும் இலங்கையின் அரசியல் நிலைமைகளை விவாதிக்கின்ற - விமர்சிக்கின்ற - கோணத்திலான நிகழ்ச்சிகளை நடத்துகின்ற பாங்கு பண்பு மீறியதாகவுள்ளது. உயரமான இடத்தில் இருந்து ஒலிபரப்பாகும் வானொலி காலையில் நடத்துகின்ற பத்திரிகைக் கண்ணோட்டத்துடன் கூடிய விசமத்தனமான வியாக்கியானம் வெறுப்புக்கொள்ள வைக்கிறது. நேயர்கள் மத்தியில் தனது நற்பெயரை மிகவும் தாழ்த்திக்கொண்டுள்ளது. தேர்தல் காலங்கள் அரசியலையும் அது சார்ந்தவர்களையும் விமர்சிப்பதானது விரும்பப்பட்டபோதும், சம காலத்தில் மக்களின் கருத்துக்களாக மக்கள் தம்மிடம் முறையிட்டதாக, தனது முகத்தை மூடிக்கொள்ள முற்படும் மூத்த அறிவிப்பாளர் ஒருவரின் சிறுமைத்தனமான அரசியல் சூனியம் வெட்கித் தலைகுனிய வேண்டியது. பொய்யான கருத்துக்களைக் கூறி தமக்குப் பின்னணியான அரசியல் நோக்கங்களை நிறைவேற்றிக்கொள்கின்ற வகையிலேயே மேற்படி நிகழ்ச்சியை நடத்தி வருகின்றார். கொழும்புக்கு வெளியே இருந்து ஒலிபரப்பாகும் மற்றைய வானொலிகளைப் பொறுத்தவரை எழுந்தமானமான தரவுகள் குறைவான - விஷயங்களைப் பெரிதுபடுத்திப் பேசுவதிலேயே அதிக அக்கறை காட்டி வருகின்றன. தொலைக்காட்சியில் தோன்றும் அவரே வானொலி நிகழ்ச்சியையும் தொகுத்து வழங்குவதானது புதிய கண்ணோட்டத்தில் புதிய விஷயங்களைத் தேடித் தருவதாக அமையவில்லை. அவரது அரசியல் அறிவுக்கு எட்டிய தூரத்திலேயே நிகழ்ச்சியின் விடயதானங்கள் குன்றிப் போய்விட்டது.

இவ்வாறான - நேயர்களின் மனதை வெற்றி கொள்ளாத - நிகழ்ச்சிகளை நிகழ்ச்சிப் பணிப்பாளர்கள் இனங்காணுவதோடு - புதுமையான - புதிய கோணத்திலான - எமது சமூகத்துக்குத் தேவையான நிகழ்ச்சிகளை வழங்க முன்வர வேண்டும். அவ்வப்போது பக்கம் சாராது உள்ளதை உள்ளவாறே வெளியிடுகின்ற முரசின் ஆசிரியர் வட்டம் எனது இந்தத் தாழ்மையான வேண்டுகோளை வெளியிட்டு உதவுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

*நன்றி*
*உண்மையுள்ள,*
*ஜே.கிஷோக்குமார், கொட்டாஞ்சேனை.*

குறிப்பு :- எவரையும் மனம் நோகடிக்கின்ற எண்ணத்தில் என் ஆதங்கம் வெளிப்பட வேண்டுமென்று விரும்பவில்லை. இந்த ஒரே ஒரு மடல் மாத்திரம் தன் விமர்சனத்தை வெளிப்படுத்துவதால் ஏனையவை எல்லாமே ஏற்றுக்கொள்ளப்பட்டன என்று எண்ணிவிடுவது புத்திக் கூர்மையாகாது. ஒரு பானை சோற்றுக்கு ஒரு சோறு பதம் என்பதைப் புரிந்துகொண்டு ஊடக நண்பர்கள் ஆக்கபூர்வமான நிகழ்ச்சிகளைத் தயாரித்து அளிக்க வேண்டும்.

# சிறுகதை, கவிதை எழுத்தாளர்களுக்கு....

முரசுக்காக சிறுகதைகளை எழுதிவரும் அன்பு எழுத்தாளர்களே! எதிர்காலத்தில் எழுத்துப் பணியில் ஈடுபட இருப்பவர்களே! முரசுக்காக சிறுகதைகள் எழுதுகின்றபோது கையெழுத்துப் பிரதியாக இருந்தால் மூன்று பக்கங்களும், தட்டச்சு செய்திருந்தால் ஒன்றரைப் பக்கம் வரக்கூடிய விதத்திலும் எழுதி அனுப்பி வையுங்கள்.

கவிதை எழுதுபவர்கள் தொடர் சங்கிலியாக எழுதாமல் எடுத்துக்கொள்ளும் விடயத்தை சிறியதாகவும் சுவையாகவும் எழுதுமாறு கேட்டுக்கொள்கிறோம். முரசு எழுத்தாளர்களாக இருப்பவர்களைக் கௌரவிக்கும் அதேவேளை, புதிய புதிய எழுத்தாளர்களுக்குக் களம் அமைத்துக் கொடுக்கவும் வாசகர்கள் ஒத்துழைப்பார்கள் என்ற நம்பிக்கை எமக்கு உண்டு.

நன்றி
- ஆசிரியர்

# இன்னொருவர் பார்வையில்

# அமெரிக்கர் ஒருவரின் பார்வையில் ஆனந்தசங்கரி

வீரசிங்கம் ஆனந்தசங்கரியின் பிரசாரத் தலைமையகம் ஒரு பதுங்குகுழி. ஆயுதபாணிகளான பாதுகாவலர்கள், முட்கம்பி வேலிகள் என்பவற்றுக்கு மத்தியில் அமைந்த அந்த ஒற்றை மாடி மண்டபம், யாழ்ப்பாண நகரத்தில் ஒரு தெருவோரமாக இருக்கிறது. இலங்கையின் வட பகுதி நகரங்களில் யாழ்ப்பாணம் பெரியது. பாவிக்காத சில கருவிகள், குண்டுகள் துளைத்த இரும்புக் கதவுகள் என்பன போன்றவை விருந்தினர்களைச் சில கணம் திகைக்கச் செய்யும். ஆனால், சங்கரி என்றழைக்கப்படும் ஆனந்தசங்கரி என்ற அந்த மனிதர் மிகவும் உறுதியுடன் காணப்பட்டார். 71 வயது நிரம்பிய அவர் 1971ஆம் ஆண்டு முதல் பாராளுமன்ற உறுப்பினராக இருந்து வருகின்றார். மிதவாத அரசியலின் ஊடாக வளர்ந்தவர் அவர். விடாமுயற்சியுள்ள தடித்த தேகக்கட்டும் எடுப்பான மெல்லிய மீசையும் மட்டும் அவரது தோற்றத்தை எடுத்து விளக்காது. உள்ளூர எரிந்து கொண்டிருக்கும் ஒரு நெருப்பு அவரை இயக்கிக்கொண்டிருக்கிறது. ஜன்னல்கள் இல்லாத அவரது அலுவலக அறையில் இருக்கும் இரு தொலைபேசிகள் இடைவிடாது ஒலித்துக்கொண்டே இருந்தன.

இவை ஒரு அதிகாரத்தின் குறியீடுகள் அல்ல. எப்படியிருந்தபோதும் அதிகாரமின்மையை வெளிப்படுத்திக்கொண்டன.

அவருக்குப் பின்புறம் இருந்த சுவரில் கட்சியின் முன்னாள் தலைவர்களது படங்கள் பெரிய அளவில் காட்சிப்படுத்தப்பட்டிருந்தன. அவற்றின் கீழிருந்த தமிழ் வாசகங்கள் அழகானவை. ஆனால், அவற்றில் குறிக்கப்பட்டிருந்த திகதிகள் உண்மைச் சம்பவங்களைச் சித்திரித்துக் காட்டின. இவர்கள் அனைவரும் உயிர் இழந்தவர்கள். அரசியல் படுகொலைகளுக்கு ஆளானவர்கள். இவர்களின் வரிசையில் சேர்ந்துகொள்ள சங்கரி விரும்பவில்லை. "நான் பிரசார நடவடிக்கையில் ஈடுபடுவதற்காக இந்தக் கட்டடத் தொகுதிக்கு அப்பால் செல்லப் போவதில்லை" இது ஏப்ரல் 2ஆம் திகதி வாக்குப் பதிவு நடைபெறுவதற்கு முன்பாக சங்கரி என்னிடம் தெரிவித்த வார்த்தைகள். "எந்தவொரு வாக்காளரையும் நான் நேரில் சந்திக்கக் கூடிய சூழல் இல்லை" எனக் குறிப்பிட்டார் அவர். அவரும் அவரது ஆதரவாளர்களும் எதிர்நோக்கிய மிரட்டல்கள், அச்சுறுத்தல்கள் பற்றி அவர் விலாவாரியாக விளக்கினார். "இதனால் வாக்காளர்களைச் சந்தித்துப் பேசுவதோ, பொதுக் கூட்டங்கள் நடத்துவதோ இயலாத காரியமாக இருக்கிறது" என்றார். சேதப்படுத்தப்பட்ட ஒலிபெருக்கி ஒன்றைக் காண்பித்தார். வாக்குப் பதிவு நாளன்று வாக்குச் சாவடி முகவர்களாகப் பணி புரிவதற்குக் கூட எவரும் முன்வரக் கூடிய சூழல் இல்லை என்பதை வெளிப்படுத்தினார். உற்சாகமற்ற நிலையில் பெருமூச்சை இழுத்துவிட்டு "என்னைக் கேட்டால் அவர்கள் விலங்குகளைப் போல நடந்துகொள்கிறார்கள்" என்றுதான் சொல்வேன் என்கிறார்.

அவரையும் அவரைப் போன்ற ஏனைய அரசியல்வாதிகளையும் பிரசார நடவடிக்கைகளில் ஈடுபட விடாமல் தடுத்த அந்த விலங்குகள்தான் தமிழ்ப் புலிகள். உத்தியோகபூர்வமாக தமிழீழ விடுதலைப் புலிகள் (எல்.ரி.ரி.ஈ.) என்று அவர்கள் அழைக்கப்படுகின்றார்கள். சிங்களவர்களைப் பெரும்பான்மையாகக் கொண்ட சிறீலங்காவிலிருந்து விடுதலை பெறுவதற்காக மிக மூர்க்கத்தனமான ஒரு போரில் கடந்த இரு தசாப்த காலமாக அவர்கள் ஈடுபட்டுள்ளனர். இப் போரில் சுமார் 65,000 பேர் வரை கொல்லப்பட்டுள்ளனர். கடந்த 2002 பெப்ரவரியில் இலங்கை அரசாங்கம் புலிகளுடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் ஒன்றைச் செய்துகொண்டமை மூலமாகப் போருக்கு ஒரு தற்காலிக ஓய்வு கிடைத்துள்ளது. இளம் போர் வீரர்கள் உயிரிழப்பது தவிர்க்கப்பட்டுள்ளது. புதைக்கப்பட்ட கண்ணிவெடிகள் அகற்றப்படுகின்றன. போரினால் பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கான மனிதாபிமான நிவாரண உதவிகள் சென்றடைகின்றன.

இலங்கையின் அரசியலில் கடந்த இரண்டு வருட காலச் சாதனையாக சமாதானம் நிலவுகிறது என்றே கொள்ளப்படுகிறது. அரசாங்கத்தின் சார்பாக முன்னாள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க சமாதான உடன்படிக்கையில் கைச்சாத்திட்டார். சமாதான முயற்சிகளின் பிரதான ஏற்பாட்டாளரும் போர் நிறுத்தத்தைக் கண்காணிக்கும் ஐந்து நாடுகள் குழுவின் தலைமைப் பதவியை வகிப்பதுமான நோர்வே போர் நிறுத்தத்தைக் கண்காணித்து வருகின்றது. இது இறுதி அரசியல் தீர்வு ஒன்றைக் காண்பதற்கான முன்னேற்றகரமான நடவடிக்கையாக உள்ளது. ஆனால், துரதிர்ஷ்டவசமாக புலிகள் அடிப்படை மனித உரிமை மீறல்களில் ஈடுபடுவதைத் தடுக்கவும் தமிழ்ப் பிரதேசங்களில் ஜனநாயகம் நிலைபெறுவதை உறுதிப்படுத்தவும் அரசாங்கமும், உதவி வழங்கும் நாடுகளும் தவறிவிட்டன. இதனால் மக்களுக்கு – குறிப்பாகச் சங்கரி போன்றவர்களுக்கு சமாதானம் என்பது இல்லாமல் போய்விட்டது.

போர் நிறுத்த உடன்படிக்கையின் கீழ், இந்துக்களான தமிழர்கள் பெருமளவில் வாழ்ந்து கொண்டிருக்கும் வடக்கு – கிழக்கு மாகாணத்தின் பெரும் பகுதி புலிகளின் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டுள்ளது. எனினும், யாழ்ப்பாண நகரம் உட்பட யாழ்ப்பாணக் குடாநாட்டின் பெரும் பகுதி இதற்குள் உள்ளடங்கவில்லை. எட்டு வருடங்களுக்கு முன்னர் யாழ்ப்பாணக் குடாநாட்டைப் படையினர் மீளக் கைப்பற்றியது முதல் புலிகள் பெரும் பிரயத்தனங்களை மேற்கொண்டு வருகின்றனர். இதனால் குண்டு துளைத்த கட்டடங்களின் இடிபாடுகளுக்கு மத்தியில்தான் யாழ்ப்பாணத்தின் இயல்பு நிலை தொடர்கிறது. படையினரது பிரசன்னமும் நடமாட்டமும் இருக்கின்றபோதும் யாழ்ப்பாணத்தின் மீது உண்மையான ஆதிக்கம் புலிகள் வசம்தான் உள்ளது. புலிகள் கப்பம் பெறுவது, வரி வசூலிப்பது என்பவற்றில் மாபியா பாணியிலான ஒரு வலையமைப்பைப் பேணுகின்றனர். புரிந்துணர்வு ஒப்பந்தம் ஏற்பட்டது முதல் இரு டசினுக்கும் அதிகமான அளவில் மாற்று அரசியல் கட்சித் தலைவர்கள் மற்றும் தொண்டர்களைப் புலிகள் கொன்று குவித்துள்ளனர். இக் கொலைகளுக்கு புலிகளை விமர்சித்தவர்கள் கூட இலக்காகியுள்ளனர். உள்ளூர் அரசாங்க நிர்வாகத்தினால் இவற்றைக் கட்டுப்படுத்த இயலவில்லை. சுமார் பத்து மாதங்களுக்கு முன்னர் படுகொலை செய்யப்பட்ட தம்பிராசா சுபத்திரனின் கொலை தொடர்பான விசாரணைகளின் முன்னேற்றம் குறித்து ஒரு பொலிஸ் அதிகாரியிடம் வினாவினேன். உள்ளூர்ப் புலிகளின் முக்கியஸ்தர்களில் ஒருவருக்குத் தொடர்பு இருக்கலாம் என்பதைத் தவிர எந்த விதமான முன்னேற்றமான தகவலும் இல்லையென அவர் தெரிவித்தார். இத்தகைய கொலைகள் தொடர்பாக எந்தவொரு தனிநபரும் கூட விசாரணைகளுக்கு உள்ளாக்கப்படவில்லை. 1990இல் பதின்மூன்று மாத காலம் நீடித்த போர் நிறுத்த உடன்பாட்டுக்குப் பின்னர் புலிகள் பல பொலிஸ் நிலையங்களைத் தாக்கினர் என்பதையும், 600க்கும் மேற்பட்ட பொலிஸாரைக் கொன்று குவித்தனர் என்பதையும் பொலிஸார் நன்கறிவர்.

போலியான போர் நிறுத்தத்தைப் பயன்படுத்திப் புலிகள் தேசிய பாராளுமன்றத்தில் தேர்தலுக்கு ஊடான பிரதிநிதித்துவத்தைப் பெறுவதில் இம்முறை கவனம் செலுத்தியுள்ளனர். ஆள் மாநாட்டம் செய்யும் அவர்களது தந்திரோபாயம் இம்முறை கூடுதல் பயனைக் கொடுத்துள்ளது. பல்வேறு கட்சிகளினதும் கூட்டுச் சாம்பாராக ஒரு பினாமி அரசியல் கட்சியைப் புலிகள் வெற்றி பெற வைத்துள்ளனர். இத்தகைய தமிழ்க் கூட்டமைப்பு ஒன்றுக்குத்தான் சங்கரி 2001 தேர்தலில் தலைமை தாங்கி நின்றார். ஆனால், ஒரு வருடத்திற்கு முன்பாக புலிகளின் ஏகப் பிரதிநிதித்துவக் கோரிக்கையை அவர் பகிரங்கமாகவே நிராகரித்தார். இதனால், புலிகள் அவரை அவரது கட்சியின் தலைமைப் பதவியிலிருந்து நீக்க முயற்சி எடுத்தனர். விரைவிலேயே அவர் புலிகளின் தாக்குதல் இலக்குக்கும் உள்ளானார். தேர்தல் அறிவிக்கப்பட்டதும் புத்திசாலித்தனமாக அவர் சுயேச்சைக் குழுவொன்றுக்குத் தலைமைதாங்க முற்பட்டார். இதேவேளை புலிகளின் கருணாவும் இதே போன்ற கருத்தை முன்வைத்து சுமார் 6000க்கும் மேற்பட்ட உறுப்பினர்களுடன் தனித்து இயங்க முற்பட்டார். அரசாங்கத்துடன் தனியான புரிந்துணர்வு ஒப்பந்தமொன்றைச் செய்துகொள்ள அவர் முற்பட்டபோதும் அது வெற்றி பெறவில்லை. ஆனால், சில நாட்களுக்குள் கருணாவுக்கு நெருக்கமான பல்கலைக்கழக விரிவுரையாளர் ஒருவர் தாக்கப்பட்டுக் காயங்களுக்கு இலக்கானார். கருணாவுக்கு ஆதரவாக வெளிப்படையாகப் பேசிய கூட்டமைப்பு வேட்பாளர் சத்தியமூர்த்தி தேர்தலுக்கு மூன்று தினங்களுக்கு முன்பாகச் சுட்டுக் கொல்லப்பட்டார்.

போரினால் பாதிக்கப்பட்ட வன்னியில், கிளிநொச்சி புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியானாலும் யாழ்ப்பாண தேர்தல் மாவட்டத்துக்கு உட்பட்டது. இங்கு கூட்டமைப்புக்குக் கணிசமான ஆதரவு இருந்தபோதும், புலிகள் சங்கரியையோ அல்லது வேறு எந்த மாற்றுத் தமிழ் அரசியல் கட்சியையுமோ பிரசாரத்தில் ஈடுபட அனுமதிக்கவில்லை. இதனால் வாக்காளர்களின் மனநிலையில் மாற்றம் ஏற்பட வாய்ப்பு இருக்கவில்லை. யாழ்ப்பாணத்தில் புலிகளுக்கு எதிரான மனநிலையே பெருமளவுக்குக் காணப்பட்டது. ஆனால், புலிகள் மிகவும் கோடூரமான ஒரு அணுகுமுறையை வெளிப்படுத்தினர். யாழ்ப்பாண கத்தோலிக்க மக்கள் மத்தியில் செல்வாக்கு மிகுந்தவரான ஆயர், தம்மைச் சந்தித்த ஒரு தொகுதி விருந்தினர்கள் மத்தியில் பேசுகையில், தெற்கிலுள்ள சிங்களவர்களுக்கு தமிழ் மக்கள் தாங்கள் ஒற்றுமைப்பட்டு நிற்கிறோம் என்பதைக் காட்ட விரும்பினார்கள் எனக் குறிப்பிட்டார். ஆக, கூட்டமைப்பைச் சாராத ஏனைய தமிழ்க் கட்சிகள் அனைத்தும் 'தமிழ்த் துரோகிகள்' போலவும், சொற்ப ஆதரவை மட்டுமே கொண்டவர்கள் போலவும் காட்டப்பட்டனர். இதேவேளை தமிழ் மக்களுக்குச் செய்தி வழங்கும் பெரும்பாலான தமிழ் ஊடகங்கள் கூட்டமைப்பைச் சாராத கட்சிகள் குறித்துத் தவறான செய்திகளையும், அவதூறுகளையுமே நாள்தோறும் பரப்பி வந்தன. கடந்த மார்ச் மாதத்தில் லண்டனிலிருந்து ஒரு சுயாதீன தமிழ் வானொலி தனது ஒலிபரப்பைத் தொடங்கியது. இதனையும் புலிகள் துரோகிகள் என்று முத்திரை குத்தினர். இதன் ஊடகவியலாளர்களுக்கும் கொலை மிரட்டல்கள் விடுத்தனர்.

ஆனால், உண்மையான புலிப் பயங்கரவாதம் வீடுகளில் தாக்குகிறது. அரசியல்வாதிகளை விட்டு விலகிச் சென்றால் நாள்தோறும் பாதிக்கப்படுபவர்களைச் சந்திக்கலாம். யாழ்ப்பாண தீவுப் பகுதி ஒன்றில் வாழும் நான்கு பிள்ளைகளின் பெற்றோர் என்னிடம் மனம் திறந்து பேச விரும்பினர். முதல் நாளிரவு சுமார் பதினொரு மணியளவில் சுமார் பத்துப் பேர் கொண்ட குழுவொன்று வீட்டிலிருந்து வெளியே வரும்படி வற்புறுத்தியுள்ளது. விரும்பாத கட்சியொன்றுக்குத் தொண்டுப் பணியாற்ற தாம் எவ்வாறு நிர்ப்பந்திக்கப்பட்டோமென்று அக் குடும்பத் தலைவர் விபரித்தார். "அவர்கள் என் தொண்டையில் பிடித்து நெரித்தனர். தென்னை மரமொன்றில் சாய்த்தனர். எனது செவிகளில் எதையோ சொருகினர். அது ஒரு துப்பாக்கிக் குழாயாக இருக்கலாம். எனினும் அதனை நான் முழுமையாகப் பார்க்கவில்லை" எனக் குறிப்பிட்டார்.

"அவர்களில் ஒருவர் என்னைத் தாக்கினார். வயிற்றுப் பகுதியில் மின் விளக்கு ஒன்றினால் குத்தினார். 'வாக்குச் சாவடி முகவராக நீர் பணி புரிவது கண்டறியப்பட்டால் மறுநாள் உயிருடன் இருக்க மாட்டீர்' என்று எச்சரித்தார்." அவரது மனைவி இக் கதையைப் பூரணப்படுத்தினார். "நாங்கள் புலி உறுப்பினர்கள். அதனால் எச்சரிக்கையாக இருங்கள் என்று அவர்கள் கூறினர்". பயத்துடன் கூடிய அவரது மெலிந்த குரல் எவ்வித உதவியுமின்றி அநாதரவாக ஒலித்தது. "எனக்கு அல்லது கணவருக்கு ஏதாவது கெடுதல் நேர்ந்தால் இந்த நான்கு பிள்ளைகளினதும் கதி என்ன?" என்று அவர் கேள்வி எழுப்பினார்.

வாக்களிப்புத் தினத்தன்று புலிகள் பெருமளவில் வாக்கு மோசடிகளில் ஈடுபட்டனர். இது வடக்கு – கிழக்கில் திட்டமிட்ட வகையில் பெரும் எடுப்பில் இடம்பெற்றது. யாழ்ப்பாணத்தில் ஒரு வாக்குச் சாவடியில் மட்டும் சுமார் 40,000 வாக்காளர்கள் வாக்களிப்பில் ஈடுபடுவதற்காக முண்டியடித்து முன்வந்தனர். மிதிவெடி புதைக்கப்பட்டிருக்கலாமென அஞ்சப்பட்டிருந்த ஒரு பகுதி ஊடாக சுமார் மூன்று மைல் தூரம் கொளுத்தும் வெய்யிலையும் பொருட்படுத்தாமல் இந்த மக்கள் திரண்டு வந்தனர். பரவலாகப் பலருடன் பேசியதிலிருந்து இவர்கள் அனைவரும் தமிழ்க் கூட்டமைப்புக்கு வாக்களிப்பதற்காகவே அழைத்து வரப்பட்டிருந்தமை தெரிந்தது. ஆகவே, திட்டமிட்ட வகையில் புலிகள் வாக்கு மோசடிகளில் ஈடுபட்டிருந்தது தெளிவாகத் தெரிந்தது. வயது குறைந்த பலர் பயன்படுத்தப்படாத வாக்காளர் அட்டைகளுடன் காணப்பட்டனர்.

வடக்கிலும் கிழக்கிலும் நடந்த தேர்தல் முறை கேடுகள், புலிகள் உச்சக்கட்ட மோசடிகளில் ஈடுபட்டதையே புலப்படுத்துகிறது. மனித உரிமைச் செயற்பாடுகளில் நீண்டகாலமாக ஈடுபட்டு வரும் ராஜன் கூல் என்பவர் கூறுகையில் "முன்னாள் பிரதமரின் சமாதானச் செயற்பாடுகள் யாவும் போர் நிலையைப் பேணியபடி, வெளிநாட்டு உதவிகளைப் பெற்று தெற்கில் தனது செல்வாக்கைப் பலப்படுத்துவதாகவே இருந்தது. அவர் தனது செயற்பாட்டில் எப்போதும் மனித உரிமைகளைப் பேணுவதில் அக்கறை செலுத்தவில்லை" என்கிறார். நோர்வே வழி நடத்தும் போர் நிறுத்தக் கண்காணிப்புச் செயற்பாடுகள் புலிகளின் அராஜகங்களைக் கட்டுப்படுத்துவதில் இயலாமையை வெளிப்படுத்தியுள்ளது. இவர்கள் பயன்படுத்தும் வளங்கள், நிபுணத்துவம் அல்லது அரசியல் துணிவு எதுவும் கொலைகள் தொடர்பான புலனாய்வுகளுக்கு உதவவில்லை. கடந்த வருடத்தில் தொடர்ச்சியாக இடம்பெற்ற பல அரசியல் படுகொலைகளில் புலிகளின் ஈடுபாடு குறித்த புலனாய்வுகள் பற்றி போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் பேச்சாளர் அக்னஸ் பிரகடொட்டியர் கூறுகையில், இப் புலனாய்வுகளில் ஈடுபடுவது தமக்கு வழங்கப்பட்டுள்ள கடமைகளுக்கு அப்பாற்பட்டது என்கிறார்.

"போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழு அரசியல் உள் விவகாரங்களில் தலையிட முடியாது. இது கண்காணிப்புக்குரிய விடயம் அல்ல. இது குற்றவியல் வழக்கு. இந்த அரசியல் படுகொலைகள் சாதாரண கொலை வழக்குகளாகவே நடத்தப்பட வேண்டும்" என்று போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் பிரதித் தலைவர் ஹக்ரூப் ஹொக்லண்ட் கூறுகின்றார். புலிகளுக்கு எதிரான அரசியல் கட்சிகளைச் சேர்ந்தவர்கள் என்ற வகையில் கடந்த 2003ஆம் ஆண்டில் மட்டும் முப்பது முதல் நாற்பது பேர் வரையில் கொல்லப்பட்டுள்ளனர். இவை பொலிஸார் விசாரணை நடத்த வேண்டிய விடயங்கள். இக் கொலைகள் குறித்துப் புலிகளை அணுகி விசாரித்தபோது அவர்கள் முற்றாக மறுத்துள்ளனர்.

புலிகளின் அடாவடித்தனங்கள் தொடர்பாகப் போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழு மெத்தனப் போக்கைக் கடைப்பிடிப்பதனால் தமிழ் மக்கள் மத்தியில் மனித உரிமைகளின் பாதுகாப்பு கேள்விக்கு உள்ளாகியுள்ளது. போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் பிரதான நோக்கம், குறுகிய காலத்துக்கு புலிகள் போருக்குச் செல்வதைத் தடுப்பதாகவே இருக்கிறது. புலிகளின் வன்முறைகள் தொடர்பாக கண்மூடித்தனமான போக்கையே அவர்கள் பிரதிபலிக்கின்றனர். புலிகளின் அரசியல் அந்தஸ்தைப் பேண வேண்டும் என்று அவர்கள் நினைக்கின்றனர். கருணா புலிகளுடன் முரண்பட்டுக்கொண்டபோது போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினர் கிழக்கில் இருந்து விலகிக்கொண்டனர். கருணா அணியினர் போர் நிறுத்த உடன்பாடுகளுக்குள் உட்படவில்லை என்றனர். ஆனால், கருணா அணிக்கு எதிராகப் புலிகள் மேற்கொண்ட நடவடிக்கைகள் அனைத்தும் போர் நிறுத்த உடன்பாட்டின் அம்சங்களைத் தெளிவாக மீறுபவை ஆகும். ஆனால், சர்வதேச கண்காணிப்பாளர்கள் இது குறித்துக் கடுமையான மௌனத்தையே கடைப்பிடிக்கின்றனர்.

ஒட்டுமொத்தமாக இலங்கையில் நடந்த தேர்தலில் ஜனாதிபதி சந்திரிகா கட்சியினர் பாராளுமன்றத்தில் சுமார் அரைப்பங்கு ஆசனங்களைப் பெற்றுள்ளனர். அரசாங்கத்தையும் அவர்கள் அமைத்துள்ளனர். இது புலிகளுக்கு விருப்பத்திற்குரிய ஒரு செய்தியல்ல. ரணில் விக்கிரமசிங்க வெற்றி பெறுவார் எனவும் தமது துணையின்றி ஆட்சியமைக்க முடியாதவராக அவர் இருப்பார் எனவும் புலிகள் எதிர்பார்த்தனர்.

கருணாவுக்கு எதிரான நடவடிக்கைகளையும் அவர்கள் பின்போட இதுவும் ஒரு காரணமாக இருந்திருக்கலாம். ஆனால், தேர்தல் முடிந்து ஒரு வாரத்துக்கு உள்ளாகவே வன்னிப் புலிகள் கருணா மீதான தாக்குதல்களைத் தொடுத்தனர். கருணாவின் அணியிலிருந்து சரணடைந்த உறுப்பினர்கள் சித்திரவதைக்குள்ளாக்கிக் கொல்லப்படுவதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன. போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழு கிழக்கில் வன்னிப் புலிகளை மீண்டும் சந்தித்து தமது தொடர்புகளை ஏற்படுத்தியுள்ளனர்.

இந்தப் போரில் புலிகளின் பொதுவான அரசியல் இராணுவ உத்திகள் எதுவித மாறுதலுமின்றித் தொடர்கின்றன. அரசியல் எதிரிகளை இல்லாது ஒழிப்பதென்பது அவற்றில் முதன்மையானது. சமாதானத்தை நிலைபெறச் செய்வது மூலமாக புலிகளின் போக்கில் மாற்றம் ஏற்படுமெனப் பலரும் நம்புகின்றனர். ஆனால், அரசியல் பிரசார நடவடிக்கைகளில் ஏனையோர் சுதந்திரமாக ஈடுபடுவதைத் தடுத்ததன் மூலமாகப் புலிகள் உலகத்திற்கு ஒரு செய்தியைத் தெளிவாக எடுத்துரைத்துள்ளனர். அதாவது தமது போக்கில் எதுவித மாற்றமும் இல்லை என்பதாகும்.

மீண்டும் யாழ்ப்பாணக் குடாநாட்டுக்குள் வந்ததால் ஒன்பது பாராளுமன்ற ஆசனங்களில் எட்டு கூட்டமைப்புக்குக் கிட்டியுள்ளது. சங்கரி மிகவும் குறைவான வாக்குகளையே பெற முடிந்தது. புலிகளின் வாக்கு மோசடிகளுக்கு எதிராக அவர் வழக்குத் தாக்கல் செய்யலாம். எனினும், அதில் வெற்றி வாய்ப்பு மிகவும் குறைவு. சங்கரியின் அரசியல் வாழ்வு நீடிப்பது அவர் உயிர் வாழ்வதிலேயே தங்கியுள்ளது. ஆனால், மன்னிப்பு வழங்குவதற்கோ மறந்துவிடுவதற்கோ தயாராக இல்லாத புலிகளின் மத்தியில் அவர் தனது பாதுகாப்பை ஒரு கணமாவது உதாசீனம் செய்ய முடியாது என்பதே உண்மை.

**ஜேம்ஸ் ரோஸ் :-**

மனித உரிமைகள் பாதுகாப்பு அமைப்புக்கான சட்ட ஆலோசகர். 1994 முதல் இலங்கையில் மனித உரிமைகள் தொடர்பில் அக்கறையோடு செயற்படுபவர்.


> **"படையினரது பிரசன்னமும் நடமாட்டமும் இருக்கின்றபோதும் யாழ்ப்பாணத்தின் மீது உண்மையான ஆதிக்கம் புலிகள் வசம்தான் உள்ளது. புலிகள் கப்பம் பெறுவது, வரி வசூலிப்பது என்பவற்றில் மாபியா பாணியிலான ஒரு வலையமைப்பைப் பேணுகின்றனர். புரிந்துணர்வு ஒப்பந்தம் ஏற்பட்டது முதல் இரு டசினுக்கும் அதிகமான அளவில் மாற்று அரசியல் கட்சித் தலைவர்கள் மற்றும் தொண்டர்களைப் புலிகள் கொன்று குவித்துள்ளனர். இக் கொலைகளுக்கு புலிகளை விமர்சித்தவர்கள் கூட இலக்காகியுள்ளனர். உள்ளூர் அரசாங்க நிர்வாகத்தினால் இவற்றைக் கட்டுப்படுத்த இயலவில்லை."**

# கவிஞர் வாலி எழுதுகிறார்!

## – வாழ்க்கை சரிதம் –

அப்போது நடிகரின் மனைவியாருக்கு உடல் நலம் குன்றியிருந்ததால், படப்பிடிப்பை ரத்துச் செய்து விட்டு வீட்டுக்குப் போகும் வழியில் நாடகத்திற்கு வந்தார் அந்த நல்ல மனம் படைத்த நடிகர். பத்து நிமிஷத்திற்கு மேல் தன்னால் இருக்க இயலாது என்று சொன்ன அவர், தன் மனைவியாரின் உடல் நிலையையும் மறந்து மூன்று மணி நேரம் அமர்ந்து முழு நாடகத்தையும் பார்த்துவிட்டுப் பேசினார்.

பாரதிதாசனின் கவிதைகளைப் படிப்பது போல் இருக்கிறது நாடக உரையாடல்கள். அதனால்தான், அதுவும் தமிழ் மீது இயல்பாக எனக்கு உள்ள அளவில்லாத காதலால்தான், மனைவியின் உடல் நிலையையும் மறந்து மூன்று மணி நேரம் பிரமித்துப்போய் உட்காந்துவிட்டேன். யாரிந்த வாலி? விசாரித்தேன். ஸ்ரீரங்கத்தில் இருக்கிறாராம். அவர் எப்போது சென்னை வந்தாலும் என்னை வந்து பார்க்கலாம். அவருடைய தமிழ் சினிமாவுக்குத் தேவைப்படுகிறது. என்ற பொருள்பட என்னை வெகுவாகப் பாராட்டி அந்த நடிகர் பேசியது, மறுநாள் "தென்றல் திரை" ஏட்டில் முழுமை யாக வெளியாகியிருந்தது.



ஸ்ரீரங்கத்தில் ஒரு கடையில் அந்த ஏட்டை வாங்கி நான் படித்த மூன்றாம் நாள், அந்த நடிகரின் அலுவலகத்திலிருந்து, சென்னை வந்தால் தன்னைச் சந்திக்கச் சொல்லி, எனக்கு ஒரு கடிதம் வந்தது. இருப்பினும், சென்னைக்கு உடனடியாகச் செல்ல என்னிடம் சில்லறை இல்லை. ஆனால், அந்த நடிகர்தான் என் தலையெழுத்தைச் செவ்வனே மாற்றி எழுத வேண்டும் என்று தெய்வம் தீர்மானித்திருந்ததை அப்போது அடியேன் அறிய நியாயமில்லை.

நாடகத்திற்குத் தலைமை தாங்கி, என்னைக் காணாமலேயே என் மீது காதல் கொண்ட அந்தப் புகழ்வாய்ந்த நடிகர் பெருந்தகை வேறு யாருமல்ல.

புரட்சித் தலைவர் திரு.எம்.ஜி.ஆர்.தான்.

எம்.ஜி.ஆரும், சிவாஜியும் திரைப்படத் துறையில் தகத்தகாயமாகப் பிரகாசித்தபோதும், நாடக ஆர்வத்தைப் புறந்தள்ளவில்லை. இருவருமே வெகுகாலம் தங்களது சொந்த நாடகக் குழுவை நடத்தி வந்தது நாடறிந்த செய்தி. கோடிக்கணக்கான பணத்தைக் கொட்டிக் குவிக்க வல்ல ஈர்ப்புச் சக்தியுடைய நடிகர்கள் நாடகத்தை, நயாபைசா லாபமில்லை என்று நன்கறிந்தும் நெஞ்சார நேசித்தார்கள். பக்கம் பக்கமாக மனப்பாடம் செய்து, கரடியாகக் கத்த வேண்டியிருந்ததும், படப்பிடிப்புக்கும் மேலாகப் படுதாக்களைப் பழைய பாசத்தின் காரணமாகத் தழுவித் தாகம் தீர்த்த புண்ணியவான்கள் இவர்கள்.

மனிதர்களிடையே நடிகர்கள் இருப்பது போல், நடிகர்களிடையே மனிதர்கள் இருக்கத்தான் செய்கிறார்கள்.

நாடக நினைவை ஒட்டி இன்னொரு தகவலையும் சொல்ல விரும்புகிறேன். நான் 1982இல் 'இந்தியா டுடே' என்று ஒரு நாடகம் எழுதி, என் நண்பர் கலாகேந்திர கிருஷ்ணன் அதை மிக வெற்றிகரமாக நடத்தி வந்தார். இந்த நாடகம் சிலோனில் கூட நடந்தது.

இதில், நாயர் ராமன் என்னும் அருமையான நடிகர் பாரதியாகவும் பாரதியாரைப் பூஜிக்கும் ஒரு பூக்காரியாக திருமதி மனோரமாவும் நடித்தார்கள்.

'அங்கதம்' என்று சொல்வார்களே, அந்த வகையைச் சேர்ந்தது இந்த நாடகம் சமூகத்தை நையாண்டி செய்து நல்வழிப்படுத்தும் வசனங்கள் நிறைய நிறைந்திருந்த இந்த நாடகம், மேடையில் ஒரு எனச் சொல்லுமளவு அந் நாளில் பிரசித்தி பெற்றிருந்தது.

மியூசிக் அகடமியில் இந்த நாடகம் ஒருநாள் நடைபெற்றபொழுது, பிரபலமான ஒரு சினிமா நடிகர் இந்த நாடகத்தைப் பார்க்க வந்திருக்கிறார். அன்றிரவு பத்து மணிக்குத்தான் எனக்கு இந்த விஷயம் தெரிய வந்தது. அதுவும் அந்தப் பிரபல நடிகரே தொலைபேசியில் என்னோடு தொடர்பு கொண்டு பேசியதால் தான்.


"வாலிசார், உங்க 'இண்டியா டுடே' நாடகம் பாத்தேன். பிரமாதம் சார்! அசந்து போய்ட்டேன். ரெண்டு மணி நேரமும், சிரிக்கவும் சிந்திக்கவும் வெக்கிற மாதிரி இப்படி ஒரு நாடகத்தெ இது வரைக்கும் நான் பாத்ததில்லே. எனக்கு ஒரு ஆசை. இந்த நாடகத்துல நான் பாரதியாரா நடிக்கணும்....

இப்படி அவர் சொல்லி, இன்னும் ஏதேதோ டெலிபோனில் சொன்னாலும், அவர் நாடகத்தில் நடிக்க விரும்புவதாகச் சொன்ன அதிர்ச்சியிலிருந்து நான் மீளாமல் மௌனமானேன். அவரது வீட்டில் அவரை மறுநாள் சந்திப்பதாகச் சொல்லி ரிசீவரை வைத்தேன். மறுநாள் அவர் வீட்டில் அவரை சந்திக்கவும் செய்தேன்.

(தொடரும்.....)




---




"நான் நினைக்கிறேன் அது மருந்துவப் பகுதியைவிட ஓரளவு சிறப்பானது" தயங்கிய படியே சொல்கிறார். "ஆனால் அது அந்தளவுக்கு மிகச் சிறப்பானதல்ல."

அவர் என்னைக் கூட்டிக்கொண்டு போகிறார். நாம் பெய்ரூட்டை அடைவதற்கு முன் அவர் பல தொடர் தாழ்வாரங்களைக் கடந்தும், பெரிய கம்பிகள் கொண்ட நுழைவாயில்களைத் திறந்தும் பூட்டியும் செல்ல வேண்டி இருக்கிறது. எனது வருகையைக் கண்ட எனது சகபாடிகளில் பலர் என்னை வாழ்த்தி மகிழ்ந்தனர். நான் எந்த ப்ளொக்கில் அடைக்கப்படுவேன் என்பது குறித்து அவர்கள் பந்தயம் கட்டி இருந்ததாகப் பின்னர் அறிந்துகொண்டேன்.

நாலு தொகுதிகளும் (Block) வித்தியாசமான நோக்கங்களை / உபயோகங்களை உடையனவாய் இருந்தன.

ஆகவே, நான் மூன்றாவது ப்ளொக்கில் / தொகுதியில் அடைக்கப்படுவேன் என்பதைக் கணிப்பது ஒன்றும் கஷ்டமான காரியமாக இருக்கவில்லை. மூன்றாவது ப்ளொக் / தொகுதி தற்காலிகமான ஒரு தங்குமிடம். அவர்கள் உங்களை மதிப்பீடு செய்து முடியும் வரை நீங்கள் இந்தத் தொகுதியில் / ப்ளொக்கில்தான் இருக்க வேண்டும். அதாவது ஒரு விமானம் எந்த ஓடுதளத்தில் தரை இறங்க வேண்டும் என்று சொல்லப்படும் வரை, விமான நிலையத்துக்கு மேலே வானில் வட்டமிட்டுக் கொண்டிருக்குமே அதைப் போல. அது குறித்த விடயங்களைப் பின்னர் பார்ப்போம்.

என்னுடைய புதிய சிறை முந்தியதை விடக் கொஞ்சம் பெரியதாகத் தெரிகிறது. அதாவது அங்குலங்களில் சற்றே கருணை நிறைந்ததாகவும் தெரிகிறது. ஆயினும் அந்த அதிகாரி குறிப்பிட்டது போல சிறிதளவே சிறந்தது. பச்சை வர்ணம் பூசப்பட்ட சுவர்களைப் பார்க்கும்போது பாரம் குறைகிறது. இநதத் தடவை மலசலகூடத்திற்கு நீர் வசதி உண்டு. வொஷ்பேஸினில் சிறுநீர் கழிக்க வேண்டிய அவசியம் இனியும் இல்லை. அதே காட்சி தொடர்கிறது. நீங்கள் இன்னுமொரு செங்கற் சுவரை வெறித்தபடியே இருக்க வேண்டியதுதான். அது கூட மனித ஜீவன்களுக்குச் சூரியனை மறுப்பதுதான். மருத்துவப் பகுதியிலிருந்து மூன்றாவது ப்ளொக்கை / தொகுதியை நோக்கி சிறை

### தமிழில் தருவது ஜெஃப்ரி ஆர்ச்சர்

வளவினுள்ளே நீண்ட நடை நடந்தது மனசுக்கு ரொம்ப மகிழ்ச்சியைத் தந்தது. ஆயினும் இத்தகைய ஒரு வாழ்க்கை நினைத்ததும் எனது மனசு நொந்து போனது.

ஒரு தேநீர்ப் பையன் அல்லது (காது கொடுத்துக் கேட்பவன் (Tea boy or listner) எனது கூண்டுக்கு வெளியே என்னை வரவேற்பதற்காகக் காத்துக் கொண்டிருக்கிறான். அவனது பெயர் ஜேம்ஸ். (லிஸ்னர்ஸ் ஆவதற்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட கைதிகள் மட்டுமே அனுமதிக்கப்படுவர். அவர்கள் சமாரியர். உயிர்கள் மீது அன்பு பூண்டோர்களால் பயிற்சி யளிக்கப்படுவர்.

(பக்கங்கள் வளரும்)

---

# இலகு வழியில் பணம் திரட்டும் இணையத் தள காதலிகள்

இணையத் தளத்தின் மூலம் பலன்களைப் பெற்றுக்கொள்ள பல்வேறு வழி வகைகளைத் தேடிக் கொண்டிருப்பவர்களது புதிய ரகக் கண்டுபிடிப்பொன்று தொடர்பாகப் பிரித்தானிய "மிரர்" பத்திரிகை அண்மையில் கட்டுரை ஒன்றை வெளியிட்டிருக்கிறது.

இணையத் தளத்தினூடாகக் காதலித்தல் என்பது அந்தக் கட்டுரையின் தலைப்பாகும்.

இணையத் தளத்தினூடாக யாரைக் காதலிப்பது? என்ற கேள்வி உங்களுக்கு எழுமானால் உண்மையிலேயே தோன்றும் ஆனாலும் உண்மையற்ற ஒரு பெண் என்பதுதான் அதற்கான விடையாகும்.

இந்தக் காதலிகள் எப்படி உண்மையாகவே தோன்றுகிறார்கள் என்பதை விளங்கிக்கொள்வது நல்லதாகும். இவர்கள் தங்களது காதலர்களுக்கு வாரந்தோறும் காதல் கடிதங்கள், மின்னஞ்சல்கள், புகைப்படங்கள் சில சந்தர்ப்பங்களில் நிர்வாணப் புகைப்படங்கள் என்பவற்றை அனுப்புவதன் மூலம் உண்மையில் காதலிகளாகத் தோற்றம் பெறுகின்றனர்.

எனினும் அவர்களைச் சந்திக்க இயலாது. அவளைக் கட்டித் தழுவவோ முத்தமிடவோ பிற செய்கைகளுக்காகப் பயன்படுத்தவோ இயலாது என்ற



ரீதியில்தான் அவள் உண்மையற்ற காதலியாகின்றாள்.

காதலிகளாக இணையத் தளத்தின் ஊடாக தங்கள் சேவைகளைப் புரிந்து வருகின்ற இந்த யுவதிகள், பெண்கள் தொடர்பாக இந்தக் கட்டுரையை எழுதியுள்ள டேவிட் எட்வர்ட்ஸ் இவர்களைச் சந்தித்து அவர்களது கருத்துக்களை கேட்டறிந்து கொண்டுள்ளார்.

மென்செஸ்டர் பல்கலைக்கழகத்தில் கல்வி பயிலும் டீனா ஸ்கிலின்சன் எனும் மாணவியும் இப்படியான ஒரு காதலியாவார். தனது கல்விக்கான செலவினங்களை ஈட்டிக்கொள்ளும் முகமாக இவர் ஓர் இணையத் தளக் காதலியாக மாற்றப்பட்டிருக்கின்றார். நான் எவருக்கும் தீங்கு செய்வதில்லை. எனது திறமையைப் பயன்படுத்தி வாரத்துக்கு 250 பவுண்களை நான் தேடிக் கொள்கின்றேன். இதில் என்ன தவறு இருக்கிறது? என்கிறார் டீனா.

இவர் இணையத்தள ஏல விற்பனைத்தளமொன்றுக்கு சென்று நான் யாருக்காவது இணைத்தளக் காதலியாக மாற விரும்புகின்றேன் என்றொரு விளம்பரத்தைக் கொடுத்துள்ளார். புகைப்படத்துடன் கூடிய அந்த விளம்பரம் இப்படி அமைந்திருந்தது :-

கடிதங்கள் தினந்தோறும் மின்னஞ்சல்கள், புகைப்படங்கள், பெக்ஸ் மற்றும் இணையத்தள உரையாடல்கள் போன்றவை பரிமாறப்படும். இதற்கான கட்டணம் 29.95 பவுண்கள்.

ஒரு நபர் இந்தக் கட்டணத்தை முழுமையாகச் செலுத்திவிட்டால் ஒப்பந்தம் செய்யப்படுகின்ற காலகட்டம் வரை அந் நபருக்கு மேற்கூறிய காதல் சேவைகள் கிட்டும். இணையத் தளத்தின் ஊடாக இவ்விதக் காதல் தொடர்புகளுக்கு பணஞ் செலுத்தக் கூடிய காதலர்கள் சிலரைப் பிடித்துக்கொண்டால் காதலிகளது பாடு கொண்டாட்டமாகும். இந்தக் காதல் வியாபாரத்தை முன்னேற்ற வேண்டுமானால் காதல்ரசம் சொட்டும் கடிதங்களை எழுதித்தள்ள வேண்டும். இதன் மூலம் வியாபாரம் சூடுபிடிக்கும் என்கிறார் "மிரர்" பத்திரிகையின் கட்டுரையாசிரியர்.

இவ்வாறாக தங்களது வியாபார நடவடிக்கைகளை விருத்தி செய்ய விரும்பும் காதலிகள் தங்களது சொந்தப் பெயர்களை மட்டும் வெளியிடுவதில்லை. புனை பெயர்களியே தோன்றுவதால் இந்தக் காதலிகள் யாவர் என காதலர்களால் கண்டுபிடிக்க இயலாது.

ஹார்ட் போட்ஷயர் பல்கலைக்கழக மாணவியான 20 வயதுடைய கேற் 12,000 பவுண்களை பல்கலைக்கழகத்துக்குச் செலுத்த வேண்டியிருந்தது. பொருளாதாரத்துறையில் மிகவும் பாதிக்கப்பட்டிருந்த இவர் இறுதியில் இணையத்தள காதலியாக மாற முடிவு செய்தார். இவர் தனது இந்த வியாபாரத்தை ஆரம்பித்து ஒரு வார காலத்துள் 10 காதலர்களைத் தேடிக்கொண்டார். இவர் ஒரு நபருக்கு அறவிடும் தொகை 42 பவுண்களாகும். இதன்படி தற்போது இவருக்கு 420 பவுண்கள் கிடைக்கின்றன. நான் விரைவில் மேலும் காதலர்களைப் பிடித்துக்கொண்டு 15,000 பவுன்களைத் தேடிக்கொள்ள வேண்டும் என இவர் தனது குறிக்கோளை வெளிப்படுத்துகின்றார்.

இதேபோல் பல்கலைக்கழகக் கட்டணத்தைச் செலுத்த முடியாத வெஸ்ட் யொக்ஷயர் பல்கலைக்கழக மாணவி கெலிவூட் தற்போது இணையத் தள காதலியாக மாறியுள்ளார். இந்த வழியில் பணத்தை சம்பாதித்துக்கொள்வது மிகவும் சுலபமாகும் என்கிறார் 23 வயதுடைய வூட்.

ஒரு நாளைக்கு இரண்டு மின்னஞ்சல்கள் மற்றும் ஒரேயொரு கடிதம் இவற்றை எனது காதலர்களுக்கு அனுப்ப வேண்டும். இதுதான் எனது பணியாகும். இதன்போது ஒவ்வொரு காதலரினதும் பெயர்களை மட்டுமே மாற்றினால் போதுமானது. தவிர எல்லோருக்கும் ஒரே விதமான செய்திகளைத்தான் அனுப்புகின்றேன் என்று அவர் கூறுகின்றார்.

இந்த இலகு வழி வருமானம் ஈட்டும் பெண்களது கட்டணங்கள் 5 பவுண்களில் இருந்து 50 பவுண்கள் வரை உயர்கின்றன. சாதாரண புகைப்படங்கள் மற்றும் கடிதங்களைப் பரிமாறிக்கொள்வதற்கு மிகவும் குறைந்த கட்டணங்களே அறவிடப்படுகின்றன. சாதாரண கடிதங்களுக்குப் மேலதிகமாக நிர்வாணப் புகைப்படங்களைப் பரிமாறிக்கொள்பவர்கள் மிகக் கூடுதலான கட்டணத்தை அறவிடுகின்றனர். இவர்களது கடிதங்கள் கூட சில சந்தர்ப்பங்களில் ஆபாச இரசம் சொட்டுவதாகவும் அமைகின்றன.

இந்தத் தொழிலில் ஈடுபட்டிருக்கும் அனைவருமே மாணவிகள் அல்லர். நடுத்தர வயதுடைய பெண்கள், தாதிமார்கள், அரச ஊழியர்கள் மற்றும் குடும்பப் பெண்களும் கூட இந்த வழியில் பணம் ஈட்டிவருகின்றனர்.

இணையத் தளத்தின் ஊடாக பரவலாக பரந்து பட்டுக் கிடக்கின்ற இந்தக் காதலிகள், தங்களால் எவருக்கும் தீங்கு கிடையாது எனக் கூறியபோதிலும் அது முற்று முழுதான உண்மையாகாது.

பிரித்தானிய சமூகத் தொடர்புகள்துறை ஆலோசகரான டெனிஸ் ச்னோவல்ஸ் என்பவர் இது குறித்துக் கருத்துத் தெரிவிக்கும் போது தங்களுக்கென்று எவருமே இல்லாத நபர்கள்தான் இந்த வகையிலான தொடர்புகளை ஏற்படுத்திக் கொள்கின்றனர். குறிப்பாக இவர்கள் நடுத்தர வயதுடையவர்களாக இருக்கலாம். தொடர்ந்து இவ்விதமான தொடர்புகள் கட்டிவளர்க்கப்படும் போது தனது காதலியை சந்திக்க வேண்டும் என்கின்ற அதீத ஆர்வம் அந்த நபருக்கு ஏற்படக்கூடும். எனினும் அது சாத்தியமாகாது என்பதால் அவருக்கு ஏற்படுகின்ற மனவிரக்தி அவருக்கு தீங்கினையே கொண்டுதரும் என்று கூறியுள்ளார்.

அதாவது தற்காலிக மாயை ஒன்றினால் இந்தக் காதலர்கள் மனநோயாளிகளாக மாறக்கூடும். இணையத் தள காதலிகள் சமூகத்தினுள் பைத்தியக்காரர்களை உருவாக்குவதில் முன்னிற்கின்றனர் என்றுதான் கூறவேண்டும்.

- பாரூக் -

# எது ஊடகச் சுதந்திரம்

**ஊடக சுதந்திர தினத்தை (03.05.2004) முன்னிட்டு சிறப்புக் கட்டுரையாளர் எழுதிய கட்டுரை இது. "உண்மையான ஊடக சுதந்திரத்திற்காக உழைப்போம்!!"**

ஒரு நாட்டின் அத்தனை நிகழ்வுகளையும் வெளிக்கொணரும் காலக் கண்ணாடியாகவே ஊடகங்கள் மதிக்கப்படுகின்றன. ஆனால், ஊடகங்களின் நோக்கமானது அதன் அடிப்படை சார்ந்ததாகவே இருக்கும். குறிப்பாக இரண்டு வகை ஊடக அமைப்பு முறைகளில் ஒன்று அரச முதலீடுகளில் இயங்குகின்றமையும் மற்றையது தனியார் முதலீடுகளில் இயங்குகின்றமையும் ஆகும். அரச ஊடகங்களைப் பொறுத்தவரை அரசு தன் நாட்டு மக்களுக்கு தான் சார்ந்த விடயங்களை கொண்டு சேர்க்கின்ற பாரிய கடமைகளை ஏற்றுச் செயற்படுகின்றது. தனியார் ஊடகங்கள் வருமானம் கருதிச் செயலாற்றுவதோடு, தமது அரசியல் விருப்பங்களுக்கு ஏதுவானதாகவே அவற்றின் செயற்பாடு அமைவதையே உறுதிப்படுத்துவதாகும். இவ்விரு வேறுபட்ட அடித்தளத்திலிருந்து கொண்டு ஊடகவியலாளர்கள் சுதந்திரமான கருத்துப் பரிமாற்றத்தை தான் விரும்பிய கோணத்திலே வெளிப்படுத்த முடிவதில்லை. எந்தவொரு நிகழ்வு குறித்த விடயங்களைக் கையாள்கின்றபோதும் முழுக்க முழுக்க ஊடக தர்மம், ஊடகச் சுதந்திரம் என்பவற்றுக்குஅப்பால் ஊடகம் தாங்கி வர வேண்டிய அரசியல் அடிப்படை சார்ந்தே, விஷயங்களை வெளியிட வேண்டிய கட்டாயம் திணிக்கப்படுகிறது. அடிப்படையில் இவ்வாறான சிக்கல்களை தமக்குள்ளேயே வைத்துக்கொண்டு நடுநிலையாகவும் சுதந்திரமாகவும் உண்மைத் தன்மையோடும் செய்திகளைத் தருவதாக ஊடகங்கள் தம்மைக் காட்டிக்கொள்வது உலக மகா பொய்யாகும். ஆசிய நாடுகளைப் பொறுத்தவரை ஊடகங்களின் சுதந்திரம் எப்போதுமே ஒரு கேள்விக்குறியாகவே உள்ளது. அதற்காக மேற்கத்தைய நாடுகளில் அட்சர சுத்தமாக ஊடக சுதந்திரம் மதிக்கப்படுவதாகவும் கருதிவிட முடியாது. ஏனெனில், வியட்நாம் விவகாரம் முதல் இன்றைக்கு வரை கறுப்பின எதிர்ப்பு மற்றும் வல்லாதிக்க வலியுறுத்தல்களுக்கெதிராக எந்தவொரு ஊடகமுமே தன்னிச்சையாக நடந்து கொள்வதை அவதானிக்க முடிவதில்லை.

இதற்கிடையில் இலங்கையைப் பொறுத்தவரை அரச ஊடகங்கள் அரசு சார்பு விடயங்களையும், தனியார் தமிழ் ஊடகங்கள் ஏகபோக மாயையைச் சுமந்து ஒருபக்கச் சார்பாகவும், தனியார் சிங்கள ஊடகங்கள் தமிழ் ஊடகங்களுக்கு நேரெதிராகவும், தனியார் ஆங்கில ஊடகங்கள் சிங்கள, தமிழ் ஊடகங்களை விமர்சிக்கும் போக்கிலுமாக செய்திகளை வெளியிட்டு வருகின்றன. அரச ஊடகம் தவிர்ந்த முக்கோண ஊடக செயற்பாடுகள் சாதாரண மக்களுக்குச் சரியான செய்திகளைக் கொண்டு செல்லாமல் உருப்பெருக்கம் செய்யப்பட்டே சென்றடைகின்றது. தவிரவும் ஊடகங்கள் அதன் வாசக அல்லது நேயர் வட்ட விருப்பு வெறுப்புகளைப் புரிந்துக்கொள்வதை விடவும், தமது எண்ணங்கைள தமது பக்கச்சார்பு நியாயங்களை மக்கள் மீது திணிக்கின்ற நடைமுறையையே ஊடகங்கள் செவ்வனே செய்து முடிக்கின்றன. தாமறிந்த உண்மையை மிகைப்படுத்தப்பட்டதாக ஊடகங்கள் வாயிலாக தெரிந்துகொள்ளும் அபாக்கியமான வாய்ப்பையே இலங்கை மக்கள் அநுபவிக்கின்றனர். சமூகத்தின் மீது ஊடகங்கள் செலுத்தக்கூடிய செல்வாக்குகளை இழந்திருப்பதோடு மட்டுமல்லாமல், ஊடகங்கள் மீது மக்கள் நம்பிக்கையற்றுப் போவதுமான துரதிர்ஷ்டவசமான ஊடகப்போக்கில் இலங்கையின் ஊடக வரலாறு மாறியுள்ளது. ஊடகவியலாளர்களைப் பொறுத்தவரை இருதலைக்கொள்ளி எறும்பாக தமது ஆதங்கத்தை வெளிப்படுத்தத் துடிக்கும் அதேவேளை, தாம் சார்ந்த ஊடகத்தின் அரசியல் தேவைகளுக்கேற்ப தமது எண்ணங்களைப் பகிர்ந்துகொள்ளக் கூடிய இக்கட்டுக்குள் விழுந்திருக்கிறார்கள். கருத்துக்களை கருத்துக்களால் விவாதிக்கின்ற விவேகமான நெறிமுறைகளை மறந்து தான் விரும்பாத கருத்துக்களை வெளியிடுபவர் மீது அச்சுறுத்தலையும், மிரட்டல்களையும் தொடுக்கும் அதேவேளை, சந்தர்ப்பம் சரியாக அமையுமிடத்து சம்பந்தப்பட்ட ஊடகவியலாளனைப் படுகொலை செய்யுமளவுக்கு இலங்கையின் ஊடக கலாசாரம் கொலைக்களத்துக்கு இழுக்கப்பட்டிருக்கிறது. மரணத்துக்குப் பயந்த ஒவ்வொருவரும் தன் மனச்சாட்சிக்கு விரோதமான செய்திகளை மக்களுக்கு வழங்க வேண்டிய கட்டாயம் ஏற்படுகிறது. உதாரணமாக, கொழும்பில் ரிச்சாட் டி சொய்சா, பிரதீப் குமார, மட்டக்களப்பில் செழியன் பேரின்பநாயகம், யாழ்ப்பாணத்தில் நிமலராஜன், ஐ.சண்முகலிங்கம், விழிப்புணர்வு எழுத்தாளர் ரஜனி திரணகம, கொழும்பில் அற்புதராஜா ஆகியோர் மீது புரியப்பட்ட படுகொலைகள் முக்கியத்துவம் பெறுகின்றன. மற்றுமொரு விடயமாக பத்திரிகைகள் எரியூட்டப்பட்ட சம்பவங்கள், விநியோகங்கள் தடுக்கப்படுகின்றமை, தவறான குற்றச்சாட்டுகளை ஆதாரமின்றி சுமத்துவது என்பனவும் ஊடகங்களுக்கெதிரான நடவடிக்கைகளாகத் தொடர்கின்றன. இவற்றைத் தவிர அண்மைக்காலமாக பக்கச்சார்பாக இயங்காத ஊடகங்கள் மீது அபாண்டமான குற்றச்சாட்டுகளை மற்றுமொரு ஊடகத்தின் துணையோடு பரப்புகின்ற கோழைத்தனமான செயற்பாடுகளும் கட்டவிழ்த்து விடப்பட்டிருக்கின்றன. இத்தனை அடாவடித்தனங்களுக்கும் முகங்கொடுத்து ஒரு ஊடகம் சரியான விடயங்களைச் சுமந்து சமூகத்தில் தனது பங்கை நிறைவேற்றிக்கொள்வதாகவிருந்தால் எவ்வகையான முட்டுக்கட்டைகளைச் சந்திக்க வேண்டியிருக்குமென்பதை புரிந்துகொள்ள முடியும். உயிர்ப் பயம், நியாயமான கருத்துக்களுக்கு களம் அமைக்க முடியாத முதுகெலும்பற்ற தன்மைப் பொய் முகமூடி அணிகின்ற கோழைத்தனம் இவற்றுக்கு இணங்கிப் போகின்ற ஊடகவியலாளன் மாத்திரமே இன்றைய இலங்கை ஊடகத்துறையில் புகழ்பெற்ற ஊடகவியலாளனாக தன்னை காட்டிக்கொள்ள முடியும். ஆனாலும், மேற்குறிப்பிட்ட விடயங்களோடு ஒத்துப்போக முடியாமல் அதற்கெதிராக எழுதி, எப்போதுமே அச்சுறுத்தலை எதிர்நோக்கிக் கொண்டிருக்கும் ஒரு சில எழுத்தாளர்கள் துரோகிகளாகவும், வேண்டத் தகாதவர்களாகவும் இனங்காட்டப்படுகிறார்கள். இவ்வாறான கசப்பான உண்மைகளைச் சுமந்துகொண்டு ஊடக தர்மம், ஊடக சுதந்திரம் இவற்றைப் பாதுகாப்பதற்காக எவரும் முன்வராதது கவலைக்குரியதே. வெற்று வாய்வீச்சுகளால் ஊடகச்சுதந்திரம் என்றும், ஊடக தர்மம் என்றும் வீரம் பேசும் வெட்டிப் பேச்சாளர்களை வாசகர்கள் அல்லது நேயர்கள் இனங்கண்டு கொண்டாலே எமது சமூகத்தில் விழிப்புணர்ச்சியை ஏற்படுத்த முடியும். இல்லாது போனால் எங்கள் இளைய சந்ததியின் எதிர்காலம் இருண்ட யுகத்தை நோக்கி வழிநடத்தப்படுவதை எவராலும் தடுத்து நிறுத்திவிட முடியாது. ஊடகச் சுதந்திரமும், ஊடக தர்மமும் வெறும் வாய்ச்சவடாலில் மட்டும் பாதுகாக்கப்பட முடியாதது ஆகும்.

**ஜெ.ரஞ்சனி, யாழ்ப்பாணம்.**

---

கதிர்காமரின் இந்திய விஜயத்தை அடுத்து பல்வேறு ஊகங்கள் தெரிவிக்கப்படுகின்றன. இலங்கையில் புதிய அரசு பதவி ஏற்றவுடன் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ இந்தியாவின் பங்களிப்பைக் கோரியிருந்தார்.

# இந்தியாவுடன் நட்பு

தற்போதெல்லாம் இந்தியாவின் அனுசரணையைக் கோருவது இலங்கை அரசியலில் ஒரு நிரந்தர சம்பிரதாயமாகவே மாறிவிட்டது. 1977, 1980, 1983 என தமிழர்களுக்கெதிரான வன்முறைகள் அதிகரித்துச் சென்றபோது இந்திய – இலங்கை உறவுகள் மோசமடைந்து சென்றன. இலங்கைத் தமிழர்களுக்கும் தென்னிந்தியத் தமிழர்களுக்குமிடையில் பேசும் மொழி, கலாசார, பண்பாட்டு உறவுகள் இருந்தால் இலங்கைத் தமிழர்களுக்கு ஏற்பட்ட பிரச்சினைகள் அவ்வப்போது தமிழகத்தில் உணர்வலைகளை ஏற்படுத்தி வந்தன. 1977களில் ஜே.ஆரின் திறந்த பொருளாதாரக் கொள்கை கூடுதலாக மேற்குலகு, ஜப்பான், அமெரிக்காவை இலக்காகக் கொண்டிருந்தது. இது இந்திய – இலங்கை உறவில் நெருடலை ஏற்படுத்தியது. இன்று இலங்கையின் சகல சமூகங்களின் பிரதிநிதிகளுமே தத்தம் நலன் சார்ந்து இந்தியாவின் அனுசரணையைக் கோரி நிற்கிறார்கள். 2000 – 2500 வருட பாரம்பரிய உறவுகளுக்கப்பால் இந்திய – இலங்கை உறவுகள் புதிய தளங்களில் குறிப்பாக பொருளாதார, வர்த்தக, கல்வி, கலாசார உறவுகள் வளர்ச்சியடைந்து வருகின்றன.

பிரித்தானிய பாராளுமன்ற முறைக்கப்பால் இலங்கையில் அதிகாரப் பகிர்விற்கான நடைமுறை ரீதியான செயற்பாடுகளும் இந்தியாவால்தான் ஆரம்பித்து வைக்கப்பட்டன. 1987இல் இந்தியாவின் அனுசரணையுடன் உருவாக்கப்பட்ட மாகாண சபை முறை அந்த வகையில் சரித்திர முக்கியத்துவம் வாய்ந்ததாகும். அது உருவாகுவதை அதுவும் வடக்கு – கிழக்கு இணைந்து உருவாகுவதை பேரினவாத, அடிப்படைவாத சக்திகள் எதிர்த்தன. வடக்கு – கிழக்கின் அடிப்படைவாத சக்திகளும் தத்தமது நலன் சார்ந்து அதனை எதிர்த்தன. அதனால்தான் முன்னாள் ஜனாதிபதி பிரேமதாச சண்டை செய்தாலும் சகோதரர் அன்றோ என்று கூறி புலிகளின் தலைவர் பிரபாகரனுக்கு நட்புக் கரம் நீட்டினார். இலங்கையிலிருந்து இந்திய அமைதிகாக்கும் படைகள் வெளியேறிவிட வேண்டும் என்று இந்திய விரோதம் வளர்க்கப்பட்டது.



இலங்கை வெளிவிவகார அமைச்சர் கதிர்காமரின் இந்திய விஜயத்தின் போது இந்திய வெளியுறவு துறை அமைச்சர் யஸ்வந் சின்ஹாவை ஆரத்தழுவும் காட்சி.

இந்த விரோதம் சென்னையில் படுகொலைகள் நடத்தும் அளவிற்குச் சென்றது. இந்தியாவுடன் எப்போதும் நட்புறவை விரும்பிய சக்திகளான ஈ.பி.ஆர்.எல்.எவ். தலைவர் பத்மநாபா உட்பட 13 பேர் தமிழக மண்ணில் படுகொலை செய்யப்பட்டனர். இந்தியாவின் இளம் புதல்வரும் நம்பிக்கை நட்சத்திரமும் பெருமைமிகு இந்தியாவின் முன்னாள் பிரத மருமான ராஜிவ் காந்தி அவர்கள் ஸ்ரீபெரும்புத்தூரில் ராமானுஜர் பிறந்த மண்ணில் படுகொலை செய்யப்பட்டார்.

அதனால் இந்தியாவுடனான உறவுகள் மிக மோசமாகச் சீர்குலைந்தன.

ராஜிவ் காந்தி படுகொலையை தற்போது மீள்பரிசீலனை செய்தால் அது புலிகளின் அடிப்படை வாத்துடன் சர்வதேச சதியின் ஒரு அங்கமாகவும் இருந்தது என்பது புலனாகும் . இந்தியா தென்னாசியாவின் மிகப் பெரும் பொருளாதார பலமாக மாறிவருகிறது. அதே போலச் சீனா சிகரங்களைத் தொட்டு நிற்கிறது.

இந் நிலையில் தென்னாசியா பற்றிய அக்கறை பல செல்வந்த நாடுகளுக்கு ஏற்படுவதில் வியப்பெதுவும் இல்லை. சந்தை வாய்ப்புக்களைத் தக்க வைத்திருப்பது அல்லது விஸ்தரிப்பதென்பதே பொருளாதார வல்லரசுகளின் கொள்கையாக இருக்க முடியும்.


இலங்கையில் இனப் பிரச்சினைத் தீர்வு விடயத்தையும் இந்த விடயத்தையும் பிரித்துப் பார்க்க முடியாது. நாட்டின் இறைமை, ஒருமைப்பாடு எனப் பேசுபவர்கள் பிராந்தியத்தின் நலன்களைப் பற்றி எந்த அக்கறையும் காண்பிப்பதில்லை. அல்லது தமிழரைத் தமிழரே வியக்கும் மனோ பாவமும் எதனையும் பெரிதாகச் சிந்திக்க விடுவதில்லலை. சிறிய இடத்தினுள் வாழ்வதால் சிறுமதி படைத்தோராய் இருக்கின்றோமா என ஐயுற வேண்டியிருக்கிறது. இலங்கையில் சமூக வாழ்வு மிகத் தீவிர ஜனநாயக மயப்படுத்தலுக்கு உள்ளாக வேண்டியதாக இருக்கிறது. தமிழ், முஸ்லிம், மலையக மக்களின் இன ரீதியான சமூக உரிமைகள் உடனடியாக அங்கீகரிக்கப்பட வேண்டிய அதேவேளை, பொருளாதார சமத்துவமின்மை, பாரதூரமான சமூக இடைவெளி தொடர்பில் மறுசீரமைப்புத் தேவைப்படுகிறது. இந்தியா இத்தகைய விடயங்களில் பல பரிசோதனைகளை மேற்கொண்ட நாடு. நெகிழ்வுத் தன்மையுள்ள அரசியல் பாரம்பரியத்தையும் கட்டமைப்பையும் கொண்ட நாடு. எனவே, இந்திய அநுபவங்கள் எமக்குச் சிறந்த முன்மாதிரிகளாக அமைய முடியும்.

ஐரோப்பியர்களுக்கு விளங்குவது எமது சில சிறுமதி படைத்தோர்க்குப் புரிவதில்லை.

தற்போது 25 நாடுகள் ஐரோப்பிய ஒன்றியத்தில் இணைந்துள்ளன. உலகின் வளங்கள் அருகி வரும் சூழ்நிலையில் தனித்துவங்களுடன் நெருங்கிச் செயற்படுவதுதான் முறையாகும். தென்னாசிய அளவில் எல்லைகளுக்கப்பால் பல்வேறு சமூகங்களும் மக்களும் இணைந்து செயற்படுவதற்கான செயற்பாடுகள் ஊக்குவிக்கப்பட வேண்டும். எவ்வளவிற்கு எவ்வளவு நாம் மனித குலத்தின் ஒரு பகுதியினர் என்று நாம் உணர்கிறோமோ அப்போதுதான் எமது சமூகத்தைப் பிடித்தாட்டும் காட்டுமிராண்டி நோயிலிருந்து விடுபட முடியும்.

**தாகூர்**

எனவே, ஆற்றலும் தீர்க்க எமது தரிசனமும் உள்ள தலைவர்கள் இனங்களின் சுயாட்சி உரிமைகளை நிலைநாட்டப் பாடுபடுவதோடு தென்னாசிய அளவில் எல்லை கடந்த இணைவை ஏற்படுத்தச் சிந்திப்பதுவுமே இக் காலகட்டத்தின் தேவையுமாகும்.





சக்தி தனக்கே உடைமை யாக்கு - அது
சக்தி செய்யும் விந்தைகளைத் தேடும்மதி
சக்தி தனக்கே உடைமை யாக்கு - அது
சக்தியுறை விடங்களை நாடும்.

-சுப்பிரமணிய பாரதியார்

# கெட்டிக்கார சகோதரர்கள்

முன்னொரு காலத்தில் ஒரு வயதான ஏழைக்கு மூன்று புதல்வர்கள் இருந்தனர். அவர் வயதாகி இறக்கும் தறுவாயில் தன் மகன்களிடம் சொன்னார் :

"எனதருமை மக்களே, நம்மிடம் பொன் இல்லை. பொருள் இல்லை. ஆகவே, நீங்கள் அறிவுச் செல்வத்தை நிறையத் திரட்டிக்கொள்ள வேண்டும். எதுவும் உங்கள் பார்வையில் இருந்து தப்பக் கூடாது. அப்படிப்பட்ட அறிவை நீங்கள் பெற்றுவிட்டால், உங்களுக்கு எந்தக் கேடும் வராது. நீங்கள் எப்போதும் மகிழ்ச்சியாக இருக்கலாம்."

சொல்லிவிட்டு இறந்துபோனார்.

சகோதரர்கள் மூவரும் சேர்ந்து இனி என்ன செய்யலாம் என்று யோசித்தனர்.

ஒருவன் சொன்னான்:

"பல இடங்களுக்குச் சென்று உலகைச் சுற்றிப் பார்ப்போம். தந்தை நம்மிடம் சொல்லிவிட்டுப் போனபடி அறிவுச் செல்வத்தைத் திரட்டுவோம்."

மற்றவர்கள் இதை ஏற்றுக்கொண்டு பயணத்தைத் தொடங்கினர். பல இடங்களில் சுற்றியபின் பாதங்கள் வலியெடுத்ததால் சற்று நேரம் படுத்து ஓய்வெடுத்துக்கொண்டு மீண்டும் புறப்பட்டனர். சிறிது நேரத்தில் ஒரு பெரிய நகரம் தெரியக் கண்டனர்.

நகரத்தை நெருங்கியதும் மூத்த சகோதரன் நின்று கீழே தரையைக் கவனித்தான்.

"சற்று நேரத்திற்கு முன் இங்கே ஒரு பெரிய ஒட்டகம் சென்றிருக்கிறது."

சற்றுத் தூரம் நடந்ததும் இரண்டாவது சகோதரன் சொன்னான்:

"ஒட்டகத்திற்கு ஒரு கண் இல்லை."

மேலும் சற்றுத் தூரம் நடந்ததும் மூன்றாவது சகோதரன் சொன்னான்:

"ஒட்டகத்தின் மீது ஒரு பெண்ணும் ஒரு சிறு குழந்தையும் சென்றிருக்கிறார்கள்."

சிறிது நேரத்தில் ஒருவன் குதிரை மீது அங்கு வந்தான்.

"குதிரை வீரனே! நீ எதையாவது இழந்துவிட்டுத் தேடிக்கொண்டிருக்கிறாயா?"

மூத்த சகோதரன் கேட்டான்.

"ஆம், நீங்கள் சொல்வது உண்மைதான்."

"நீ இழந்தது ஒரு பெரிய ஒட்டகம். அதற்கு இடது கண் இல்லை. அதில் ஒரு பெண்ணும் ஒரு சிறு குழந்தையும் பயணம் செய்தனர். என்ன, நாங்கள் சொல்வது சரியா?"

இப்போது குதிரை வீரனுக்கு மூன்று சகோதரர்கள் மீதும் சந்தேகம் உண்டாகிவிட்டது.

"நீங்கள் என்னுடைய ஒட்டகத்தைப் பிடித்து எங்கேயோ மறைத்து வைத்திருக்கிறீர்கள். உண்மையைச் சொல்லிவிடுங்கள்."

மிரட்டினான் அந்த ஆள்.

"உன்னுடைய ஒட்டகத்தை நாங்கள் பார்த்ததே இல்லை" என்று சகோதரர்கள் பதிலளித்தார்கள்.

"அப்படியென்றால் என்னுடைய ஒட்டகத்தைப் பற்றிய விவரங்கள் உங்களுக்கு எப்படித் தெரியும். நான் நம்பமாட்டேன். நீங்கள் என்னுடைய ஒட்டகத்தை எங்கேயோ மறைத்து வைத்திருக்கிறீர்கள்."

சகோதரர்கள் எவ்வளவு எடுத்துச் சொல்லியும் அந்தக் குதிரை வீரன் நம்பவே இல்லை. கடைசியில் வழக்கு அரசனிடம் சென்றது.

"அரசே, என் மனைவியும் குழந்தையும் ஒரு கண் இல்லாத ஒரு பெரிய ஒட்டகத்தின் மீது அமர்ந்து என்னைப் பின்தொடர்ந்து வந்தார்கள். ஆனால், வழியில் எப்படியோ தவறிவிட்டார்கள். நான் அவர்களைத் தேடி வந்தபோது வழியில் இவர்களைப் பார்த்தேன். நான் இவர்களிடம் எதுவும் கேட்காமலேயே இம் மூவரும் அந்த ஒட்டகம் பெரியது. அதற்கு ஒரு கண் இல்லை. அதில் ஒரு பெண்ணும் ஒரு குழந்தையும் இருந்தனர் என்று என்னிடம் சொன்னார்கள். அந்த ஒட்டகம் இவர்களிடம்தான் இருக்கிறது. அவற்றை மீட்டுத் தருமாறு உங்களைப் பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்."

மன்னரும் மூன்று சகோதரர்களை நோக்கி "திருடர்களே இந்த ஆளுடைய ஒட்டகத்தையும் மனைவியையும் குழந்தையையும் என்ன செய்தீர்கள்?" என்று கேட்டார்.

"அரசே, நாங்கள் திருடர்களல்ல. அந்த ஆளுடைய ஒட்டகத்தையும் மனைவியையும் குழந்தையையும் பார்த்ததேயில்லை."

"பின் எப்படி அந்த ஒட்டகத்தைப் பற்றி திறம்பட விபரித்தீர்கள்? நீங்கள் பொய் சொல்கிறீர்கள்."

"அரசே, எதையும் தவறாமல் கவனமாக உற்று நோக்க எங்கள் பிள்ளைப் பிராயத்திலிருந்தே நாங்கள் பழகிக்கொண்டோம். யாவற்றையும் கவனமாகப் பார்ப்பதற்கும் சிந்திப்பதற்கும் நாங்கள் நெடுங்காலம் செலவிட்டுக் கற்றுக்கொண்டோம். அதனால்தான் ஒட்டகத்தைப் பார்க்காமலே அதைப் பற்றி எங்களால் விவரிக்க முடிந்தது."



"கண்ணால் பார்க்காது ஒன்றைப் பற்றி அவ்வளவு நன்றாகத் தெரிந்துகொள்ள முடியுமா?"

அரசர் சந்தேகத்துடன் கேட்டார்.

"முடியும்" என்று சகோதரர்கள் பதிலளித்தார்கள்.

"சரி, சோதித்துப் பார்த்துவிடலாம்."

அரசர் தன் அமைச்சரைக் கூப்பிட்டு அவர் காதில் ஏதோ சொன்னார்.

சிறிது நேரத்தில் அரண்மனைச் சேவகர்கள் ஒரு பெரிய பெட்டியை கையில் பிடித்து எடுத்துவந்து அதை மெதுவாய் கீழே வைத்துவிட்டு விலகிச் சென்றனர். சகோதரர்கள் மூவரும் தொலைவில் இருந்து இதை கவனித்துக் கொண்டிருந்தார்கள். பெட்டியை எங்கிருந்து கொண்டுவந்தார்கள்? அதை எப்படித் தூக்கினார்கள்? எப்படி அதை தரையில் வைத்தார்கள் என்பதைக் கூர்ந்து பார்த்துக்கொண்டார்கள்.

"அந்தப் பெட்டியில் என்ன இருக்கிறது என்று சொல்லுங்கள் பார்க்கலாம்"

அரசர் கேட்டார்.

"அரசே, அந்தப் பெட்டியினுள் ஒரு சிறு பந்து போன்ற பொருள் இருக்கிறது" என்றான் மூத்த சகோதரன்.

"அது மாதுளை" என்றான் இரண்டாவது சகோதரன்.

"அது பழுக்காத மாதுளை" என்றான் மூன்றாவது சகோதரன்.

உடனே அரசர் சேவகனைக் கூப்பிட்டு அந்தப் பெட்டியைத் திறக்கச் சொன்னார். பெட்டி திறக்கப்பட்டதும் சகோதரர்கள் சொன்னது போலவே அதனுள் ஒரு பழுக்காத மாதுளை இருந்தது.

உடனே அரசர் "என்ன ஆச்சரியம். நீங்கள் இதன் மூலம் திருடர்கள் இல்லை என்பதை நிரூபித்துவிட்டீர்கள்" என்றவர் குற்றம் சாட்டிய குதிரை வீரனை நோக்கி

## பாப்பா முரசு சிறுகதை

"நீ ஒட்டகத்தை நன்றாகத் தேடிக் கண்டுபிடி. இவர்கள் உன் ஒட்டகத்தைத் திருடவில்லை" என்று கூறி அவனை அனுப்பினார்.

அரசர் சகோதரர்களிடம் "ஒட்டகத்தைப் பற்றிய விவரங்கள் உங்களுக்கு எப்படித் தெரிந்தன?" என்று கேட்டார்.

"புழுதியில் படிந்த பெரிய தடங்கள் அங்கே ஒரு பெரிய ஒட்டகம் சென்றதைக் காட்டியது" என்றான் முதல் சகோதரன்.

"பாதையின் வலது பக்கத்திலிருந்த புற்கள் மட்டுமே கடித்துத் தின்னப்பட்டிருந்தன. இதிலிருந்து ஒட்டகத்திற்கு இடது கண் இல்லை என்பதை உணர்ந்தேன்" என்றான் இரண்டாவது சகோதரன்.

"ஓரிடத்தில் ஒட்டகம் தரையில் மண்டியிட்டு அமர்ந்த தடத்தைக் கண்டேன். அதன் அருகே மணலில் ஒரு பெண்ணின் பூட்ஸ் பாதங்களின் சுவடும் பக்கத்தில் ஒரு சிறிய குழந்தையின் பாதச் சுவடுகளும் தென்பட்டன. அதன் மூலம் ஒட்டகத்தில் ஒரு பெண்ணும் குழந்தையும் பயணம் செய்தனர் என்பதை உணர்ந்தேன்" என்றான் மூன்றாவது சகோதரன்.

"அது சரி, இந்தப் பெட்டியில் ஒரு பழுக்காத மாதுளை இருந்ததை எப்படி உங்களால் ஊகிக்க முடிந்தது?" என்று கேட்டார் அரசர்.

"இரண்டு வேலையாட்கள் அந்தப் பெட்டியைத் தூக்கி வந்த முறையிலிருந்தே அது கனமானதல்ல என்பது தெரிந்தது" என்றான் மூத்த சகோதரன்.

"அவர்கள் பெட்டியை தரையில் வைத்தபோது அதனுள் உருண்டையான ஒரு பொருள் பெட்டியின் ஒரு முனையிலிருந்து மற்றொரு முனைக்கு உருளும் சத்தம் கேட்டது. பெட்டி தோட்டத்திலிருந்து கொண்டு வரப்பட்டது என்பதிலிருந்தும், அந்தப் பொருள் உருண்டையானது என்பதிலிருந்தும், அந்தப் பொருள் மாதுளையாக இருக்கும் என்று ஊகித்தேன். உங்கள் அரண்மனையில் பல மாதுளை மரங்கள் இருப்பதையும் வரும்போது பார்த்தேன்" என்றான் இரண்டாவது சகோதரன்.

"ஆண்டின் இந்தப் பருவத்தில் மாதுளைகள் பழுக்காமலேயேதான் இருக்கின்றன. ஆகையால்தான் அது பழுக்காத மாதுளை என்று உணர்ந்தேன்" என்றான் மூன்றாவது சகோதரன்.


மூன்று சகோதரர்களின் மதிநுட்பத்தை அரசர் வியந்து பாராட்டினார்.


"பணத்திலும் பொருளிலும் நீங்கள் செல்வந்தர்களாய் இல்லாமல் இருக்கலாம். ஆனால், அறிவில் நீங்கள் மூவரும் மிகப் பெரிய செல்வந்தவர்கள்" என்ற அரசர் அவர்களை மனதாரப் பாராட்டி பரிசுகளை வழங்கினார்.

# அதிசய உலகம்

மரக்கிளைகளை டைட்டா பிடிச்சிக்க உதவுது. பிளஸ் தன்னோட வாலினால் இறுகப் பற்றிக்கொள்வதால் பலமா காற்று வீசினாலும் விழாது.

இந்தப் பச்சோந்தியைப் பாருங்க... முரட்டுத் தோலும், செதில் செதிலான தாடியுடன் விசித்திரமாக இருக்கும் இது மடகாஸ்கர் தீவுகளில் வசிக்கிறது.





பச்சோந்திகளில் 120 வகைகள் உள்ளன. பெரும்பாலானவை ஆபிரிக்காவில் வசிக்கின்றன. எஞ்சியுள்ளவை ஸ்பெயின், இந்தியா மற்றும் மத்திய கிழக்கு நாடுகளில் காணப்படுகின்றன.

இந்தப் பச்சோந்தியின் காலைப் பாருங்கள் இரண்டு விரல்களுக்குப் பிறகு ஒரு பெரிய இடைவெளி. மூன்று விரல்கள் இப்படி இருப்பதால் தன் நாக்கை நீளமாக் நீட்டி இரையைப் பத்து செகன்டில் வாய்க்குள் சுருட்டிவிடும். இதன் நாக்கின் நுனிப் பகுதிகளில் பசை போன்ற ஈரப்பதம் எப்போதும் காணப்படுகிறது.

# உங்கள் பொது அறிவு எப்படி?

***பின்வருவனவற்றை முதன் முதலாக அறிமுகம் செய்தவர்கள்!***

| | |
|---|---|
| 1. அஸ்பிரின் | - ரெஸ்ரர். |
| 2. ஆரியோமைசின் | - பி. எம். டக்கார். |
| 3. சுகறின் | - கொன்ஸ்தாந்தின் பால்பேக். |
| 4. இன்சுலின் | - பன்ரிங்கும் பெஸ்ற்றும். |
| 5. மோபியா | - செற்றூர்நர். |
| 6. செயற்கை பென்சிலின் | - டு. விக்னியாட். |
| 7. ஸ்டெப்போனிம்சின் | - வெக்மன். |
| 8. செயற்கை நூல் | - எச். பெப்பின். |
| 9. செயற்கைப் பட்டு (றேயன்) | - டி. வார்டொனற். |
| 10. செயற்கைச் சாயம் | - எக். ஸப்பின். |

# சிறந்த வர்ணத்திற்கு பரிசு தரும் எண்ணம்



மேலே உள்ள படத்திற்கு வர்ணம் தீட்டி தபாலட்டையில் ஒட்டி அனுப்புங்கள். சிறந்த வர்ணம் ஒன்றுக்கு பரிசு ரூபா 25/= காத்திருக்கிறது. அனுப்பவேண்டிய கடைசித் திகதி 15.05.2004

வர்ணம் தீட்டும் போட்டி இல. 545
தினமுரசு வாரமலர்
த. பெ. இல. 1772.
கொழும்பு.

## வர்ணம் தீட்டும் போட்டி இல: 542

**பரிசுக்குரியவர்:**
யோசப் ஜெறாட் ரிறோண்,
இல. 09, இராஜேந்திரா வீதி,
யாழ்ப்பாணம்.

## பாராட்டுக்குரியவர்கள்

| | |
|---|---|
| கே. பி. கீர்த்தனா, யா/ அமிர்தாம்பிகை வித்தியாலயம், சாவகச்சேரி. | ஜெ. வனோஜினி, இல. 212, காந்திநகர், அன்புவழிபுரம், திருகோணமலை. |
| யோகராசா கலாரஞ்சனி, சரசலை தெற்கு, சாவகச்சேரி. | எம். ஜே.எம் ருக்ஷான், களு/ குறிஞ்சிப்பிட்டிய எம்.ஜே.வி., குறிஞ்சிப்பிட்டிய. |
| ஆர் . அக்ஷலாயஷோதினி, தரம் - 4 A, ப/மகளிர் மகா வித்தியாலயம், பதுளை. | எஸ். அருண்பிரசாத், இல. 39, புகையிரத நிலைய வீதி, கொட்டகலை. |
| சி. விதுஷன், இல.142, பழைய கல்முனை வீதி, நொச்சிமுனை, மட்டக்களப்பு. | கி.அர்ஜூனன், 101/01, 3ஆம், குறுக்கு, புன்னைச் சோலை, மட்டக்களப்பு. |
| ஜெ. தனுகானன், தரம் 7K, மட்/மண்டூர் ஸ்ரீ இராமகிருஷ்ண வித்தியாலயம், மண்டூர். | டி. பெட்ஸி, 69/1 A, மத்தியஸ் வீதி, மட்டக்களப்பு. |





இரண்டாம் உலகப் போரின் முடிவில் ஹிட்லரின் இராச்சியம் மண்கவ்விய பிறகு ஜேர்மன் நேட்டோ, வார்சோ நாடுகளின் பிடியில் விழுந்தது. பின்னர் கிழக்கு ஜேர்மனி கம்யூனிஸ வழியில் ரஷ்யாவின் ஆதரவு பெற்றது மேற்கு ஜேர்மனி முதலாளித்துவ நாடுகளின் வரிசையில் அமெரிக்கா ஆதரவோடு நெட்டோ நாடுகளின் வரிசையில் இடம்பெற்றதும் வரலாறு. சோவியத் ரஷ்யாவின் சிதைவுக்குப் பிறகு இரு நாடுகளும் ஐக்கியமாகிப் போயுள்ளன. இதில் மேற்கு ஜேர்மனி ஏனைய நாட்டவர்களுக்கு வதிவிட அனுமதி வழங்குவதில் பெரும் ஆர்வம் காட்டியது. குறிப்பாக, கிழக்கு ஜேர்மனியர்களைக் கவர்ந்திழுக்கும் ஒரு நடவடிக்கையாகவே இது கருதப்பட்டது. இந்த முரண்பாடுகள் முற்றி இரு நாடுகளுக்குமிடையிலே முரண்பாடுகளின் சின்னமாகக் கட்டப்பட்டதே பேர்லின் சுவர். சுவர் கட்டப்படும்போது இரு நாடுகளையும் சார்ந்தவர்கள் தங்கள் உறவினர்களையும் நண்பர்களையும் பிரிந்து செல்ல வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது. நாடு பிரிந்தது என்பதை விடவும் உறவுகளின் பிரிவுத் துயர் ஜேர்மனியர்களுக்குப் பெரும் மன உளைச்சலை ஏற்படுத்தியது. தற்போது அமெரிக்க - ரஷ்ய படைமுகாம்கள் அகற்றப்பட்ட நிலையில் கிழக்கு மேற்காகப் பிரிந்திருந்த ஜேர்மனி ஒரே நாடாகியுள்ளது. கைத்தொழில் வளர்ச்சி கண்டுள்ளதால் பொருளாதார பலம் மிக்க நாடாக உலக அரங்கில் தன்னை நிலைநிறுத்தியிருக்கிறது. 1990ஆம் ஆண்டு இவ்விரு தேசங்களும் இணைக்கப்படுகின்ற ஒப்பந்தத்தின்படி பேர்லின் சுவர் உடைக்கப்பட்டது. ஐரோப்பிய பாராளுமன்றத்திலுள்ள தனது அங்கத்துவத்தை ஜேர்மனி ஸ்திரப்படுத்தியிருக்கிறது. இலங்கையை விடவும் எத்தனையோ மடங்கு பெரிய நிலப்பரப்புகளைக் கொண்ட இரு ஜேர்மனிகளும் இணைந்துகொள்வதன் மூலமே உலக அரங்கில் நிமிர்ந்து நிற்க முடியும் என்ற உண்மையை உணர்த்தியுள்ளது. ஆனால், நாம் மட்டும் சின்னஞ் சிறிய இலங்கையை கூறு போட்டுக்கொண்டாலே வீறு கொண்டெழுந்து வாழ முடியுமென எண்ணுகின்றோம். துண்டு துண்டாய் உடைந்து கிடப்பதை விடவும் ஒன்றுசேர்ந்து வாழ்வதே உலக வரலாற்றில் தடம் பதிக்கும் என்பதற்கு இது நல்ல உதாரணம்.



சோவியத் யூனியனின் போர் வீரன் ஒருவன் சிவப்புக் கொடியை பேர்லின் நாட்டின் ரீச்ஸ்டக் நகரில் ஏற்றும் காட்சி.

முன்னாள் அமெரிக்க ஜனாதிபதி ரொனால்ட் ரீகன் 1987 ஜூன் 12இல் மேற்கு பேர்லின் பிரண்டன் பேர்க் கதவின் முன் உரையாற்றும் போது தனது பெருவிரலை உயர்த்தி தீர்மானமான முடிவை கூறிய காட்சி.

அவருக்கு இடது பக்கம் மேற்கு ஜேர்மனிய பாராளுமன்றத் தலைவர் பிலிப் ஜெனின்கரையும் வலதுபக்கம் மேற்கு ஜேர்மனிய அதிபர் ஹெல்மட் கோஹல்லையும் காணலாம்.






அவுஸ்திரேலிய விமானப்படைக்குச் சொந்தமான Skymaster எனும் விமானம் 1948இல் பேர்லின் நகரின் டெம்பிஹோவ் விமான நிலையத்தில் தரையிறங்குவதையும் அதனை பெர்லின் நாட்டு முற்றுகையாளர்களின் ஒரு பகுதியினர் பார்வையிடுவதையும் காணலாம்.

# பேர்லின் சுவர்

முன்னாள் அமெரிக்க ஜனாதிபதி ஜோன் எப்.கெனடி மேற்கு ஜேர்மனியின் தளத்திலிருந்து கிழக்கு ஜேர்மனியின் பகுதியைப் பார்வையிடும் காட்சி. இத் தினத்தில் இவரின் பிரசித்திபெற்ற உரையான 'நான் ஒரு பேர்லின் நாட்டவன்' உரை இடம்பெற்றது.





1990களில் நடைபெற்ற பொதுத் தேர்தல் பிரசாரங்களில் மேற்கு ஜேர்மனிய அதிபர் Helmut Kohl இனை அவரின் ஆதரவாளர்களான கிழக்கு ஜேர்மனியர்கள் சூழ்ந்துள்ள காட்சி.



காரீயத்தினால் ஆக்கப்பட்ட பேர்லின் சுவரின் சிதைவுகள். இவை ஒவ்வொரு துண்டும் 1989ஆம் ஆண்டு மதிப்பின்படி அமெரிக்க டொலர் பெறுமதிக்கு ஏலம் விடப்பட்டது.

கிழக்கு ஜேர்மனியப் படைவீரர் ஒருவர் மேற்கு ஜேர்மனியின் எல்லைப் பகுதியில் போடப்பட்டிருந்த வீதித் தடையை மீறி மேற்கு ஜேர்மனிக்குள் புகுந்தான்.

ஆரம்பத்தில் வீதித் தடையாக இருந்த இடம் சிறிது காலத்தில் கொங்கிறிட் சுவராகக் கட்டியெழுப்பப்பட்டது.




1953இல் உணவுக்காகவும் உடுதுணிகளுக்காகவும் கிழக்கு ஜேர்மன் மக்கள் மேற்கு பேர்லின் நகருக்குள் புகுவதைத் தடுக்கும் மேற்கு ஜேர்மன் பொலிஸார்.






கிழக்கு பேர்லினிலிருக்கும் தங்கள் உறவினர்களைப் பார்ப்பதற்காக சுவரின் முன் நின்று கைகளை உயர்த்தும் மேற்கு ஜேர்மனியர்கள் எழுவரின் நிழல் பேர்லின் சுவரில் தெரிகிறது.



பேர்லின் சுவர் கட்டப்பட்டு 28 வருடங்களின் பின் 1989 இல் பெர்லின் மக்கள்ளால் உடைக்கப்படும் காட்சி.




ஸ்ட்சாஸ் எனும் நகரத்தில் குண்டு வெடிப்பினால் சேதமடைந்த பேர்லின் சுவரை 1962 மே 26இல் மீண்டும் புனரமைக்கும் காட்சி.

**பா**ராளுமன்றத் தேர்தல் முடியும் வரை படப்பிடிப்பு எதிலும் கலந்துகொள்வதில்லை என்பதில் தீர்மானமாக இருக்கிறார் சரத்குமார்.

**'பே**ரழகன்', 'சென்னையில் ஒரு மழைக்காலம்' முடிந்த பிறகு இயக்குநர் பாலாவின் சொந்தத் தயாரிப்பில் நடிக்கிறார் சூர்யா. இந்தப் படத்தை பாலா இயக்கவில்லை.



படம்: பேரழகன்
சூர்யா - ஜோதிகா

**சே**ரனின் அடுத்த படத்திற்காகவோ என்னவோ ஏஞ்சல் என்ற பெயரைப் பதிவு செய்து வைத்துள்ளார்.


# அழகா பேரழகா?

**இ**வ்வளவு காலமும் எல்லா இடங்களிலும் நல்லபிள்ளை எனப் பேரெடுத்த சூர்யா மீது ஏவி.எம். நிறுவனம் ஏகப்பட்ட கடுப்பில் இருக்கிறது.

தங்கள் விருப்பமே இல்லாமல் 'பேரழகன்' படத்தில் ஜோதிகாவை டபுள் ஆக்டில் நடிக்க வைத்ததில் தொடங்கி படத்தின் டிஸைனிங் மற்றும் எடிட்டிங் வேலைகளில் தலையிடுவது வரை ஏகப்பட்ட தொந்தரவுகள் தந்துவருவதாக வெளிப்படையாகவே புலம்ப ஆரம்பித்துவிட்டது ஏவி.எம்.

படத்தில் ஒரே ஒரு பாடலுக்கு நடனமாட பிரபல நடிகை ஒருவர் தேவைப்பட்டார். அதில் சிநேகாவைப் போடும்படி சூர்யா சிபாரிசு செய்ய, "அந்தப் பாட்டுக்கு எந்த நடிகையைப் போடனும்னு எங்களுக்குத் தெரியும். நீங்க கூட வந்து ஆடிட்டுப் போனால் போதும்" என்று மாளவிகாவை அழைத்து வந்தார்கள். வம்பு வேண்டாம் என்று சைலண்டாக ஆடி முடித்தார் சூர்யா.

பேரழகனுக்கு இது அழகா?





# பட்ஜெட் செலவு 10 கோடி

**ஏ.**எம்.ரத்னம் தயாரிப்பில் தரணி இயக்கத்தில் வெளிவந்துள்ள 'கில்லி' படத்தின் பட்ஜெட் மட்டுமே பத்துக் கோடியைத் தாண்டிவிட்டதாம்.

சுமார் 120 நாட்களில் படத்தை முடித்துத் தருவதாக வாக்குறுதி அளித்திருந்த இயக்குநர் படத்தை முடிக்க 220 நாட்கள் எடுத்துக்கொண்டாராம். பிலிம் ரோலின் செலவோ இதுவரை தமிழ் சினிமா காணாத அளவில் மூன்று இலட்சத்து ஐம்பதினாயிரம் அடி செலவானதாம்.

சுமார் 50 சென்டர்களிலாவது இந்தப் படம் நூறு நாள் ஓடினால்தான் ஏ.எம்.ரத்னம் தப்பிப் பிழைப்பார் என்கிறது விநியோகஸ்தர் வட்டாரம்.

'கில்லி' எடுத்தவர் மனதில் கிலி.





**நீ**ண்ட இடைவேளைக்குப் பிறகு கே.எஸ்.ரவிக்குமாரின் இயக்கத்தில் மசாலா தயாரிப்பாக வெளிவந்திருக்கிறது. நாயகன் மாதவன் இன்றைய இளம் முன்னணி கதாநாயகர்கள் வரிசையில் எவருக்கும் போட்டியில்லாமல் தனக்கேயுரிய பாணியில் நடித்து வருவது குறிப்பிடத் தக்கது. அதே குறும்பு, கமலஹாசனின் பாசறைப் பின்னணி, நகைச்சுவை இவையெல்லாவற்றையும் கடந்த மென்மையான நடிப்பு. இவற்றையெல்லாம் போதியளவில் எதிரியில் காணமுடிகிறது. விவேக் நகைச்சுவைக்காக மட்டுமில்லாமல், இணை கதாநாயகனாகவே வலம் வருகிறார். சதா, கனிகா ஆகிய இருவரும் தங்களது முன்னைய படங்களை விடவும் சரியாக செதுக்கப்பட்டிருக்கிறார்கள். டெல்லி கணேஷ், பெப்ஸி விஜயன், ஆர்.சுந்தரராஜன், மதன்பாபு, (நீ......ண்ட இடைவேளைக்குப் பிறகு) ரகுமான் இவர்களோடு கனல் கண்ணன், கே.எஸ்.ரவிக்குமார், மனோபாலா இப்படி பெரும் பட்டாளம் 'எதிரி'க்காக உழைத்திருக்கிறார்கள். 'கில்லி', 'காக்க காக்க', 'ஜே ஜே' ஆகிய திரைப்படங்களின் வெற்றிப் பாமியூலா ஆங்காங்கே வெளிப்படுகின்றது. கனல் கண்ணன் சண்டைக் காட்சி அமைப்பு கச்சிதமாயுள்ளது. பொய்யான தாதாவாக (பாட்டில் மணியாக) மாதவனும், கடத்தப்பட்ட நாயகியாக சதாவும், நாயகியின் தந்தை பெப்ஸி விஜயன் வில்லனாகவும், சின்னச் சின்ன திருத்தங்களோடு கதையோட்டம் அமைந்திருந்தாலும், இவற்றையெல்லாம் மறந்து வாய்விட்டுச் சிரிக்கும்படியாக நகைச்சுவை பூசி இயக்கியிருக்கும் கே.எஸ்.ரவிக்குமாரின் திரை அனுபவத்தைப் பாராட்ட வேண்டும். பாடல்கள் முணுமுணுக்கும்படியாக இல்லாதபோதும் கதையோட்டத்தில் யுவன்சங்கர்ராஜா நம் மனதில் நிற்கவில்லை. விவேக்கைப் பொறுத்தவரை அவரின் விவேகமான நகைச்சுவை இல்லாமை நம்மை ஏமாற்றியிருக்கிறது. 'எதிரி' சும்மா சும்மா.

# மீண்டும் ராஜாக்கள்

**ப**டமே இல்லாமல் வீட்டில் இருக்கும் பாரதிராஜாவுக்கு சற்றுத் தூரத்தில் மெல்லிய ஒளிக்கீற்று ஒன்று தெரிய ஆரம்பித்திருக்கிறது.

நீண்ட காலத்திற்கு முன்பு பாரதிராஜாவுக்கு ரூ. பத்து இலட்சம் அட்வான்ஸ் தந்துவிட்டு, அதைத் திரும்ப வாங்க முடியாமல் தவித்த தயாரிப்பாளர் தேனப்பன் இவரை வைத்துப் படம் தயாரிக்க முடிவு செய்திருக்கிறார். நாயகன் சத்யராஜ். படத்தின் பெயர் 'தகப்பன்சாமி'.

இந்தப் படத்தை இயக்க பாரதிராஜாவுக்கு தேனப்பன் விதித்திருக்கும் ஒரே நிபந்தனை, படத்திற்கு இசையமைப்பாளராக இளையராஜாதான் இருக்க வேண்டும் என்பது.

வெளிநாடு சென்றிருக்கும் நண்பர் இளையராஜா திரும்புவதற்காக நகம் கடித்தபடி காத்திருக்கிறார் பாரதிராஜா.

பழைய ராஜாக்கள் மீண்டும் இணைவார்களா என்பது இளையராஜா திரும்பி வந்தால்தான் தெரியும்.

# ஜெயம் ரவி ஜெயிப்பாரா?

**'ஜெ**யம்' என்ற பெரும் வெற்றிப்படத்தைத் தந்துவிட்டு கடந்த வருடம் ஒரு படத்திலும் கமிட் ஆகாமல் இருந்த ரவி இந்த வருடம் மூன்று படங்களை முடிக்கத் தீர்மானித்திருக்கிறார்.

முதல் படம் 'எம்.குமரன் சன் ஆஃப் மகாலட்சுமி'. இதை 'ஜெயம்' படத்தை இயக்கிய அவரது அண்ணன் ராஜாவே இயக்குகிறார்.

இரண்டாவது படம் பெயரிடப்படவில்லை. இதை இயக்குபவர் பத்திரிகையாளரான பாபு யோகேஸ்வரன்.

மூன்றாவது படம் 'மழை'. 'வர்ஷம்' என்ற தெலுங்குப் படத்தின் ரீமேக் இது. இதை இயக்கப் போகிறவர் 'திருமலை' படத்தை இயக்கிய ரமணா.

கொஞ்சம் ஆற அமர யோசித்து இந்த ஆண்டு தமிழ் சினிமா ஹீரோ ரேஸில் கலந்துகொள்வதென்று முடிவெடுத்துவிட்டார் 'ஜெயம்' ரவி.

# சென்டிமெண்ட்

**அ**ஜித்தின் 'ஜி' படம் ஆகஸ்ட் 15இல் திரைக்கு வருவதாக இருந்தது. இப்போது செப்டெம்பர் 5ஆம் திகதிக்குத் தள்ளிவைக்கப்பட்டிருக்கிறது.

காரணம், இயக்குநர் லிங்குசாமியின் சென்டிமெண்ட். இதே திகதியில்தான் 'ரன்' படத்தை ரிலீஸ் செய்தாராம்.



"அருள்" படப்பிடிப்பின் போது விக்ரம், இய
ஒளிப்பதிவாளர் - பிரியன், தயாரிப்பாளர் -

# ஒன்பது ரூபாய் கோமாளி

**'தெ**ன்றல்' படத்தை இயக்கிவந்த சமயத்தில் படத்தில் கவனம் செலுத்தாமல் இண்டஸ்ட்ரி ஆட்களைப் பற்றி சகட்டுமேனிக்கு கமெண்ட் அடிப்பதிலேயே கவனம் செலுத்திவந்த தங்கர்பச்சான், அடுத்து சத்யராஜ் நடிப்பில் 'ஒன்பது ரூபாய் நோட்டு' படத்துக்குப் பூஜை போட்டிருந்தார்.

ஆனால், இப்போது இந்தப் படம் டிராப் ஆகும் சூழல் ஏற்பட்டுள்ளது. இதற்கும் காரணம் இவர் பேச்சுதான். "எத்தனையோ படங்களில் நடித்திருந்தாலும் சத்யராஜ் முழுமையான நடிகராகத் தன்னை நிரூபிக்க முடியவில்லை. அதை எனது 'ஒன்பது ரூபாய் நோட்டு' படத்தில் நான்தான் நிரூபிக்க வேண்டியிருக்கிறது" என்கிற ரீதியில் தங்கர் பேச, அது சத்யராஜின் காதுக்குப் போக, அவர் டென்ஸனாகிவிட்டாராம். இதற்கு 'தங்கர் பகிரங்கமாக மன்னிப்புக் கேட்காவிட்டால் படத்தில் நடிப்பதில்லை' என்று முடிவெடுத்துவிட்டார் சத்யராஜ். ரோசம் பொத்துக்கொண்ட தங்கரோ இந்தக் கதையைக் கிடப்பில் போட்டுவிட்டு தானே ஹீரோவாக நடிக்கலாமா என்று யோசித்துவருகிறாராம். அந்தக் கதையின் பெயர் 'கோமாளி'.

படம் வந்தால் தெரியும் யார் கோமாளி என்று?!






படம்: காலமுள்ள காலம் வரை
ரெஜினா - பாலாஜி

தனது 'ஆட்டோகிராப்' படத்தை இந்தியில் இயக்குவதற்கு அட்வான்ஸ் வாங்கியிருந்த சேரன் அந்த அட்வான்ஸை திரும்பக் கொடுத்துவிட்டார்.

சிநேகா பார்வையற்ற பெண்ணாக நடிக்கும் இந்தத் திகில் படம் வழக்கமான தமிழ்ப் படங்களிலிருந்து முற்றிலும் வித்தியாசமாக இருக்கும் என்கிறார் ரமேஷ் கிருஷ்ணன். "அப்படி இருக்க வேண்டும் என்பதற்காகப் படத்தில் நிறைய உழைத்திருக்கிறோம். இதுவரை பேய் என்றாலே அது வெள்ளைப் புடவையில் வரும், தலைவிரி கோலமாக இருக்கும். அந்த ரெகுலர் விஷயங்களை உடைத்திருக்கிறேன்" என்கிறார். அது சரி, இல்லாத பேய்க்கு என்ன கலரில் புடவை கட்டினால்தான் என்ன?



## மினி சினி

'இயற்கை' படத்தை இயக்கிய ஜனா அடுத்து மாதவனை வைத்து படம் இயக்குகிறார். இந்தப் படத்தில் சேரியில் வளரும் அனாதை வாலிபனாக நடிக்கிறார் மாதவன்.

'அடிதடி' படம் ஓரளவுக்கு சுமாராக ஓடியதைத் தொடர்ந்து இப்போது சத்யராஜை வைத்து மூன்று புதிய படங்கள் பூஜை போடப்பட்டுள்ளன.

சுமார் ஒரு வருடமாக ஒருநாள் படப்பிடிப்புக் கூட இல்லாமல் வீட்டில் இருக்கிறார் முரளி.



படம்: நியூ
சூர்யா - சிம்ரன்

## காதோடு

செல்வராகவனின் '7ஜி ரெயின்போ காலனி' படத்தில் தனுஷ் ஒரு பாடலுக்கு ஆடியிருக்கிறார்.

சொந்தமாக ரெக்கார்டிங் ஸ்டுடியோ கட்டத் திட்டமிட்டுள்ளார் இசையமைப்பாளர் பரத்வாஜ்.

பட வாய்ப்பு எதுவும் இல்லாத 'புதுக்கோட்டையிலிருந்து சரவணன்' அபர்ணா ஜிம்னாஸ்டிக் பயிற்சிகள் செய்து வருகிறார்.

தான் நடித்த அனைத்துப் படங்களின் ஸ்கிரிப்டையும் கம்ப்யூட்டரில் பதிவு செய்து வைத்துள்ளார் மாதவன்.

'சுள்ளான்' படத்தில் சங்கவி ஒரு பாடலுக்கு ஆடுகிறார்.

லைலா தனது ஓட்டலைக் காலி செய்துவிட்டு மும்பைக்குப் பறந்துவிட்டார்.

பொழுது போகாத தியா எம்.ஏ. கரஸ்பாண்டன்ஸ் கோர்ஸில் சேர்ந்து படித்து வருகிறார்.

விஜி கோல்டன் பிச்சை உருவாக்கிய விஜி சந்தோசம் ரூ.50 கோடி செலவில் சுதம்பாக்கத்தில் ஒரு சினிமா ஸ்டுடியோ கட்டவிருக்கிறார்.

'அன்னியன்' படத்தில் விக்ரமுக்கு ரூ.3 கோடியும், டைரக்டர் ஷங்கருக்கு ரூ.3 கோடியும் சம்பளம் பேசியிருக்கிறார்கள்.

'அட்டகாசம்' படத்தில் ரமேஷ் கண்ணா நெல்லைத் தமிழ் பேசி நடித்திருக்கிறார்.

'ஷாக்' படத்தில் தியாகராஜன் போலீஸ் இன்ஸ்பெக்டர் வேடத்தில் நடித்துள்ளார்.

பிரபல ஜோதிடர் வித்வான் வே.லட்சுமணன் 'முருகா' என்ற பெயரில் ஒரு படம் தயாரிக்கிறார். கதாநாயகன் சரத்குமார்.

## அரிதாரத்தைப் பூசிக்கொள்ள ஆசை

ரிலீஸான அத்தனை சென்டர்களிலும் 60ஆவது நாளைத் தாண்டி ஓடிக்கொண்டிருக்கும் சேரனின் 'ஆட்டோகிராப்' இப்போதைய நிலைவரப்படி சுமார் 12 கோடியை வசூலிக்கும் என்கிறார்கள்.

விக்ரம், விஜய், அஜித் போன்ற ஸ்டார்களின் வெற்றிப் படமே 10 கோடியைத் தாண்டாத நிலையில் இந்த வசூல் பலரின் புருவத்தை உயர்த்தியுள்ளது.

இதனால் சேரன் எவ்வளவு இலாபம் அடைந்தார் என்பது ஒருபுறமிருக்க, அடுத்த ஹீரோ கம் டைரக்டரான எஸ்.ஜே. சூர்யா பலத்த இலாபமடைந்திருக்கிறார். 'ஆட்டோகிராப்' ரிலீஸுக்கு முன்பு வரை ஒரு ஏரியா கூட பிஸினஸ் ஆகியிராத எஸ்.கே.சூர்யாவின் 'நியூ' படம் இப்போது அனைத்து ஏரியாக்களிலும் ஏகப்பட்ட போட்டியுடன் பிஸினஸ் ஆகிவிட்டது.

இந்த இரு டைரக்டர்களையும் தொடர்ந்து இனி ஏகப்பட்ட டைரக்டர்கள் அரிதாரம் பூச ஆசைப்படுவார்கள் என்பதில் சந்தேகமில்லை.

## வில்லாதி வில்லன்

'காகித ஓடம் கடலலை மேலே போவது போலே இருவரும் போனோம்' என்கிற நிலைதான் இப்போது பாரதிராஜாவுக்கும் அவரது வாரிசு மனோஜுக்கும்.

கடைசியாக ரிலீஸான பாரதிராஜாவின் 'கண்களால் கைது செய்' படத்தால் தயாரிப்பாளர்களுக்கு மூன்று கோடி நட்டம் என்பதால் இண்டஸ்ட்ரி அவர் இருக்கும் திசையைக் கூடத் திரும்பிப் பார்க்க மறுக்கிறது. இன்னொரு பக்கம் சொந்தப் படம் எடுக்கலாம் என்று பார்த்தால் மகன் மனோஜின் நடிப்பு இம்சை தாங்க முடியவில்லை.

இதனால் சில வருடங்களுக்கு ஓய்வெடுக்கலாம் என்று முடிவெடுத்திருக்கிறார் பாரதிராஜா.


மனோஜோ வாழ்க்கையில் முதல் முறையாக சற்றுப் புத்திசாலித்தனமாக யோசித்து 'லெமன்' என்ற படத்தில் வில்லனாக நடிக்க ஒப்பந்தமாகியிருக்கிறார்.

"அவன் ஹீரோ இல்ல, வில்லன்தான்னு இப்பவாவது தெரிஞ்சிக்கிட்டானே" என்று கமெண்ட் அடிக்கிறாராம் மணிரத்னம் படத்தில் வில்லாதி வில்லனாக நடித்துவரும் பாரதிராஜா.

ரஜினி அவரது இயக்கத்தில் நடிக்கப் போகிறார்; இவரது இயக்கத்தில் நடிக்கப் போகிறார் என்று ஏகப்பட்ட யூகங்கள். ஆனால், தேர்தல் முடிவில் தனது செல்வாக்கைப் பார்த்த பிறகுதான் அடுத்து ஒரு படத்தில் நடிப்பதா, இத்தோடு முட்டையைக் கட்டுவதா என்று முடிவெடுப்பாராம் ரஜினி.

தமிழில் தன் தம்பி வயசிலிருக்கும் சிம்பு உட்பட அனைத்து ஹீரோக்களுடனும் ஜோடி சேர்ந்துவிட்ட ஜோதிகா, இனி தெலுங்கில் கவனம் செலுத்த முடிவு செய்திருக்கிறார். இதற்காக ஜோதிகாவும் அவரது மனேஜரும் முப்பதே நாட்களில் தெலுங்கில் மாட்டலாடுவது எப்படி என்று கற்று வருகிறார்கள்.

இதுவரை வந்த எத்தனையோ நடிப்பு வாய்ப்புகளைத் தட்டிக்கழித்த, தேவா இப்போது 'சொல்' என்ற படத்தில் நடிக்கச் சம்மதித்திருக்கிறார். காரணம் ரயில் பாடகன் என்ற கேரக்டர். இந்தக் கேரக்டருக்காக தனது சொந்தக் குரலிலேயே பாடவும் செய்கிறார் தேவா.



படம்: கஜேந்திரா
விஜயகாந்த் - லயா

## சிம்பு என்றால் வம்பு என்று நம்பு

'மன்மதன்' படத்தில் நைட்டியுடன் நடிக்கமாட்டேன் என்று ஷூட்டிங் ஸ்பொட்டை விட்டு வெளியேறிய ஜோதிகா இன்னும் அந்தப் படத்துக்குத் திரும்பியபாடில்லை.

விக்ரமின் 'அருள்' மே மாதம் ரிலீஸாவதால் முதலில் அதை முடித்துவிட்டு வருகிறேன் என்று சால்ஜாப்பு சொல்லி நழுவிய ஜோதிகா, இப்போது 'மன்மதனி'ல் எனக்கு நடிக்கவே விருப்பமில்லை. வேண்டுமானால் அட்வான்ஸைத் திருப்பித் தந்துவிடுகிறேன்" என்கிறாராம்.

படப்பிடிப்பில் சிம்பு மன்மதனாக நடந்து கொள்ளும் விதம் பிடிக்காததால்தான் ஜோதிகா இப்படி ஜகா வாங்குகிறார் என்பதைப் புரிந்துகொண்ட தயாரிப்பாளர் கிருஷ்ணகாந்த், இருவரையும் சமாதானம் செய்ய எவ்வளவோ முயன்றும் முடியாமல் போகவே பிரச்சினையை தயாரிப்பாளர் கவுன்சிலுக்குக் கொண்டுபோக முடிவு செய்திருக்கிறார்.

கவுன்சிலுக்குப் போவதற்குப் பதில் பேசாமல் சூர்யாவை ஒரு எட்டு பார்த்துவிட்டு வந்தால் எல்லாம் சுமுகமாக முடிந்துவிடப் போகிறது என்பதைத் தயாரிப்பாளருக்கு யாராவது எடுத்துச் சொல்லக் கூடாதா?

'பிதாமகன்' பிரச்சினைகளுக்குப் பிறகு ஒருவரை ஒருவர் சந்தித்துக்கொள்ளாமல் இருந்த விக்ரமும், இயக்குநர் பாலாவும் 'தினகரன்', விருதுவிழாவில் சந்தித்து கைகுலுக்கிக்கொண்டனர். அந்தச் சந்திப்பின்போது இந்தக் கூட்டணி மீண்டும் தொடரும் என்பதைப் புரிந்துகொள்ள முடிந்தது.



...நர் - ஹரி. அஜய்குமார்.

'மாறன்' படத்தில் அறிமுகமாகி 'தேறாமல்போன தனது மகனைத் தேற்றுவதற்காக சொந்தப்படம் தயாரிக்க முடிவு செய்திருக்கிறார், நடிகரும் இயக்குநருமான மணிவண்ணன்.



## காதல் தீ

எழுதிக் கொண்டிருந்த
இரவில்
மின்சாரம் நின்று போனது -
தீக்குச்சியை
பற்ற வைத்தேன் - அது
ஏற்றி வைத்தது என்
கடந்தகால
எண்ணங்களை.....

என் காதல் மிக மிக
மௌனமானது.
என் இதயத்தை தவிர - வேறு
யாருக்கும் தெரியாது.
ஒரு வண்ணத்துப்பூச்சியைப் பார்ப்பது
போல - உனைப் பார்த்து
பரவசப்பட்டுக் கொண்டிருப்பேன்.

வானை அதிர வைத்து - போகும்
விமானத்தை அண்ணாந்து பார்க்கும்
சிறுவனாய் நான் உனைப் பார்ப்பேன்.
மனதில் இனம்புரியாத உணர்வுகள்
தோன்றி மறையும்.
இப்படியே என் கல்லூரிக் கடைசி காலங்கள்
போயின.

காலம் என்னை உதைத்த உதையில்
நான் எங்கோ போய் விழுந்தேன்.
என் பெயருக்கு முன்னால் வர இருந்த
Dr. சொல்லையும் உன்னையும்
நான் இழந்தேன். - நீ
என்னை விட்டு வெகு தூரம் சென்றுவிட்டாய்.

ஆனால், எங்கே தீபத்தைப் பார்த்தாலும் -
என்
நெஞ்சிலும் உடலிலும் ஒரு தீ பரவும்
நீ என்னை ஆட்கொள்வாய்!....இதோ
இத்தனை வருடங்களாய் என் இதயத்தில்
இன்னொரு பெண்ணை நுழைய
அனுமதிக்காமல் இருப்பது இந்தத்
தீ தான்.

*கிஷோக், கொழும்பு.*

## தேர்தலால்.......

ஓட்டு போட்டோம்
உங்களுக்கு – இன்று
ஓடு போட வழியில்லை.
எங்கள் வீட்டுக்கு
பாடு பட்டோம்
உங்கள் வெற்றிக்கு
இன்று எங்கள்
பசி போக்க
எண்ணம் இல்லை.
உங்கள் ஆட்சிக்கு
போஸ்டர் ஒட்டினோம்.
கொடி பிடித்தோம்
உங்கள் வெற்றியால்
எமது எதிர்காலம்
வெற்றி என்று
இன்றுபோசனம் இன்றி
தொழில் இன்றி
தவிக்கின்றோம்
உயிர் வாழ்வதற்கு.

*க.பிரபா, அவிஸ்ஸாவெல்ல.*

## வைரஸ்

காதலின்
உச்சநிலை
பித்துப்பிடித்து
பிணமாய்
திரிவது!

அவள்
பெயரே
அமிர்தமாய்
அவள்
தங்குமிடமே
தாஜ்மஹாலாய்!

அவளின்
கண் ஜாடையில்
சில
கம்பியூட்டர்கள்
தோற்றுவிடும்!

காதல்
விடியலை
அழகுபடுத்தும்
விஷங்களை
தெளிவு படுத்தும்!

காதல்
மனிதனை
புனிதனாக்கும்
புனிதனை
புதை குழிக்குள்ளும்
தள்ளிவிடும்!

காதல்
உடலை
பிய்த்து
உயிரை
உருக்கும்
வைரஸ்!

முள்ளால்
கிழித்து
முகாரி இசைக்கின்றான்
ஒரு தலையில்
ஒருவன்!

காதலில்
மோட்சம்
அடைந்தோரைவிட
மோசம் போனவர்களே
அதிகம்!

*நஸீம்ரூமி, புத்தளம்.*





## உணர்வலை

ஏன் இந்தப் போராட்டம்?
எதற்கு இந்தப்
போராட்டம்?
விடைதேடுகின்றேன்
கிடைக்கவில்லை....
உரிமைகள் மறுக்கப்படும்
போதுதானே?
வன்முறைகள்
வெடிக்கின்றன.
உரிமைகள்
மறுக்கப்பட்டது
தவறா? இல்லை
மறுக்கப்பட்ட
உரிமைக்காகப்
போராடியது தவறா?
சிந்திக்கத்
தூண்டுகின்றதல்லவா!
உணர்வு.

யார் தோற்றார்கள்?
யார் வென்றார்கள்?
யார் இழந்தார்கள்?
யார் மீட்டார்கள்?
எவ்வளவு இழப்புக்கள்?
உங்கள் இழப்புக்களை
மாறி மாறிக்
கூறுகின்றீர்கள்.
எங்கள் இழப்புக்களை
யாரிடம் கூறுவது.

இறந்த உறவுகள்
மீண்டு வருமா?
இழந்த இளமைதான்
மீண்டு வருமா?
வாழ்வில் ஒருமுறை
பூக்கும்
இந்த இளமைப்பூவின்
நறுமணத்தினை நுகர
முடியாமல்
போய்விட்டதே!
பள்ளிப் பருவத்தினைப்
பூர்த்தி
செய்யாமலே என் இளமை
தொலைந்துவிட்டதே!

என்னால்...
பெறமுடியாது போன
இவ்வனைத்தையும் என்
பிள்ளை பெறவேண்டும்
என்பதற்காகவே
வாழ்கிறேன்
அகதி என்ற அந்தஸ்தில்
அந்நிய தேசத்தில்....!

*தி.சுதாகர்,*
*கொழும்புப்*
*பல்கலைக்கழகம்.*

## எல்லாமே கைவிட்டுப் போனபின்.....

எல்லாம் கைகூடி
வருவதாக
தவறாகக் கணக்கிட்டு,
ஏதோ ஓர் நிமிடம்.....
எதிர்பாராத
கணப்பொழுதில்,
எல்லாமே....கைவிட்டுப்
போன
கனமான மன உணர்வு,
எதற்காகப் பிறந்தோம் -
என்ற
வீடைகாணாக் கேள்வியது
வலுவாக எழும்பி
மெதுவாகத் தணிந்து
போகும் - வீடைகாண
முன்னரும் முயன்று:
தோற்றுப்போன
நினைவுகள்,
அதுவாகத் திரும்பும்.
வாழ்க்கையின்
அடுத்த கட்டத்தை
எப்படிக் கடப்பது?
அடுத்த கேள்வி -
மீண்டும்....
மெதுவாய் எழும்பும்.
அழுவதற்காக மனம்
வீரும்பும் - அதற்கு
கண்ணீர் கடன் தர
கண்கள்தான்
மறுக்கின்றன - மறுமுறை
கண்கள் கலங்குகின்றன
மனமோ,
அதை உணரும் நிலையில்
இல்லை.
தனி மனிதனைப் போலவே
அது அதற்கெனத்
தனியான எதிர்பார்ப்புகள்!
கலங்கிய நினைவுகள்
தெளிவதற்குக் கூட
அவகாசம்
கிடைப்பதில்லை.
அடுத்து அடுத்துக்
கலக்கங்கள்.
ஆதரவான அணைப்புகள்
ஆறுதலான வார்த்தைகள்,
ஆவலுடன் எதிர்பார்த்து
சோர்ந்து போய்விட்டது
மனது.
பாதியில் பிரிந்த
உறவுகள்,
பாதை மாறிய நட்புகள்,
எல்லாமே - இப்
பிரபஞ்சத்தில்
எங்கோ ஓர் புள்ளியாகத்
தெரிகிறது.
எப்போதோ பழகிய
முகங்களை,
இப்போதும்
கற்பனையில் நிறுத்தி,
தொடரும் கனவுகள்...
எல்லாமே கைவிட்டுப்
போனபின்
அழுவதா? சிரிப்பதா?
வேறுபாடு தெரியாததினால்
வேகுகின்றது உள்
மனது!!!

*இந்திலன் - அமெரிக்கா.*



# கவிதை எழுதுதலும் வாசித்தலும்

[பயிற்சிக் களம்]

## சிறப்புக் கவிதையும் – கவிஞரும்

புதியதோர் உலக காணு விருப்பத்தில் சமூக மாற்றச் செயற்பாட்டாளராகவுமிருக்கும் இளங்கவிஞர் அன்பாதவன்.

நிறுவப்பட்ட எல்லாவற்றிற்கும் எதிரான கோபம் – இவரது பார்வை கவி ஈர்ப்பு விசையாகக் காதலும் உண்டு.

இயந்திரமாய் இருக்க இயலாது எனினால்.

அறிவுச் சுவாலைக்கு நெய்யாய் அனுபவம் தேடுவோம் வா!

கற்றதை மாற்றிக் கற்றுக்கொள்வோம் வா! என்றழைப்பவர்.

நாம் தவறாகக் கற்றிருப்பவற்றை மாற்றிச் சரியாகக் கற்றுக் கொள்ளத் துணையாய் இருப்பவை தானே கவிதைகள்! அன்பாதவனின் நான்கு கவிதைகள் இங்கு அமைகின்றன.

### அமைப்பு

முதன் முதலில் நட்டது வாழைக்கன்று
அஞ்சில் பிழைத்தது நாலு

ஆடு தின்றும் துளிர்த்தன
கொய்யாவும் மாதுளையும்

அழுகியதென்று தூக்கிப்போட்ட தக்காளி
அங்கங்கே கிளம்பின
தமிழகச் சிறு பத்திரிகைகளாய்.

பழமலய் கொடுத்த குரோட்டன்ஸ் கூட்டம்
முதல் தரம் செத்தது
மீண்டும் கொடுத்தார்
ஏகப்பட்ட பிகுவிற்குப் பின்
மெல்ல மெல்லச் சிரித்தன.

அம்மா, மனைவி கைராசியாம்
வைத்தவை எல்லாம் பிழைத்தன.

முருங்கை, குரோட்டன்ஸ், வாழை
வெங்காயம், மிளகாய்
வேம்பு, புல், முள்ளென
விதம் விதமாய்ச் செடிகள்

இருக்கட்டுமே
வெற்றிடம் தோட்டமாகாது
விதைப்போம் ஏதாவது.

### தீவுகள்

கூட்டாளிகளோடு கழிந்தது
எனது பால்யம்.

கோலி பம்பரம் கில்லி
கூட்டாஞ்சோறு கல்பாரி
பட்டம் டொக்பாரி கண்ணாமூச்சி
எதிலும் உண்டு சேக்காளிகள்

பல்லாங்குழிக்கும் தாயத்துக்கும் கூட
இருவர் வேணும் "முடியாதவன் கூட
ஒப்புக்குச் சப்பாணியாவான்"

என் மகனோ கிரிக்கெட்
பார்க்கிறான் தனியே அமர்ந்து
விளம்பர இடைவேளையில்
"வீடியோ கேம்ஸ்"

புத்தக அலுமாரி மூடியே கிடக்க
செய்தித்தாள் 'கொமிக்ஸ்' களும்
கசங்காது.

கதை மறந்த தலைமுறைகள்
தொலைக்காட்சித் தொடர்களை
அலசும் குடும்பங்கள்.

மனிதரைத் தீவுகளாக்கிய
முட்டாள் பெட்டியின் கேலி எச்சில்
சத்தமாய்த் தெறிக்க

"மகனின் மகன்
எதில் என்ன விளையாடுவான்"
யோசிக்கனும்.

### பொன்விழா

எந்த அரசன் பெயராலோ
கட்டப்பட்ட கோயிலும் மண்டபமும்
சிதைந்து சிதில மடைந்தது
வரலாற்றுச் சோகம்.

மூளியான சிற்பங்கள்
விராட்டி மறைத்த கல்வெட்டுக்கள்
ஆதாரங்களை அழிக்கும் அலட்சியம்

கரிக் கோடுகளில்
'அம்புக்குறி நுழைந்த ஆட்டின்'
காம விகாரங்களின் பதிவாய்க்
கருங்கல் சுவர்கள்.

மிச்சமிருக்கும் மண்டபத் தரையில்
உபயோகித் தெறிந்த
உறைகள் குப்பிகள்
உதிர்ந்த பூக்கள் துண்டுபீடிகள்.

தரை கிடக்கும் கலைத் தூண்கள்
இருள் மங்க வெளிக்கிருக்கவும்
தேரை, பாம்பொதுங்கவுமாய்....

இத்தனைக்கும் அப்பாலொரு மூலையில்
முக்கோணச் செங்கலுக்குள்
யாரோ ஏற்றி வைத்த
அகல் விளக்கு
நம்பிக்கையின் கீற்றாய்...




### தேநீர்


தேநீர் மிகச் சுவையானது
உயர்தரம், நடுத்தரம், அதிமேன்மையென
சுவைகளில் வகைகளுண்டு.
அதிக இனிப்பு, மிதம், கடுங்கசப்பென்று
ருசிப்பதில் ரசனை உண்டு.
சுவையும் தரமும் சுமார் தானெனினும்
அதுாயத் தூளுக்கே இவ்வளவு ருசியா
வாய்த்ததை மட்டுமே அருந்துபவர்களே!
தரமும் சுவையும் நமக்கில்லையா!
ஆவி பறக்கும் கேள்வி.
தேநீர்க்கோப்பைக்குள்
புயல் எழும்பாத வரை
தேநீர் மிகச் சுவையானது.

*–அன்பாதவன்.*


## பேனா நண்பர் பகுதி – பேனா நண்பர் பகுதி – பேனா நண்பர் பகுதி




பெயர் :
ஐ.எம்.அன்சாரலி
வயது : 20
முகவரி : இல. 05,
விமான நிலையம்,
கட்டுநாயக்க.
பொழுதுபோக்கு:
பத்திரிகை, வானொலி.



பெயர் : எல்.உமாகரன்
வயது : 24
முகவரி : A.D. P.O Box
No.5536,Caparol,Doha,
Qutar.
பொழுதுபோக்கு:
பத்திரிகை, ரீவி,
பேனா நட்பு.



பெயர் :எஸ்.சிவகுமார்
வயது : –
முகவரி : இல 708,
5ஆம் யூனிற்,
வாரிக்குட்டியூர்,
வவுனியா.
பொழுதுபோக்கு :
தினமுரசு பார்த்தல்,
ரீவி, பேனா நட்பு.



பெயர் : ச. மதிநேசன்
வயது : –
முகவரி : P.O. Box No.
6513,
Doha, Qutar.
பொழுதுபோக்கு :
வானொலி, பத்திரிகை,
ரீவி.

# நீங்கள் அருந்தலாமா இதை?

தாங்க முடியாத வெய்யில் மண்டையைப் பிளக்கிறது. நாக்கு வறண்டுவிட்டது. 'ஜில்'லென்று குளிர்ச்சியான பானம் அருந்துவதற்கு மனது துடிக்கிறது. சட்டென்று உங்கள் ஞாபகத்துக்கு வருவது பெப்ஸியும், கொக்கோ கோலாவும்தானே?


பெப்ஸி, கொக்கோ கோலா மட்டுமல்ல; தம்ஸ் அப், செவன் அப், மிரிண்டா, ஃபன்ரா, லிம்கா மற்றும் புதிய வரவான டயட் பெப்ஸி என்று இந்தப் பானங்களின் வரிசை மிகவும் நீளமானது. இதில் துரதிர்ஷ்டம் என்னவெனில், இந்த நீண்ட வரிசையைப் போலவே இந்தப் பானங்களால் நமக்கு ஏற்படும் தீங்குகளின் வரிசையும் மிக நீளமானது என்பதுதான். ஆனால், இந்தப் பாதிப்புகள் எவையும் நமக்குத் தெரிவதில்லை; தெரிய வராதவாறு மறைக்கப்பட்டுவிடுகின்றன. அசாருதீனும் டெண்டுல்கரும் விளையாடும் நேரம் தவிர மீதி நேரங்களில் பெப்ஸி அல்லது கோலா பாட்டில்களுடன் கமெராவின் முன்னால் ஆஜராகி இரசிகர்களை பெப்ஸி - அல்லது கோலா குடிக்கச் சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். மக்களுக்கு நிஜத்தைச் சொல்ல வேண்டிய தொடர்பு சாதனங்கள் மென்பானங்களின் சுயரூபத்தை வெளிப்படுத்துவதில் மௌனிகளாகவே இருந்துவிடுகின்றன.

செயற்கையாகத் தயாரிக்கப்பட்ட இரசாயன அமிலங்களே இந்த மென்பானங்களில் புத்துணர்வு தரும் சுவையூட்டிகளாகச் சேர்க்கப்படுகின்றன. இனிப்புச் சுவையை நிலைப்படுத்துவதிலும் இந்த அமிலங்கள் பயன்படுகின்றன. பொதுவாக மென்பானங்களில் சிட்ரிக் அமிலம், பாஸ்பரிக் அமிலம், சில சமயங்களில் மாலிக் அல்லது தாத்தாரிக் அமிலங்கள் கூடச் சேர்க்கப்படுகின்றன. இந்தச் செயற்கை அமிலங்கள் எல்லாமே உடலைப் பாதிக்கக் கூடிய தன்மை வாய்ந்தவை.

அந்த அமிலங்கள் பற்களின் பாதுகாப்புப் பூச்சான எனாமலை அரிக்கக் கூடிய தன்மையைக் கொண்டிருக்கின்றன. மென்பானங்கள் குடித்து ஒரு மணி நேரம் வரை இந்த அரிப்பு நீடிக்கலாம். (குடித்தவுடன் பற்கள் கூசுகின்ற சங்கதி இதுதான்) மென்பானங்களின் மூலம் உடலில் சேரும் பாஸ்பரிக் அமிலம் கடைசியில் சிறுநீருடன் வெளியேறும்போது தனியாக வெளியேறுவதில்லை; எலும்புகளிலும் பற்களிலும் இருக்கும் கல்சியத்தையும் பெயர்த்துத் தன்னுடன் சேர்த்துக் கொண்டு போய்விடுகிறது. கல்சியம் போதாத நிலையில் எலும்புகள் பலம் குன்றி கடைசியில் முறியும் நிலைக்கே போய்விடுகின்றன.

மென்பானங்கள் எல்லாவற்றிலுமே சீனி சேர்க்கப்படுகின்றது. உதாரணத்துக்கு 325 மில்லி லீற்றர் பெப்ஸியில் ஐந்தரைத் தேக்கரண்டி சீனி சேர்க்கப்படுகிறது. உலக சுகாதார நிறுவனம் (WHO) நாள் ஒன்றுக்கு ஒருவர் உட்கொள்ள வேண்டிய சீனியின் அளவு 8 தொடங்கி 11 தேக்கரண்டியளவு என நிர்ணயம் செய்து வைத்திருக்கிறது. ஒரு நாளில் நாம் அருந்தும் பால், தேநீர் மூலம் நமது உடலில் சேரும் சீனியின் அளவையும் கணக்கிட்டால் நிர்ணயித்த அளவை விட நாம் சாப்பிடும் சீனியின் அளவு பன்மடங்கு அதிகம் என்பது தெரியவரும்.

சீனி அதிக அளவு உடலில் சேருவதை சீனிதானே என்று இனிப்பான செய்தியாக எடுத்துக்கொள்ள முடியாது.



ஊட்டச்சத்து ஆய்வாளரான விஞ்ஞானி மேஜான் யாட்கின் சீனியை 'வெள்ளை நஞ்சு' என்று வர்ணித்திருக்கிறார். சீனியானது, பற்களில் பக்டீரியா கிருமிகள் பெருக வாய்ப்பு அளிப்பதுடன் இதய நோய், தோல் வியாதி போன்றவற்றையும் ஏற்படுத்தும் என நிரூபிக்கப்பட்டுள்ளது.

இயற்கைச் சீனியின் சேதாரம் இவ்வளவு என்றால் சில வகை பானங்களில் சேர்க்கப்படும் செயற்கைச் சீனிகளும் தம் பங்குக்கும் தொல்லைகளைத் தருகின்றன. குறைந்த கலோரியைக் கொண்ட டயற் (diet) குளிர்பானங்களில் செயற்கை இனிப்பான அஸ்பாடேம் (Aspae tame), எசல்பேம் (acesulfame) சக்கரின் (Saccharine) போன்றவை பயன்படுத்தப்படுகின்றன. மிகப் பரவலாகப் பயன்படுத்தப்படும் அஸ்பாடேம் சீனியை விட 200 மடங்கு அதிகமான இனிப்பைக் கொண்டதாகும். இவை தலைவலி, ஞாபக மறதி, வயிற்றுப் போக்கு, பார்வை மங்கல், குருடு போன்றவற்றை ஏற்படுத்துவது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

வாஷிங்டன் பல்கலைக்கழகப் பேராசிரியர் ஜான் ஓன்லி மிருகங்களின் மீது நடத்திய ஆய்வுகளில் இருந்து அஸ்பாடேம் மூளை புற்றுநோயை ஏற்படுத்தக் கூடிய வாய்ப்புக்களைக் கொண்டிருப்பதாகக் குறிப்பிடுகிறார்.

கோப்பி, தேநீர் போன்றவற்றில் காஃபின் (Caffein) எனும் வேதிப்பொருள் இருப்பது பலரும் அறிந்த ஒன்று. ஆனால், கோலா பானத்தில் சுவையை அதிகரிப்பதற்காக காஃபின் பயன்படுத்துவது அதிகம் வெளியில் தெரியாத விஷயம். காஃபின், மத்திய நரம்புகளை மிகையாகத் தூண்டிவிடுகிறது. அதிகமான காஃபின் தூக்கமின்மை, எரிச்சல், இருதயத் துடிப்பு அதிகரிப்பு போன்றவற்றுக்கு வழிகோலிவிடுகிறது.

மென்பானங்களில் சேர்க்கப்பட்டிருக்கும் நிறமூட்டிகள் எவை என்பது பற்றி பாட்டில்களில் குறிப்பிடப்படுவதில்லை. ஆனால், பெரும்பாலான சாயங்கள் புற்றுநோய்க்குக் காரணமாய் உள்ள என்பதே உண்மை. தார்ட்ராசின் (Tartrazine) எனப்படும் ஆரஞ்சு நிற சாயம் தோலில் அரிப்பு, எரிச்சல் போன்றவற்றை ஏற்படுத்துவதோடு புற்றுநோய்க்கும் காரணமாகத் திகழ்வதாகக் கருதி இச் சாயம் நோர்வேயில் தடைசெய்யப்பட்டிருக்கிறது. கார்மோசின் (carmoisine) எனப்படும் சிவப்பு வர்ணம் உணவை நஞ்சடையச் செய்வதுடன் புற்றுநோயையும் ஏற்படுத்தலாம் என்று அமெரிக்காவிலும் கனடாவிலும் தடைசெய்யப்பட்டிருக்கிறது.

சிங்கப்பூர் தனது பத்து ஆண்டு சுகாதார இயக்கத்தின் ஒரு அங்கமாக கொக்கோ கோலா, பெப்ஸி போன்றவற்றுடன் சீனி அதிகம் கொண்ட பல குளிர் பானங்களை 1972இல் இருந்து கல்வி நிறுவனங்களில் விற்பதற்குத் தடைசெய்திருக்கிறது.

மிகச் சமீபத்தில் பிரான்ஸில் கொக்கோ கோலா குடித்த நூற்றுக்கணக்கானோருக்கு காய்ச்சல், வாந்தி, தலைவலி ஏற்பட்டதால், பிரான்ஸ் தனது நாட்டில் கொக்கோ கோலாவின் விற்பனைக்குத் தடை விதித்திருக்கிறது. ஐரோப்பாவில் தடை விதிக்கப்படும் நாலாவது நாடு பிரான்ஸ் என்பது குறிப்பிடத் தக்கதாகும்.


இவ்வளவு ஆபத்துக்களையும் தன்னில் கரைத்துக்கொண்டு வரும் மென்பானங்களை இனியாவது தவிர்க்கலாம் அல்லவா?




## உங்கள் பணியில் நிறைவு கிடைக்கவில்லையா?

உங்களுக்குப் பிடித்த தொழில் அல்லது பணி எது என்று கண்டுபிடிக்க வேண்டுமா? தொடர்ந்து படிக்கவும்...

*உங்கள் வாழ்வின் ஒரு பகுதி :-* பணியாற்றுவது உங்கள் வாழ்வின் ஒரு பகுதியாக மட்டுமே இருக்க வேண்டும். இதுவே உங்கள் வாழ்க்கையாக மாறி விடக் கூடாது. நீங்கள் எந்த வேலையைச்



செய்ய விரும்புகிறீர்கள் என்று யோசிப்பதை விட, உங்கள் வாழ்வு எவ்வாறு அமைய வேண்டும் என்பதை யோசியுங்கள்.

*விருப்பங்களுக்கு முதன்மை :-* "என்னால் இதைச் செய்ய முடியுமா?" என்று யோசிப்பவர்களே அதிகம். உங்களுக்கு இருக்கும் திறமைகளால் கிடைக்கும் வேலை உங்களுக்குப் பிடித்தமானதா என்பதை யோசிக்கவும். இல்லை என்றால் உங்களுக்கு விருப்பமான வேலையைச் செய்ய தேவையான திறமைகளை வளர்த்துக்கொள்ளவும்.

குழந்தைப் பருவம் :- குழந்தையாக இருந்தபோது உங்களுக்கு எதில் ஆர்வம் அதிகம் என்பதை சிந்தித்துப் பாருங்கள். உங்களுக்குப் பிடித்தவற்றின் பட்டியலைப் போட்டு, ஒவ்வொன்றும் எதற்காகப் பிடித்தது என்பதையும் சிந்தியுங்கள். பல நேரங்களில் உங்கள் குழந்தைப் பருவம் உங்களுக்கு வழிகாட்டியாக அமையலாம்.

*விரிவான கண்ணோட்டம் :-* உங்கள் விருப்பம் என்னவென்று தெரிய வில்லையா? உங்கள் கண்ணோட்டத்தை விரிவாக்கவும். பொதுவாக ஈடுபடும் பொழுதுபோக்கை விட்டு, மற்றவற்றில் ஈடுபடவும். இசையைப் பற்றி ஒன்றும் தெரியாதா? கவலை வேண்டாம். இசையைக் கற்க ஆரம்பிக்கலாமே! ஒருவேளை அதுவே நீங்கள் ஈடுபட விரும்பும் தொழிலாக இருக்கலாம்!!

*பணத்தின் அவசியம் :-* "எனக்குப் பிடித்த தொழிலில் பணம் அதிகமாகச் சம்பாதிக்க முடியாது, என்ன செய்யலாம்?" என்று பலர் கேட்பது உண்டு. இதற்கு முக்கிய காரணம் உங்கள் மனப்பான்மையாக இருக்கக் கூடும். விருப்பமான பணி என்றாலும் தேவையான அளவு பணம் சம்பாதிப்பது முக்கியம். உங்கள் தொழிலை வேறு எந்த விதத்தில் மாற்றினால் அதிகமாகச் சம்பாதிக்க முடியும் என்பதை யோசிக்கவும். ஒரே அலுவலகத்தில் பணியாற்றாமல் பல அலுவலகங்களில் பணியாற்றும் வாய்ப்பு உள்ளதா என்றும் சிந்தியுங்கள்.

### வளர்ந்தால் மட்டும் போதுமா?

"பெரியவளானா நீ என்ன செய்யப் போறே?"

"உனக்கு டாக்டராக விருப்பமா? லாயராக விருப்பமா?"

நம் குழந்தைப் பருவத்தில் இது போன்ற கேள்விகளைக் கேட்டிருப்போம். நாம் வளர்ந்துவிட்டோம் என்பதால் மட்டுமே நாம் செய்ய விரும்புவதை தேர்ந்தெடுத்துவிட்டோம் என்பதில்லை. பலருக்கு இந்தக் குழப்பம் வளர்ந்த பிறகும் இருந்துகொண்டுதான் இருக்கிறது. சம்பாதிக்க வேண்டும் என்ற காரணத்தால் பிடிக்காத வேலையில் இருப்பவர்கள் எத்தனை பேர்!

எம்.பி.ஏ. படித்துவிட்டு, ஒரு சர்வதேச நிறுவனத்தில் பணியாற்றியவர் ரேகா. நல்ல ஊதியம் வாங்கியும் அவருக்கு முழுமையான நிறைவு கிடைக்கவில்லை. குழந்தைப் பருவத்தில் தன் பொம்மைகளை அழகாக அடுக்குவதில் இவருக்கு ஆர்வம் அதிகம். இதே ஆர்வம், அவர் தோழியின் கடையில் உள்ள பொருட்களை, மாற்றி அடுக்கத் தூண்டியது. உடனே விற்பனையும் அதிகரித்ததால், தன் வேலையை விட்டு ஒரு கடையில், குறைந்த வருவாயில் 'விண்டோ டிரஸ்ஸர்' பணியில் சேர்ந்தார். இப்போது அவர் பொருட்களை எப்படி அடுக்கினால் விற்பனை கூடும் என்ற ஆலோசனையை பல கடைகளுக்கு வழங்குகிறார். தேவைக்கு அதிகமாகவே சம்பாதிக்கிறார்.

## சமைப்போம் சுவைப்போம்

தொகுத்துத் தருவது : ஷோபா

### சொக்லேட் ஐஸ்கிறீம்

**தேவையான பொருட்கள் :-**

| | |
|---|---|
| ரின் பால் | - 1 ரின் |
| தண்ணீர் | - 2 கப் |
| பால்மா | - 2 மே.க |
| சீனி | - 2 மே.க |
| ஜெலற்றின் | - 2 தே.க |
| கொக்கோப் பவுடர் | - 2 தே.க |
| இளஞ்சூடான நீர் | - 1 கப் |
| வனிலா | - தேவையான அளவு |

**செய்முறை :-**

ரின் பால், 1 1/2 கப் தண்ணீர், சீனி இவற்றைக் கரைக்கவும்.

பால்மா, கொக்கோ பவுடர் இவற்றை 1/2 கப் நீரில் கரைத்து வடித்துப் பாலுடன் கலந்து சூடாக்கவும். (கொதிக்கத் தேவையில்லை)

பின் ஜெலற்றினை 1/2 கப் நீரில் கரைத்துப் பாலுடன் கலந்து வனிலாவையும் சேர்த்துக் கலவை ஆறியதும் நன்றாக அடித்துக் குளிரூட்டியில் வைக்கவும்.

மீண்டும் இரண்டு அல்லது மூன்று தடவைகள் மூன்று மணித்தியாலங்களுக்கு ஒருமுறை வெளியில் எடுத்து அடிகருவியினால் நன்கு அடித்து திரும்பவும் குளிரூட்டவும். விரும்பினால் முந்திரிகை வற்றல் சேர்த்துப் பரிமாறவும்.

# நலமாக வாழ்வோம்

## வீராசனம்

**வீரா - ஒரு வீரனுக்கு வேண்டிய வீரத்தை வளர்க்கும் ஆசனமாதலால் அந்தப் பெயர்.**

**இந்த ஆசனம் செய்வதற்கு சிறிது கடினமாக இருந்தாலும் இதனால் ஏற்படும் பயன்கள் அதிகம். இவ்வாசனம் வஜ்ஜிராசனத்தின் முதிர்ச்சி நிலை ஆசனமாகும்.**

**இவ்வாசனத்திலிருந்து சின் முத்திரையிட்டு தியானம் மற்றும் பிராணாயாமம் ஆகியவற்றை தினம் பழகி வந்தால் மனம் எளிதில் ஒருமைப்படும். தட்டைப் பாதத்தை சரி செய்கிறது.**

**பலன்கள் :**

**1. முதுகுத் தண்டுக் கோளாறை சரி செய்கிறது.**
**2. நுரையீரல் பலம் பெறுகிறது.**
**3. அஜீரணத்தைப் போக்குகிறது.**
**4. தொடையில் பற்றியுள்ள அதிக தசையைக் குறைக்கிறது.**



**5. குதிக்கால் வலி, பாதங்களில் ஆணி வளர்தல் ஆகியவற்றைப் போக்குகிறது.**
**6. வயிற்று நோய்கள் குணமாகும்.**
**7. கழுத்து வலிக்கு அதிக பலனைத் தரும்.**

**செய்முறை :**

**1. வஜ்ஜிராசனத்தில் அமர்ந்து பாதங்களைப் பிரித்து புட்டத்தை தரையில் வைத்து நிமிர்ந்து உட்காரவும்.**
**2. கைகளை பக்கவாட்டில் கொண்டுவந்து தலைக்கு மேல் நமஸ்காரம் செய்யவும். பின் விரல்களை கோர்த்து உள்ளங்கையை வெளியே திருப்பி வைத்து கைமுட்டியை வளைக்காது நீட்டவும்.**
**3. நிமிர்ந்து அமர்ந்து 50 எண்ணிக்கை இருக்கவும்.**
**4. கையைத் திருப்பி விரல்களைப் பிரித்து பக்கவாட்டில் கொண்டுவரவும்.**
**5. மறுபடியும் முன்பு போல் செய்து 50 எண்ணிக்கை இருக்கவும். இரண்டு முறை செய்தால் போதும்.**

**குறிப்பு :**

**1. கால் பாதங்களை அகட்டி உட்கார முடியாதவர்கள் வஜ்ஜிராசனத்தில் அமர்ந்து பழகவும்.**

# துரோகம் துரத்துகிறது!



**அங்கம் 1**

ராத்திரி வானம் கூடாரம் போல் கடலை மூடியிருந்தது! எங்கும் கரிதான இருட்டு! கரையும் தெரியவில்லை; நீரும் தெரியவில்லை.

175 அடி நீளம், 200 டன் டெட் வெய்ட், டிராலர் ப்ரீன்கோமலீ அடியும் முனையுமாய் லாலி ஆடியது. அதன் எல்லா விளக்குகளும் அணைக்கப்பட்டிருந்தன.

சிங்களவர் அதன் ஏணி மேலே ஏறி வீல் ஹவுசிற்கு வந்தார். தொந்திமேல் சராங் மடிப்பு! இடுப்பைக் கட்டிக்கொண்டு ஓர் அழகான சிங்களவக் குட்டி! அவருடைய போனஸ் இணைப்பு!

"இடம் சரிதானா" என்று சிங்களவர் கேட்க, காப்டன் சார்ட் ரூமிற்கு ஓடினார். சார்ட் மேப்பையும், கோஸ்டல் சார்ட்டையும் பார்த்தார். எக்கோ ஸவுண்டரில் ஆழம் பார்த்தார். எல்லாம் இதுதான் இடம் என்று சாதித்தன.

ஓடிவந்து சொன்னார்.

"பசங்கள் தூங்கறாங்களா?" என்று சிங்களவர் சீறினார்.

கரையிலிருந்து சிக்னல் எதுவும் வரவில்லை. அதுதான் கோபம்!

காப்டனைப் பார்த்தார். "நாமே சிக்னல் கொடுக்கலாமா?" என்றார்.

வயதான காப்டன் நிசப்பதமாக இருந்தார். 'உங்கள் இஷ்டம்' என்று கண் பேசியது.


சிக்னல் போடும்படி உடன் உத்தரவு பிறந்தது!

டிராலரின் போர்ட் ஸைட் பக்கமாக ஒரு விளக்கு திரும்பியது. பச்சைக் கண்ணைத் திறந்து மூடியது.

இரண்டு நிமிடமான யுகங்கள்!

பிறகு இரண்டு மைல் தொலைவிலுள்ள கரையிலிருந்து ஒரு பச்சை வட்டம் ஜோராகப் பூத்தது. சந்தோஷத்தில் சிங்களவர், சிங்களவியை இறுக்கினார். அவள் மார்புகள் சோளிக்கு மேல் தளும்பின.

டிராலரின் பச்சையும், கரைப் பச்சையும் கண்ணடித்துப் பேசின. பிறகு



மௌனமாயின.

கரையிலிருந்து கட்டுமரங்கள் புறப்பட்டுவர ஒரு மணி நேரம் ஆகியது. நிர்வாண உடம்புகளுடன் (கோவணம் நீங்கல்) வெடவெடக்க, டிராலர் அருகில் வந்து எல்லோரும் நர்த்தனமாடினார்கள்.

ஓர் ஆள், தொங்கும் ஏணியில் ஏறி டிராலருக்குள் வந்தான்.

சிங்களவர் டெர்ரிக், முன்னால் பிஸ்டலுடன் நின்றார்.

"காசி வரல்லையா?" என்று கோபமாகக் கேட்டார்.

"அவருக்குக் குளிர் காய்ச்சல்! அதான் இவ்வளவு நேரம் ஆயிடுச்சு!"

"நான் உங்களை எப்படி நம்புவேன்?" என்றார் கடுரமாக.

"நம்புங்க! காசிக்கு ஜுரம் தீப்பறக்குது. கட்டுமரத்தில் ஏத்திப் பார்த்தோம். உட்கார முடியல்லே. குளிர்லே கத்தறாரு! இறக்கிட்டோம். எசமான் வேணுமின்னா எங்களோட ஆள் அனுப்பி கரையிலே பார்க்கலாம். கடல் மாரி மேலே ஆணை! பொய் சொல்ல மாட்டேங்க!"

சிங்களவர் நம்பவில்லை.

"நீங்க ஏன் முதல்லே சிக்னல் போடலே! 12.35க்கு மேலே போடணும்னு தெரியாதா?"

"தெரியும்! தெரியும்!" என்று தத்தளித்தான் ஆள். "ரோட்டிலே இரண்டு லாரி போச்சுங்க! ஆட்களா இருந்தாங்க! பொலிஸ்னு நினைச்சோம். ஏதாச்சியும் ஆயிடக் கூடாதேன்னு ரொம்ப நாழி சிக்னல் காட்டலை!"

சிங்களவர் இன்னும் யோசித்தார். அந்தக் குட்டி இன்னும் அரித்தாள். அவர் மனசில் பெரிய அளவு கரைசல் ஏற்பட்டுக் கரைகள் சரிந்துகொண்டிருந்தன. "உம்" என்று உத்தரவு இட்டார்.

பிறகு டிராலரின் ஹாச் திறந்தது.

ஹாங்காங், சிங்கப்பூர் சரக்குகள் பிளாஸ்டிக் மூட்டைகளில் உள்ளே செதில் செதிளாகக் கிடந்தன.

கட்டுமர ஆட்கள் கறுப்பு நிழல்களாக மேலே வந்தார்கள். சிறிது நேரத்தில் கார்ட்டுன் படம் போல் விறுவிறுத்தார்கள்.

காஸட்கள், வாட்ச்சுகள், ப்ளேட்கள், பாலியிஸ்டர் துணிகள் அடங்கிய மூட்டைகள் வேகமாக இடம் மாறின.

ஒரு மணி நேரத்தில் முப்பது கட்டுமரங்களும் முப்பது புள்ளிகளாக இருட்டுள் மறைந்துவிட்டன.

டிராலர் வட்டமடித்துக்கொண்டு அந்தச் சிங்களவப் பெண்ணின் சிரிப்போடு போய்விட்டது.

கரையில் கற்றாழையின் பின்னால் உட்கார்ந்திருந்த அவனுக்கு 'விக்' 'விக்' என்று அடித்துக்கொண்டிருந்தது.

கடந்த ஐந்து மணி நேரமாக இருட்டுடன் ஓட்டிக்கொண்டிருந்தான்.

எல்லாம் சரியாக நடக்கணுமே என்று பெரிய கவலை.

தூக்கம் 'கிலுக் கிலுக்' கென்று இழுத்தது.

இரவு அவளுடன் இல்லாதது முதல் தடவை!

அவளைப் பற்றித்தான் சதா நினைவு! கட்டிலில் கிடக்கும் அவளது கதுப்பான உடலை மனத்திலே திறந்து பார்க்க முயன்றபோது -

"குரு" என்று குரல் வந்தது.

ஸ்பிரிங் தள்ளியது போல் எழுந்தான்.

"எல்லாம் முடிஞ்சுபோச்சு குரு" என்றது குரல்!

"சரக்கு கிடைச்சுதா?"

"கிடைச்சுது!"

"அப்பா! எனக்குப் பெரிய நிம்மதி!"

"நானும் பயந்துட்டேன்! கையிலே பிஸ்டலைத் தூக்கிட்டான். நம்ம கதி அதோகதின்னு நினைச்சேன். அப்புறம் 'ம்'னு சொன்னான் பாரு!... போன உயிர் வந்துடுத்து."

"எவ்வளவு இருக்கும்?"

"லட்சத்துக்குக் குறையாது! உனக்கு வேட்டைதான். கவர்மெண்டிலே சொல்லி ரிவார்ட் வாங்கித் தரேன். அப்புறம் நாம்ப சொன்னபடி பங்கு வேறே போட்டுக்கறோம், அந்த வரும்படியும் உண்டு."

"சந்தோஷம் ஸார்!... ஒரு காரியம்! காசிக்கு விஷயம் தெரிஞ்சா என்னைக் கொத்திடுவான், கொத்தி!"

"பயப்படாதே! வீட்டைச் சுற்றிப் பாரா போட்டிருக்கேன். ராத்திரிக்குள்ளே ஆப்டுடுவான்."

"இதுவரைக்கும் கிடைக்கல்லியா, ஸார்?"

"கிடைக்கலே! கிடைச்சுடுவான்! நீ பயப்பட வேணாம்."

"நாட்டிலே நடக்கிற நடப்பு தெரியுமில்லே."

"எமர்ஜென்ஸி!"

"ஆம்மாம்! யார் ஆப்டாலும் உள்ளே தள்ளிடலாம்! நாளை காலை ஸ்டேஷனுக்குப் போகமாட்டேன். வீட்டுப் பக்கம் வந்துடு."

"எஸ் ஸார்."

இன்ஸ்பெக்டர் திரும்பிப் போனார்.

அவன் புறப்பட்டான்.

வீட்டுக் கதவைத் தட்டும்போது ஐந்தரை.

யாரும் திறக்கவில்லை.

கமலம்!

கதவை இரண்டாம் முறை!

பாதங்கள் தரையில் பாவுகிற சத்தம். "யாரு" என்று அவள் குரல்!

"நான்தான்."

"யாரு!"

"நான்தான்! நான்தான்! நான்தான்!"

கதவு 'லொட்'டென்றது.

கமலம் வெளுத்திருந்தாள். அவனைத் தூக்கப் பார்வையாகப் பார்த்தாள்.

"எங்கே போயிருந்தீங்க?"

"பெரிய வேட்டை போ! ராத்திரி முழிச்சதெல்லாம் தாளும்! 25 கிடைக்கும் போ!"

*எழுதுவது*
**புஷ்பா தங்கதுரை**

அவளுக்குத் தெரியும்! அப்படி ஒரு காரணம் இல்லாவிட்டால் ஒரு ராத்திரி அவளை மறந்திருக்க மாட்டான் - "இருபத்தைந்து?"

"ஆமாம், இருபத்தைந்து! பின்னாலே மூணு சைபர்!"

"நீங்க செய்யறதெல்லாம் எனக்குப் பயமாயிருக்கு!"

"ஒண்ணும் பயப்படாதே! பொலிஸ் நம்ப கையிலே."


**துரோகம் துரத்தும்......**

## அழகிய தொடக்கம்




கட்டை கட்டையா சப்பை மூக்குமா இருந்தாத்தான் சீனர் என்று நினைச்சுக்கொண்டிருந்தா நினைப்பை மாத்திடுங்க. படத்தில் ஆறு அடிக்கும் மேலான உயரமா அப்பிடி நடந்து வாறதும் சீன யுவதிகள்தான். இந்தக் கவர்ச்சி நடை போட்டிகளுக்காக அல்ல. நடக்கப்போகும் மோட்டார் போட்டிக்கான நடை, மோட்டார் சைக்கிள்களுக்கான உலக தாக்குப்பிடிக்கும் திறன் போட்டியின் அடுத்த கட்டம் சீனாவின் ஜூ ஹாய் நகரில் (ஞாயிற்றுக்கிழமை) தொடங்குமுன், போட்டிக்கு அழகூட்டும் சீன அழகிகள்.

## தொப்பி அழகி



அமெரிக்காவின் கென்டக்கி மாகாணத்தில் லூயிஸ்வில்லே என்ற நகரம் உள்ளது. இங்கு டெர்பி என்ற உள்ளூர் திருவிழா மிகவும் பிரசித்தி பெற்றது ஆகும். ஆண்டுதோறும் நடைபெறும் இந்த விழாவில் அமெரிக்கா முழுவதும் இருந்து பல்லாயிரக்கணக்கான இரசிகர்கள் வந்து கலந்துகொள்கின்றனர். 02.05.2004 அன்று இந்த விழா லூயிஸ்வில்லே நகரில் கொண்டாடப்பட்டது. இதில் அமெரிக்காவின் முன்னணி நட்சத்திரங்கள் பலர் கலந்துகொண்டனர். விழாவுக்கு அமெரிக்காவின் புகழ்பெற்ற பாப் பாடகி ஜெசிகா சிம்சன் படுகவர்ச்சியான உடையில், பழங்கால ஸ்டைலில் தொப்பி அணிந்து வந்திருந்தார். அம்மணியுடன் அவரது கணவர் நிக்கும் வந்திருந்தார். கணவருடன் வந்தபோதே இப்படிக் கவர்ச்சி என்றால், அவர் வராமல் இருந்திருந்தால்...? தொப்பி போட்டதால் அவர் அழகா, அவர் போட்டதால் தொப்பி அழகா என்று ஒரு பட்டிமன்றமே நடத்தலாம் என்று திருவிழாவுக்கு வந்தவர்களுக்குள் விவாதம் நடந்ததாம். அழகை இரசிக்கிறது மட்டும் போதும்; விவாதமெல்லாம் வேண்டாம்.

## ஜம்போ ராணிகள்



தாய்லாந்து நாட்டின் நாகோன்பதாம் நகரில் குண்டான பெண்களுக்கான ஜம்போ ராணி அழகிப் போட்டி இம்மாதம் முதலாம் திகதி நடந்தது. இதில் ஏராளமான குண்டுப் பெண்கள் கலந்துகொண்டு மேடை அதிர பூனை நடை பயின்றனர். போட்டி முடிவில், அர்பாபத் பூனராங் (இடது ஓரம்) என்ற குண்டு அழகி ஜம்போ ராணி பட்டத்தைத் தட்டிச் சென்றார். அவருக்கு சக குண்டு அழகிகள் வாழ்த்துத் தெரிவிக்கின்றனர். இந்தப் போட்டியின் மூலம் திரட்டப்படும் நிதி யானைகளின் நல்வாழ்வுக்காகப் பயன்படுத்தப்படுவது குறிப்பிடத் தக்கது.

போட்டது பூனை நடை; நடந்ததோ யானை நடை. அது சரி, நாகோன்பதாம் நகரை ஞாபகம் வருகிறதா? என்னப்பா! சமாதானப் பேச்சு முறிந்து ஒன்றரை வருடம் தானே ஆகியிருக்கு. போர்நிறுத்த ஒட்டத்துக்குப் பிறகு அரசுக்கும் புலிகளுக்குமிடையே முதன்முதல் பேச்சுவார்த்தை இங்குதானே நடந்தது. அதுமட்டுமா? இங்கிருந்து தானே ஆயுதக் கப்பல் ஒன்றும் இலங்கைக்கு வர இருந்தபோது பிடிபட்டது. ஞாபகம் வருதே...ஞாபகம் வருதே....




**ஓ**கோ. நீங்கள்தான் தமிழ் எம்.பிக்களா? சாகத் துணிஞ்சவனையும் சாகப் போராடுபவனையும், நான் சாகடிக்கப் போறவனையும்தான் இதுவரை சந்திச்சிருக்கிறன்.

இப்பதான் சூடு, சொரணை இல்லாதவங்களைப் பாக்கிறன். வெருளிகள் மாதிரி வெளி உலகுக்கு காட்டப்படப் போகிற வெணடிக்காய்களே!

உங்கட அரசியல் மேதாவித்தன கோல்மாலுகளை என்னிட்டக் காட்டினியளோ கதை கதம் கதம்தான் விளங்குதோ.!





# படங்கள் பேசுகின்றன...

**நா**ங்க தனித்தனியாச் சந்திக்கிறது எங்கட அரசியல். எங்கட விசுவாசத்தில எந்த மாற்றமும் இருக்காது. உங்களிட்ட இருந்து ஒரே ஒரு உதவி ஆகவேணும். ஆறுமுகத்தாரை ஒருக்கா வெருட்டிவிடுங்கோவன். அவர் உங்களையும் சந்திக்காம மலையகத்தில தன்னிச்சையா அரசியல் பண்றார். எங்களுக்குக் கொஞ்சம் கஷ்டமா இருக்கு. பிளீஸ்... அவரை ஒருக்கா வெருட்டி விடுங்கோ.....நீங்கள் அப்படிச் செய்தால் உங்களுக்குத் தேவையான மற்ற உதவிகளை நாங்க கவனிச்சுக்கொள்ளுறம் ஹி.....ஹி....



**உ**ங்களுக்கு அமைச்சுப் பதவி கிடைச்சதுக்கு குறுக்கு வழியில எம்.பியானவை கொக்கரிக்கினம்.

போக்கத்ததுகள் பொழுது பூராகவும் புலம்பட்டும். உங்கட அரசியல் தொடரட்டும். நீங்களும் தெரிவுசெய்யப்படவில்லையெண்டால் ஜனநாயகமெண்டதை வடக்குக் கிழக்கில காணக் கிடைச்சிருக்காது.

கவலைப்படாதேயுங்கே. கடவுள் துணையிருப்பார் சிவ சிவா....




**வா**ங்க சார் வாங்க என்னமோ எல்லாம் கவுண்டு கொட்டிண்ட மாதிரி வாபஸ் வாங்கிப் போனீங்க.... சரி முடிஞ்சது முடிஞ்சதா இருக்கட்டும். முதல் மாதிரி ரணிலுக்கு வாலையும் பிரபாகரனுக்கு தலையையும் காட்டுற விளையாட்டு இனிமேல் இருக்கக் கூடாது.

யுத்த நிறுத்தமெண்டால் அது ஒழுங்கா இருக்க வேணும். கெண்டைனர்களில சாமான்கொண்டு வரக்கூடாது. நடுநிலைமையா நடக்க இனியாவது முயற்சி பண்ணுங்க...அப்பதான் நாட்டுக்கு நல்லது.

**இ**ந்தா பாருங்க, இதுதான் என்னுடைய வாக்கு.

எனக்குப் பிடிக்காதவருக்கு அமைச்சுப் பொறுப்புக் கொடுத்ததால உங்களுக்கு வாக்குப் போடமாட்டன். வெளியால யாரும் கேட்டால் நீங்கள் இன்னும் சமாதானப் பேச்சை ஆரம்பிக்காததாலதான் வாக்கு போடாம விட்டனாங்கள் எண்டு கதை விடுவன். இது எப்படி இருக்கு?



சம்மந்தர்

# ஐரோப்பாவின் பனிப்போர் அஸ்தமனம்

இரு மத்தியதரைக் கடல் நாடுகளும் எட்டு முன்னாள் கம்யூனிஸ்ட் நாடுகளும் ஐரோப்பிய யூனியனில் வெள்ளிக்கிழமை இணைந்துள்ளன. செக் குடியரசு, எஸ்டோனியா, ஹங்கேரி, லாட்வியா, லிதுவேனியா, போலந்து, ஸ்லோவாகியா, ஸ்லோவேனியா ஆகியவை புதிதாக இணைந்துள்ள முன்னாள் கம்யூனிஸ்ட் நாடுகளாகும். சைப்ரஸும் மால்டாவும் இரு மத்தியதரைக் கடல் நாடுகளாகும்.

இந் நாடுகளோடு சேர்த்து ஐரோப்பிய யூனியன் நாடுகளின் எண்ணிக்கை 25 – ஆக உயர்ந்துள்ளது. இவ்வமைப்பில் உள்ள நாடுகளின் மக்கள் தொகை 45.5 கோடியாக அதிகரித்துள்ளது. ஏற்கெனவே ஐரோப்பிய யூனியனில் பதினைந்து நாடுகள் அங்கம் வகித்தன. கடந்த முப்பதாம் திகதி இரவு முதலே ஐரோப்பாவில் கொண்டாட்டங்கள் தொடங்கின. புதிய நாடுகளை வரவேற்ற ஐரோப்பிய கமிஷன் தலைவர் ரோமொனொப்ரோடி 'பனிப்போரின் விளைவாக ஐரோப்பாவில் ஏற்பட்ட பிளவுகள் இதோடு மறைகின்றன. இப்போது ஒன்றுபட்ட ஐரோப்பாவில் வாழ்கிறோம்' என்றார்.

ஆறு மாதங்களுக்கொரு தடவை சுழற்சி முறையில் ஐரோப்பிய யூனியனின் தலைமைப் பதவி மாறுவது வழக்கம். இம்முறை தலைமைப் பதவியை வகிப்பது அயர்லாந்தாகும். அயர்லாந்தின் தலைநகரான டப்ளினில் கடந்த சனிக்கிழமை நடைபெற்ற கொண்டாட்டங்களில் இருபத்தைந்து அங்கத்துவ நாடுகளையும் சேர்ந்த இளைஞர், யுவதிகள் கலந்துகொண்டனர். இவர்கள் கையளித்த நாடுகளின் தேசியக் கொடிகள் ஐரோப்பிய யூனியனின் கீதம் முழங்க, ஐரோப்பிய யூனியனின் கொடிக்கருகே ஏற்றிவைக்கப்பட்டன. மிகக் கோலாகலமாகக் கொண்டாட்டங்கள் நடைபெற்றபோதிலும் தேசியவாதிகளும் முதலாளித்



துவ எதிர்ப்பாளர்களும் எதிர்ப்புக் கூட்டங்களை நடத்தத் தவறவில்லை. இதனால் ஆர்ப்பாட்டக்காரர்கள் மீது கலகத் தடுப்புப் பொலிஸார் நீரைப் பீச்சியடித்துக் கூட்டத்தைக் கலைத்தனர். 1979ஆம் ஆண்டு பாப்பரசர் இரண்டாவது அருளப்பர் சின்னப்பர் அயர்லாந்துக்கு மேற்கொண்ட விஜயத்தின்போது பாரிய பாதுகாப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப் பட்டிருந்தன. அதற்குப் பின்னர் இந்த வைபவத்தையொட்டி மிகக் கடுமையான பாதுகாப்பு நடவடிக்கைகள் எடுக்கப்பட் டிருந்தன.

புதிய ஐரோப்பிய யூனியனின் நாடுகள் பத்திலிருந்து 25 ஆக உயர்ந்திருப்பதோடு ஏழு கோடியே 40 இலட்சம் மக்கள் தொகையைக் கொண்டிருந்த இந்த அமைப்பு இப்போது நாலாயிரத்து ஐந்நூற்று ஐம்பது கோடி மக்கள் தொகையைக் கொண்டுள்ளது. மொத்தத் தேசிய உற்பத்தி 44400 கோடி யூரோவிலிருந்து மேலும் 960 கோடி யூரோவினால் உயர்ந்துள்ளது. ஐரோப்பிய யூனியனில் அங்கம் வகிக்கும் நாடுகளின் மொத்த நிலப்பரப்பு ஏழு இலட்சத்து 38 ஆயிரத்து 573 சதுர கிலோ மீற்றர் பரப்பளவிலிருந்து நானூறு இலட்சம் சதுர கிலோ மீற்றர் பரப்பாக அதிகரித்துள்ளது.

புதிய அங்கத்துவ நாடுகளை இணைத்துக்கொள்ளும் வைபவத்தில் உரையாற்றிய அயர்லாந்துப் பிரதமர் பேர்ட்டி அகெர்ன் 'இன்றைய நாள் சந்தர்ப்பத்தையும் நம்பிக்கையையும் தரும் ஒரு நாள்' என்று வர்ணித்தார். ஐரோப்பா அடைந்த முன்னேற்றம் பற்றிக் குறிப்பிட்டபோது, "நாம் யுத்தத்திலிருந்து சமாதானத்தை நோக்கி நகர்ந்துள்ளோம். குரோத மனோபாவத்திலிருந்து மற்றவர்களை மதிக்கும் தன்மைக்கு பிளவிலிருந்து ஐக்கியப்படும் நிலைமைக்கு சர்வதிகாரம், அடக்குமுறையிலிருந்து ஜனநாயக நிலைக்கு நகர்ந்துள்ளோம்" என்று குறிப்பிட்டார். ஆனால், சவால்கள் இருப்பதையும் அவர் ஏற்றுக் கொண்டார். அதாவது ஐரோப்பிய யூனியனுக்கென அரசியல் யாப்பு விதியொன்றினை உருவாக்குவது மிகவும் சங்கடமான விவகாரமென ஏற்றுக்கொண்ட அவர், அங்கத்துவ நாடுகளுக்கிடையில் நிலவும் செல்வந்த

*போலந்து, செக் குடியரசு ஆகிய நாடுகளின் எல்லையோரத்தில் அமைந்துள்ள ஜேர்மன் நகரான சிற்றோ என்ற நகரில் "ஐரோப்பிய யூனியனில் பத்து நாடுகள் இணைவது தொடர்பாக நடைபெற்ற வைபவத்தில் உரையாற்றிய முன்னாள் ஜேர்மன் அதிபர் ஹெல்மற் ஹோல் கண்ணீர் விட்டழுதார். "ஐரோப்பாவில் இனி என்றுமே யுத்தம் நடைபெறாது" என்று கூறியபோது அவரது நா தழுதழுத்தது. கண்கள் நீரைச் சிந்தின.*



வறுமை இடைவெளியை நீக்க வேண்டிய தேவை பற்றியும் குறிப்பிட்டார். இன்னும் செய்யப்பட வேண்டிய வேலைகள் அதிகம் உள்ளன என்றும் அவர் சொன்னார்

இப்போது உலகிலுள்ள மிகப் பெரும் வர்த்தக அமைப்பு ஐரோப்பிய யூனியன்தான். மாபெரும் சாம்ராஜயங்கள் உருவாக்கப்பட்டதையொத்த மகத்தான நிகழ்ச்சி இதுவென பி.பி.சி. நிருபர் ரிம் பிராங்ஸ் இதனை வர்ணித்தார். புதிதாக இணைந்துள்ள பத்து நாடுகளில் எட்டு முன்னைய கிழக்கு ஐரோப்பிய கம்யூனிஸ நாடுகளைச் சேர்ந்தவையாகும். ஒப்பீட்டளவில் மேற்கு ஐரோப்பிய நாடுகளைவிட கிழக்கு ஐரோப்பிய நாடுகள் வறுமைப்பட்ட நாடுகளாகும். கிழக்கில் விலைவாசி உயர்வு பாரிய பிரச்சினையாகும். இதனால் சம்பள அதிகரிப்புப் போராட்டங்கள் அங்கு அடிக்கடி நிகழ்வதுண்டு.

பிளவுபட்டிருக்கும் துருக்கி சைப்ரஸையும் கிரேக்க சைப்ரஸையும் இணைப்பதற்காக கடந்த சில நாட்களுக்கு முன்னர் நடத்தப்பட்ட சர்வஜன வாக்கெடுப்பு கிரேக்கப் பகுதியில் வெற்றியாகவும் துருக்கிப் பகுதியில் தோல்வியாகவும் முடிவடைந்ததையடுத்து கிரேக்க சைப்ரஸ் மட்டும் ஐரோப்பிய யூனியனில் இணைந்து கொண்டுள்ளது. போலந்து, செக் குடியரசு ஆகிய நாடுகளின் எல்லையோரத்தில் அமைந் துள்ள ஜேர்மன் நகரான சிற்றோ என்ற நகரில் "ஐரோப்பிய யூனியனில் பத்து நாடுகள் இணைவது தொடர்பாக நடைபெற்ற வைபவத்தில் உரையாற்றிய முன்னாள் ஜேர்மன் அதிபர் ஹெல்மற் ஹோல் கண்ணீர் விட்டழுதார். ஐரோப்பாவில் இனி என்றுமே யுத்தம் நடைபெறாது" என்று கூறியபோது அவரது நா தழுதழுத்தது. கண்கள் நீரைச் சிந்தின. ஜேர்மனி, போலந்து, செக் குடியரசு ஆகிய இந்த மூன்று நாடுகளுக்கு மிடையில் செல்லும் புதிய தரை வழிப் பாதையொன்றும் அன்றைய தினம் திறந்து வைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

**-நிதியா**

# மே-தினம் வெளிப்படும் அவரவர் கோணமும்

**மே**தினம் சர்வதேச உலகத் தொழிலாளர் தினம். அடக்கி ஒடுக்கப்பட்ட பாட்டாளி வர்க்கம் எட்டு மணிநேர வேலை கோரி அமெரிக்காவின் சிக்காக்கோ நகரில் 1886ஆம் ஆண்டு நடத்திய எழுச்சிப் போராட்டத்தில் உதயமானது மேதினமாகும். அதிகாலையில் வேலைக்குச் செல்லும் ஆலைத் தொழிலாளி நட்ட நடுநிசி தாண்டியே வீட்டுக்குத் திரும்புகின்ற காலம் அது. சுமார் 15–18 மணித்தியாலங்கள் என தொழிலாளர்கள் சுரண்டப்பட்டனர். இதற்கு எதிராக ஆலைத் தொழிலாளர்கள் கிளர்ந்தெழுந்து எட்டு மணி நேரமே வேலை எனக்கோரி நடத்திய போராட்டம் பல உயிர்த் தியாகங்களுக்கு மத்தியிலே வெற்றி பெற்றது!

இந்தப் போராட்டத்திற்கு தலைமை தாங்கிய 5 தொழிலாள வர்க்கத் தலைவர்கள் தூக்கு மரத்தில் ஏற்றப்பட்டனர். இன்னும் பலர் சிறைக் கூடங்களில் அடைக்கப்பட்டனர். இந்த உன்னத தியாகத்தினால், தொழிலாளர்களின் உரிமை வென்றெடுக்கப்பட்ட தினத்தை மேதினமாகக் கொண்டாடுவது என இந்நாளில் பிரான்ஸில் கூடிய உலகத் தொழிலாளர் அமைப்புகள் ஏகமனதாகப் பிரகடனம் செய்தன. இதற்கு இணங்கவே 118ஆவது மேதினம் இலங்கை உட்படப் பல நாடுகளில் ஆரவாரமாகக் கொண்டாடப்பட்டது. இரத்தம் சிந்திப் பெறப்பட்ட தொழிலாளர் உரிமையை இன்று உலகளாவிய ரீதியில் முதலாளித்துவ சக்திகளும் பிற்போக்கு சக்திகளும் கூடக் கொண்டாடுகின்றன. இலங்கையில் 1930களிலேயே தொழிலாளர் வர்க்க இயக்கங்கள் தோற்றம் பெற்று பல வீரதீரப் போராட்டங்களை முன்னெடுத்துச் சென்றன. இருந்தும், தொழிலாளர்கள், விவசாயிகள் ஆசிரியர்கள், ஆயுர்வேத வைத்தியர்கள், மதகுருமார் ஆகிய பஞ்சமா சக்திகளை முன்னிறுத்தி 1956ஆம் ஆண்டில் அமரர் எஸ். டப்ள்யூ. ஆர். டி. பண்டாரநாயக்கா அதிகாரத்தைக் கைப்பற்றிய பின்னரே இலங்கையில் மேதினம் தொழிலாளர் வர்க்கத் தினமாகப் பிரகடனப்படுத்தப்பட்டு விடுமுறை நாளாக அறிமுகப்படுத்தப்பட்டது. இதற்கு முன்னரே ஏ. குணசிங்க, பிலிப் குணவர்த்தன, டாக்டர். என்.எம் பெரேரா, கலாநிதி. கொல்வின் ஆர். டி சில்வா, பீற்றர்கெமைன், என். சண் முகதாசன் போன்ற தலைவர்கள் தொழிலாளர் வர்க்கப் போராட்டங்களை முன்னின்று நடத்தியுள்ளனர்.

முதலாளி வர்க்கக் கட்சியான ஐக்கிய தேசியக் கட்சி மற்றும் மத சார்பு அமைப்புகளும் கூட மே தினத்தைக் கொண்டாடுகின்றன. தேசியக் கட்சிகளான ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி, மக்கள் ஐக்கிய முன்னணி போன்றவையும் மே தினத்தைக் கொண்டாடுகின்றன. இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி, லங்கா சமசமாஜக் கட்சி, மக்கள் விடுதலை முன்னணி, புதிய இடதுசாரி முன்னணி, இலங்கை வர்த்தக சங்கம் உள்ளிட்ட பல்வேறு இடதுசாரி அமைப்புகளும் மேதினத்தைக் கொண்டாடுகின்றன. இந்த இடதுசாரி அமைப்புக்களுக்கிடையே கொள்கை ரீதியாகவும் கோட்பாட்டு ரீதியாகவும் சில பல முரண்பாடுகள் காணப்பட்டாலும், அடிப்படையில் தொழிலாளர் வர்க்கத்தின் தலைமையையும், விடிவையும் முக்கிய தொனிப்பொருளாக வலியுறுத்தியே இவை மேதினத்தைக் கொண்டாடுகின்றன. யாழ்ப்பாணம், மட்டக்களப்பு, மலையகம் போன்ற தமிழ் மக்கள் செறிந்து வாழும் பகுதிகளிலும் மே தின ஊர்வலங்களும், கூட்டங்களும் விமரிசையாக நடத்தப்பட்டிருக்கின்றன. யாழ்ப்பாணம், வவுனியா, மட்டக்களப்பு ஆகிய பகுதிகளில் நடத்தப்பட்ட மேதின ஊர்வலங்கள், கூட்டங்களில் தமிழ் தொழிலாளர்கள் பற்றியும் புலிகளின் தன்னாட்சி அதிகார யோசனை பற்றியும் அதிகளவில் பேசப்பட்டன.

நுவரெலியா, கந்தப்பளையில் தமிழ் முச்சக்கர வண்டி சாரதியொருவருக்கும், சிங்களவரான தனியார் பேரூந்து சாரதியொருவருக்கும் இடையில் ஏற்பட்ட வாக்குவாதம் ஒரு சிறு சம்பவம் என்ற போதும்கூட, பாரிய இனக் கலவரமாக மாற்றப்பட்டிருக்கிறது. இதற்குப் பின்னால் தமிழ், சிங்கள வகுப்புவாத சக்திகள் இரண்டுமே பின்னணியில் செயற்பட்டிருக்கின்றன. இந்தக் கலவரத்தின் காரணமாக பொலிஸ் துப்பாக்கிப் பிரயோ கத்திற்குக் இலக்காகி இரு தமிழ் தொழிலாளர்கள் கொல்லப்பட்டிருக் கிறார்கள். 42 வர்த்தக நிலையங்களும் எட்டு வீடுகளும் சேதமாக்கப்பட்டிருக்கின்றன. எனவே, மலையகத்தில் இடம்பெற்ற மேதின வைபவங்கள் இந்தச் சம்பவத்தை மையப்படுத்தி கறுப்பு மேதினமாக அனுஷ்டிக்கப்பட்டிருக்கின்றன. வெசாக், தீபாவளி, நத்தார், மீலாத்தினம் ஆகியவை போன்று தொழிலாளி வர்க்க தினமான மேதினமும் இன்று சம்பிரதாயபூர்வ சடங்காகவும், வைபவமாகவும் கொண்டாடப்படுவதால், கட்சிகள், அமைப்புகள், இயக்கங்கள் அனைத்துமே தத்தமது கோரிக்கைகளை முன்வைத்து கோஷங்களை எழுப்புகின்றன. முதலாளித்துவம் வளர்ச்சி பெற்றிருந்த 19ஆம் நூற்றாண்டின் பிற்காலப்பகுதியில் நிலவிய தொழிலாளர் வர்க்கத்தின் மீதான சுரண்டல்கள், அடக்குமுறைகள் ஆகியன ஒப்பீட்டளவில் இன்று குறைந்திருக்கின்றன என்று சொல்வதில் தவறில்லை. முதலாளித்துவ ஆட்சிகளுக்கு எதிராக தேசிய ஜனநாயக சக்திகளும், சோஷலிச சக்திகளும் பல நாடுகளில் ஆட்சி அதிகாரங்களைக் கைப்பற்றிக்கொண்டதால் தொழிலாளர் வர்க்க உரிமைகள் தொடர்பாக பல சீர்திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன என்பது உண்மையே. இருந்தாலும் தொழிலாளர் வர்க்கத்தின் பிரச்சினைகள் அனைத்திற்கும் தீர்வு காணப்பட்டு விட்டன என்று கூற முடியாது. 1886இல் இலங்கையில் பாரிய ஆலைகளும் இருக்கவில்லை. ஆலைத் தொழிலாளர் வர்க்கமும் இருக்கவில்லை. விவசாயமே பெரும் பாலும் மக்களின் ஜீவனோபாய தொழிலாக இருந்தது.

பிரித்தானியர்களின் வருகைக்குப் பின்னர்தான் பாரிய தோட்டத் தொழில் துறைகள் ஏற்படுத்தப்பட்டன. படிப்படியாகத் தொழில்துறைகளும் உருவாக்கப்பட்டன. இலங்கையின் சுதந்திரத்திற்குப் பின்னர் இவற்றில் படிப்படியான வளர்ச்சிப் போக்குகள் காணப்பட்டன. சீர்திருத்த நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டன. பிரிட்டிஷ் ஏகாதிபத்தி யத்தின் முதல் எதிரியாகக் கொண்ட அரைக் காலனித்துவ, அரைப் பிரதிநிதித் துவ நாடாக அன்று இருந்த இலங்கை இன்றில்லை. இருந்தும் உலகமயமாக்கல், பல்தேசிய கம்பனிகள், உலக வங்கி, சர்வதேச நாணய நிதியம், போன்றவைகள் இலங்கையின் உள்விவகாரங்களில் நிபந்தனைகள் விதித்து கடன்களையும், உதவிகளையும் வழங்குவது போன்ற நடவடிக்கைகளால் ஒரு பின் நவீனத்துவப் பாணி சுரண்டல் முறை இங்கு அமுல்படுத்தப்படுகிறது என்பதை நாம் மறுத்துவிட முடியாது. ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கம் இலங்கையின் இயற்கை வளங்களையும், செல்வங்களையும் தாரைவார்த்துக் கொடுத்தது என்பதை மறுக்க முடியாது!

யுத்த நிறுத்தம் ஒரு சமாதான சூழலை ஏற்படுத்தி இருந்தபோதிலும் கூட சமாதானப் பேச்சுவார்த்தை இழுத்தடிக்கப்பட்டது. மர்மக் கப்பல்களில் புலிகளுக்கு ஆயுதங்கள் வந்து இறங்கின. மாற்றுக் கருத்து கொண்டவர்கள் மீது புலிகள் வேட்டுக்களைத் தீர்த்தார்கள். புலி களுக்கு இலங்கைக் கடற்பரப்பில் பயிற்சிக்களம் கொடுக்க வேண்டும் என்றும், இலங்கைக் கடற்பரப்பில் சீனக் கப்பலைத் தாக்கி நீருக்குள் அமிழ்த்தியது. மூன்றாம் தரப்பென்று யதார்த்தத்திற்கு ஒவ்வாத கோரிக்கைகளும் நியாயங்களும் வேற்று நாட்டவர்களால் முன்வைக்கப்பட்டன. இத்தகையதொரு சூழ்நிலையிலேயே தேசியவாதக் கட்சியான சுதந்திரக் கட்சியும் தீவிர இடதுசாரியென வர்ணிக்கப்படும் ஜே.வி.பி.யும் ஒரு கட்டமைப்பை உருவாக்கிக்கொண்டன. முரண்பாடான சக்திகள் ஒரு பொது வேலைத் திட்டத்தின் கீழ் ஐக்கியப்படுவது ஒன்றும் புதியதல்ல. எதிரும் புதிருமாக யுத்தம் புரிந்த சீனக் கம்யூனிஸ்ட் கட்சியும், குவாமின்டாங் கட்சியும் 1940களில் பொது எதிரியான ஜப்பானிய ஆக்கிரமிப்பாளர் களுக்கு எதிராக ஐக்கியப்பட்டுப் போராடியதை உதாரணமாகக் கூற முடியும். சுதந்திரக் கூட்டமைப்பின் மேதினக் கூட்டத்தில் உரையாற்றிய பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ, பாராளுமன்றம் அரசியல் யாப்பு நிர்ணய சபையாக மாற்றப்பட்டு அரசியலமைப்பு மாற்றி அமைக்கப்படுமென்று வலியுறுத்தியுள்ளார். அதாவது, தேர்தல் முறை மாற்றியமைக்கப்படுவதோடு இனப்பிரச்சினைத் தீர்வுக்குத் தடையாக இருந்த அரசியல் யாப்பும் மாற்றப்படுமென்று உறுதியளித்துள்ளார். இதேவேளை, வேலையற்ற 27 ஆயிரம் பட்டதாரி களுக்கு வேலை வழங்குவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படுமென்றும் கூறியுள்ளார். மறுபுறத்தில் ஐக்கிய தேசியக் கட்சி காத்திரமான எந்த ஒரு திட்டத்தையோ, கொள்கையையோ மேதினத்தையொட்டி முன்வைக்க வில்லை. தாங்களே இலங்கையில் ஒரு சமாதானச் சூழலை ஏற்படுத்தியதாகத் தம்பட்டமடித்திருப்பதோடு அரசாங்கம் விரைவில் வீழ்த்தப்படுமென்றும் சூளுரைத்துள்ளனர். இதேபோன்று வடக்கு – கிழக்கில் நடைபெற்ற மேதினங்களில் புலி இயக்கத்தின் பிராந்தியத் தலைவர்கள் சமாதான முன்னெடுப்புகள் குறித்து அவநம்பிக்கை யையே வெளியிட்டுள்ளனர். முன் நிபந்தனைகள் வைக்கப்படுவதற்கான சாத்தியக் கூறுகளும் தென்படுகின்றன. இவர்களும் கூட புதிய அரசாங்கம் நீண்ட காலம் தாக்குப்பிடிக்க மாட்டாதென்ற கருத்தையே கொண்டுள்ளனர். ஆனால், சுதந்திரக் கட்சித் தலைவர்களும் மக்கள் முன்னணித் தலைவர்களும் ஒரு பலம் வாய்ந்த அரசாங்கம் உருவாக்கப்படுமென்றும், இனப் பிரச்சினை உட்பட நாட்டின் பாரிய பிரச்சினைகளுக்குத் தீர்வு காணப்படும் என்றும் தெரிவித்தனர். மேதினத்தை யொட்டிய காலப்பகுதியில் மீண்டும் பேச்சுவார்த்தை ஆரம்பிக்க உதவுமாறு ஜனாதிபதி நோர்வேக்கு

**—யாதவ்—**

விடுத்த அழைப்பையேற்று நோர்வேக் குழு இலங்கை வந்து சமாதான முயற்சிகளை மேற்கொண்டுள்ளது. வெளிவிவகார அமைச்சர் லக்ஸ்மன் கதிர்காமர் இந்தியாவுக்கு விஜயம் செய்து இலங்கை இனப்பிரச்சினைத் தீர்வு தொடர்பாகப் பேச்சுக்களை நடத்தியுள்ளார். எனவே, தேசிய, சர்வதேச அழுத்தங்கள் ஒரு சாதகமான சூழ்நிலையை உருவாக்கு மென எதிர்பார்க்கப்படுகிறது.

---

இரு எழுத்தாளர்கள் சேர்ந்து எழுதும் இலங்கைத் தமிழ் அரசியல் தொடர் இது.

# முட் பாதையில் மரித்த மிதவாதம்


## அமிர்தலிங்கம் உணர்ச்சியூட்டும் பேச்சாளர்

**தி**ருமதி மங்கையற்கரசி அமிர்தலிங்கம் தமிழ்நாட்டில் பொதுக் கூட்டங்களில் பேசியபோது தெரிவித்த கருத்துக்கள் இலங்கைப் பத்திரிகைகளில் மிகுந்த முக்கியத்துவத்துடன் பிரசுரமாகி இருந்தன. இது தொடர்பாக அப்போதைய பிரதமர் பிரேமதாஸ பாராளுமன்றத்தின் கவனத்திற்குக் கொண்டுசென்றார். இலங்கை ஊடகங்களில் வெளியான செய்திகளின் உண்மைத் தன்மைகள் குறித்து அறிய மார்ச் 23ஆம்

> **அமிர்தலிங்கம் பலராலும் விரும்பப்படும் குணாதிசயம் கொண்டவர். அவரது உரைகள் பொதுமக்களைக் கவரும் தன்மை கொண்டவை. கேட்பவர்களை உணர்ச்சி ஊட்டக்கூடிய வகையில் பேசும் வன்மை மிக்கவர். அவர் கூட அடிக்கடி உணர்ச்சி வசப்படும் குணம் படைத்தவர்**

திகதியன்று தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவரான மு.சிவசிதம்பரம் இந்தியாவில் இருந்த அமிர்தலிங்கம் தம்பதியினரோடு தொலைபேசி மூலமாக தொடர்புகொண்டார். ஆகஸ்ட் 77 இனக் கலவரங்களின்போது இடம்பெற்ற சில சம்பவங்கள் தொடர்பாகவே திருமதி மங்கையற்கரசி பொது மேடைகளில் குறிப்பிட்டதாக அமிர்தலிங்கம் விளக்கம் அளித்தார்.

அமிர்தலிங்கத்தின் சென்னைப் பேச்சுக்கள் தொடர்பாக மார்ச் 25 "வீக் என்ட்" இதழில் கட்டுரை எழுதியிருந்த மிகாரா என்பவர் பின்வருமாறு குறிப்பிட்டார். அமிர்தலிங்கம் பலராலும் விரும்பப்படும் குணாதிசயம் கொண்டவர். அவரது உரைகள் பொதுமக்களைக் கவரும் தன்மை கொண்டவை. கேட்பவர்களை உணர்ச்சி ஊட்டக்கூடிய வகையில் பேசும் வன்மை மிக்கவர். அவர்




கூட அடிக்கடி உணர்ச்சி வசப்படும் குணம் படைத்தவர் எனக் குறிப்பிட்டார். இந்தியாவில் அமிர்தலிங்கம் பொது

**இணைந்து எழுதுவது**
**த.சபாரத்தினம்**
**+**
**அம்பி மகன்**

மேடைகளில் நிகழ்த்திய உரைகள் தொடர்பாக அமைச்சர் சிறில் மத்தியூ பாராளுமன்றத்தில் கேள்வி எழுப்பினார். குறிப்பாக, சென்னை ஊடகவியலாளர் குழுவில் ஊடகவியலாளர்களது கேள்வியொன்றுக்கு அமிர்தலிங்கம் அளித்த பதில் தொடர்பாகக் கேள்வி எழுப்பினார். அதன்போது இலங்கையில் வன்முறைச் செயற்பாடுகள் எதிலும் ஈடுபடும் குழுவொன்று செயற்படவில்லை என்று அமிர்தலிங்கம் நிராகரித்திருந்தார். இது புலிகளைப் பாதுகாப்பதாக இருக்கிறது என்பதே சிறில் மத்தியூவின் குற்றச்சாட்டாக இருந்தது. அமிர்தலிங்கத்தின் சென்னைப் பேச்சுக்கள் தொடர்பாக அமைச்சரவை ஆராய்ந்தது. எதிர்க் கட்சித் தலைவர் என்ற வரம்பை மீறும் வகையிலேயே அமிர்தலிங்கத்தின் உரைகளது உள்ளடக்கம் காணப்பட்டது என அமைச்சர்களில் பலரும் கருத்துத் தெரிவித்திருந்தனர்.

இந்தியாவில் நிகழ்த்திய உரைகள் தொடர்பாக விளக்கம் அளித்து அமிர்தலிங்கம் ஒரு பத்திரிகை அறிக்கையை வெளியிட்டார். அதில் தமிழர் விடுதலைக் கூட்டணி விசேடமான மக்கள் ஆணை ஒன்றைப் பெற்றுக் கொண்டுள்ளது எனவும், ஈழம் அரசை அமைப்பதற்கான அந்த மக்களாணை பற்றியே தனது உரைகள் அமைந்திருந்ததாகவும் அவர் விளக்கம் அளித்திருந்தார். அதில் அவர் மேலும் குறிப்பிடுகையில், அரசாங்கம் மாற்றுத் தீர்வொன்றை முன்வைக்குமாக இருந்தால் அதனைப் பரிசீலிக்கக் கூட்டணி தயாராக இருப்பதாகக் குறிப்பிட்டிருந்தார்.

அமிர்தலிங்கத்தின் இந்த அறிவிப்புத் தொடர்பாக, பத்திரிகையாளர் சபாரத்தினம் அமைச்சர் லலித் அத்துலத் முதலியிடம் கேள்வி எழுப்பினார். அரசாங்கம் மாற்றுத் திட்டங்கள் எதையாவது முன்வைக்குமா? என்பதே அவரது கேள்வியாக இருந்தது. இதற்கு அத்துலத் முதலியின் பதில் "எமக்கு ஒரேயொரு மாற்றுத் தீர்வுதான் உண்டு. அது இலங்கையின் ஒற்றையாட்சி அமைப்பைப் பேணுவது தான்" என்பதாகவே இருந்தது.

இதனைத் தொடர்ந்து அரசாங்க ஆதரவு ஊடகங்களும் ஐ.தே.க.வின் பின்வரிசை உறுப்பினர்களும் அமிர்தலிங்கத்துக்கு எதிரான பிரசாரங்களைத் தீவிரமாக்கினர். ஜி.எம்.பிரேமச்சந்திரா, மத்துகம போன்றோர் பிரிவினையை வலியுறுத்தும் அனைத்து அமைப்புக்களையும் தடைசெய்ய வேண்டும் என்ற


*1979 இல் அமிர்தலிங்கம் ஜே. ஆர் ஜயவர்த்தனவை சந்தித்தபோது...*

பிரசாரத்தை முன்னெடுத்தனர். மூன்று மகா சங்கங்களையும் சேர்ந்த பௌத்த மதகுருமார்கள் தமிழ் இனவாதத்தை வளர்க்கும் தலைவர்களுக்கு எதிராக அரசாங்கம் கடுமையான நிலைப்பாட்டை எடுக்க வேண்டுமென்று வலியுறுத்தினர். இத்தலைவர்கள் உள்நாட்டிலும் வெளிநாடுகளிலும் ஆற்றுகின்ற உரைகள் பௌத்த சிங்கள மக்களைப் புண்படுத்துவதாக உள்ளதென இவர்கள் கருத்து வெளியிட்ட னர்.

இத்தகைய சூழலில் நிரப்பப்படாமல் இருந்த யாழ்ப்பாண மாவட்ட அமைச்சர் பதவிக்கு யு.பி.விஜயக்கோன் என்பவரை அரசாங்கம் நியமனம் செய்தது. அத்துடன்

## (அரசியல் தொடர்)

யாழ்ப்பாண மாவட்ட அமைச்சரின் செயலாளராகவும் மாவட்ட அரசாங்க அதிபராகவும் வைத்தியலிங்கம் துரைசுவாமி என்பவரும் நியமிக்கப்பட்டார். இந்தப் பின்னணியுடன் 1978 மே 21ஆம் திகதியன்று புலிப்படையையும் அதனை ஒத்த இயக்கங்களையும் தடைசெய்யும் சட்ட மூலத்தையும் அரசாங்கம் பாராளுமன்றத்தில் சமர்ப்பித்தது. அப்போது தமிழர் விடுதலைக் கூட்டணி பாராளுமன்றத்தில் எப்படி நடந்துகொண்டது?

(தொடர்ந்து வடியும்....)

இரகசியம் காத்தல் அவசியம் என்பதால் பெயர்கள், இடங்கள் யாவும் கற்பனையில்

# நெஞ்சினில் என்ன காயமோ...? 55

தலைக்குள் ஏதோ செய்வதாகவும் கூறினாள். சிலவேளைகளில் தலை பாரமாகவும், வேறு சில வேளைகளில் தாங்க முடியாத தலைவலியால் துன்புறுவதாகவும் கூறினாள். இது தொடர்பாக வைத்தியர்களுடன் தான் கதைத்ததாகவும் அவர்கள் அவளது உடலில் எந்தவிதமான பாரிய நோய்களும் இல்லையென்றும் கூறியிருந்தார்களாம்.

அவளுக்குக் கடந்த ஒரு மாதத்திற்கு மேலாக நித்திரை அடிக்கடி குழம்பும் (குறையும்) தன்மை காணப்பட்டது. பல நாட்கள் அதிகாலைப் பொழுதில் விழித்து மீண்டும் நித்திரைகொள்ள முடியாத நிலையும், சாப்பிட மனம் வராத நிலையும், மற்றவர்களுடன் சந்தோஷ மாகக் கதைத்து பல நாட்கள் ஆகி விட்டதாகவும் வருந்தினாள். அவளுக்கு வழக்கமாக மகிழ்ச்சியைக் கொடுக்கின்ற தொலைக் காட்சித் தொடர்களோ, மற்றைய பொழுது போக்கு அம்சங்களோ, அவள் மனதில் இருந்த துக்கத்தை மாற்றவில்லை. எதற்கெடுத்தாலும் அளவுக்கு அதிகமாக எரிச்சலடைய ஆரம்பித்தாள். முன்னர் போன்று அவளால் வீட்டு வேலைகளில் பங்குபற்ற முடியவில்லை. மற்றும்

## உள மருத்துவம்

மற்றவர்களுக்குத் தான் பாரமாக இருப்பதாகவும் எண்ணத் தொடங்கினாள். போகப் போக அவளால் வகுப்புகளுக்கு ஒழுங்காகச் செல்ல முடியவில்லை. இதனால் மேற்பார்வையாளர்களின் விமர்சனத்திற்கும், ஏச்சிற்கும் உள்ளாக நேர்ந்தது. மற்றைய சக மாணவிகள் சிரித்துக் கதைத்துக்கொண்டிருக்கும் பொழுது, அவர்கள் தன்னைப் பற்றியே கதைத்துக் கேலி செய்கிறார்கள் என்று எண்ணி, அவள் அவர்களிடம் இருந்து விலகினாள். விடுதியில் யாரும் இல்லாத சந்தர்ப்பத்தில் தொடர்ந்து அழுவதென்பது ஒரு சாதாரண நிகழ்வாக மாறியது. தான் தனித்துப்போய்விட்டேன்

> உடல் நோய்களால் பாதிக்கப்பட்டவர்களை விட உள நோயினால் பாதிக்கப்பட்டவர்களே அதிகமாக காணப்படும் இன்றைய காலகட்டத்தில், உள நலம், உளப் பாதிப்புகள், உள நோய்கள் பற்றி அறிந்துகொள்வதும் இவற்றுக்கான வைத்திய முறைகளை அறிமுகப்படுத்துவதும் அவசியமாகிறது. எனவே மேற்படி உள மருத்துவத்துறையில் அநுபவம் பெற்றவர்களும் நிபுணர்களுமான வைத்திய கலாநிதி திரு. த. கடம்பநாதன் (எம்.பீ.பீ.எஸ். எம்.டி உள மருத்துவம்) அவர்களும் உளவியலாளர் திரு. தி. சுவீந்திரன் பி.ஏ (உளவியல்) எம்.பில். உள மருத்துவம்) அவர்களும் இணைந்து தமது அநுபவங்களை பகிர்வர் என்பதை மகிழ்ச்சியுடன் தெரியப்படுத்திக் கொள்கின்றோம்.

என்ற உணர்வும், தன்னால் ஒன்றும் செய்ய இயலாது என்ற உணர்வும் மேலோங்கியது. இவ்வேளைகளில் அவளுக்கு அவளின் மீதே கோபம் ஏற்பட்டது. சிலவேளைகளில் தற்கொலை செய்துகொள்ளலாம் என்ற எண்ணம் தோன்றும்பொழுது தனது கடமைகளையும், பொறுப்புக்களையும் நினைத்ததால் அவற்றை தவிர்க்க முடிந்தது.

சர்மிளாவுக்கு மூன்று மாதங்கள் வரை சிகிச்சை அளிக்கப்பட்ட பொழுது, அவளால் மீண்டும் பயிற்சி நெறியைத் தொடங்க முடிந்தது. காலப்போக்கில் அவள் எல்லாப் பரீட்சைகளிலும் சித்தியடைந்து அவளது சொந்த ஊரிலுள்ள வைத்திய சாலையிலேயே தாதியாக நியமனமும் பெற முடிந்தது.

சர்மிளா மனச்சோர்வு நோயினால் பாதிக்கப்பட்ட ஒரு நோயாளியாவாள்.

### *மனச்சோர்வு நோய்* (Depression) *என்றால் என்ன?*

இந் நோயால் பாதிக்கப்பட்டவர்கள், மிகையான துக்க மனநிலையை தொடர்ச்சியாகக் கொண்டிருப்பார்கள். துக்கத்தினது அளவு நாளுக்கு நாள் மாறுபடக்கூடியதாக இருப்பினும், சந்தோஷமான மனநிலைமைகளிலும் அவர்களில் துக்கம் காணப்படுதல் பொதுவான நிலைமையாகும். வழமையாகச் செய்யும் வேலைகளைச் செய்வதற்குக் கஷ்டப்படும் இவர்கள், தங்களது உடல் பலவீனமுற்று இருப்பதாகக் கூறுவர். இந் நோயால் பாதிக்கப்பட்டிருக்கும் காலப்பகுதியில் அவர்களின் பொதுவான பொழுது போக்குகளில் நாட்டம் குறைந்து காணப்படும்.

### *மனச்சோர்வு நோயின் அறிகுறிகள் யாவை?*

மனச்சோர்வு நோயால் பாதிக்கப்பட்டவர்கள், பல்வேறுபட்ட அறிகுறிகளுடன் உதவியை நாடுகின்றனர்.

(தொடரும்.....)

# காதல் எனும் தீ!!

நன்றாக இருட்டியபின், மிஸ்டர் வர்மாவின் வீட்டிலிருந்து, அவருடைய மகன், தன்னை யாரும் கவனிக்கிறார்களா என்று சுற்றும் முற்றும் பார்த்துவிட்டுப் புறப்பட்டான். அவனுடைய கையிலே ஒரு டார்ச் லைட். சத்தம் வராதபடி வீட்டு கேட்டைத் திறந்துகொண்டு, வெளியேற முயன்றபோது, 'எங்கே புறப்பட்டு விட்டாய்?' என்று ஒரு குரல். திரும்பிப் பார்த்தான் மகன். அங்கே இருந்தவர் மிஸ்டர் வர்மா.

மகன் சற்றே நின்றான். அருகில் வந்த அப்பா, "எங்கே போகிறாய்?" என்று கேட்டார். மகன், நிதானமாகச் சொன்னான், "என் காதலியைச் சந்திக்க." இந்தப் பதிலைக் கேட்டு மிஸ்டர் வர்மா பதற்றப்படவில்லை. "காதலியைப் பார்க்கப் போகிறாயா? இந்த வயதில் அதில் தவறேதும் இல்லை! நானும் உன் வயதாக இருந்தபோது, இது போல இருட்டில் போய், காதலியைச் சந்தித்திருக்கிறேன்! ஆனால், எனக்கு ஒரு சந்தேகம்! கையில் டார்ச்சுடன் போகிறாயே, அது எதற்காக?" என்று கேட்டார்.

அதற்கு, மகன் சொன்ன பதில்: "வெளிச்சம் இல்லாமல் இருட்டில் போனீர்களல்லவா? அதுதான் அம்மாவைத் திருமணம் செய்துகொள்ளும்படி ஆகிவிட்டது! தினமும் சண்டை, சச்சரவு."

அப்பாவால் பதில் சொல்ல முடியவில்லை.

இங்கே அந்த மகன் குறிப்பிட்ட வெளிச்சம் என்பது டார்ச் லைட் இல்லை. புத்திசாலித்தனம் என்பதைப் புரிந்து கொள்ளுங்கள். இன்று காதலிப்பவர்களில் ஏறத்தாழ எல்லோருமே மிஸ்டர் வர்மாவின் நிலையில்தான் இருக்கிறார்கள். காதலிக்கிறபோது, அதனைப் பூத்துக் குலுங்கும் நந்தவனம் போல நினைத்துக் கொண்டுவிடுகிறார்கள். அங்கே யதார்த்தம் அடிபட்டுப் போகிறது. அங்கே கனவுகளும், கற்பனைகளும் முக்கியத்துவம் பெற்றுவிடுகின்றன. புத்திசாலித்தனத்துக்கு இடம் தரப்படுவதில்லை.

யதார்த்தம் என்ன என்பது புரியவில்லை என்று சொல்ல முடியாது. புரிந்துகொள்ள அவர்கள் தயாராக இல்லை. தன்னைப் பற்றி ஏதேதோ கற்பனையாக நினைத்துக் கொண்டு தனி உலகம் ஒன்றில் சஞ்சரித்துக்கொண்டிருக்கிறார்கள். அவர்கள் நிலைமையை எடுத்துக் காட்டும்படி ஒரு முல்லா நசுருதீன் கதை உண்டு.

முல்லாவின் மனைவி ரொம்ப குண்டு. ஒருநாள் இரண்டு பேருக்கும் கருத்து வேறுபாடு. வாக்கு வாதம் முற்றி, கைகலப்பு ஆரம்பமானது. வழக்கம் போல மனைவியின் கை ஓங்கியது. மனைவி குழவிக் கட்டையால் முல்லாவை அடிக்க வந்தார். பயந்துகொண்டு முல்லா ஓடினார். மனைவி துரத்தினார். வீட்டுக்குள்ளே முல்லாவும் அவரது மனைவியும் வாண்டுகள் போல துரத்திப் பிடித்துக் கொண்டு இருந்தனர்.

இதற்குமேல் ஓட முடியாது என்று மூச்சுத் திணறிய முல்லா, சட்டென்று ஒரு தந்திரம் செய்தார். ஹாலில் போடப்பட்டிருந்த சோபாவுக்கு அடியில் போய் படுத்துக்கொண்டுவிட்டார்.

"பார்த்தாயா! இப்போது உன்னால் என்ன செய்ய முடியும்?" என்று ஏளனமாகக் கேட்டார் முல்லா. மனைவிக்கோ ஒரே கோபம். "நீங்கள் ஒரு ஆம்பிள்ளையா? ஒரு பொம்பளைக்குப் பயந்துகொண்டு சோபா அடியில் போய் ஒளிந்து கொள்கிறீர்களே!" என்று சத்தம் போட்டார்.

(தொடரும்.....)

# முரசு குறுக்கெழுத்துப் போட்டி

**வாசக நெஞ்சங்களே! உங்கள் சிந்தனைக்குத் தீனி போடும் வினாக்கள் அடங்கிய இப் போட்டியிலே ஆர்வமுடன் பங்குகொண்டு பரிசுகளையும், பாராட்டுக்களையும் பெற வாழ்த்துகின்றோம்.**

## குறுக்கெழுத்துப் போட்டி 68

| | | | | |
|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | ■ |
| 5 | ■ | 6 | ■ | 7 |
| 8 | 9 | 10 | 11 | ■ |
| 12 | 13 | ■ | 14 | 15 |
| ■ | ■ | 16 | ■ | 17 |
| 18 | 19 | 20 | 21 | 22 |

**குறுக்கெழுத்துப் போட்டி இல.66க்கான சரியான விடைகளை அனுப்பி 250 ரூபா பரிசு பெறும் அதிர்ஷ்டசாலி.**

தாமோதரம் வடிவேல், இல.5, ஏறாவூர், செங்கலடி.

**பாராட்டுப் பெறும் 10 அதிர்ஷ்டசாலிகள்.**

- லோ. ஸ்டெரின் ஆகாஸி, ஏஞ்சல் ஸ்ரூடியோ,366, சென்றல் றோட், திருகோணமலை.
- மொஹமெட் ஆஸாக், 140/4, தூல்மல, திஹாரிய.
- திருமதி.ம. நாகமணி,பதிவாளர் கந்தோர், புதுக்குடியிருப்பு-05, ஆரையம்பதி.
- திருமதி. எம். சுந்தரேசன், 49, நர்சிங்ஹோம் வீதி, ஹட்டன்.
- எஸ்.எஸ்.ஜே. பிரேம் ஆனந்த், 379, விகாரை வீதி, அக்கரைப்பற்று.
- கே. அரசேஸ்வரன், கலைமகள் வீதி, நல்லூர் வடக்கு, யாழ்ப்பாணம்.
- ஆர், வாசினி, ஐ.டி. 55 A, சந்தை சுற்றுவட்ட வீதி, வவுனியா.
- நா. சிவலிங்கம், எம்.ஓ.எச். விடுதி ஒழுங்கை, கல்முனை.
- வி. செல்வநாயகம், சிவன்கோயில் வீதி, புத்தூர்.
- என். தயாளவேந்தன், 135/38.51- தர்மராமபுர, பாமன் கடை, வெள்ளவத்தை.

### இடமிருந்து வலம்

1. கடலும் கடல் சார்ந்த இடமும்.
8. தொழிலைக் கொண்டு உருவாகிய சாதிகளில் ஒன்று.
12. துயரம் என்றும் பொருள்படும் - (திரும்பியுள்ளது).
14. சரஸ்வதி.
18. வாழ்த்துக் கூறும் போது இந்த மரத்தை உச்சரிப்பர். (திரும்பியுள்ளது)

### குறுக்கெழுத்துப் போட்டி 66 விடைகள்

| | | | | |
|---|---|---|---|---|
| 1 ரா | 2 ட் | 3 ச | 4 த | 5 ன் |
| 6 கு | ■ | 7 பி | 8 டா | 9 க |
| 10 ல் | ■ | 11 கு | ■ | 12 னி |
| 13 கா | 14 வி | ■ | 15 லி | ■ |
| 16 ந் | ■ | 17 சு | 18 ப | 19 மை |
| 20 தி | 21 ரு | 22 மா | 23 ல் | ■ |

### மேலிருந்து கீழ்

1. தமிழ்நாட்டில் பழுப்பு நிலக்கரி கிடைக்கும் இடமும் அனல் மின் நிலையம் உள்ள இடமும்.
2. கப்பலின் தட்டு (குழம்பியுள்ளது).
7. எட்டு (8) என்ற எண்ணுக்குரிய தமிழ் எழுத்து.
9. காட்டிலுள்ள இந்த மரத்தின் பழம் இனிப்பும் புளிப்பும் கலந்த சுவையுடையது. (தலைகீழாக உள்ளது)
11. மாட்டுக்கு தோல் போல பன்றிக்கு (தலைகீழாக உள்ளது).
15. தமிழ்நாட்டில் திருவண்ணாமலை மாவட்டத்திலுள்ள பட்டு உற்பத்தி மையம். (தலைகீழாக உள்ளது).
16. பெண் ஆடு (தலைகீழாக உள்ளது).

### போட்டி விதிகள்:

இதற்குரிய விடையைக் கூப்பனில் நிரப்பி, அஞ்சலட்டையில் ஒட்டி 13.05.2004க்கு முன்னர் எமக்குக் கிடைக்கும்படி அனுப்புங்கள். அனுப்ப வேண்டிய முகவரி:

**குறுக்கெழுத்துப் போட்டி இல-68**
**தினமுரசு வாரமலர்,**
**த.பெ. இல - 1772,**
**கொழும்பு.**

தங்கள் சரியான முகவரியையும், காசுக் கட்டளையை மாற்றக்கூடிய அண்மித்த தபாலகத்தின் பெயரையும் குறிப்பிடுக.

**சரியான விடையை அனுப்புவோரில் முதல் அதிர்ஷ்டசாலிக்கு 250 ரூபா பரிசுண்டு. அடுத்த பத்து அதிர்ஷ்டசாலிகளின் பேர் தினமுரசில் பிரசுரமாகும்.**


## ராதா ரெக்ஸ்ரைல்ஸின்
### வண்ணச் சேலை பரிசுப் போட்டி

எல்லா விதமான,ஆண்கள்,பெண்கள்,குழந்தைகள் என எல்லோருக்கும் பிடித்தமான ஆடை அணிகளின் அட்சய பாத்திரம். எல்லாத் தெரிவுகளும் ஒரே கூரையின் கீழ்.


**RATHAA TEXTILE**
377,379A,Gall Road,Wellawatta,Colombo-06.
(Opposite of Delmon Hospital) Tel:23664792

Branch:
No,33,37th Lane,
Colombo-06
☎: 2594727

மகளிர் மட்டும் மகளிர் மட்டும்

42

பெயர்:- ..........................
முகவரி:- ..........................
..........................................
தொழில்:- ..........................
கையொப்பம்:- ....................



- ஒவ்வொரு வாரமும் ஒரு அதிர்ஷ்டசாலி தேர்ந்தெடுக்கப்படுவார். வாரத்தில் ஒருவருக்கு மட்டுமே வண்ணச் சேலை பரிசு வழங்கப்படும்.
- மேலேயுள்ள கூப்பனை நிரப்பி தபால் அட்டையில் ஒட்டி அனுப்பினால் போதுமானது. (பதிவுத் தபால்கள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டா)
- ஒருவர் ஒன்றுக்கு மேற்பட்ட கூப்பன்களையும் அனுப்பலாம்.

கூப்பனை அனுப்பிவைக்க வேண்டிய இறுதித் திகதி: 13-05-2004

அனுப்ப வேண்டிய முகவரி:-
'ராதாவின் வாரம் ஒரு வண்ணச்சேலை'
தினமுரசு வாரமலர்,த.பெ.இல-1772,
கொழும்பு.


## இந்த வாரம் யாருக்கு சேலை? கொழும்பு வாசகிக்கு அதிர்ஷ்டம்! 40

இவ்வாரம் சேலை பரிசுபெறும் வாசகி இவர்தான்

**செல்வி. எஸ். நிதர்ஷினி**
3, டீ மெல் வீதி,
கொழும்பு-02.

பரிசு பெற்ற வாசகியை முரசின் பல்லாயிரம் வாசக, வாசகியர் சார்பில் வாழ்த்துவோம். அடுத்த வாரம் யாருக்கு? ஒரு வாரம் பொறுமையாக இருக்கக் கூடாதா. இவ்வாரம் பரிசுக்குரியவர் பரிசுபெறும் திகதி பற்றி தபால் மூலம் அறிவிக்கப்படும். தபால் மூலம் அறிவிக்கப்படும் விபரங்களைப் பெற்ற பின் எம்முடன் தொடர்பு கொண்டு பரிசினைப் பெறலாம்.

# நீலத்திரைகடல் மீதினிலே...

வாழையூர் - தமிழ் நலங்கொண்டான்.

"கனகம்! அந்த அரிக்கன் லாம்பெங்க..."

ரோமம் அடர்ந்த மார்பின் மீது, ஈக்கள் பதிய தோளிலே வலையுடன் குடிலை விட்டு வெளியில் வந்த மாரிமுத்து, குரல்கொடுத்தார்.

"அரிக்கன் லாம்பையும் சவளையும் ராசன் கொண்டு போறான். நீங்க இந்தத் தேத்தண்ணிய குடிங்க..."

"கெதியா கொண்டாடப்பா... இருட்டுப் பட்டா எல்லாரும் போயிருவாங்கள்."

தேத்தண்ணியை ஆற்றி, டம்ளரை அவர் கையில் கொடுத்துவிட்டு, குடிலுக்குள் போன கனகம், போன வேகத்தில் திரும்பி வந்து,

"ஆ... சொல்ல மறந்துத்தன்... நம்மட ராசம்மா அக்காட மகன் காளியும், இண்டைக்கு உங்களோட வாறதா சொன்னவன். போவக்குள்ள கூட்டித்துப் போங்க."

"ஆ...ஆ..."

தேத்தண்ணியைக் குடித்து முடித்த மாரிமுத்து, டம்ளரை மனைவியிடம் கொடுத்துவிட்டு, காதிலிருந்த பீடியை எடுத்து வாயில் வைத்துப் பற்ற வைத்துக் கொண்டே படலையைத் திறந்து வெளியேறினார்.

வானம் இருட்டிக்கொண்டிருந்தது. ஒழுங்கையைத் தாண்டி கடற்கரைக்குச் செல்லும் கிரவல் றோட்டுக்கு ஏறியவர், எதிரே காளிமுத்து வருவதைக் கண்டு, நடையின் வேகத்தைக் குறைத்தார்.

"என்ன காளிமுத்து... இண்டைக்கு வாறெண்டு சொன்னனீயாம். வாவன் போவம்..."

தலையைச் சொறிந்த காளிமுத்து,

"இல்ல அண்ணாச்சி, இண்டைக்கு என்னால வர ஏலாப்போலக் கிடக்கு. நீங்க போங்க, நான் நாளைக்கு வாறன்."

"சரி... சரி... அப்ப நான் வாறன்."

"ஓமண்ணாச்சி"

என்ற, காளிமுத்துவின் குரல் காதில் விழுவதற்கு முன்னரே, அவ்விடத்தை விட்டு அகன்றிருந்தார் மாரிமுத்து.

"இந்த காலத்துப் பொடியளுகளுக்கு இதுக்கெல்லாம் எங்க நேரம்?"

அலுத்துக்கொண்ட அவர், தன் மகன் ராசன் கடற்கரையில் காத்துக்கொண்டு இருப்பான் என்பது நினைவுக்குவர வேகமாக நடக்கத் தொடங்கினார். மாரிமுத்துவுக்கு மூன்று பிள்ளைகள். என்னதான் செல்வமில்லாவிட்டாலும், குழந்தைச் செல்வத்தில் ஆண்டவன் இவருக்கு குறை வைக்கவில்லை. மூத்த மகன் கனகராசாவுக்கு பதினெட்டு வயசுதான் என்றாலும், பத்து வயதிலிருந்தே தந்தையோடு கடலுக்குப் போக ஆரம்பித்து விட்டான். அவனுக்கு அடுத்துப் பிறந்த ஒரு பெண் குழந்தையும் ஒரு பையனும் படித்துக்கொண்டிருக்கிறார்கள்.



கனகத்தின் நச்சரிப்பினால்தான் பக்கத்திலிருந்த பள்ளிக்கூடத்தில் அவர்கள் இருவரையும் மாரிமுத்து சேர்த்துவிட்டார். அன்றிலிருந்து அவருக்கு ஒரு சுமை கூடிவிட்டதாகவே எண்ணினார். பிள்ளைகளுக்கு கொப்பி சாமான் வாங்கும்போதெல்லாம், 'ஏன்? இவர்களைப் பள்ளிக்கு அனுப்புகிறோம்' என்று கூட யோசிப்பார்.

ஆனால்,

"நம்மட ஆக்கள்தான் ஆருமே படிக்கல, இதுகளாவது படிக்கட்டுமே!..." என்ற கனகத்தின் ஆதங்கத்தை இவரால் நிராகரிக்க முடியவில்லை. வாகரைப் பிரதேசத்தை பொறுத்த மட்டிலும், பெரும்பாலான மீனவக் குடும்பங்களில் பிறக்கும் குழந்தைகள் பள்ளி செல்வது அரிது. சென்றாலும் அங்கு முழுதாகப் படித்து முடிப்பதென்பது மிகவும் அரிது. அன்றாட வாழ்க்கையை ஓட்டுவதே சிரமமாய் இருந்த அவர்களுக்கு பிள்ளைகளைப் படிக்க வைப்பதென்பது பெரும்பாடாகவே இருந்தது.

★ ★ ★

அமைதியாக இருந்த கடலைக் கண்டதும், மாரிமுத்துவின் மனமும் அமைதியை நாடியது.

"என்ன மாரியண்ணே! இண்டைக்கு கடல் சரியான அமைதியா இருக்கிறதப் பார்த்தா ஏதாவது கொளுவும் போல இருக்கி..."

கடலுக்குள் தோணியைத் தள்ளிக் கொண்டிருந்த செல்வத்தின் குரல் கேட்டுத் திரும்பிய மாரிமுத்து -

"ஓண்டா, செல்வம்...

எப்பவாவது இருந்துபோட்டுத்தான் இந்தக் கடலும் அமைதியாயிருக்கு. கந்தப்பெருமான், இண்டைக்கு நமக்கு என்ன கொடுக்கிறாரெண்டு பார்ப்பம்."

தன் தோணியை நெருங்கி, மகனிடம் வலையைக் கொடுத்துவிட்டு, தோணியைக் கடலுக்குள் தள்ளினார். ராசனும் அவருடன் சேர்ந்து தோணியைத் தள்ளினான். நடுக்கடலில் துடுப்புப் போட்டுக்கொண்டிருந்த ராசன், அரிக்கன் லாம்பின் திரியை சற்று உயர்த்திவிட்டு,

"அப்புச்சி... நாளையண்டக்கி இவள் புனிதாட தைக்க குடுத்த சட்டைய எடுக்கணும். அவளும் கழுத்துக் கரைஞ்சி போன சட்டையைத்தான் தைச்சி தைச்சி போடுறாள்."

"ஓண்டா தம்பி, விஜயன் கூட வசதிக் கட்டணம் கட்ட வேணுமெண்டு சொன்னவன். அது என்ன வசதிக் கட்டணமோ, வசதியில்லாத நமக்கெல்லாம் என்னடா வசதிக் கட்டணம்..."

இதன்பின் இருவரும் பேசவில்லை. கடல் பரப்பெங்கும் கனத்த அமைதி நிலவியது. நிலவு தன் ஒளியைக் கடலெங்கும் பாய்ச்சிக்கொண்டிருந்தது. வான் எவ்வித சலனமுமில்லாமல் இருந்தது. சற்றுமுன் இருந்த நிலைமை இப்போது மாறிவிட்டிருந்தது. நிலவொளியில் ஆங்காங்கே, கரிய மேகங்கள் திடீரென்று முளைப்பது போல் தோன்றியது மாரிமுத்துவுக்கு.

இதுவரை மூனு தரம், வலை வீசிப் பார்த்துவிட்டார். நான்கைந்து பாரைக் குட்டிகளைத் தவிர எதுவும் அகப்படவில்லை. காலுக்குள் துள்ளிக்கொண்டிருந்த மீனை எடுத்து கூடைக்குள் போட்டவாறே,

"ராசன்... அங்கால கொஞ்சம் தள்ளி கிழக்கால போவம், சவளைப் போடு."

"சரியப்புச்சி..."

இப்போது கைமாற்றி, சவளைப் போடத் தொடங்கினான் ராசன். காற்று மெதுவாக வீசத் தொடங்கியது. கடலும் குழப்பமான நிலையைப் புலப்படுத்தியது.

"என்ட முருகா... இதென்னடா ராசா இந்த வானம்."

தன்னை மறந்து சத்தமிட்டார் மாரிமுத்து.

★ ★ ★

பொழுது புலர்ந்தது. கடற்கரையெங்கும் பெண்களும், சிறுவர்களும் கூடி நின்றனர். நடு இரவிலே திடீரென வீசிய காற்றும், பெய்த மழையும் கரையில் நின்றவர்களை கிலிகொள்ளச் செய்திருந்தது. இது, இவர்களுக்கு ஒன்றும் புதிதல்ல. ஆனாலும், ஒவ்வொரு முறையும் மறுபிறப்பெடுக்கும் அநுபவம் இவர்களுக்கு.

"கந்தப் பெருமானே, என்ட புள்ளையளுக்கு ஒண்டும் ஆகக் கூடாது." ஓர் வயதான தாய், கடலுக்குள் சென்ற எல்லோருக்காகவும் வேண்டி, முருகனிடத்தே முறையிட்டுக்கொண்டிருந்தாள். கூட்டத்திலே கலகலப்பு ஏற்பட்டு, எல்லோரும் கடலை நோக்கினார்கள். தூரத்தே, அலைகளுக்கு மேலே நான்கைந்து தோணிகளும் வள்ளங்களும் வருவது தெரிந்தது. கரையில் நின்றவர்களுள் சிலர், கடலுக்குள் இறங்கினர். இப்போதுதான் அவர்களது உள்ளத்தோடு சேர்ந்து காலும் குளிர்ந்தது. தோணிகள் கரையைச் சேர்ந்தன. கரைக்குத் தோணிகளைத் தள்ளிக்கொண்டிருந்தவர்களிடத்தே கனகமும் வந்து சேர்ந்தாள்.

"ஏண்டா, கமலா உன்ட அம்மாச்சியைக் காணலயாடா?"

தோணியை விட்டு நிமிர்ந்த கமலன்,

"இல்ல மாமி, நாங்க நேரத்தோட போனனாங்க. ராசனும் மாமாவும் செல்வம் ஆக்களோடதான் போயிருப்பாங்க."

"ஆ... அந்தா செல்வம் வாறென்ன..."

கனகம், படபடப்புடன் கரையை நெருங்கிக்கொண்டிருந்தவர்களை நோக்கினாள். செல்வத்துடன் சென்ற பொடியன், மாரிமுத்துவின் தோணியில் இருக்கக் கண்டு இவளுக்கு சீவனே நின்றுவிடும்போல் இருந்தது. கண்கள் கசியத் தொடங்கின. நா தழுதழுக்க,

"செல்வம், அண்ணை எங்கடா தோணியை நீங்க கொண்டுவாறியள்."

"பயப்பிடாத அக்கா, இண்டைக்கி அண்ணைக்கு சரியான சரக்குத்தான். அண்ணையும், ராசனும் நம்மட ராசப்பா அம்மாச்சியிர வோட்டுல வாறாங்க." அவன் சொல்லி முடிப்பதற்குள், வோட் இரையும் சத்தம் கேட்டது. அதில் ராசனும், மாரிமுத்துவும், இன்னும் மூவரும் சத்தமிட்டு, சிரித்துப் பேசி வருவதைக் கண்ட பின்தான் கனகத்தின் படபடப்பு ஓய்ந்தது.

"சரியான காத்தும் மழையும் என்ன செய்யிறதெண்டு தெரியல. அந்த நேரம் பாத்து வலையில ஏதோ பெரிசா மாட்டித்து. எது நடந்தாலும் பரவாயில்லெண்டு வலையை இழுத்தம். கிட்டப் பாத்தா, என்னத்தச் சொல்ல, என்ட கந்தனே பெரிய ஒரு சுறா. அப்பத்தான் நம்மட அம்மாச்சியிர வோட் வர, பிறகு அதுல சேர்ந்துத்தம்."

மனைவியிடம் நடந்ததை விவரித்துவிட்டு காதிலிருந்த குறை பீடியை எடுத்து பற்றவைத்துக்கொண்டு, பிள்ளைகளும் பெரியவர்களும் வியப்புடன் தொட்டுப் பார்த்துக்கொண்டிருந்த, சுறாமீன் கிடந்த இடத்தை நோக்கி நடந்தார் மாரிமுத்து. கடல் அமைதியாய் அலையடித்து மகிழ்ந்தது.

## இவ் வார சிறுகதைகள்

# காத்தல்

டாக்டர் ரஞ்சித்குமாருக்கு அந்த உண்மையை அவளிடம் சொல்வதற்குத் தயக்கமாக இருந்தது. அதைத் தெரியாத மாதிரி மறைத்துப் பொய் சொல்வதற்கும் இயலாத அளவுக்கு அவர் இருந்தார்.

அவர் ஒரு மகப்பேற்று வைத்தியர். விஞ்ஞான கருவி அதை வெளிப்படையாகவே தெரிவிக்கும்போது அவர் அதை அவளிடம் தெரிவிக்காது மறைத்துவிட முடியுமா?

அந்தக் கர்ப்பிணித் தாயை 'ஸ்கான்' பண்ணிப் பார்த்தபோது நூற்றுக்கு எழுபத்தைந்து வீதம் அது பெண் குழந்தைதான் என்று சந்தேகத்துக்கிடமில்லாமல் அவர் தெரிந்துகொண்டுவிட்டார்.

தொப்புள் கொடி மறைப்பது போலிருந்தது கொஞ்சம் அவரைச் சந்தேகத்தில் ஆழ்த்தினாலும் இத்தனை நாள் உள்ள அநுபவ அறிவைக் கொண்டு ஆழ்ந்து சிந்தித்தபோது - 'அது பெண் குழந்தைதான்' - என்று அவருக்கு அச்சொட்டாகத் தெரியவந்தது.

அவளோ அவரைப் பரிதாபமாகவும் ஏக்கத்துடனும் பார்க்கிறாள்.

"டொக்டர் என்ன குழந்தையெண்டு சொல்லுங்கோ?"

அவருக்கு அவள் கேட்கும் கேள்விக்கு என்ன பதில் சொல்வதென்றே தெரியவில்லை!... என்றாலும்,

"குழந்தை நல்ல ஆரோக்கியமாயிருக்கு" - என்று மாத்திரம் அவர் சொல்கிறார்.

அது அவளுக்கும் மகிழ்ச்சிதான்! என்றாலும் திரும்பவும் விடாது

"என்ன குழந்தை டாக்டர் ஆணா?... இல்லாட்டி...?"

அதற்கு மேலும் கேட்க வேண்டிய கேள்வியைக் கேட்க முடியாத மனவேதனையின் தாக்கம் பந்தாய் சுருண்டு தொண்டைக்குள் வந்து அடைக்க, அவள் முகம், அஸ்தமிக்கும் ஆதவனைக் கண்ட அல்லி மலரைப் போல குவிந்துவிட்டது.

"இல்லாட்டி" - என்ற அந்த வார்த்தையோடு சிறிது நேர நிசப்தத்தின் பின் "இதுவும் பெண்குழந்தையாயிருக்குமோ?" - என்று அழுவாரைப் போல அவரைக் கேட்கிறாள்.

ரஞ்சித்குமாருக்கு அவளது நிலைமையை யோசித்துப் பார்க்கவும் மிகவும் தர்மசங்கடமாகிவிட்டது. இந்தத் தனியார் மகப்பேற்று நிலையத்தில் அவளுக்கு கடந்த வருடங்களில் இரண்டு பிள்ளைகள் பிறந்திருந்தன. இவரே அவளுடைய மகப்பேறுக்குச் சிகிச்சையளித்த டாக்டராகவிருந்தார். அப்படியாக அவர்களது குடும்ப டாக்டராகவும் இருந்த பட்சத்தில் இரண்டாவது பெண் குழந்தைக்குப் பிறகு மூன்றாவதாய் இப்போது பிறக்கப்போவதும் பெண் குழந்தைதான் என்று சொல்வதற்கு அவருக்கு எப்படித்தான் மனம் வரும்.

அவரது வைத்திய சேவைக்கால அநுபவத்தில் 'பிறக்கப்போவது ஆண் பிள்ளையா டொக்டர்?' - என்று ஆர்வத்துடன் கேட்கின்ற தாய் தந்தையர்களைத் தானே இவ்வளவு காலமும் அவர் கண்டுவந்திருக்கிறார். அடுத்தடுத்து ஆண் குழந்தைகளை மாத்திரம் பெற்றுக்கொண்ட தாய்மார்கள் பிறகு பெண் குழந்தை வேண்டுமென்கிறார்கள். இவளுக்கு ஏற்கெனவே பிறந்த இரண்டு பிள்ளைகளுமே பெண் குழந்தைகள். அவளின் ஆசையில் ஒரு ஆண் மகவுக்காக ஆவலுடன் காத்துக்கிடப்பது நியாயம்தானே? அதைவிட பாவம்! அவளுக்கு வீட்டில் என்ன தொந்தரவோ? கணவரிடமிருந்தும் அவரைச் சார்ந்த சொந்த பந்தத்தினரிடமிருந்தும் - வெறுப்புக்களும் கடுப்புகளும் கூடியிருந்தாலும் இருக்கலாமல்லவா?

இவள் இங்கு இன்று வருவதற்கு முன்னால், காலையில் ஒரு கர்ப்பிணிப் பெண் 'ஸ்கான்' பண்ணிப் பார்த்து ஆணா, பெண்ணா - பிறக்கப்போவது என்ன குழந்தை? - என்று தெரிந்துகொள்ளும் முகமாக இவரிடம் வந்திருந்தாள். கருத்தரித்து இன்றுடன் ஐந்து மாதமாகிறது அவளுக்கு. 'ஸ்கான்' சோதனையில் அவளை உட்படுத்தியபோது ஆண் குழந்தையென்று நிச்சயமாக அவளுக்குத் தெரிந்தது. அந்தப் பெண்ணுக்கு இதுவே முதற் பேறு. அவளது தாயும் மாமியாரும் கூடவே அவளுடன் துணைக்கு வந்திருந்தனர். முதற் பிள்ளை அதுவும் ஆண் குழந்தை என்பதால் எதுவித தயக்கமின்றி ரஞ்சித்குமார் கர்ப்பிணித் தாயுடன் கூடவே வந்த அந்த இருவரையும் கூப்பிட்டு;



நீ. பி. அருளானந்தம், கல்கிசை.

"உங்கள் காலத்தில் இதுவெல்லாம் இருந்ததா? இப்படியெல்லாம் வயிற்றிலிருக்கும் பிள்ளையைப் பார்க்க உங்களுக்குக் கிடைத்திருக்குமா?... பாருங்கள் உங்கள் பேரனை! எப்படியெல்லாம் கையைக் காலை போட்டடிக்கிறான் - துள்ளுகிறானென்று!" என்று சொல்லி 'ஸ்கான்' பண்ணும்போது திரையில் விழுந்ததை அவர்களுக்குக் காட்டினார்.

அதைப் பார்த்துவிட்டு அந்தப் பாட்டிமார்கள் இருவருக்கும் அளவற்ற மகிழ்ச்சி! - நன்றாக பேரனை அதிலே பார்த்து மகிழ்ச்சியில் கெக்கட்டமிட்டுச் சிரித்துக்கொண்டார்கள். 'ஸ்கான்' பண்ணி முடிந்ததும் அவளது தாயும் மாமியும் சேர்ந்து பாசத்தோடு அவளைக் கட்டியணைத்துக்கொண்டு வீட்டுக்குக் கூட்டிப் போனார்கள்.

ஆனால், இவளுக்கோ இந்த முறை உதவிக்கென்று இங்கு யாருமே அவளுடன் கூட வரவில்லை. இதனால் அவளைப் பார்க்க அவருக்கு மிகவும் பரிதாபமாகவும் இரக்கமாகவும் இருந்தது.

பெண் குழந்தைதான் இம்முறையும் என்று சொல்லிவிட்டால் அவள் இப்போ மனங்கலங்கி கவலையடைவாள். அது பின்பு பிள்ளைக்கும் தாய்க்கும் பாதிப்பை உண்டாக்கும் என்று நினைத்து,

'இதற்கு என்ன வழி?...' என்று ரஞ்சித்குமார் யோசித்தார். தாயினதும் பிள்ளையினதும் மற்றும் அவளது குடும்பச் சூழலிலும் நலம் காக்க சமயோசிதமாக அவர் தனது மனதை உறுதிப்படுத்திக்கொண்டு இதற்கு ஒரு விளக்கத்தை அவளுக்குக் கூற வேண்டியதாயிருந்தது.

"குழந்தை ஆணா, இல்லை பெண்ணா? - என்று உறுதியாகக் கூற முடியாது ஐமிச்சமாயிருக்கிறது. தொப்புள் கொடி மறைப்பதால் நிச்சயமாக இப்போது ஒன்றும் கூறுவதற்கு முடியாதிருக்கிறது."

இப்படிச் சொல்லுவது அவளுக்கு - அவளைச் சார்ந்த சொந்தத்தினரிடமிருந்து வெறுப்பை அதிகம் ஏற்படுத்தாது என்றே அவர் நினைத்தார். ஒரு டொக்டர் என்ற மட்டில் கர்ப்பிணித் தாய்க்கு சுகப் பிரசவம் ஆகும் வரைக்கும் - அறிவுரையும் ஆறுதலும் கூறி உதவ வேண்டும் என்பதையே தன் கடமையாக அவர் உணர்ந்தார். இந்த ஒழுங்கையெல்லாம் கடைப்பிடித்து நடக்க வேண்டிய கடமை உணர்வில் ஒரு பொய்யை அவளுக்குக் கூற வேண்டிய சந்தர்ப்ப சூழ்நிலையில் டொக்டர் ரஞ்சித்குமாரின் நிலை இருந்தது.

# நட்பை தாண்டி ஒரு காதல்

சிந்தித்துச் சிந்தித்து ஹரிஷின் மூளையே சிறுத்துவிடும் போலிருந்தது. எப்படிச் சொல்வது? ஒரு வேளை மறுத்துவிட்டால் நம் நட்பு என்னாவது? நான் இப்படி நினைப்பது எனக்கே சரிதானா? இந்தக் காதல் ஒரு மனிதனை என்ன பாடுபடுத்துகின்றது. உண்ணும் உணவில் விருப்பமில்லை. உறக்கமில்லை. உச்சி முதல் உள்ளங்கால் வரை ஒவ்வொரு அணுவிலும் அவள் நினைவு. ச்சீ! ஒரு பைத்தியக்காரனை விட என்னைக் கேவலமாக்கிவிட்டதே! என்று பலவாறு சிந்தித்து, சரி இன்றைக்கு கல்லூரிக்கு வருவாள்தானே, எப்படியும் என் காதலைச் சொல்ல வேண்டும் என்று உறுதிபூண்டான். ஆனால், எப்படிச் சொல்வதென்றுதான் ஹரிஷுக்குப் புரியவில்லை. ஒரு சிந்தனை அவன் மூளைக்குள் கசியவே ஒரு காகிதத்தை எடுத்து எழுதத் தொடங்கினான். அன்பே! ஆருயிரே! என்று அவன் காதல் கவிதை ஒன்றும் எழுதவில்லை. ஒரு கதையை எழுதத் தொடங்கினான்.



குமாரும், தர்ஷினியும் சிறு வயது முதலே ஒரே பள்ளியில் படிப்பவர்கள். வட்டக் காவடி முதல் புங்கம் புளியடி விளையாட்டு வரை ஒன்றாக விளையாடி மகிழ்ந்தவர்கள். பின் பருவ வேறுபாட்டினால் ஆண்கள் ஒரு பக்கம் பெண்கள் ஒரு பக்கம் என பாடசாலையில் பிரிக்கப்பட்டாலும் பார்வையினால் அடிக்கடி நட்பைப் பரிமாறிக்கொண்டார்கள். இவர்கள் கதைப்பதும் சிரிப்பதும் பலருக்கு காதலாகவே தோன்றியது. ஏன் அவன் பெற்றோருக்குக் கூட அது காதலாகவே தெரிந்தது. அவனைக் கூப்பிட்டு அம்மா முதல் தங்கை வரை ஒரே அட்வைஸ். அதற்கு அவன் பதில் "நான் அவள லவ் பண்ணல. அவளும் நானும் நண்பர்கள் அவ்வளவுதான்" என்பதேயாகும்.

பாடசாலை விட்டு வெளியேறும் நாள். அன்று பிரியாவிடை. பரிமாறிக்கொண்டன ஆட்டோ கிராஃப்கள். 'பாய்' சொல்லியே இருவரும் பிரிந்துகொண்டனர். வீட்டில் தனிமையில் இருக்கும்போதுதான் தர்ஷினியின் நினைவு அவனை வாட்டி வதைத்தது. அவளின் சிரிப்பு அவனையே போட்டு மூடிவிடும் அளவிற்கு கன்னக்குழி அழகு. இத்தனையும் சேர்ந்து அவனைப் பெரும் சிரமத்திற்குள்ளாக்கியது. நட்புக்கு மேலாக ஏதோ அவளிடம் அவன் மனம் எதிர்பார்த்தது. நாள் செல்லச் செல்ல அது காதலாக மாறியது. அவளைப் பார்க்கவே மனம் துடித்தது. வீட்டிற்குச் சென்று பார்க்க முடியாது. அவள் அண்ணன் ஒரு சி.ஐ.டி. எப்படியும் என் காதலைக் கண்டுபிடித்து விடுவான். இப்படியே நாட்கள் நகர்ந்தன.

மீண்டும் அவர்கள் இருவரும் சந்தித்துக் கொண்டார்கள். ஆம். கணனி வகுப்பில். இருவரின் முகத்திலும் சொல்ல முடியாத மகிழ்ச்சி. இருவரின் நட்பு தொடர்ந்தது. ஒரு நாள் குமார் தர்ஷினியிடம் தன் காதலை சொன்னான். தர்ஷினி ஒன்றும் பேசவில்லை. மறுநாள் முகத்தில் புன்னகையுடன் "ஹாய் குட் மோனிங்" என்று குமாரின் காதலுக்கு பச்சைக் கொடி காட்டினாள்.

இந்தக் கதை இத்தோடு நிற்கட்டும். ரீனா! என் காதலை உன்னிடம் எப்படிச் சொல்வதென்று தெரியாமல் தவிக்கின்றேன். இந்தக் கதையில் வருவது போல்தான் என் காதலும். ரீனா! நான் உன்னைக் காதலிக்கின்றேன். மறுக்காமல் என் காதலை ஏற்றுக்கொள். ப்ளீஸ்.

இப்படியே கதையை எழுதி முடித்துக்கொண்டு கல்லூரிக்குப் போனான் ஹரிஷ். வழமை போலவே "ஹாய் ஹரிஷ் குட் மோனிங்" என்றாள் ரீனா. பதிலுக்கு "குட்மோனிங்" என்று சொல்லிவிட்டு இருக்கையில் அமர்ந்தான். அன்று ஆசிரியர்கள் படிப்பித்தது ஒன்றும் ஏறவில்லை. இடைவேளை வந்தது. ஹரிஷ் - ரீனா கூட்டணி இணைந்து கலக்கத் தொடங்கியது.

"ரீனா! இந்தக் கதையை வாசித்துப் பாரேன்" என்று தான் கொண்டுவந்த கதையை நீட்டினான். அவள் அதை வாங்கி வாசித்துக்கொண்டிருக்கும்போதே, "ச்சீ! இவன் ஒரு மனிசனா? பொறுக்கி. நட்பை காதலாக நினைத்தவன். எனக்கு இக் கதை பிடிக்கவில்லை" என்று கதையை வாசித்து முடிக்காமலே இடை நடுவே தாள்களை ஹரிஷின் கைகளுக்குள் திணித்துவிட்டுப் போய்விட்டாள்.

கா. ரமேஸ்குமார், ஆரையம்பதி - 02.

'நல்ல வேளை கதையை முழுதாக வாசித்திருந்தால் என் நிலைமை என்னவாகியிருக்கும்? நல்ல ஒரு நண்பியை இழந்திருப்பேனே!' என எண்ணிக் கொண்டாலும் ஹரிஷின் இதயம் சிறிது நேரம் துடிக்க மறுத்தது. அவனின் காதல் கோட்டை சரிந்து தரை மட்டமானது. ஏதோ பிரமை பிடித்தவன் போல் நின்றான். பின் சுதாகரித்து, 'காதல், கல்யாணம் எல்லாம் நாம் நினைத்தா நடக்கின்றது. எல்லாம் இறைவன் செயல். அவன் நினைத்தால் நானும் ரீனாவும் நிச்சயமாய் ஒன்று சேர்வோம்' என்று மனதைத் தேற்றிக் கொண்டே வகுப்பை நோக்கி நடந்தான் ஹரிஷ்.

*படித்துச் சுவைத்தவற்றில் சிலவற்றை உங்கள் சிந்தனைக்காக முன்வைக்கிறோம். உங்கள் அநுபவத்தையும் எம்முடன் பகிர்ந்துகொள்ளுங்கள்.*

# சிந்தித்துப் பார்க்க...

## அமைதி

எம்மைச் சுற்றியுள்ள அனைத்துமே தொடர்ந்து அமைதியற்ற நிலையில் இருப்பதைக் காணும்போது, அமைதி பற்றிப் பேசுவது பயனற்றது போல் தெரிகிறது. இந்த நிலைமைதான் எங்களது சொந்த அமைதியின் ஆதாரத்தைத் தேடியடைந்து வாழ வேண்டிய தேவையை எங்கள் மீது அழுத்தி நிற்கின்றது.

பூக்களைப் பாருங்கள். அவையும் இந்த அமைதியற்ற சூழலில் வாழ்கின்றன. அவை கூட மாசடைதலையும் உலக இயற்கையின் அழிவினையும் பொறுத்துக்கொள்ள வேண்டியுள்ளன. எனினும், அவை காணப்படும் இடங்கள் - நெருக்கடியான வீதி ஓரங்களில், சதுப்பு நிலங்களில், பாலைவனங்களில், முட்களுக்கிடையில், சிலவேளைகளில் சாணக் குவியலில் - எங்கிருப்பினும் அவை என்றும் அழகுடையன - மலர்வன - அத்துடன் நறுமணம் உடையன. ஒவ்வொரு தருணத்திலும், துயர் மிகுந்த வேளையிலும் கூட, மலர்கள் வழங்கப்படுதல் தற்செயலாக ஏற்பட்ட வாய்ப்பு அல்ல. பூக்கள் அமைதியையும் சாந்தத்தையும் வெளிக்கொணர்பவையாகும். அது அவற்றின் இயற்கையாகும்.

நாங்களும் பூக்களைப் போன்றவர்களே. நாங்கள் இறைவனின் தோட்டத்துப் பூக்கள். உலகளாவிய இந்தத் தோட்டத்தில் தினசரி பதற்றம், சந்தடிக்கிடையில்- நாங்களும் கூட களங்கத்திற்கும் அவமதிப்புக்குமான அச்சுறுத்தப்பட் சூழ்நிலையில் வாழ்கிறோம். பூக்களைப் போல் எங்களுடைய இயற்கையான அமைதித் தன்மையுடன் நறுமணத்தை நம்மைச் சுற்றிப் பரப்பிக்கொண்டு வாழ நாங்கள் எதிர்பார்க்கப்படுகின்றோம்.

ஆத்மாவின் மூலாதாரமான தன்மை அமைதி என்பதை நாங்கள் உணரும்போது அமைதிக் கடலான இறைவனுடன் நாங்களும் இணையலாம். ஆகவே, அமைதி சொரூபமாகி, உயிருள்ள சிந்திக்கும் மலர்களாக வாழ்வோம்.

**"இன்னைய நாளுக்கான நல்ல எண்ணங்கள்" என்ற நூலிருந்து.......**

---

## இலக்கிய நயம்

**தருவது முழடில்யன்**

### "மலை கடந்து சென்ற தலைவனிடம் - என் நிலை குறித்துச் சொன்னாயா வண்டே?"

வீட்டு முற்றத்தின் புற்றரையில் அமர்ந்திருந்தாள் அமுதரசி. அவள் முகம் சோபையிழந்திருந்தது. கண்களில் ஏக்கம் குடிகொண்டிருந்தது.

வெளிச் சூழலின் ஓசைகளெதுவுமற்ற அமைதி அவள் மனதை மேலும் அழுத்தியது. பகல் அழிந்து இரவு தோன்றும் அந்த இடைப் பொழுதைப் போலவே அவள் மனமும் அரை மயக்க நிலையில் உள்ளே ஓடும் ஏதேதோ எண்ணங்களால் நிறைந்திருந்தது.

எங்கோ தொலைவிலிருந்து அவள் பார்வை தரையில் ஊன்றியிருந்த கைகளை எடுத்து முழங்கால்களைக் கட்டிக்கொண்டாள். அந் நிலையில் ஒரு பெருமூச்சு அவளிடம் எழுந்தது. அவள் மனதில் அந்த நேரத்தில் ஓடிய சிந்தனைகள் என்னவென்று அவளாலேயே உணர முடியவில்லை.



வீட்டைச் சுற்றிப் போடப்பட்டிருந்த முள்வேலியைப் பார்த்தாள். இதயத்தினுள்ளும் அந்த முட்கள் குத்தி வலியெழுப்புவதை உணர்ந்தாள். மருதனின் நினைவுகளே அந்த முட்கள் என்றும் தெரிந்திருந்தாள். ஆயாசத்துடன் முகத்தைக் கைகளில் சாய்த்தாள்.

வண்டு ஒன்று சுற்றிச் சுற்றி இரைந்தது. தலையை நிமிர்த்திக் கைகளால் அதை விரட்டினாள். அது விலகிப் போக மறுத்து, மீண்டும் சுற்றிச் சுற்றி வந்து ரீங்காரமிட்டது. வீசிய கைகள் வெறுமே காற்றைத் துழாவியதில் களைப்படைந்து எரிச்சலுடன் மீண்டும் முகத்தை முழங்கால்களில் சாய்த்துக்கொண்டாள்.

மருதனோடு தனித்திருக்கையிலும் இப்படி ஒரு வண்டு தொந்தரவு செய்தபோது "கெட்டிக்கார வண்டு" என்று அவன் சொன்னதை நினைத்தாள். முகம் சிவந்தது. 'ஒருவேளை அந்த வண்டுதானோ இது!' என்ற எண்ணத்தில் தலையை நிமிர்த்தி அதைத் தேடினாள். அந்த வண்டு மீண்டும் வந்து இரைய ஆரம்பித்தது. இம்முறை அதைத் துரத்தாமல் "நீதானா அது?" என்று இரகசியக் குரலில் கேட்டாள். அது எரிச்சலூட்டும் விதமாக ஒரே சுருதியில் இரைந்தது.

அமுதரசி பழைய நினைவில் மூழ்கினாள்.

"கெட்டிக்கார வண்டா? அதெப்படித் தெரிந்தது உங்களுக்கு?"

"அதோ வேலியில் பீர்க்கங் கொடிகளைப் பார்த்தாயா?"

"ம்"

"எல்லா வண்டுகளும் அந்தப் பீர்க்கம் பூக்களையே சுற்றிக்கொண்டிருக்க, விஷயமறிந்த இந்த வண்டு மட்டுமே இங்கே வந்திருப்பதைக் கவனித்தாயா?"

"விஷயமறிந்தா?" வியப்பு மண்டிய குரலில் கேட்டாள்.

"ஆமாம். ஏனைய வண்டுகளெல்லாம் ஒரே வகைப் பீர்க்கம் பூக்களையே மொய்த்துக்கொண்டிருக்க, இந்த வண்டு மட்டும்தானே இங்கே பூஞ்சோலையே இருப்பதைத் தெரிந்துகொண்டு வந்திருக்கிறது..."

ஆச்சரியம் பொங்க மிதமிஞ்சி விரிந்த அவள் விழிகளை இரசித்தான் மருதன்.

பின்னர் அவள் கையொன்றைத் தன் கையில் எடுத்துக்கொண்டு மறுகையால் அவள் விரல்களை வருடியபடியே, "இதோ, காந்தள் மலர்கள்!" என்றான்.

அவன் எங்கு வருகிறான் என்று தெரிந்து அமுதரசி முகம் சிவந்து தலையைக் குனிந்தாள்.

"ஆகா, தலையைக் குனிகிறது தாமரை!"

"போதும் போதும்" என்று பொய்க் கோபம் காட்டினாள்.

"இதோ முருக்கம் பூக்கள்" என்று அவள் உதடுகளை இரு விரல்களால் அழுத்திப் பிடித்தான் மருதன்.

தன் காந்தள் விரல்களால் அவன் விரல்களைத் தட்டினாள். அப்போது அசைந்த உழலழுக்கள் மீது அவன் பார்வை சென்றது. அவனது ஆராய்ச்சி விழிகள், அவளது அழகங்கங்கள் எல்லாவற்றின் மீதும் கடலலைகளைத் தாவிச் செல்லும் கடற் பறவைகளைப் போலத் தாவிச் சென்றன.

அவன் பார்வை செல்லும் இடங்களை அறிந்து வெட்கம் தாங்காமல் விழிகளைத் தாழ்த்திக்கொண்டாள் அமுதரசி.

"இயற்கை ஒவ்வொரு பூமரத்திற்கும் ஒவ்வொரு வகைப் பூவைத்தான் கொடுத்திருக்கிறது. ஆனால்..." என்று இழுத்து நிறுத்தினான்.

விழிகளை உயர்த்தி அவன் விழிகளைச் சந்தித்தவள், வெட்கத்தையும் பதற்றத்தையும் மறைத்துக்கொள்ள கோபத்தை முகத்தில் படரவிட்டு, "ஆராய்ச்சி ஒன்றும் இப்போ வேண்டாம்" உடலைத் திருப்பிக்கொண்டாள்.

மருதன் சிரித்தபடியே தொடர்ந்தான். "பெண்ணிடம் மட்டும் ஒரே இடத்திலேயே அனைத்து வகைப் பூக்களையும் மலரவிட்டு நகர்ந்து செல்லும் பூஞ்சோலையைச் சிருஷ்டித்து விட்டிருக்கிறது..."

"நான் எழுந்து போய்விடுவேன்" என்று கோபத்துடன் எழுந்தாள். அவன் அவள் கையைப் பிடித்து இழுத்துத் தன் மடியில் வீழ்த்தினான்.

பிறகு நடந்தவையெல்லாவற்றையும் நினைக்க நினைக்க அமுதரசி வெப்பம் மிகுந்த மூச்சுகளைத் தன் முழங்காலில் உணர்ந்தாள். முழங்காலிலிருந்து தலையை நிமிர்த்தி, தன்னைச் சமாதானப்படுத்திக்கொள்ள கைகளை உயர்த்திச் சோம்பல் முறித்தாள். அந்த வண்டு இன்னும் அங்கே இருக்கிறதா என்று கவனித்தாள்.

அவள் தலையை நிமிர்த்துவதற்கே காத்திருந்தது போல் அந்த வண்டு அவளை மீண்டும் வந்து சுற்றியது.

அமுதரசி கோபத்துடன் அதை விரட்டினாள்.

'போ... போய் அந்தப் பீர்க்கம் பூக்களில் தேனைப் பருகு... நோயில் கிடப்பவளை ஏன் தொந்தரவு செய்கிறாய்?' என்று எரிச்சலுடன் கத்தினாள்.

வண்டு சற்று விலகிப் பறந்தது. ஆசுவாசம் ஏற்பட்டபோது அவளுக்குத் தன் மீதே கழிவிரக்கம் மேலிட்டது.

'உனக்கென்ன, தேனைக் குடித்து, அந்தப் பூரிப்போடு துணையைத் தேடிப் போய் கூடி முயங்கி மகிழ்ந்திருப்பாய்! உன் பெடையோடு நீ மகிழ்ந்திருப்பது போல் நானும் மகிழ்ந்திருக்க உதவ வேண்டுமென்று நினைத்தாயா? மலைகளைக் கடந்து சென்றிருக்கும் என் தலைவரிடம் போய் நான் படும் துன்பத்தையாவது சொன்னாயா? பசலையில் வாடும் இவளிடம் உடனே வரும்படி அவரைக் கேட்டாயா? எதுவும் இல்லையே... என்னை மட்டும் சுற்றிச் சுற்றித் துன்புறுத்துகிறாயே வண்டே! நீயும் சுயநலம் கொண்ட கொடிய பிராணிதான் போ..." என்று மனம் நொந்து புலம்பினாள் அமுதரசி.

***நுண்முள் வேலித் தாதொடு***
***பொதுளிய தாறுபடு பீரம் ஊதி***
***வேறுபட நாற்றம் இன்மையிற்***
***பசலை ஊதாய் சிறுகுறும்***
***பறவைக்கு ஓடி விரைவுடன்***
***நெஞ்சு நெகிழ் செய்ததன் பயனோ***
***அன்பிலர் வெம்மலை அருஞ்சுரம்***
***இறந்தோர்க்கு என்னிலை***
***உரையாய் சென்றவண் வரவே.***
*( நற்றிணை : 277: 6-12)*

---

## சிந்தியா பதில்கள்

✉ **கொழும்பு மாவட்ட எம்.பி. மகேஸ்வரனின் தொலைக்காட்சிப் பேட்டி பார்த்தீர்களா?**

-ஜெ.திவ்வியராஜன், கிருலப்பனை.

*ஆமாம். தமிழ் மக்கள் எவ்வளவு பாக்கியம் பெற்றவர்கள். "நானும் எனது தலைவர் ரணில் விக்கிரமசிங்கவும் தமிழ் தேசியத்திற்காகவே பிறப்பெடுத்திருக்கிறோம்" என்று அவர் சொல்வதையும் கேட்டுத் தமிழ்ப் புளகாங்கிதம் அடைவதற்கு.*

✉✍✉

✉ **சிந்தியா! என்ன படம் பார்த்தீர்கள்?**

-கே.மேகசுதன், திருக்கோவில் - 02.

*தொலைக்காட்சியில் அஜித்தின் 'ரெட்'டும் சிடியில் சத்யராஜின் 'அடிதடி'யும் ஒரே நாளில் பார்த்தேன். ஆட்களை இப்படிப் பல காததூரம் காற்றில் பறந்து செல்லும்படி ஹீரோ உதைத்தால் தான் தமிழ் இரசிகர்கள் திருப்திப்படுவார்கள் என்று அவர்கள் ஒத்தபடி நினைத்திருப்பது ஆச்சரியமளித்தது. இப்படி உதைத்தும் உறுமியும் வசனம் பேசி கோணங்கிச் சேட்டைகள் புரிபவர்களையே படத்திலும் மக்கள் தெய்வங்களாகக் கும்பிடுகிறார்கள் என்று காட்டப்படுவது இன்னும் பெரிய வேடிக்கை. சத்யராஜ் படம் நம் அரசியலில், காதலில் உள்ள அபத்தங்களைப் பகிடி பண்ணிக் கொஞ்சம் சிரிக்கவாவது வைத்தது. அஜித்தும் மற்றுமுள்ள இளம் நடிகர்களும் ஏன் இப்படிச் சவால்களை அள்ளி வீசிப் பயமுறுத்துகிற நிலைக்கு வந்தார்கள் என்பதைப் புரிந்துகொள்ள முடியவில்லை. தமிழ்ப் படங்களில் எப்பவாவது வரும் நம் போன்ற சாதாரண மனிதர்களைச் சந்திப்பதற்கிடையில், இப்படி ஏராளமாக வரும் அதிமனிதர்களின் ஆர்ப்பாட்ட மிரட்டல்களுக்கிடையில் சிக்கி விதிர்விதிர்க்க வேண்டியிருக்கிறது. அடுத்து 'கில்லி'யையும் பார்க்க வேண்டும் என்று நினைத்தாலே கிலியாக இருக்கிறது.*

✉✍✉

✉ **தமிழில் இல்லாதது எதுவுமே இல்லை. தாய்மொழியில் கற்பதே போதும் என்கிறார் என் நண்பர். போதுமா?**

-எஸ்.வைகுந்தன், வவுனியா.

*போதும் என்றால், ஏன் நம் வாழ்க்கை வசதிக்குத் தேவையான கருவிகளை பொருட்களை எல்லாம் பிறமொழி பேசுபவர்கள் கண்டுபிடித்துக்கொண்டிருக்க, அவற்றுக்குத் தமிழில் பெயர் தேடி வைக்கும் 'பெரும் பணி'யை மட்டும் நாம் செய்துகொண்டிருக்கிறோம்.*

*உள்ளதைப் புரிந்துகொள்ளத் தாய்மொழி போதும்;*

*உலகத்தைப் புரிந்துகொள்ளப் பிறமொழியும் வேண்டும்.*

✉✍✉

✉ **'உன் மண்டைக்குள் இருப்பது மூளையா களிமண்ணா?' என்று களிமண்ணுடன் ஒப்பிட்டு ஏன் திட்டுகிறார்கள்?**

- எ.'.ப். பாத்திமா, கொழும்பு-10.

*களிமண் தன்னை இழிவுபடுத்தி விட்டதாக வந்து தகராறு பண்ணாது என்ற தைரியத்தில்தான்!*

✉✍✉

✉ **இன்றைய கவிதைகள் பற்றி?**

-எப்.ஆர்.மிஹ்லார், குருணாகல்.

*தே.ஆசைத்தம்பி என்ற இளங்கவிஞர் ஒருவரின் கவிதையில் ஒரு வரி, அதுவே என் காதுக்குள் இன்னும் இரைந்து கொண்டிருப்பதாக ஆகிவிட்டது.*

*"அழகான இறகொன்றை எடுத்துக்*
*காது குடையும்போது கேட்டேன்.*
*அதில் பதிவாகியிருந்த*
*காற்றின் பெருங்குரலை."*

✉✍✉

✉ **கொழும்பில் தன்னைத் தெரிவுசெய்த மக்கள் வாக்களித்தது சிங்களத் தேசியக் கட்சிக்கல்ல, தமிழ்த் தேசியச் சிங்கமான தனக்குத்தான் என்கிறார் மகேஸ்வரன். சபாநாயகராக கம்யூனிஸ்ட் டியூ குணசேகரவைப் புறக்கணித்து சிங்கள பௌத்த வாதியான லொக்கு பண்டாரவுக்கு வாக்களித்தது அவருக்காக அல்ல. ஜனாதிபதியையும் ஜே.வி.பி.யையும் எதிர்க்கும் அவரது கட்சிக்காக என்கிறார் சுரேஷ் பிரேமச்சந்திரன். என்ன சொல்ல வருகிறார்கள் இவர்கள்...கட்சி நல்லது அதிலுள்ள சில நபர்கள்தான் இனவாதிகள் என்கிறார்களா? அல்லது கட்சி இனவாதக் கட்சிதான்; அதை ஆதரிக்கும் தாங்கள் நல்லவர்கள் என்கிறார்களா?**

-ஆர்.ஆர்.கோபாலன், கொழும்பு - 13.

*ஏதோ ஒரு கவியரங்கத்தில் கேட்டது : "அரசியல் குப்பையில் அர்த்தங்களைத் தேடுவது, புழுத்த பிணத்தில் இதயத் துடிப்பைச் சோதிப்பது போலத்தான்" விடுங்கள்!*

✉✍✉

✉ **நீங்கள் பலராலும் பாராட்டப்பட்ட ஒரு சம்பவத்தைச் சொல்ல முடியுமா?**

-மனோ கோபாலன், ஹப்புத்தளை.

*ஏதோ ஒரு தவறு ஞாபகத்திற்கு வர, "நான் ஒரு முட்டாள்" என்று என்னை நானே நொந்துகொண்டபோது, "இப்படி உண்மையை ஒத்துக்கொள்ள எத்தனை பேருக்கு மனசு வரும்" என்று பக்கத்தில் நின்ற நண்பர்கள் எல்லோருமே கைதட்டிப் பாராட்டியிருக்கிறார்கள்.*

✉✍✉

✉ **தொலைக்காட்சியில் நீங்கள் விரும்பிப் பார்க்கும் நிகழ்ச்சி எது?**

-க.கமால்தீன், ஏறாவூர் - 03.

*ஒன்றரை மணிநேர ஆங்கிலத் திரைப்படங்களில் கூட நிமிடத்துக்கு நிமிடம் இத்தனை விறுவிறுப்பாக துப்பறியும் கதையைச் சொன்னது கிடையாது என்னுமளவுக்கு வியப்பூட்டும் '24' காட்சிகளின் பிரமாண்டம், நம்பகத் தன்மைக்காக மினக்கெட்டிருக்கும் உழைப்பு,*



அஜித்

*செலவு, சிறு சிறு காட்சிகளிலும் கூரிய கவனம் (ஜனாதிபதி வேட்பாளரும் அவரது மனைவியும் காருக்குள் கடும் சண்டையிட்டுக் கடுகடுப்பாக இருந்துவிட்டு காரைத் திறந்து மக்களுக்கு முகம் காட்டும்போது ஒன்றும் நடவாத மலர்ச்சித் தோற்றம்...) சிறப்பான எடிட்டிங்...தமிழ் நாடக கதாநாயகித் தெய்வங்களால் இம்சைப்பட்ட மனதுக்கு ஆச்சரியமான இதம்.*

✉✍✉

✉ **காதல் திருமணங்கள் பின்பு கசப்பது ஏன்?**

-கோபி பிரியா, வெலிமடை.

*கடும் இனிப்பைச் சாப்பிட்டுவிட்டுப் பிறகு எதைச் சாப்பிட்டாலும் கசப்பது போலத்தான்.*

✉✍✉

✉ **காதலியிடம் உங்கள் காதலை நேரடியாகவே சொல்லும் துணிவு உண்டா?**

-எம்.எம்.இப்ராஹிம், கல்முனை.

*துணிவு இருக்கிறது. காதலிதான் இல்லை!.*

✉✍✉

✉ **வீண் ஜம்பமடித்து மாட்டிக்கொண்ட அநுபவம் உண்டா?**

-எம்.ஜனனி, கொட்டாஞ்சேனை.

*அப்படி ஒரு அப்புக்காத்தின் கதை தெரியும். அவரிடம் வழக்குகள் வருவது வெகு குறைவு. ஒருநாள் ஒரு புதியவர் வந்து அவரெதிரே அமர்ந்தார். தான் சும்மா இலையான் ஓட்டிக்கொண்டிருப்பதாக அவர் நினைத்துவிடக் கூடாது என்பதற்காக, அவரை ஒரு நிமிடம் காத்திருக்கும்படி கையால் சைகை காட்டிவிட்டு, '.போனில் பேசிக்கொண்டிருந்தார் அப்புக்காத்து.*

*"ஹலோ...இல்லை இல்லை...வெரி சொறி...நிறைய கேஸ் இருக்கு...உங்கட கேஸை கவனிக்க குறைஞ்சது ஒரு மாசமாவது ஆகும்...!"*

*'.போனை வைத்துவிட்டு எதிரில் இருந்தவரைப் பார்த்து, "ம்...இப்ப சொல்லுங்க...உங்களுக்கு நான் என்ன செய்ய வேணும்?"*

*"ஒண்ணும் இல்லைங்க....நான் உங்க ரெலி'.போனை பழுது பார்க்க வந்தவன்!"*

✉✍✉

✉ **அதிகமாய் வளவளப்பவர்களிடமிருந்து தப்ப ஏதாவது வழி சொல்லுங்களேன்?**

-இ.இரத்தினராஜா, திருகோணமலை.

அவர்களுக்கு போனாட்ஷோ சொன்னதைச் சொல்லுங்கள் :

"முட்டாள்கள் மௌனமாயிருப்பதுதான் அவர்களுக்கு நல்லது. அதனால் உண்டாகும் நன்மையை அறிந்துகொண்டு விட்டால், அதன் பிறகு அவர்கள் முட்டாள்களாக இருக்கமாட்டார்கள்."

✉✍✉

# ஆட்டோகிராஃப்

## டைனோ

*''முன் குறிப்பு : இந்தக் கதயில வர்ற பாத்திரம், பண்டம், லொக்கேஷன், ஜலீம் லோசன் எல்லாமே நிசத்துல நடந்தது. சினிமாலயோ, டி.வி. பொட்டியிலயோ நீ பாத்த கஸ்மாலத்தப் போல சாயல் இருந்துதுன்னா அது உன்னோட டமிள் நாடு கவுர்ன்னுமெண்டு டாஸ் மார்க் முத்திரை குத்துன மனப் பிராந்தி, விஸ்கி, ரம்முஜின்னு. இத படிச்சி உனக்கு மெண்டல் ஆனாலோ, மனசுக்குள்ள கோழி கூவுற வாய்ஸ் வந்தாலோ அதுக் கோசரம் நம்மகிட்ட ராங்கு பண்ணி கோர்ட்டிற்கு இஸ்க முடியாது! அது மீறி கோர்ட்டு கேஸுன்னு நம்மாண்ட வந்தா பீச்சாங் கையால மூஞ்சியில கோடு இஸ்துடுவேன்,... ஆமா.''*

“பெந்திலூ நீ ஆரம்பீப்பா...!”

“வணக்கம்ங்க. என் பேரு பெந்தில். என் கல்யாணத்துல இதுக்கு முன்னால சந்திச்ச எல்லோரையும், குறிப்பா பொண்ணுகளை, கூப்பிடணும்னு ஆசை... அதுக்குத்தான் என்னோட சொந்தக் கிராமத்துக்குப் போறேன்... நீங்களும் கூட வாங்க!

வெண்ணைக்காரன் பட்டி:
ஞாபகம் வருதே ஞாபகம் வருதே.
மலபார் பீடிக்குள்ள மாரிஹுவனா அடிச்சது
மஞ்சுளா என் மூஞ்சிலா காறி துப்பியது
செயஸ்ரீ பிய்ந்த செருப்பால விளாசுனது

“டேய் பெந்தில்”

“டேய் ராமு நீயா? எப்பிடிடா இருக்க... பார்த்து பல வருசமாச்சுல்ல?”

“கேபிள் டிவி, திருட்டு வீசிடின்னு வாழ்கை அம் ம் ம் ம் ஷமா இருக்குடா. ஆமா, நம்ம பாண்டிப் பயல கிணத்துல தள்ளியுட்டுட்டு ஊரவிட்டே ஓடிப் போனவந்தானே...இப்ப என்னடா இந்தப் பக்கம்”

“... முதல் முதல் இறந்த சினேகிதன் மரணம்...” (புல்லாங்குழல்)

“நம்ம சைட்ட டாவடிச்சா விடுவனா! அத விடுடா நம்ம ராஜேஷ், பிரபாகர், சுரேஷ், பாலா, கணேஷ், வசந்த், சுந்தரராமசாமி வாத்தியார், மல்லிகா டீச்சர் எல்லாம் எப்படிடா இருக்காங்க?”

“(மனசுக்குள்) நீ ஊரவிட்டு போனதுக்கப் புறம்தாண்டா ஊருக்கே விடிவு பொறந்துச்சு. (சத்தமா) எல்லாம் நல்லா இருக்காங்கடா!”

“நல்லா இருக்காங்களா? ஐய்ய்யோ நல்லா இருக்காங்களே!”

“ஏண்டா அந்த வயித்தெரிச்சல் இன்னும் போகலையா?... அமலாவக் கூட கடைவீதில பார்த்தேன்... மூணு கொழந்தகளோட சௌக்கிய மாயிருக்கா!”

“ஐயோ! சௌக்கியமா இருக்காளா...!! வாடா அவுங்க வீட்டுக்கும் போய் ஒரு பத்திரிக்க வச்சுட்டு வந்துடலாம்”

“அமலா... யாரு வந்திருக்கா பாரு!” ராமு

“டேய் ராமு நீயா... அந்த கேபிள் டீவில விருமாண்டி போட்டியே... க்ளியராவே இல்ல... நானே சொல்லலாம்னு இருந்தேன், நல்லவேளை நீயே வந்துட்டே... சுவத்தோரமா ஏணியிருக்கு, சரிபண்ணிக் கொடுத்துட்டு போ... இல்லன்னா அடுத்த மாசம் கேபிள் பணம் கொடுக்கமாட்டேன். அது யாரு பக்கத்துல பேந்தப் பேந்த திருட்டு முழி முழிச்சுகிட்டு... உம் மச்சினனா?”

“நாந்தான், பெந்தில் அமலா...

‘ஞாபகம் வருதே... ஞாபகம் வருதே...!’

“நீ நாசமாப் போகாம ரொம்ப நல்லா இருக்கியாமா? நான் காதலிச்சு எனக்கு கெடக்காம போன பொண்ணுங்க நல்லா இருக்க முடியாதே?”

“டேய்ட களவாளிப் பயலே! என் தங்க குஞ்சத்த கத்தரிச்சுகிட்டு (பின்னணியில் :.... முதல் முதல் திருடிய கவரிங் குஞ்சம்....!) போனவந்தானே நீ? மூணு பசங்கள பெத்துகிட்டு கட்டுமஸ்த்தான புருஷனோட நான் நல் ல் ல் லா இருக்கேன். நீ எப்பிட்றா இருக்க? இதோ அவரே டி.வி. எஸ் 50ல வந்துட்டாரு... ஏங்க, அப்படியே போய் அண்ணாச்சி கடைல ஒரு டீ வாங்கீட்டு வந்துருங்க... எம் பிரண்டு வந்திருக்கறான்.”

“இவளுகளுக்கு வேற வேலையே இல்ல... வாரத்துக்கொருத்தன் இந்த கழுதயப் பாக்கறேன்னு கொட்டிக்க வந்துடுவானுக” முணுமுணுத்துக் கொண்டே கணவன் தூக்குச் சட்டியுடன் கடைக்குப் போகிறார்.

“டேய் பசங்களா! இதுங்க ரெண்டு மேல ஒரு கண்ணு வச்சுருங்க... ஒரு மாதிரி கேஸுங்க... அம்மா போய் அடுப்புல அரிசி வக்கிறேன்!”

“தம்பி... இங்க வாப்பா... உம் பேரு என்னா?” பெந்தில்

“எம் பேரு பெந்தில்... எந் தம்பி பேரு பாண்டி... கடசித் தம்பி பேரு...”

“ராமுகுட்டி... ஹி ஹி...” நமட்டு சிரிப்புடன் ராமு.

“பையனோட சாயல் பார்க்கறப்பவே நினச்சேன்! சரி சரி எல்லோரையும் கட்டிடெம் பேல ஏத்தி கல்யாணத்துக்குச் சென்னைக்கு வந்துரு... ஓகேவா!”

“டன்டா மச்சி... உங் கல்யாணத்துக்கு எல்லாரும் மெட்றாசுல இருப்பம்! சரி இந்த ஊரைவிட்டு எங்கடா போனிங்க?”

“ எங்கப்பா போஸ்ட் ஆபிஸுல வேளைக்கு இருந்தாருல்ல... அவருக்கு கேரளாவுக்கு டிரான்ஸ்பர் ஆயிடுச்சு... அங்க பலாப்புழாவுக்கு போயிருந்தோம்”

“ஏண்டா போஸ்ட் ஆபிஸ் வேளைன்னா தமிழ்நாடு, பாண்டிச்சேரி சர்க்கிள்ளுள்ளதானேடா மாத்துவாங்க... பலாப்புழாவுக்குள எப்படிடா?”

“இந்த நக்கல் லாஜிக் கேள்வியெல்லாம் கேக்கக் கூடாது... நொட்டு சொல்லாம வாயப் பொத்திகிட்டு கதயக் கேளு!”

“சரி கோச்சுக்காதடா மாம்ஸ்... ஆர்வக் கோளாறுல கேட்டுட்டேன். சரி, தமிழ்நாட்டுல ஆங்காங்கே தென்படும் வத்தல் தொத்தலுக்கே நாக்க தரையில தொங்க வுடுவே... கேரளால எல்லாம் திம்சுக் கட்டக... உன் லீலைகள அங்கயும் அவுத்து வுட்டுருப்பையே?”

“இங்கதாண்டா உனக்கும் என்க்கும் அண்டர்ஸ்டேண்டிங்கே... சும்மா பாலச்சந்தர் பட கதாநாயகி மாதிரி கும்முன்னு ஒரு குட்டி... வீணை, வயலின், சிதார், புல்லாங்குழல், பரதநாட்டியம், கதக்களி, மணிப்பூரி, ஒடிஸி, வாய்ப்பாட்டு, வில்லுப்பாட்டு, தம்புரான்னு கமலகாசன் மாதிரி அவ வாசிக்காத வாத்தியமில்ல, பாடாத பாட்டுமில்ல... சகலகலா வல்லவி என் பொத்திகா! கேரளாவுலயே யானைகளயெல்லாம் மேய்க்கிற தம்புரான் பரம்பரை”

“பூரானோ, பல்லியோ... எவங் கண்டான்! என்ன சாதிடா அவ... நம்ம அக்ரஹார அய்யர் பேமலி டைப்போ?”

“சாதிப் பேரக் கேட்டு தமிழ்நாட்டு மானத்த காப்பாத்தீட்டடா... இவங்க கொஞ்சம் டிபரண்ட்டான பேமலிடா... பாட்டு பாடறப்போ மீராவா வைஷ்ணவங்களா ஆயிடரானுக, பரதநாட்டியம் ஆடும்போது நடராஜரை கும்பிடர சைவங்களா மாறிடரானுங்க... அறுவாள தூக்கி வெட்டறப்போ மட்டும் நம்ம...”

“அங்கயும் லொள்ளு பண்ணி அறுவாள தூக்க வச்சுட்ட... அந்த மேட்டருக்கு வா முதல்ல”

*(மிகுதி அடுத்த வாரம் தொடரும்)* நன்றி (திண்ணை)

# எந்தக் கிழமையில் பிறந்தீர்கள்? என்ன அதிர்ஷ்டம் பெறுவீர்கள்?

மின்சார உலகின் வேகத்திற்கு ஏற்ப மனிதனுடைய பிறப்பு,இறப்பு பற்றிய விரிவான விளக்கங்களைப் பெற்றுக் கொள்ளவேண்டிய அவசியமற்ற இவ்வுலகில் மானிடத் தேவைக்கு ஏற்ப விரைவாக அவர்களது பிறப்பு எண்ணையும் (திகதி) பிறந்த கிழமையினையும் (திங்கள் - ஞாயிறு) கொண்டு தீர்க்கமாக என் அருள் ஞான ஜோதிட சித்தத்தில் கணிக்கப்பட்ட சுருக்கமான உங்கள் பலா பலன்களாகும்.

சொல்பவர் :
ஜோதிட அறிஞர், பேராசிரியர்,
டாக்டர் பீ.கே. சாமி J.D.G.A.N.,
(J.P.சமாதான நீதிபதி, கொழும்பு - இலங்கை)

## ஆதிக்கம்– 2 : பிறந்த கிழமை வியாழன்

**பி**றப்பெண் இரண்டையும் வியாழக்கிழமையினையும் பெற்றுள்ள நீங்கள் அரசாங்கத்துறையில் மிகப் பெரிய பதவியினை வகிப்பீர்கள். அந்தளவுக்கு ஆளுமையும் வல்லமையும் உங்களிடம் இருக்கிறது. அதனால் உயர் பதவிகளையும் பெற்றுக்கொள்வீர்கள். செய்கின்ற பதவிகள் எதுவாக இருப்பினும் அதனைத் திறமையாகவும் ஒழுங்காகவும் செய்து முடிப்பதில் வல்லவர்களாகத் திகழ்வீர்கள். இதனால் உங்களுக்குப் பிறர் மத்தியில் மதிப்பும் மரியாதையும் மிகுதியாக இருக்கும்.

எந்த விதமான தொழில் புரிந்தாலும் நீங்கள் முன்னேற்றம் அடையக் கூடியவராகவே இருப்பீர்கள். பிறருக்குக் கீழ் கைகட்டி நின்று வேலை செய்யும் மன நிலை உங்களிடம் கிடையாது. தங்களிடம் தொழில் புரிபவர்களை ஒழுங்காகவும் கண்ணியமாகவும் நடத்துவீர்கள். வேலைக்குத் தகுந்த சம்பளத்தைக் கொடுப்பீர்கள். கூடுதலாகக் கொடுப்பீர்கள். ஆனால், குறைத்து ஒரு நாளும் சம்பளம் கொடுக்க மாட்டீர்கள். உழைப்பின் பெறுமதியையும் தொழிலாளர்களின் தன்மையினையும் நன்கு தெரிந்தவர்தான் நீங்கள்.

பழைய கட்டடங்களை விலைபேசி வாங்கி அதனைப் புதுப்பித்துக் காலத்துக்கு ஏற்றவாறு கட்டி முடித்து நல்ல விலைக்கு விற்பீர்கள். இதனால் அதிக இலாபம் பெறுவீர்கள். தரிசு நிலங்களை வாங்கி அதில் அழகிய வீடுகள் அல்லது கட்டடங்கள் அமைத்து நல்ல விலைக்கு விற்றுக் கூடுதலான வருமானத்தினை ஈட்டுவீர்கள். எல்லோராலும் முடியாத இவ்வாறான காரியங்களைச் செய்வதில் கெட்டிக்காரர்களாக இருப்பீர்கள். இதில் ஒரு விசேட அம்சம் என்னவென்றால், சொந்த மூலதனம் இல்லாமல் செய்வீர்கள். பிறரிடம் பேசி மூலதனத்தைத் திரட்டி அதைக் கொண்டுதான் இவ்வாறான காரியங்களைச் செய்வீர்கள். ஆனால், பிறரை ஏமாற்றவோ, மோசடி செய்யவோ மாட்டீர்கள். நாணயத்தைக் காப்பாற்றுவீர்கள். வாக்குக் கொடுத்தால் அது போலவே செய்வீர்கள்.

25 வயது வரை தொழில் முறையினைப் பொறுத்தவரை எதிலும் நிலைக்கமாட்டீர்கள். இதனால் வருமானமும் அதிகம் இருக்காது. 26 வயதில் இருந்து ஒரு கட்டட நிர்மாணத்துறை ஒப்பந்தக்காரரிடம் வேலை செய்வீர்கள். இதனால் அவரின் கட்டடம் கட்டுதல், விற்றல் போன்ற தொழில் சம்பந்தமான நுணுக்கங்களை அறிந்துகொள்வீர்கள்.

27, 30, 33, 36 வயது வரை நல்ல வருமானத்தை அடையக்கூடிய நிலையில் இருப்பீர்கள். 37 வயதிலிருந்து நீங்கள் தனியாகவே தொழிலை ஆரம்பிப்பீர்கள். 30 வயது தொடக்கம் 40, 43, 46, 49, 52 வயது வரை உங்களுடைய வருமானம் படிப்படியாக உயரும். இடையிடையே சில ஏற்ற இறக்கங்கள், சிரமங்கள் காணப்பட்டாலும் அவற்றை உங்கள் திறமையின் காரணமாகச் சமாளித்து வசதியோடு வாழ்வீர்கள். சொத்து சுகங்களை அதிகமாகச் சேர்ப்பீர்கள். இதனால் மரணிக்கும் வரை சுகமாகவும் சந்தோசமாகவும் வாழ்வீர்கள்.

உங்களுடைய 27ஆவது வயது, 37ஆவது வயதுக் காலங்களில் கண்டம் ஏற்பட்டு விலகும். இதனால் உயிருக்கு ஆபத்து ஏற்படும் என்று நீங்கள் அஞ்சத் தேவையில்லை. உங்களுடைய முதுமைக் காலத்தில் பாரிச வாயு நோய்க்கு ஆளாகுவீர்கள். இதனால் கஷ்டப்பட வேண்டிய நிலையேற்படும். ஆகவே, கீழ்க் குறிப்பிடும் உணவுகளை நீங்கள் அதிகம் உண்ண வேண்டும். அப்போதுதான் பாரிச வாயு நோயிலிருந்து நீங்கள் தப்பலாம். அரைக்கீரை, அத்திப்பிஞ்சு, இஞ்சி, எள்ளு, புளி, சீரகம், கோதுமை, சுறாமீன், நெய், கோழிமுட்டை, மிளகு, வயல் நண்டு போன்றவை.

நீங்கள் இரண்டைப் பிறப்பெண்ணாகக் கொண்டிருந்தாலும் உங்களுக்கு யோகத்தைத் தரக் கூடிய இலக்கம் மூன்றுதான். இதனால் மாதத்தில் வரக்கூடிய 3, 13, 21, 30ஆம் திகதிகளில் நல்ல காரியங்களைச் செய்ய வேண்டும். அப்படிச் செய்தால் வெற்றி உங்களுக்கு நிச்சயம். மேற்குறிப்பிட்டுள்ள திகதிகள் வியாழக்கிழமையில் அமையுமாக இருந்தால் வெற்றியோடு புகழும் யோகமும் உங்களுக்குக் கிடைக்கும்.

‘ஆள் பாதி ஆடை பாதி’ என்பார்கள். ஆடை மானத்தை மட்டும் காப்பதல்ல. ஆபத்தைத் தடுப்பது. அதே போல அதிர்ஷ்டத்தை வழங்குவது. அதனால் நீங்கள் அணியும் ஆடை எதுவாக இருந்தாலும் சந்தன நிறத்தில் இருப்பது உங்களுக்கு அதிர்ஷ்டத்தை ஏற்படுத்தும். சந்தன நிறத்தில் ஒரு கைக்குட்டை பாவிப்பதும் நன்மையை உண்டு பண்ணும். சந்தன நிறத்தில் சிறிய அளவில் பூக்கள் போடப்பட்ட ஆடை அணிந்தால் அதிர்ஷ்டம் அதிகரிக்கும்.

உங்களுடைய அதிர்ஷ்ட இலக்கம் 3ஆக இருப்பதால் வசிக்கும் வீட்டின் இலக்கமும் இவ்வாறாக அமைதல் சிறப்பானது. 3, 12, 21, 30, 39, 48, 57, 66, 75, 84, 93, 102, 111, 120, 129, 138, 147, 156, 165, 174, 183, 192, 201.

ஆகவே, பிறப்பெண் இரண்டையும் பிறந்த நாளான வியாழக்கிழமையினையும் கொண்டுள்ள நீங்கள் வாழ்க்கையில் சிறப்பும் கீர்த்தியும் நலமும் யோகமும் பெற்று வாழ என்னுடைய ஆசீர்வாதங்கள்.

**இரு கண் போல் இரண்டு எண் - அது தரும் பொன் போல் வாழ். நறுமண வியாழனில் உமது - நற் பிறப்பால் அதிர்ஷ்டம் பொங்கும்.**

***(அடுத்த இரண்டிற்குரிய வெள்ளிக் கிழமை பிறந்தவர்களைப் பார்ப்போம்)***

# வாரம் ஒரு சிரிப்பு



*இருவர் பேசிக்கொண்டது :–*

“என்ன இது, அவரது துணிமணிகளில் எல்லாம் சலவைக்குறி காசு வடிவத்திலேயே இருக்கு?”

“நான் சொல்லவில்லையா அவருக்கு எப்பவும் காசுதான் குறின்னு!”

*இரு தோழிகள் பேசிக்கொண்டது :–*

“தீபாவளி வந்தாலே பெரிய பிரச்சினையா இருக்கு.”

“என்னடி சொல்றே?”

“என் வீட்டுக்காரருக்கு இந்த வருஷ தீபாவளிக்கு பட்டுச் சட்டையும், பட்டு வேஷ்டியும் வாங்கிக் கொடுத்தாதான் நேரா நேரத்துக்கு ருசியா சமைச்சுப் போடுவேன்னு சொல்றாரு.”

*இருவர் பேசிக்கொண்டது :–*

“என் பல்லு ஒண்ணு ரொம்ப நாளாவே ஆடிக்கிட்டு இருக்கு.”

“அப்படியா ! எப்ப அரங்கேற்றம்.”

*இருவர் பேசிக்கொண்டது :–*

“ரயில் வண்டியை கண்டுபிடித்தது மிகவும் நல்லதாப் போச்சு!”

“ஏன்?”

“இல்லாட்டி தண்டவாளமெல்லாம் வீணாகத்தானே போயிருக்கும்.”

*பிரயாணிகள் இருவர் பேசிக்கொண்டது*

“ரயிலில் பிரயாணம் செய்துகொண்டிருந்த ஒருவர் ஒவ்வொரு ஸ்டேஷனில் வண்டி நின்றதும், படுக்கையைச் சுருட்டிக்கொண்டு சாமான்களைக் கையில் எடுத்துக்கொண்டு கீழே இறங்கிவிட்டு உடனேயே திரும்பவும் ஏறிக்கொண்டார். “ஏன் இப்படி செய்கிறீர்கள்?” என்று கேட்டதற்கு அவர் சொன்ன பதில், “டாக்டர் என்னை நீண்ட பிரயாணம் செய்யக் கூடாது என்று சொல்லியிருக்கிறார்.”

# ஈழத் தமிழ்ச் சங்கம் விக்டோறியா நடாத்தும் முத்தமிழ் விழா சிறுகதை, கவிதைப் போட்டிகள்

கடந்த ஆண்டு தன் வெள்ளி விழாவை அவுஸ்திரேலியாவில் கோலாகலமாகக் கொண்டாடிய விக்டோறியா ஈழத் தமிழ்ச் சங்கம், இவ்வாண்டு தனது 12ஆவது முத்தமிழ் விழாவைக் கொண்டாட உள்ளது.

கண்டங்கள் கடந்தாலும் கருத்தாலும் எழுத்தாலும் உலகத் தமிழருடன் உறவு கொண்டாடும் தமிழ்ச் சங்கம் இவ்வாண்டும் சிறுகதை, கவிதைப் போட்டிகள் மூலம் தன் தொடர்பைப் பலப்படுத்துகின்றது. உலகளாவிய இப் போட்டியில் திக்கெங்கும் வாழும் தமிழர் பங்கு கொள்ளலாம். எத்தனை கதைகளையும் போட்டிக்கு அனுப்பலாம். ஆக்கங்கள் தாளில் ஒரு பக்கத்தில் மாத்திரமே அச்சுப் பதிவு செய்யப்பட்டோ அல்லது தெளிவாக எழுதப்பட்டோ இருத்தல் வேண்டும். தனித் தாளில் பெயரும் முகவரியும் இணைத்திடல் அவசியம்.

ஆக்கங்கள் எழுத்தாளரின் சொந்தப் படைப்பாக இருப்பதோடு, இதுவரை காலமும் பிரசுரிக்கப்படாததாகவும் போட்டிகளில் பங்கு பற்றாததாகவும் இருத்தல் வேண்டும். இப் போட்டிக்கு அனுப்பப்படும் கதை, கவிதைகளைப் பிரசுரிக்கும், காட்சிக்கிடும் உரிமை ஈழத் தமிழ்ச் சங்கத்திற்கு உண்டு. தமிழ்ச் சங்க நடுவரின் தீர்ப்பே இறுதியானது.

### அ) சிறுகதைப் போட்டிச் சிறப்பு விதிகள்.

1. சிறுகதை 3000 சொற்களுக்கு மேற்படாமலும் 1000 சொற்களுக்குக் குறையாமலும் இருத்தல் வேண்டும்.

முதலாவது பரிசு அவுஸ்திரேலிய வெள்ளிகள் 200.
இரண்டாவது பரிசு அவுஸ்திரேலியா வெள்ளிகள் 150.
மூன்றாவது பரிசு அவுஸ்திரேலியா வெள்ளிகள் 100

### ஆ) கவிதைப் போட்டிச் சிறப்பு விதிகள்.

1. கவிதைகள் பின்வரும் தலைப்புகளுக்குள் அமைய வேண்டும்.
2. ஒருவர் ஒவ்வொரு தலைப்பிலும் ஒரு கவிதைக்கு மேல் அனுப்புதலாகாது.
3. தரப்பட்டுள்ள தலைப்புகளுக்குள் ஒவ்வொரு தலைப்பிலும் ஒரு கவிதையாக ஒருவர் நான்கு கவிதைகள் வரை அனுப்பலாம்.
4. மரபுக் கவிதைகள் 40 வரிகளுக்குக் குறையாமலும், புதுக்கவிதைகள் 240 சொற்களுக்குக் குறையாமலும் இருத்தல் வேண்டும்.

### இ) கவிதைத் தலைப்புகள்.

1. விழித்த விழிகள் இனித் தூங்காது.
2. விரிந்த கடலும் பிரிக்காத உறவுகளே.
3. தலை நிமிர்ந்த தமிழினமே.
4. தமிழ் மண்ணில் விளைந்த மாவீரமே.



முதலாவது பரிசு அவுஸ்திரேலிய வெள்ளிகள் 150.
இரண்டாவது பரிசு அவுஸ்திரேலிய வெள்ளிகள் 100
மூன்றாவது பரிசு அவுஸ்திரேலிய வெள்ளிகள் 75.

முடிவுத் திகதி :– 30.08.2004

இத் திகதிக்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக உங்கள் ஆக்கங்களைக் கீழ்க் காணும் முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

**TAMIL LITERARY COMPETITION 2004,
30,DOUGHERTY COURT, MULGARAVE, VICTORIA 3170.
AUSTRALIA.**


"மாஜிக் தந்திரங்கள்" குறித்த பயிற்சியும் அதனோடு ஒட்டிய சுவைமிகு தகவல்களும் தொடர்ந்து வெளிவரும். மாஜிக் பிரியமுடைய நீங்களும் மாஜிக் நிபுணராகத் திகழ எமது வாழ்த்துக்கள்.



# மாஜிக் தந்திரங்கள்

**கா**ட்சி ஆரம்பிக்கும் சமயம் காட்சியை நடத்துகிறவர் அந்தப் பெட்டியை எடுத்து பின்பகுதியை இடது கையினால் இழுத்து அதில் ஒன்றுமில்லை என்பதை சபையோரிடம் காண்பித்துவிட்டு மறுபடி அதை மெதுவாக மூடி ஸ்ரூலின் மேல் வைத்துவிட்டு மேலே கறுப்புக் கைக்குட்டையை விரித்து மூடிவிட்டு, மந்திரக் கோலை உயர்த்தி எதையோ மேலேயிருந்து வரவழைப்பது போல பாவனை செய்துவிட்டு, கறுப்புக் கைக்குட்டையை எடுத்துவிட்டு, பெட்டியை எடுத்து அதன் முன் பகுதி முன் பக்கமாகச் சாய்வாக இருக்கும்படி வைத்து, சபையோருக்கு முன் டிராயரை வெளியேவிட்டால் அது துள்ளிக் குதித்து இழுத்தால் அதில் முயல்குட்டி வந்திருப்பதை சபையோருக்குக் காண்பித்து முயல்குட்டியை எடுத்து வெளியே ஓடுவதை சபையோர் கண்டு ஆச்சரியப்படுவார்கள். பிறகு பெட்டியை மூடி ஸரூலின் மேல் வைத்துவிட வேண்டும்.

**கவனிப்பு :-** சூட்சுமப் பெட்டிக்குள் முயல்குட்டியைப் போட்டு மூடாமல் பெட்டியை மட்டும் ஸ்ரூலின் மேல் வைத்துவிடக் கூடாது. பெட்டியை வெறும் பெட்டி என்று சபையோருக்குக் காண்பிக்கும்பொழுது பெட்டியின் பின் பகுதியை பின்பக்கமாக சாய்த்துப் பிடிக்க மறந்துவிடக் கூடாது. அதே போல முயல் குட்டியை வெளியே எடுக்க முயற்சிக்கும்பொழுது பெட்டியை முன்பக்கம் சாய்த்த நிலையில் பிடிக்கவும் மறந்துவிடக் கூடாது.



### கண்ணாடி டம்ளரில் இருக்கும் சர்பத் வேறு டம்ளருக்கு மாறுதல்

ஹார்லிக்ஸ் பாட்டில் மாஜிக் செய்வதற்குப் பயன்படுத்திய அதே இரண்டு டம்ளர்களையே இந்தக் காட்சிக்கும் பயன்படுத்தலாம். ஆனால், இரண்டு தகரக் குழாய்களை தனிப்பட்ட முறையில் தயாரிக்க வேண்டும்.

சுமார் 12 செ.மீ. உயரம் 7 செ.மீ. குறுக்களவுள்ள இரண்டு தகரக் குழாய்களைத் தயாரிக்க வேண்டும். இந்தத் தகரக் குழாய்களின் உள்ளே சற்று பிடிப்பாக இறங்கக்கூடிய, வாய் அகன்று அடி சிறுத்த அளவில் எண்ணெய் ஊற்றப் பயன்படும் புனல் போல இரண்டு தயாரிக்க வேண்டும். ஒரு புனலின் அடிப் பக்கம் சுமார் ஒரு செ.மீ. அகலத்தில் துளை செய்துவிட வேண்டும். மற்றொரு புனலின் கூர் பாகத்தில் சிறு துளையிட்டு அந்தத் துளையில் மூன்று மி.மீ. இடைவெளியுள்ள சிறு தகரக் குழாயை ஒரு சென்டி மீற்றர் நீளம் வெளியே வரும்படி வைத்துவிட வேண்டும்.

பிறகு இந்த இரண்டு புனல்களையும் ஒவ்வொரு தகரக் குழாயிலும் உள்ளே செலுத்தி, மேல் மட்டத்திலிருந்து ஆறு செ.மீ. இறக்கி புனலின் ஓரத்தைக் குழாயுடன் சேர்த்துப் ஈயத்தல் ஒட்டி விட வேண்டும். சிறு குழாய் வைத்து ஒட்டிய புனலை மட்டும் ஓரத்தை ஒட்டும் பொழுது கவனமாக தண்ணீர் கசியாத அளவுக்கு ஒட்ட வேண்டும். இந்த வேலை முடிந்தபின் இந்த இரண்டு தகரக் குழாய்களில் புனலில் பெரிய துவாரம் செய்யப்பட்ட குழாய்க்கு ஒரு மூடி தயாரிக்க வேண்டும். இந்த மூடி சரளமாகத் திறக்கவும் மூடவும் கூடியதாக இருக்க வேண்டும். மெல்லிய குழாய் வைத்து ஒட்டிய புனலுடன் கூடிய தகரக் குழாயின் மூடி வேறு விதமாக இருக்க வேண்டும். அதாவது இந்தக் குழாயின் மேல் மட்டத்திற்கு ஏற்ற அளவில் ஒரு தகர வட்ட வில்லை வெட்டி அதை மட்டமாகத் தட்டி அதன் நடுப் பாகத்தில் முக்கால் செ.மீ. அகலத்தில் ஒரு வட்டமான துளை போட்டுவிட்டு, அந்த வில்லையைக் குழாயின் மேல் மட்டத்தில் வைத்து, சுற்றிலும் தண்ணீர் கசியாத அளவில் ஈயம் கொண்டு ஒட்ட வைத்துவிட வேண்டும்.

இவற்றைத் தயாரித்தபின் இவை சரிவர வேலை செய்கின்றனவா என்பதைப் பரிசோதனை செய்து குற்றங் குறை இருப்பதாகத் தெரிந்தால் அதைச் சரிப்படுத்திக் கொள்ள வேண்டும்.

அதாவது, ஆங்கில மருந்துக் கடைகளில் அப்சார்பெண்ட் காட்டன் அதாவது நீரை இழுக்கும் வெண்ணிறப் பஞ்சு என்று கேட்டால் கொடுப்பார்கள். இது தேவையான அளவு வாங்கிவந்து புனலின் பெரிய துளையுள்ள குழாயை எடுத்து புனல் துளையில் இலேசாகப் போகக்கூடிய அளவில் ஒரு நீண்ட திரியைத் தயார் செய்து குழாய்க்கு, அதாவது கண்ணாடி டம்ளரை ஒரு கட்டையின் மேல் வைத்தால் அது எந்த அளவில் நிற்குமோ அந்த அளவில் கண்ணாடி டம்ளரின் அடி மட்டம் வரை தொங்கும்படி வைத்துவிட்டு மீதமுள்ள திரியை புனலில் நிறைய சுருட்டி வைத்துவிட வேண்டும். மேலும் இடம் இருந்தால் இந்தப் பஞ்சைக் கொண்டே நிரப்பி மூடியை மட்டமாக வைத்து மூடிவிட வேண்டும்.

தகரக் குழாயினுள் சரளமாகப் போகக்கூடிய இரண்டு வட்டமான மரக் கட்டைகள் தேவைப்படும். இவை மூன்று செ.மீ. உயரம் உள்ளவையாக இருக்க வேண்டும். ஒரு மரக் கட்டையை வைத்து அதில் நிறைய சுத்தமான தண்ணீரை விட்டு, ஒரு வட்டக் கட்டையின் மேல் வைத்து பஞ்சு வைக்கப்பட்ட குழாயை எடுத்து மேலிருந்து கீழாக வைத்து டம்ளரை மூடிவிட வேண்டும்.

சிறிது நேரம் கழித்து குழாயை எடுத்துவிட்டு கண்ணாடி டம்ளரைப் பார்த்தால் அதிலுள்ள தண்ணீரை பஞ்சு உறிஞ்சிவிட்டிருக்கும். கண்ணாடி ட்மளர் காலியாக இருக்கும். இது போல இரண்டு மூன்று முறை செய்து பார்க்க வேண்டும். ஆனால், ஒவ்வொரு முறையும் தண்ணீர் குடித்த பஞ்சை எடுத்துவிட வேண்டும். வேறு புதிய பஞ்சை அடைக்க வேண்டும். பழைய பஞ்சைப் பிழிந்து காயவைத்து பழையபடியும் பயன்படுத்த முயற்சி செய்யக் கூடாது. பழைய பஞ்சு மறுபடி தண்ணீரை அவ்வளவாக உறிஞ்சி எடுக்காது. இந்தப் பரிசோதனையில் நல்ல முறையில் வேலை செய்கிறது என்று அறிந்தபின் இதை வைத்துவிட வேண்டும். சிறிய குழல் வைத்த குழாயை எடுத்து மேல் மூடியிலுள்ள சிறு துளையில் ஒரு சிறு புனலை வைத்து குழாயினுள் இடதுகையை விட்டு ஆள்காட்டி விரலினால் சிறு குழாயின் வாயை அழுத்தி அடைத்துக்கொண்டு சிறு புனலில் ஒரு டம்ளர் அளவு தண்ணீரை விட்டு நிறைந்தவுடன் புனலை எடுத்துவிட்டு, அந்த இடத்தை சுத்தமாகத் துடைத்துவிட்டு, தேன் மெழுகைக் கொண்டு இரண்டு செ.மீ. அகலத்திற்கு அதாவது ஓர் 50 சத நாணயம் அகலத்திற்கு அதே அளவு வட்டமாகச் செய்து புனல் வைத்த துளையின் மேல் வைத்து மூடி அழுத்திவிட்டு உள்ளே விரலினால் அழுத்திப் பிடித்து சிறு குழாயை விட்டுவிட வேண்டும். இந்தச் சமயம் அந்தக் குழாயில் தண்ணீர் வருகிறதா என்று கவனிக்க வேண்டும். சிறு குழாயின் நுனியில் தண்ணீர் வரக் கூடாது.

(தொடர்ந்து வரும்..........)

# காதிலை பூ கந்தசாமி

## நோட்டீஸ் பலகை



நான் சொல்வதெல்லாம் பொய்.
பொய்யைத் தவிர
வேறொன்றுமில்லை.
*-காதில பூ கந்தசாமி-*

மேதினம் உழைப்பவர் சீதனம்!
வாழ்க தொழிலாளி வர்க்கம்!
உழைப்போர்க்கே உலகம்!
உலகத் தொழிலாளரே ஒன்றுபடு!
சுரண்டல் ஒழிக! சமதர்மம் மலர்க!

என்ன முழிக்கிறீங்க? அதொண்டுமில்லை. இப்ப ஏதோ ஒரு தினம் வந்து போச்சே....? ஆ! மே தினம்! அதுதான். அந்தத் தினத்தில ஏதோ நாலுபேர் சேந்துகொண்டு ஒரு சிவத்தக் கொடியையும் பிடிச்சுக்கொண்டு கத்திப்போட்டுப் போவாங்களே. அந்த வசனங்கள்தான். அத விடுங்கோ. அது மேதினத்தோட சரி. பிறகு ஒருநாளும் நான் கேட்டதில்லை.

ஏது சரி. எத்தினையோ வருஷமா நானும் உந்த மே முதலாந் திகதியண்டைக்குப் பாத்தால் மேதினம் வந்துகொண்டேயிருக்கு. மேதினமெண்டது என்ன ஏதேண்டு எனக்கெண்டால் சிதம்பர ரகசியமாகத்தான் கிடக்கு. ஏதோ புண்ணியத்துக்கு அண்டைக்குப் பாத்து லீவு விடுறான். மற்றது உந்த சினிமாக்கு ஏதோ அரைச்சலாரில டிக்கட் குடுக்கிறான். அந்தளவுக்குப் புண்ணிய தினம் எண்டதுதான் என்ர எண்ணம்.

ஆனாலும் பாருங்கோ, நானும் ஒரு நாலும் தெரிஞ்ச மனிசனெண்ட பெயரோட உலவுறனெல்லோ. அதால யாரும் பேட்டி கீட்டியில இடக்கு மடக்காக் கேட்டுப் பேந்தப் பேந்த முழிக்கிற நிலை. மனிஷரிட்டக் கேட்டு உந்த மேதினத்தைப் பற்றிக் கொஞ்சம் விஷயம் சேத்துக்கொள்ளுவமெண்டிட்டு போனைச் சுத்தினன்.

**கா.பூ :-** ஐயா, சம்பந்தரையாவோ....? உங்களுக்குத்தான் உலக ஞானம் தெரியும். உந்த மேதினமெண்டு முழங்கிறாங்களே. அதெண்டால் என்னவோ?

**சம் :-** மேதினத்தில யாரிப்ப முழங்கிறாங்கள்? நாங்கள் பாராளுமன்றத்தில முழங்கினதைக் கேள்! அதெல்லோ முழக்கம்! சபாநாயகர் தெரிவைப் பற்றிப் பேசச் சொல்ல, தேர்தலில எங்களத் தமிழ் மக்கள் எல்லாருமாச் சேந்து தெரிஞ்சு விட்டிருக்கினமெண்டு சொல்லிப் பொழிஞ்சு தள்ளிவிட்டன்..

**காபூ :-** ஓமோம் பாத்தனன். கள்ள வாக்குப் போட்டு வந்ததாக் கத்தினவை ஆளுங்கட்சிக்காறர்.

**சம் :-** உளறாமல் கேளும்! நான் பேசினதைக் கேளாதயும்! ஐசே காதிலபூ! தீயவற்றைப் பாக்காதே, தீயவற்றைக் கேளாதேயெண்டு காந்தி சொன்னதெல்லாத்தையும் மறந்து போட்டீர் போல.

**காபூ :-** தீயவற்றைப் பேசாதேயெண்டு காந்தி சொன்னது உங்களுக்கே மறக்கேக்க,

**சம் :-** ஐசே, இப்ப, மாவீரர் தினம், அன்னை பூபதி தினம், திலீபன் தினம் எண்டு முக்கியமான தினங்கள ஞாபகம் வைச்சிருக்கிறத விட்டுட்டு, மேதினத்தைப் பற்றி மினக்கெட்டுக் கேட்டுக்கொண்டிருக்கிறீர்?

**காபூ :-**அது சரி, உங்களுக்கு அமிர்தலிங்கம் தினம், தங்கதுரை தினம், திரு. திருமதி யோகேஸ்வரன் தினம், சிவபாலன் தினமெல்லாம் மறந்து போச்சுது. மாவீரர் தினங்கள் மட்டுந்தான் நினைவில நிக்குது. ஏதோ ஐயா! தொழிலாளர் தினத்தையாவது தெரிஞ்சு வைச்சிருப்பியளெண்டு ஒரு நப்பாசையில எடுத்திட்டன். ஐ ஆம் சொறி. நீங்கள் உங்கட தினங்களக் கொண்டாடுங்கோ. நான் வேற ஆளத் தேடுறன்.

**காபூ :-** ஹலோ...ஹலோ...யார், ரவிராஜண்ணயோ!

**ரவி :-** ஜா! ஹூஸ் ஸ்பிக்கிங் பிளீஸ்!

**காபூ :-** தட் இஸ்....திஸ் இஸ்...ஐ ஆம் காதில பூ ஜா....!

**ரவி :** -அடட, நீரோ? என்ன ஏது இண்டர்வியூவோ?

**காபூ :-** இல்லண்ணே, ஒரு டவுட். உந்த மே தினம் எண்டால் என்ன?

**ரவி :-** மே தினம்...? யூ மீன் மே டே?

**காபூ :-** ஜா!

**ரவி :-** அதுவா, அந்த ஏப்ரலுக்கும் ஜூனுக்கும் நடுவில வாற மாசம்.

**காபூ :-** ஓமோம். மே மாதம்.

**ரவி :-** அட, மே மாதம் எண்டு ஒரு படம் கூட வந்துச்சுதெல்லோ. எங்கட வீட்டில டெக்கில போட்டுப் பாத்த ஞாபகம்.

**காபூ :-** அதேதான். மே மாதம்.

**ரவி :-** படமெடுக்கிற அளவுக்குப் போயிருக்கிறாங்களெண்டால் இட் மஸ்ட் பி அன் இம்போர்ட்டன்ட் மந்த். எதுக்கும் உந்த டிக்ஷனறியில பாருமன்.

**காபூ :-** ஏன் உங்களுக்குத் தெரியாதோ?

**ரவி :-** இல்லையில்லை. எனக்குத் தெரியாமல் ஒண்டு இருக்கேலுமே. நான் லோயரல்லோ. எனக்குத் தெரிஞ்சது உந்த டிக்ஷனறிக்காறங்களுக்குத் தெரிஞ்சிருக்குதோவெண்டு செக் பண்ணிப் பாக்கிறதுக்குச் சொன்னனான். உமக்கிப்ப உந்த மே டேயப் பற்றித் தெரிஞ்சுகொள்ள வேணுமென்ன?

**காபூ :-** ஓமோம்!

**ரவி :-** அப்ப, உமக்கு அதைப் பற்றி ஒண்டுமே தெரியாது?

**கா.பூ :-** தெரியாதபடியாலதானேயண்ண உங்களிட்டக் கேக்கிறன்.

**ரவி :-** அப்ப ரொம்ப நல்லதாப் போச்சுது. அதாவது தம்பி, மே தினமெண்டிறது பாரும், முட்டாள்கள் தினம். உலகத்தில இருக்கிற முட்டாள்களெல்லாரையும் பெருமைப்படுத்த வேணுமெண்டிட்டு அந்தக் காலத்தில....

**காபூ :-** அண்ணை! அது ஏப்ரல் முதலாம் திகதியெல்லோ முட்டாள்கள் தினம். நான் மே ஓராந் திகதியப் பற்றியெல்லோ கேக்கிறன்.

**ரவி :-** இங்க பாரும் காபூ! உமக்கு ஒண்டும் தெரியாதெண்டு நீர் சொன்னத நம்பித்தான் நான் சொல்ல வந்தனான். நீர் இப்பிடித் தெரிஞ்சுகொண்டு வந்து என்னை மடக்க வெளிக்கிடுறீரெண்டால் நான் பேசேல்லை.

**காபூ :-** அன்னை! அது நான் மே தினத்தைப் பற்றித்தான் எனக்குத் தெரியாதெண்டு சொன்னனான். முட்டாள் தினத்தைப் பற்றித் தெரிஞ்சு வைச்சிருந்தது தப்போ?

ரவி :- தப்புத்தான். ஏப்ரல் முதலாம் திகதி முட்டாள் தினமெண்டு சொல்லுறீர். மே ஓராந் திகதியெண்டால் என்ன ஒரு மாசம்தானே வித்தியாசம். இந்த ஒரு மாசத்துக்க முட்டாள்கள் புத்திசாலிகளாயிடுவினமோ?

காபூ :- அப்பண்ண தொழிலாளர் தினம்?

ரவி :-சரி சரி! எனக்கு யாரோ ஹான்ட்போனுக்கு கோலெடுக்கினம். மே டேக்கு விஷ் பண்ணவோ தெரியாது. நான் வைக்கிறன்.

காபூ :- அட...மே டேக்கு விஷ் பண்ணிற காலமாப் போட்டுது.

**யாவும் கலப்படமற்ற கற்பனை**

# இந்த வாரம் உங்கள் பலன்

(09.05.2004 தொடங்கி 15.05.2004 வரை)

## சோதிட மாமணி தில்லை


### இந்த வாரக் கிரக நிலை

இடபம் - சூரியன், மிதுனம் - வெள்ளி, சனி, செவ்வாய், சிங்கம் - வியாழன், துலாபம் - கேது, மேடம் - புதன், இராகு
சந்திரன் மீனம், மேடம், இடபம், மிதுனம் இராசிகளில் இவ்வாரம் சஞ்சரிப்பார்.



**மேடம் :** (அச்சுவினி, பரணி, கார்த்திகை முதற்கால்.) தொழில் நிலை கஷ்டம், பண வரவு தடை, வெளியிட வாழ்க்கை, அன்னியர் நட்பு, உத்தியோகக் கஷ்டம், மேலதிகாரிகள் தொல்லை, மாணவர் கல்வி மந்தம், சோம்பல் மிகுதி, விவசாயிகள், வியாபாரிகள் குறைந்த இலாபம்.

**அதிர்ஷ்ட நாள்:- புதன்**
**அதிர்ஷ்ட இலக்கம்:- 05**



**மிதுனம் :** (மிருகசீரிடத்துப் பின்னரை, திருவாதிரை, புனர்பூசத்து முன்முக்கால்.)
தொழில் நன்மை, காரியானுகூலம், உறவினர் உதவி, பிரயாண மிகுதி, தேகசுகம் பாதிப்பு, உத்தியோகச் சிறப்பு, மேலதிகாரிகள் உதவி, மாணவர் கல்வி உயர்ச்சி, விவசாயிகள், வியாபாரிகள் அற்ப இலாபம்.

**அதிர்ஷ்ட நாள்:- வெள்ளி**
**அதிர்ஷ்ட இலக்கம்:- 06**




**சிங்கம் :** (மகம், பூரம், உத்தரத்து முதற்கால்.)
தொழில் நிலை மாற்றம், பண விரயம், உறவினரால் தொல்லை, திடீர் செலவு, உத்தியோக முயற்சி, மேலதிகாரிகள் உதவி, மாணவர் கல்வி குழப்பம், விவசாயிகள், வியாபாரிகள் குறைந்த இலாபம்.

**அதிர்ஷ்ட நாள்:- புதன்**
**அதிர்ஷ்ட இலக்கம்:- 05**



**துலாம் :** (சித்திரையின் பின்னரை, சுவாதி, விசாகத்து முன் முக்கால்.)
தொழில் நிலை மந்தம், பண வரவு தடை, உறவினர் தொல்லை, வீண் மனஸ்தாபம், உத்தியோக செல்வாக்கு, வெளியிடவாசம், மாணவர் கல்வி குழப்பம், விவசாயிகள், வியாபாரிகள் குறைந்த இலாபம்.

**அதிர்ஷ்ட நாள்:- திங்கள்**
**அதிர்ஷ்ட இலக்கம்:- 02**



**தனு :** (மூலம், பூராடம், உத்தராடத்து முதற்கால்.)
தொழில் விருத்தி, பண வரவு, வெளியிட வாழ்க்கை, அன்னியர் சகவாசம், உத்தியோகச் சிக்கல், மேலதிகாரிகள் தொல்லை, மாணவர் கல்வி மேன்மை, விவசாயிகள், வியாபாரிகள் அற்ப இலாபம்.

**அதிர்ஷ்ட நாள்:- புதன்**
**அதிர்ஷ்ட இலக்கம்:- 05**



**கும்பம் :** (அவிட்டத்துப் பின்னரை, சதயம், பூரட்டாதி முன் முக்கால்.)
தொழில் மந்தம், வீண் பிரயாசம், செலவு மிகுதி, உறவினர் உதவி, உத்தியோக நன்மை, மேலதிகாரிகள் உதவி, மாணவர் கல்வி சிறப்பு, விவசாயிகள், வியாபாரிகள் குறைந்த இலாபம்.

**அதிர்ஷ்ட நாள்:- வியாழன்**
**அதிர்ஷ்ட இலக்கம்:- 02**




**இடபம் :** (கார்த்திகை பின் முக்கால், ரோகிணி, மிருகசீரிடத்து முன்னரை.)
தொழில் சிறப்பு, பண வரவு, உயர்ந்த நிலை, பெரியோர் உதவி, கௌரவம், உத்தியோகச் சிறப்பு, மனமகிழ்ச்சி, மாணவர் கல்வி மேன்மை, விவசாயிகள், வியாபாரிகள் மத்திம இலாபம்.

**அதிர்ஷ்ட நாள்:- செவ்வாய்**
**அதிர்ஷ்ட இலக்கம்:- 04**



**கர்க்கடகம் :** (புனர்பூசத்து நாலாங்கால், பூசம், ஆயிலியம்.)
தொழில் பலிதம், பண வரவு, உயர்ந்த நிலை, மறைமுக எதிர்ப்பு, பெரியோர் பகை, உத்தியோகக் கஷ்டம், வீண் பிரயாசம், மாணவர் கல்வி மந்தம், சோம்பல் மிகுதி, விவசாயிகள், வியாபாரிகள் மத்திம இலாபம்.

**அதிர்ஷ்ட நாள்:- திங்கள்**
**அதிர்ஷ்ட இலக்கம்:- 02**




**கன்னி :** (உத்தரத்துப் பின் முக்கால், அத்தம், சித்திரையின் முன்னரை.)
தொழில் நிலை கலக்கம், பணச் செலவு, அன்னியர் உதவி, பிள்ளைகளால் மகிழ்ச்சி, உத்தியோக நன்மை, மேலதிகாரிகள் உதவி, மாணவர் கல்வி உயர்ச்சி, விவசாயிகள், வியாபாரிகள் இலாபம்.

**அதிர்ஷ்ட நாள்:- செவ்வாய்**
**அதிர்ஷ்ட இலக்கம்:- 04**




**விருச்சிகம் :** (விசாகத்து நாலாங்கால், அனுஷம், கேட்டை)
தொழில் நிலை கஷ்டம், பணச் செலவு, அன்னியர் உதவி, மனக் கலக்கம், பிரயாணக் கஷ்டம், உத்தியோக முயற்சி, பெரியோர் உதவி, மாணவர் கல்வி மேன்மை, விவசாயிகள், வியாபாரிகள் மத்திம இலாபம்.

**அதிர்ஷ்ட நாள்:- வெள்ளி**
**அதிர்ஷ்ட இலக்கம் :- 03**



**மகரம் :** (உத்தராடத்துப் பின் முக்கால், திருவோணம், அவிட்டத்து முன்னரை.)
தொழில் நிலை மாற்றம், புதிய தொழில் முயற்சி, பிரயாண மிகுதி, இனசன நன்மை, உத்தியோகச் சிறப்பு, மேலதிகாரிகள் உதவி, மாணவர் கல்வி உயர்ச்சி, விவசாயிகள், வியாபாரிகள் மத்திம இலாபம்.

**அதிர்ஷ்ட நாள்:- வியாழன்**
**அதிர்ஷ்ட இலக்கம்:- 04**



**மீனம் :** (பூரட்டாதி நாலாங்கால், உத்திரட்டாதி, ரேவதி.)
தொழில் முயற்சி, செலவு மிகுதி, வீண் தொல்லைகள், குடும்ப மகிழ்ச்சி, பிள்ளைகளால் கவலை, உத்தியோகக் கஷ்டம், மேலதிகாரிகள் உதவி, மாணவர் கல்வி மேன்மை, விவசாயிகள், வியாபாரிகள் குறைந்த இலாபம்.

**அதிர்ஷ்ட நாள்:- செவ்வாய்**
**அதிர்ஷ்ட இலக்கம்:- 01**

## அருள் ஞான ஜோதிடம்



சாஸ்திரத்தின் சாம்ராஜ்யம் மலையாளம். மலையாளத்தின் மகத்துவம் மாந்திரீகம். மாந்திரீகத்தின் அரசர் ஜோதிட பக்குவ திலகம் டாக்டர் பி.கே. சாமி ஐயா. நடந்தது, நடக்கப் போவது, நடக்க விருப்பது திட்டவட்டமான திகதி, மணிக் கணக்குடன் தெரிந்துகொள்ள என்னைச் சந்திக்கவும்.

ஜோதிட தத்துவ ஞானி
Prof. Dr. P. K. SAMY (J.D.G.A.N), J.P.
162, Kotahena Street, Colombo - 13.
T.P - 2342463, 2470615, 2431137



## நிபுணத்துவ கைரேகை





கைரேகை என்பது ஒரு கடல் போன்றது. அப்படியே அதை ஆராய்ச்சி செய்வதென்றால் ஆதி பராசக்தியின் அருட்கடாட்சம் வேண்டும். இக் கூற்றுக்கமைய உலக நாடுகளுக்கு சென்று கைரேகைக் கலையை அக்குவேறு ஆணிவேறாக அலசி ஆராய்ந்து நிபுணத்துவம் பெற்ற என்னைச் சந்தியுங்கள். உங்கள் கைரேகையை பார்த்துப் பலா பலனை தெரிந்து கொள்ள முன்னறிவித்தலுடன் வந்தால் கைரேகை வாசிக்க காலநேரம் கொடுக்கப்படும்.

Tel: 2344832
கே.கங்காதரன் (M.A) J.P.
162, கொட்டாஞ்சேனை வீதி, கொழும்பு-13.
Booking Time 4.00 p.m To 7.00 p.m Only


# இரட்டைப் பிறவிகள்



பிலிப்பைன்ஸ் நாட்டைச் சேர்ந்த ஆர்லினி அசூரி என்ற பெண்ணுக்கு தலைப்பகுதி ஒட்டிய நிலையில் இரட்டைக் குழந்தைகள் பிறந்தன. இக் குழந்தைகளின் பிறந்த தினத்தை விழாவாக மருத்துவமனை சிறப்பாகக் கொண்டாடியது. தலைப்பகுதியை வெட்டிப் பிரிக்கும் சத்திரசிகிச்சைக்காக இவ்விரு குழந்தைகளையும் நியூயோர்க் மருத்துவமனையில் சேர்த்திருக்கிறார்கள். இதுவரை இரண்டு பெரிய சத்திரசிகிச்சைகள் நடந்துள்ளபோதும் இருவரையும் தனித்தனியே வெட்டிப் பிரிக்க வில்லை.

இந்த நிலையில் கடந்த 21ஆம் திகதி அக் குழந்தைகளின் இரண்டாவது பிறந்தநாள் அவர்கள் பிறந்த மருத்துவமனையிலேயே கொண்டாடப்பட்டது. மெழுகுவர்த்தி எரியவிட்டு கேக் வெட்டிக் கொண்டாடியதையும், அருகில் அக் குழந்தைகளுக்கு சத்திரசிகிச்சை செய்யப்போகும் அமெரிக்க டாக்டர் ஜேம்ஸ் கூட்ரீச் மற்றும் சமூக சேவகி மெரிடித்கோசின் ஆகியோரையும் படத்தில் காணலாம்.

கீழே படத்தில் காட்டப்பட்டுள்ள இரு குழந்தைகளும் சீனாவைச் சேர்ந்த ஒரு பெண்ணுக்கு ஒட்டிப் பிறந்த இரட்டைக் குழந்தைகள். அவற்றுக்கு வயது ஐந்து மாதம் ஆகிறது. சீனாவிலுள்ள லங்கோயு மருத்துவ பல்கலைக்கழக மருத்துவமனையில் இவ்விரு குழந்தைகளையும் பிரிக்கும் சத்திரசிகிச்சை நடைபெற்றது. அக் குழந்தைகள் இப்போது வெற்றிகரமாகத் தனித்தனியாகப் பிரிக்கப்பட்டுள்ளன. ஒட்டியிருந்த மார்புப் பகுதியை டாக்டர்கள் சர்வ ஜாக்கிரதையாக வெட்டி ஈரலுக்குப் பாதிப்பு ஏற்படாமல் கச்சிதமாக சத்திரசிகிச்சையை முடித்துள்ளனர். மிகக் கவனமாகக் கையாளப்பட்டு இரு குழந்தைகளும் காப்பாற்றப்பட்டதோடு வெற்றிகரமான சத்திரசிகிச்சை என்று விஞ்ஞான உலகம் வியக்கிறது.

இரட்டைக் குழந்தைகள் என்கின்றபோது இரட்டிப்பு மகிழ்ச்சி என்றாலும், அவையே ஒட்டிப் பிறந்து சத்திரசிகிச்சை வரை செல்லும்போது பெற்றோருக்குக் கவலைதான். வெற்றிகரமான விஞ்ஞானத்தின் துணையோடு ஒட்டிப் பிறந்தவர்களுக்கு நல்வாழ்வு கிடைத்தால் நம் எல்லோருக்கும் மகிழ்ச்சியே.

# துஸ்ரா



இலங்கை அணியின் பல இமாலய வெற்றிகளுக்குப் பின்னால் தனது பெயரை முத்திரை குத்தியிருக்கும் முரளிதரன் அண்மைக்காலமாக டுஸ்ரா பந்துவீச்சின் மூலம் கிரிக்கெட் உலகின் பெரும் விமர்சனத்திற்கு உரியவராக இருக்கிறார். இவர் பந்தை விதிமுறைகளுக்கு ஏற்றவாறு அல்லாமல் எறிகிறார் என முதன்முறையாக அவுஸ்திரேலியாவின் ஆட்ட நடுவர் டரல் ஹேயர் முறைப்பாடு செய்திருந்தார். பின்னர் ஐ.சி.சி. பலகட்ட விசாரணையின் பின்னர் மீண்டும் முரளிதரனின் பந்துவீச்சுக்குப் பச்சைக் கொடி காட்டியது. ஆனால், இலங்கை - அவுஸ்திரேலியா அணிகளுக்கு இடையே கடைசியாக இலங்கையில் நடைபெற்ற டெஸ்ட் ஆட்டத்தின்போது ஆட்ட நடுவராகப் பணிபுரிந்த கிறிஸ் பிராட் முரளியின் பந்துவீச்சு வழமைக்கு மாறானது என சர்ச்சையைக் கிளப்பிவிட்டார். இதையடுத்து அவுஸ்திரேலியாவுக்கு அழைக்கப்பட்ட முரளிதரன் எரியட்டின் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டு முப்பரிமாணப் படங்களைத் தரவுகளாகக் கொண்டு பரிசீலித்ததில், ஓஃப் ஸ்பின் பந்து வீச்சாளரான முரளிதரன் அதே வகையான வீச்சிலேயே மேலதிக சுழற்சியை ஏற்படுத்தி லெக் ஸ்பின் வீசுவதால் துடுப்பாட்டக்காரர்கள் பெரும் சிரமத்தை எதிர்நோக்க வேண்டி இருப்பது அவதானிக்கப்பட்டிருக்கிறது. எனவே, டுஸ்ரா எனப்படும் இவ்வகையான - வழமைக்கு மாறான பந்துவீச்சை முரளிதரன் தொடர்வாராக இருந்தால், ஒரு வருடத்துக்குத் தடை விதிக்கப்படுமென ஐ.சி.சி. அறிவித்துள்ளது.

## 1 ஆவது பிறந்தநாள் வாழ்த்து

**10 . 05 . 2004**



திருகோணமலையைச் சேர்ந்த குகதாசன் - யோகமலர் தம்பதிகளின் செல்வப் புதல்வன் மதுசனன் 10.05.2004 அன்று தனது முதலாவது பிறந்த நாளை இலண்டன் வோல்த்தம்ஸ்ரோவிலுள்ள (Walthamstow) தனது இல்லத்தில் வெகு விமரிசையாகக் கொண்டாடுகின்றார். இவரை இவரது அன்பு அப்பா - அம்மா, ஆசையக்கா லக்மினீ, அப்பப்பா, அம்மப்பா, அம்மம்மா, பெரியப்பாமார், பெரியம்மாமார், மாமாமார், மாமிமார், சித்தப்பாமார், சித்திமார், அக்காமார், அண்ணன்மார், மச்சான்மார், மச்சாள்மார், இலண்டன் வீட்டிலுள்ள அன்பு மாமாமார் மற்றும் உற்றார், உறவினர் அனைவரும் திருகோணமலை பத்திரகாளியம்மன் அருள் பெற்று பல்கலையும் கற்று பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்துகின்றார்கள்.

தகவல் :- அம்மப்பா, திருமலை.

**செல்வன் குகதாசன் மதுசனன்**

## 1ஆவது பிறந்தநாள் வாழ்த்து



**செல்வி கஜானா / 05.05.2004**

ஏழாலையைப் பிறப்பிடமாகவும் ஜேர்மனியை வசிப்பிடமாகவும் கொண்ட சோதிஸ்வரன் - செல்வகுமாரி தம்பதிகளின் செல்வப் புதல்வி கஜானா 05.05.2004 புதன்கிழமை தனது முதலாவது பிறந்தநாளை ஜேர்மனி எஸ்லிங்கன் நகரிலுள்ள தனது இல்லத்தில் வெகு விமரிசையாகக் கொண்டாடுகின்றார்.

இவரது அம்மா - அப்பா, இலங்கையில் வசிக்கும் அப்பம்மா - அப்பப்பா, அம்மம்மா - அம்மப்பா சவுதியில் வசிக்கும் பாலச்சந்திரன் மாமா, இலங்கையில் வசிக்கும் மாமி, மச்சாள், மச்சான்மார், ஜேர்மனியில் வசிக்கும் கோபாலகுமார் பெரியப்பா - பெரியம்மா, அண்ணா, இலங்கையில் வசிக்கும் வசந்தி அத்தை, ஜேர்மனியில் வசிக்கும் நாதன் மாமா- மாமி, மச்சாள், ஹொலண்டில் வசிக்கும் அமிர்தலிங்கம் பெரியப்பா - பெரியம்மா, அக்கா, அண்ணா, இலங்கையில் வசிக்கும் கணேசமூர்த்தி பெரியப்பா - பெரியம்மா, அண்ணாமார், பூட்டி மற்றும் அக்காமார்கள், அண்ணாமார்கள், சித்தப்பாமார், சித்திமார் மற்றும் உற்றார், உறவினர்கள் அனைவரும் கஜானாவை பல்கலையும் பெற்றுப் பல்லாண்டு காலம் நீடூழி வாழ்கவென வாழ்த்துகின்றார்கள்.

தகவல்: வா. த. சோதீஸ்வரன் குடும்பத்தினர்.